960.

M.L.A. Debates

Official Report

1967- July

Vol. 5, No. 1

D
V211,31'N67
N67.5.1
65023

4959/L
EGMORE, MADRAS
766

வெளியீடு—6—5—1968]
Issued—6—5—1968]

தமிழக சட்டப் பேரவை நடவடிக்கைகள்
MADRAS LEGISLATIVE ASSEMBLY DEBATES

பணித்துறை வெளியீடு
OFFICIAL REPORT

புதன்கிழமை, 1967 ஜூலை 12
Wednesday, 12th July 1967

தொகுதி V—எண். 1
Volume V—No. 1

©
தமிழக அரசு
1968
©
GOVERNMENT OF MADRAS
1968

சட்டப் பேரவைத் துறை
சென்னை-9
Legislative Assembly Department
Fort St. George, Madras-9

211, 31 N67
N67.5.1

தமிழக சட்டப் பேரவை

புதன்கிழமை, 1967 ஜூலை 12.

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டப் பேரவை மண்டபத்தில் காலை 9 மணியளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. சி. பா. ஆதித்தனார் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

1. வினாக்கள்-விடைகள்.

உடுக்குறியிட்ட வினாக்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நேற்று தள்ளிவைக்கப்பட்ட வினா எண். 234 இன்று முதலில் எடுத்துக்கொள்ளப்படும்.

கரும்பு நாற்றங்கால் பண்ணைகள்

*234 வினா.—**திரு. எஸ். சிவசுப்பிரமணியன் :** மதிப்பிற்குரிய விவசாய அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) கரும்பு வளர்ச்சித் திட்டத்தின்கீழ் 1966-ல் பல்வேறு இடங்களில் ஏற்படுத்தப்பட்ட கரும்பு நாற்றங்கால் பண்ணைகள் எத்தனை?

(இ) உதவித் தொகையாக வழங்கப்பட்டது எவ்வளவு?

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி : (அ) ஐயாயிரத்து இருநூற்றி ஐம்பத்தாறு கரும்பு விவசாயிகளின் பண்ணையில் நாற்றங்கால்களை கரும்பு பெருக்கு திட்டத்தின்கீழ் 1966–67-ல் நிறுவப்பட்டது.

(இ) இத் திட்டத்தின் கீழ் 1966-67 ஆண்டிற்கு ஒதுக்கப்பட்ட மானியத் தொகை நாலு லட்ச ரூபாய் பூராவும் விவசாயிகளுக்கு அளிக்கப்பட்டது.

திரு. கே. விநாயகம் : இந்த சுகர்கேன் நர்சரிக்கு ஏற்கனவே ஒதுக்கப்பட்ட தொகையைவிட இந்த ஆண்டு அதிகமாக ஒதுக்கியிருக்கிறதா? அப்படி பணம் அதிகமாக ஒதுக்கப்பட்டிருந்தால் அது நெல் விளைச்சலைப் பாதிக்காது என்று அரசாங்கம் கருதுகிறதா ?

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி : புதிய உபதேசத்தை விவசாயிகள் கேட்கவில்லை. அப்படிப்பட்ட உபதேசத்தை மக்கள் ஏற்றுக்கொள்ள மாட்டார்கள். ஆகவே நெல் விளைச்சலைப் பாதிக்கலாம் என்ற நிலைமை இல்லை. சென்ற ஆண்டு இருந்த நிலைமையைத்தான் சொன்னேன். 5,256 கரும்புப் பண்ணைகளுக்கு உதவி கொடுக்கப்பட்டு கரும்பு உற்பத்தி செய்யப்பட்டிருக்கிறது. அந்த அடிப்படையில்தான் விவசாயிகளுக்குச் சலுகைகள் வழங்கியிருக்கிறோம். அதையொட்டி இந்தத் துறையிலே நல்ல நன்மை ஏற்பட்டிருக்கிறது.

திரு. பெ. சௌந்தரபாண்டியன் : திருச்சி மாவட்டத்திலே உள்ள சிறுகமணிப் பகுதியில் கரும்புப் பயிர் பண்ணையினால் எந்தவிதமானப் பயனும் இல்லாமல் இருப்பதாலே அதை நெல் விளைவிக்கும் கழனியாக மாற்ற வேண்டுமென்ற கோரிக்கை அரசாங்கத்திற்கு வந்திருக்கிறதா? ஆம் எனில் அதைப்பற்றி பரிசீலனை செய்வதற்கு அரசாங்கம் முன்வருமா?

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி : அதைப்பற்றிய தகவல் அரசாங்கத்திற்குக் கிடைத்திருக்கிறது. அதை விவசாய இயக்குநர் நேரடியாகப் பார்த்து வந்திருக்கிறார்கள். அவர்கள் அங்கே கரும்புப் பண்ணையையே அபிவிருத்தி செய்யலாம் என்ற நோக்கத்தோடு சிபாரிசு செய்து இருக்கிறார்கள். ஏற்கனவே அந்தப் பண்ணை சரியாக நடைபெறாமல் பயனில்லாமல் இருந்தது உண்மைதான்.

ARCHIVES
EGMORE, MADRAS

உள்ளடக்கம்.

	பக்கங்கள்
1 வினாக்கள்—விடைகள்	1–30
2 உரிமைப் பிரச்சினை— முரசொலி நாளிதழில் பேரவை நடவடிக்கைகள்பற்றி வந்துள்ள செய்தி	30–32
3 1967–68-ஆம் ஆண்டிற்கான மானியக் கோரிக்கைகள்மீது வாக்கெடுப்பு (தொடர்ச்சி)—	
கோரிக்கை எண் IX—மாவட்ட நிர்வாகமும், பல்வகையும் கோரிக்கை எண் XXXIII—பல்வகை .. .. .. கோரிக்கை எண் XXXVI-ஏனைய பல்வகை இழப்பீடுகளும், ஒதுக்கீடுகளும் .. .. கோரிக்கை எண் XXXII—ஓய்வூதியங்கள் .. .. கோரிக்கை எண் XLV—ஓய்வூதியங்களை மொத்தமாக்குதல்	32–86
4 பேரவையின்முன் வைக்கப்பட்ட ஏடுகள்	86

V211,31 N67
N67·5·1
65023

A. 87—(i)

திரு. சி. கோவிந்தராசன் : நெல்லிக்குப்பத்திலே உள்ள இ. ஐ. டி. பாரி கம்பெனியின் கேன்நர்ஸரி திட்டம் இதன்கீழ் வருகிறதா ? அப்படியென்றால் அதற்கு எவ்வளவு மானியம் கொடுக்கப்படுகிறது ?

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி : தனிக் கேள்வி போட்டால் பதில் அளிக்கலாம்.

THIRU T. MARTIN : May I know from the Hon. Minister whether this Government will give incentive bonus to the cultivators of sugarcane?

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி : ஏற்கனவே மத்திய சர்க்காரால் கொடுக்கப்பட்டுவந்த போனஸை மத்திய சர்க்கார் நிறுத்தியிருக்கிறார்கள். கரும்பு விவசாயத்தில் ஈடுபட்டிருக்கிறவர்களுக்குப் பயிர்ப் பாதுகாப்புக்காக, 50 சத வீதமும் பெஸ்டிஸைட்ஸ்க்கு 50 சத வீதமும் வழங்கப்படுகிறது. கரும்பு நடுவதற்கு ஒரு ஏக்கருக்கு மூன்று கணுவுள்ளவற்றிற்கு 15 ரூபாயும், இரண்டு கணுவுள்ளவற்றிற்கு 10 ரூபாயும் மானியம் வழங்கப்பட்டது. இருபது மைல்களுக்குள் இருந்து கொண்டுவந்தால் 10 ரூபாய் மானியமும்; 20 மைல்களிலிருந்து 75 மைல்களுக்குள் இருந்து கொண்டுவந்தால் அவர்களுக்கு 40 ரூபாய் மானியமும், 75 மைல்களுக்கு மேல் உள்ள இடங்களிலிருந்து கொண்டுவந்தால் 150 ரூபாய் மானியமும் வழங்கப்படுகிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினுக்கள் 272, 273 தள்ளிவைக்கப்படுகின்றன.

கைத்தறி நிதி கார்ப்பரேஷன்

* 274 வினு.—**திரு. வி. கே. கோதண்டராமன் :** மதிப்பிற்குரிய கல்வி-தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

கைத்தறி நிதி கார்ப்பரேஷன் (**Handloom Finance Corporation**) மூலமாகத் தனி நபர்களுக்கு, கூட்டுறவுச் சங்கங்களுக்கு இன்றுவரை எவ்வளவு பணம் கடனாக வழங்கப்பட்டுள்ளது ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : தனிப்பட்ட நெசவாளர்களுக்கு ரூபாய் 1,32,04,625 வரையிலும், காஞ்சீபுரம் காமாட்சியம்மன் கூட்டுறவு நூல்நூற்பு ஆலைக்கு 9 லட்சம் ரூபாயும், 10—5—1967 வரை கடன் வழங்க தமிழகக் கைத்தறி நிதிக் கார்ப்பரேஷன் ஒப்பளித்துள்ளது.

திரு. வி. கே. கோதண்டராமன் : சார், இந்த ஹேண்ட்லூம் பைனான்ஸ் கார்ப்பரேஷன் மூலமாகத் தனி நபர்களுக்கும், கூட்டுறவுச் சங்கங்களுக்கும் உதவி செய்தும்கூட கைத்தறி நெசவுத் தொழில் திடீர் திடீரென்று பாதிக்கக்கூடிய அளவுக்கு தானே இருந்து வருகிறது. ஆகவே இத்துடன் மேலும் கொஞ்சம் பணத்தை ஒதுக்குவதன் மூலம், கைத்தறி நெசவு ஜவுளியை இந்த பைனான்ஸ் கார்ப்பரேஷன் மூலமாகவே கொள்முதல் செய்து வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்வதின் மூலமாக கைத்தறி நெசவுத் தொழிலுக்குப் பாதுகாப்பு அளிக்க உத்தேசம் உண்டா?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, கைத்தறி நெசவுத் தொழிலுக்குப் பாதுகாப்பு அளிக்கக்கூடிய முயற்சிகளை எல்லாம் அரசாங்கம் மேற்கொண்டிருக்கிறது. அவற்றிலே ஒன்றாகத்தான் இந்த முயற்சியும் மேற்கொள்ளப்பட்டிருக்கிறது. அந்த வகையில்தான் இதற்கு 1,32,04,625 ரூபாய் வழங்கப்பட்டிருக்கிறது. 1965-ம் ஆண்டிலே 650 பேர்களுக்கும், 1966-ஆம் ஆண்டிலே 1,378 பேர்களுக்கும், 1967-ஆம் ஆண்டிலே 428 பேர்களுக்கும் கடன் வழங்கப்பட்டிருக்கிறது. வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்ய வேண்டுமென்று அக்கறை கொண்டுதான் ஸ்டேட் டிரேடிங் கார்ப்பரேஷன் மூலமாக அமெரிக்கா, ஆப்ரிக்கா போன்ற நாடுகளுக்கு எந்த எந்த ரகத் துணிகளை அனுப்பலாமோ அவற்றை அனுப்பு

வதற்கு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன. கைத்தறி நெசவைப் பொறுத்த வரையில் கஷ்டங்கள் வருவதும் தீர்க்கப்படுவதும் மீண்டும் வருவதும் தீர்க்கப்படுவதுமாகத்தான் இருந்து வருகிறது. ஆகவே அரசாங்கத்தின் வசதிகளுக்குட்பட்ட நிலையில் அந்தத் தொழிலுக்கு என்ன என்ன பாதுகாப்பு அளிக்கலாமோ அப்படிப்பட்ட பாதுகாப்பை அரசாங்கம் ஏற்றுக் கொண்டு நடைமுறைப்படுத்தி வருகிறது.

திரு. வி. கே. கோதண்டராமன் : சார், கனம் அமைச்சர் அவர்கள் ஸ்டேட் டிரேடிங் கார்ப்பொரேஷன் மூலமாக ஏற்றுமதி செய்வதற்கு முயற்சிகள் செய்வதாகக் கூறினார்கள். சென்ற ஆண்டு கைத்தறி நெசவுத் தொழில் அமைச்சராக இருந்த திருவாளர் ஆர். வெங்கட்ராமன் அவர்கள் கூறினார்கள், அமெரிக்காவுக்குச் சென்று விட்டு வந்து கைத்தறி சம்பந்தமாக எந்தவிதமான விளம்பரமும் அங்கே கிடையாது ; ஆகவே தான் விற்பனையாகவில்லை என்று. அங்கே குறிப்பாக வண்ணம்மாறும் துணிகளுக்குப் போதுமான அளவுக்கு விளம்பரம் செய்வதற்கு அரசாங்கம் ஏற்பாடு செய்யுமா?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, விளம்பரம் கொடுப்பதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன. அப்பொழுதேகூட இதைப்பற்றிய விளம்பரங்கள் அமெரிக்கப் பத்திரிகையிலே வந்திருக்கின்றன. 6 கோடி ரூபாய் வரையில் ஏற்றுமதி செய்து கொண்டு வந்த இந்த ஏற்றுமதி 10 லட்சம் ரூபாய் அளவிற்கு இறங்கி வந்ததற்குக் காரணம் விளம்பரம் செய்யாமல் இல்லை, அங்கே பேஷன் மாறிவிட்டது. ஜப்பான் போன்ற நாடுகளிலிருந்து இதே மாதிரி துணிகள் வந்துவிட்டன. அமெரிக்காவிலும் இதுபோன்ற துணிகள் உற்பத்தி செய்ய ஆரம்பித்து விட்டார்கள். இதுதான் காரணம். ஆப்ரிக்காவில் கைக்குட்டை போன்ற கைத்தறித் துணிகளுக்குக் கிராக்கி ஏற்பட்டிருக்கிறது. அங்கே இவற்றை ஏற்றுமதி செய்வதற்கு அரசாங்கம் முயற்சி செய்து வருகிறது.

திரு. சோ. அழகர்சாமி : கைத்தறி பைனான்ஸ் கார்ப்பரேஷன் தனிப்பட்ட நபர்களுக்கு எந்த அடிப்படையில் கடன் கொடுக்கிறது ? எத்தனை பேர்களுக்கு இதுவரையில் கொடுக்கப்பட்டிருக்கிறது என்று அறிய விரும்புகிறேன் ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, தனிப்பட்ட நபர்களுக்கு அவர்களுடைய சொந்த செக்யூரிட்டியின்மேல் உத்திரவாதத்தின் மேல் கடன் அளிக்கப்படுகிறது. 1965-ஆம் ஆண்டில் 650 பேர்களுக்கு 25,75,550 ரூபாயும் 1966-ம் ஆண்டில் 1,378 பேர்களுக்கு 78,80,300 ரூபாயும், 1967-ஆம் ஆண்டில் 10—5—67 வரையில் 468 பேர்களுக்கு 28,20,775 ரூபாயும் தரப்பட்டிருக்கிறது.

திரு. எ. பாலசுப்பிரமணியன் : தலைவர் அவர்களே, ஏற்கனவே ஒரு கேள்விக்குப் பதில் அளிக்கும்போது அமெரிக்காவிலே கைத்தறி வாங்குவது குறைந்து விட்டது என்று அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள். அமெரிக்காவிலே கைத்தறித் துணியை இங்கிருந்து ஏற்றுமதி செய்யும் பொழுது டிவேல்யுவேஷன் செய்ததற்குப் பிறகு முன்னைக்காட்டிலும் மலிவாக அனுப்ப வேண்டுமென்று சொல்லப்படுகிற விஷயம் அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்கு வந்திருக்கிறதா?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : அதைப்பற்றிய விவரம் இல்லை. தனிக் கேள்வி போட்டால் விவரங்கள் அளிக்கலாம்.

Metal ores

*275 *Q.*—**THIRU K. VINAYAKAM : Will the Hon. the Minister for Education and Industries be pleased to state whether it is a fact that the Madras Government is contemplating to explore and establish the occurrence of both ferrous and non-ferrous (notably zinc, lead and copper) metals in the area comprising**

portions of Salem, North Arcot and South Arcot districts with the aid of United Nations Organizations.

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : ஆம். நிறைவேற்றக் கருதியுள்ள கனி வள வளர்ச்சித் திட்டத்தின் முக்கிய கூறுகள் அடங்கிய குறிப்பு ஒன்று சபை முன் வைக்கப்பட்டிருக்கிறது.

திரு. கே. விநாயகம் : இந்த ஐக்கியநாடுகள் மேம்பாடு வேலை திட்டத்தின் கீழ் குறிப்பாக நம் மாநிலத்தில் மூன்று மாவட்டங்கள்தான், சேலம், நார்த் ஆற்காடு, சவுத் ஆற்காடு போன்ற மாவட்டங்களில்தான் ஆராய்ச்சி செய்யவேண்டுமென்று குறிப்பிடப்பட்டிருக்கிறதே, அங்குதான் கனிப்பொருள்கள் கிடைக்கிறது என்பது நம் அரசாங்கத்தின் எண்ணமா? அதைத் தொடர்ந்து இருக்கிற செங்கல்பட்டு ஜில்லாவிலும் குறிப்பாகத் திருத்தணி தாலுகாவில் அதிகமாக கனிப்பொருள்கள் இருப்பதாக முன்பு ஆராய்ச்சி செய்து முடிவுக்கு வந்திருக்கிறது. அதையும் இதில் சேர்த்துக் கொள்ள உத்திரவிடுவார்களா? யுனைட்டெட் நேஷன்ஸ் ஸ்பெஷல் பண்டுக்கு இதையும் சிபாரிசு செய்வார்களா?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : அயக்கலப்புள்ள உலோகப் படிவங்கள், அயக்கலப்பற்ற உலோகப் படிவங்கள் இவை எங்கெங்கு கிடைக்கும் என்று ஏற்கனவே இந்த மாநிலத்தில் ஆராய்ச்சி செய்ததன் காரணமாக அந்த மாவட்டங்களில் கொஞ்சம் அதிகமாகக் கிடைக்கிறது என்று தென்படுகிறது. ஆகவே அந்த மாவட்டங்களில் இந்த ஆராய்ச்சி மேற்கொள்ளப்பட்டிருக்கிறது. இது அமெரிக்க உதவியோடு செய்யப்படுகிற ஆராய்ச்சி. அது தக்க லன் அளித்து அதை மேலும் விரிவு படுத்துகிற எண்ணம் வரும்போது வேறு மாவட்டங்களில் எங்கெங்கு இருக்கிறது என்று கண்டறிந்து அந்த மாவட்டங்களிலும் மேற்கொள்வதற்கு முயற்சிகள் மேற்கொள்ளப்படலாம்.

சிறுதொழில் பிரிவுகள்

* 276 வினா.—**திரு. எஸ். சிவசுப்பிரமணியன் :** மதிப்பிற்குரிய கல்வி-தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) சிறு தொழிலபிவிருத்தித் திட்டத்தின்கீழ் தமிழகத்தில் இது வரை உதவித் தொகை தந்து வளர்க்கப்பட்ட தொழிற்சாலைகளின் எண்ணிக்கை என்ன?

(இ) இந்த தொழிற்சாலைகளுக்கு அரசாங்கத்தால் அளிக்கப்பட்டுள்ள உதவித் தொகை எவ்வளவு?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : (அ) & (இ) 1922-ம் ஆண்டு அரசாங்க நிதி உதவிச் சட்டத்தின் கீழ் தொழில்களுக்கு உதவி வழங்குவதைத்தான் உறுப்பினர் குறிப்பிடுகிருர் எனக் கருதுகிறேன். ஏப்ரல் 1948-லிருந்து மார்ச் 1967 வரை 34,100 சிறு தொழில் பிரிவுகள் 4,14,14,931.25 ரூபாய் வரை கடன் வகையில் நிதி உதவி பெற்றன. இதே காலத்தில் இச் சட்டத்தின்கீழ் இரண்டு சிறு 'தொழில் பிரிவுகள் உதவித் தொகை வகையில் 755 ரூபாய் வரை நிதி உதவி பெற்றன.

திரு. எஸ். சிவசுப்பிரமணியன் : இதுமாதிரியான தொழிற்சாலைகள் அமைக்க இப்போதுள்ள அரசாங்கம் புதுத் திட்டம் ஏதாவது வகுத்திருக்கிறதா?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : சிறு தொழில்களுக்கு உதவி செய்கிற வகையில்தான் ரூபாய் 4,14,14,931·25 34,100 சிறு தொழில்களுக்குத் தரப்பட்டிருக்கிறது. ஏற்கனவே அதிகமாக ஒரு லட்சம் ரூபாய் வரை. கடன் உதவி செய்யலாம் என்றிருந்தது. இப்போது இரண்டு லட்சம் ரூபாய் அளவிற்குக் கடன் உதவி செய்வதற்குள்ள முயற்சியை இந்த அரசு மேற்கொண்டு இரண்டு லட்சம் என்ற இலக்கை வைத்திருக்கிறது.

---

* 67–91-ம் பக்கங்களில் இணைப்பு I-ஆக அச்சிடப்பட்டுள்ளது.

திரு. எஸ். ராமச்சந்திரன் : இந்தச் சிறு தொழில்களை ஊக்குவிக்கும் வகையில் இந்தத் தொழில்களின் மூலம் உற்பத்தியாகும் பொருள்களை அரசாங்க இலாகாக்கள் வாங்கும்போது தனிச் சலுகை காட்ட வேண்டுமென்று அரசு அவர்களுக்கு அறிக்கை அனுப்புமா?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : கூடுமானவரை அரசாங்கம் இந்தத் தொழிற்சாலைகளில் உற்பத்தியாகும் பொருள்களை வாங்கிப் பயன்படுத்தவேண்டுமென்று உத்திரவிடப்பட்டிருக்கிறது. தனிச் சலுகை காட்டும் நிலைமையில்லை.

Dr. H. V. HANDE : Sir, in his reply the Hon. Minister has stated that about Rs. 4 crores have been spent on the small scale industries. Unlike the previous Ministry, will this Ministry come forward with some concrete proposal to find out the total quantity of produce manufactured by these small scale industries and the total value of the produce and whether it is more than the amount invested in these industries, as that will give the Hon. Minister an idea as to whether that amount as been properly spent or not ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: கொடுக்கப்படுகிற உதவித் தொகை சரியாகச் செலவு செய்யப்படுகிறதா என்பது கண்காணிக்கப்பட்டு வருகிறது. சரியாகச் செலவழிக்கப்படாத நிலையில் உடனே நிறுத்தி விட்டு சம்பந்தப்பட்டவர்களிடம் இருந்து தொகையைத் திரும்பப் பெறும் முயற்சியை அரசாங்கம் மேற்கொண்டு வருகிறது. உதவி செய்வதன் நோக்கம் சிறிய தொழில்கள் ஆரம்பிப்பதற்கு விரும்புகிறவர்களுக்கு வசதி செய்து தருவது; குறிப்பாக நிலம் வாங்குவதற்கும், இயந்திரங்கள் வாங்குவதற்கும், நடைமுறைச் செலவிற்கும், வேறு பல கடன்கள் இருந்தால் அதைத் தீர்த்து விட்டு நல்ல முறையில் நடத்திக் காட்டுவதற்கான வசதி இருக்கிறதா என்றெல்லாம் பார்த்து அந்த வகையில் கடன் உதவி அளிக்கப்படுகிறது. சரியாகச் செலவழிக்கப்படவில்லை என்றுல் உடனே அதை நிறுத்திவிட்டு அதை மீண்டும் பெறுகிற முயற்சியை அரசாங்கம் மேற்கொண்டு வருகிறது.

திரு. கே. ஆர். கோவிந்தன் : இந்தச் சிறு தொழில்கள் ஆரம்பிப்பதன்மூலம் தமிழகத்தில் எவ்வளவு பேர்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்க அரசு எண்ணுகிறது?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : அதுபற்றிய கணக்கு இல்லை. அதைத் திரட்டுவது கடினம். தனியார் துறைக்கும் பல வகைகளில் தரப்பட்டிருப்பதால் அந்தக் கணக்கை திரட்டுவது கடினம். ஓரளவு கணிசமான அளவு வேலைவாய்ப்புத் தேடித்தர சிறுதொழில்கள் வளர்ச்சி பயன்படுகிறது.

திரு. க. இராமமூர்த்தி : சிறு தொழில்களுக்குக கடன் வழங்குகிற முறையில் அந்த அந்த தொழில்களுக்குப் போடப்பட்டுள்ள முதலீட்டை மனதில் கொண்டு வழங்கப்படுகிறதா? அல்லது அந்தத் தொழிலின் முக்கியத்துவத்தை மனதில் கொண்டு கடன் வழங்கப்படுகிறதா?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : குறிப்பிட்ட சில தொழில்கள், வளர்ச்சி தரக்கூடிய தேவைப்படுகிற, இன்றியமையாத தொழில்கள் என்று கருதப்படுகிற தொழில்களை மனதில் கொண்டு தரப்படுகிறது. இரண்டாயிரம் ரூபாய் வரையில் தனி நபர் உத்தரவாதத்தின் பேரில் தரப்படுகிறது. ஐயாயிரம் வரை அவர்களும் மற்ற ஒருவர் அல்லது இருவர் ஜாமீன் கொடுப்பதின் பேரில் தரப்படுகிறது. அதற்கு மேல் தரப்படுகிற கடன்கள் எல்லாம் சொத்துக்கள், நிலங்கள், போன்றவற்றை வைத்து அதில் 75 சத வீதத்திற்கு மேற்படாத வகையில் கடன் [illegible] முயற்சிசெய்யப்பட்டு வருகிறது

வேண்டுமென்ற தீர்மானம் 1947-ம் ஆண்டிலேயே எடுக்கப்பட்டு, மெள்ள மெள்ள நடைமுறைக்குக் கொண்டுவர முயற்சி எடுக்கப்பட்டிருக்கிறது. தனியார் நிறுவனங்களை எடுத்துக்கொள்ளும் முறையில் முன்னால் இருந்த அரசு சில இடங்களில் முயன்று, அந்த முயற்சி நிறுத்தப்பட்டிருக்கிறது. இதை எடுத்துக்கொள்வதற்கு முக்கிய காரணம் என்ன வென்றால், எலெக்ட்ரிஸிட்டி போர்டு மூலமாக மின்சாரம் வழங்குவதில் எல்லா இடங்களுக்கும் எல்லா கிராமங்களுக்கும் தாராளமாக வழங்கப்பட்டிருக்கிறது. தனியார் மூலமாக மின்சாரம் வழங்கப்படுகிற தஞ்சை, திருச்சி போன்ற இடங்களில் 600, 700 கிராமங்களுக்குள்ளாகத் தான் மின்சாரம் வினியோகிக்கப்பட்டிருக்கிறது. வட ஆற்காடு மாவட்டத்தில், வேறு மாவட்டங்களில் மின்சாரக் கழகத்தின் கீழ் இருக்கிற மாவட்டங்களில் 2,000-க்கு மேற்பட்ட கிராமங்களுக்குக் கூட வழங்கப்பட்டிருக்கிறது. இதற்குக் காரணம் அவர்கள் லாப-நஷ்டக் கணக்குப் பார்த்து, கிராமங்களுக்கு மின்சாரம் கொடுப்பதில் தாமதம் செய்கிறார்கள். அதனால் அந்தப் பகுதிகளில் வேளாண்மைத் துறையிலும் வளர்ச்சி செய்ய முடியாத நிலைமை இருக்கிறது. இப்போது உடனடியாக தஞ்சை மாவட்டத்தில் தீவிர சாகுபடித் திட்டத்தைக் கொண்டு வரும்போது பல கிராமங்களுக்கு லாப நஷ்டக் கணக்குப் பார்க்காமல் பின்னால் வருகிற பெரிய லாபத்தை முன்னாலே கவனித்துச் செய்ய வேண்டிய நிலைமை இருப்பதால், இந்த ஆண்டு மூன்று நிறுவனங்களைத் தஞ்சை மாவட்டத்தில் எடுத்துக்கொள்ளுவது என்றும், பிறகு படிப்படியாக மற்ற நிறுவனங்களையும் எடுத்துக்கொள்ளுவது என்றும் அரசு முடிவு செய்திருக்கிறது.

திரு. வி. கே. கோதண்டராமன் : ஸார், மேலும் எடுக்க வேண்டிய நிலையில் இருக்கக்கூடிய தனியார் மின் நிறுவனங்கள் மாவட்ட வாரியாக எவை எவை? அவைகளை உடனடியாக எடுத்துக்கொள்வதில் உள்ள சிரமங்கள் என்ன?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, மேலும் எடுக்கப்பட வேண்டியவை, தனியார் துறையில் இருப்பவை—

Vellore Electric Supply Corporation, Limited.
Salem-Erode Electricity Distribution Company, Limited.
Tirunelveli-Tuticorin Electric Supply Company, Limited.
Tiruchirappalli-Srirangam Electric Licensee.
Shencottah Electric Supply agency.

இவைகளும் எடுத்துக்கொள்ளப்பட வேண்டும் என்பதுதான் அரசின் நோக்கம். உடனடியாக எடுத்துக்கொள்ள முடியாதது நிதி நிலைமையைப் பொறுத்துத்தான். இப்போது மூன்று நிறுவனங்களை எடுத்துக்கொள்ளுவதிலே ரூபாய் 375 லட்சம் செலவு ஆகும் என்று மதிப்பீடு செய்யும் நிலையிலே அவைகள் எடுக்கப்பட இருக்கின்றன. அடுத்த ஆண்டும், அதற்கு அடுத்த ஆண்டும் தொடர்ந்து எடுத்துக்கொள்ளப்படும். உள்ளாட்சி மன்றங்களைப் பொறுத்த வரையில் கரூர், பொள்ளாச்சி, தஞ்சாவூர், மதுரை, கோயம்புத்தூர் முனிஸிபாலிட்டிகளின்கீழ் உள்ள நிறுவனங்கள் இருக்கின்றன. அவைகளையும் நாளடைவில் எடுத்துக்கொள்ள முயற்சி மேற்கொள்ளப்படும்.

ஹாஜி மமு. பீர் முஹம்மது : ஐயா, திருநெல்வேலி-தூத்துக்குடி மின் வழங்கும் நிலையம் ஊழல் மலிந்ததாகவும், விவசாய உற்பத்திக்கு வேண்டிய மின்வசதி கேட்டால் புறக்கணிக்கும் நிலையிலும் இருப்பதால், அடுத்த ஆண்டு அதை தேசியமயமாக்குவதன் மூலம் விவசாய உற்பத்திக்கு அரசாங்கம் உதவி செய்யுமா?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, நான் முதலிலே குறிப்பிட்டபடி இந்த நிறுவனங்களையெல்லாம் அரசு எடுத்துக் கொள்ளத்தான் இருக்கிறது. இந்த ஆண்டு மூன்றும், அடுத்த ஆண்டு

களில் தொடர்ந்தும் எவை எவை சாத்தியக்கூறுகள் உள்ளனவாக இருக்கின்றனவோ அவைகளை எடுத்துக் கொள்ள அரசாங்கம் முயலும். விரைவிலே திருநெல்வேலி தூத்துக்குடி கம்பெனியை எடுத்துக்கொள்ளும் முயற்சியை அரசாங்கம் மேற்கொள்ளும்.

திரு. ஈ. ஆர். கிருஷ்ணன் : ஐயா, சேலம்-ஈரோடு மின்சக்தி நிறுவனத்தை அடுத்த ஆண்டு சர்க்கார் மேற்கொள்ளும் உத்தேசம் உண்டா ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : மொத்தம் 8-ல் இப்போது மூன்று எடுத்திருக்கிறோம். அடுத்த ஆண்டு மூன்றா, இரண்டா, நான்கா என்பதும், அடுத்த ஆண்டு எவை எவை என்பதும் பிறகு ஆராயப்பட்டுத் தான் எடுத்துக் கொள்ளப்படும்.

திரு. வை. சுவாமிநாதன் : ஸார், சவுத் மெட்ராஸ் எலெக்ரிஸிட்டி சப்ளை கார்ப்பரேஷனை அடுத்த ஆண்டு எடுத்துக்கொள்ளும் உத்தேசம் உண்டா ? உடனடியாக எடுத்துக்கொள்ளாவிட்டாலும், சில பகுதிகளில் சவுத் மெட்ராஸ் எலக்ட்ரிஸிட்டி சப்ளை கார்ப்பரேஷனுக்கும், ஸ்டேட் எலெட்ரிஸிட்டி போர்டுக்கும் பொதுவான சில கிராமங்கள் இருக்கின்றன. அவைகளையாவது எடுத்துக்கொள்ளும் உத்தேசம் உண்டா?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, படிப்படியாக எடுத்துக் கொள்ளுவது என்பதுதான் அரசாங்கத்தின் உத்தேசம். இந்த ஆண்டு குறிப்பிட்ட மூன்று உரிமங்களை அரசாங்கம் எடுத்துக் கொள்ளுகிறது. அடுத்த ஆண்டும் சிலவற்றை எடுத்துக் கொள்ளும். உறுப்பினர் கூறுகிற சங்கடங்களை ஆராய்ந்து பார்த்து, எடுத்துக் கொள்ளப்பட வேண்டிய அவசியம் இருக்குமானால் அது கவனிக்கப்படும்.

திரு. எம். பூபதி : தலைவர் அவர்களே, நகர மன்றங்களின் வருவாயை அதிகரிக்கத் திட்டம் தீட்டியுள்ள இந்த அரசு, நகர மன்றங்களால் நடத்தப்படுகின்ற மின் நிலையங்களை எடுத்துக் கொள்ளுவது முறையா? இதை ஒத்திப்போட மீண்டும் யோசனை செய்யுமா என்று கேட்கிறேன்.

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, இருக்கிற திட்டத்தின்படி ஏற்கனவே 22 நகராட்சி மன்றங்களிடமிருந்து எடுத்துக் கொள்ளப்பட்டிருக்கிறது. விடப்பட்டது ஐந்துதான். முதலில் தனியார் நிறுவனங்களை எடுத்துக் கொண்ட பிறகு இது பற்றி யோசிக்கப்படும். உறுப்பினர் கூறுகிறபடி, எடுத்துக் கொள்ளுவதால் பலனா, அல்லது அவர்களிடமே விட்டு வைப்பதால் பலனா—இரண்டும் பொதுத் துறையில் இருப்பதுதான்—என்று ஆலோசித்துப் பார்த்து முடிவு எடுக்கலாம்.

திரு. எஸ். ராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, இத்தகைய நாட்டுடைமையாக்கும் திட்டத்தை ஏற்கெனவே மத்திய சர்க்காரும் எலெக்ட்ரிஸிட்டி சப்ளை ஆக்ட் என்பதன் மூலம் ஒப்புக்கொண்டிருக்கிறார்கள். நாம் அவைகளை நாட்டுடைமை ஆக்குவதற்கு நம்முடைய நிதி நிலைமை இடம் தராமல் இருக்கிறது. மத்திய சர்க்கார் ரிஸர்வ் பாங்க் மூலம் செக்யூரிட்டி அளித்தால் 10 ஆண்டு, 20 ஆண்டுத் தவணைகளில் இத்தகைய நிறுவனங்களுக்கு நாம் நஷ்ட ஈட்டைத் தரலாம் என்ற அடிப்படையில் இந்த நாட்டுடைமை ஆக்கும் திட்டத்தை மேற்கொண்டு, அவர்களுக்குப் பாண்டுகளாகத் தருவதற்கு ரிஸர்வ் பாங்க் நமக்கு செக்யூரிட்டி அளிக்க வேண்டுமென்று மத்திய சர்க்காரை இந்தச் சர்க்கார் வற்புறுத்துமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : வற்புறுத்துவதில் ஒன்றும் கஷ்டம் இல்லை. வேறு பல வகைகளுக்கு கேட்கிறபோதே ரிஸர்வ் பாங்க் தர முடியாதிருக்கும் போது, இதற்கு அவ்வளவு எளிதில் தருமா என்பது தான் பிரச்னை.

திரு. ரா. ரா. முனுசாமி : சிறு தொழிற்சாலைகளை அமைப்பது சில மாவட்டங்களில்தான் இருக்கிறது. ஆகவே மற்ற மாவட்டங்களில் உள்ள மக்களுக்கு வேலைவாய்ப்புக் கிடைக்காத காரணத்தினால் வட்டங்கள் தோறும் சிறு தொழில்களை அமைக்க புது அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : இது அரசாங்கத்தின் முயற்சி அல்ல. ஆங்காங்கிருப்பவர்கள் அவர்கள் விண்ணப்பித்துக் கொள்வார்களானால் அதன் அடிப்படையில் கணக்கிடப்பட்டு ஆங்காங்கு உதவி வழங்கும் முறை மேற்கொள்ளப்பட்டிருக்கிறது. எந்த வட்டத்திலிருந்தும் யாரும் விண்ணப்பித்துக் கொள்ளலாம் ; முறைப்படி அவர்களுக்கும் நிதி உதவி வழங்கப்படும்.

திரு. தோ. மு. நல்லசாமி : இந்த ஸ்மால் ஸ்கேல் இண்டஸ்ட்ரீஸில் தனியார் போட்டிருக்கும் முதலீட்டையும், அரசாங்கம் கொடுத்திருக்கிற சப்சிடி இவைகளையும் பயன்படுத்தி எந்த அளவிற்கு உற்பத்தி இருக்கிறது, அதே சமயத்தில் வேலை வாய்ப்பை எந்த அளவிற்குப் பெருக்க முடியும் என்பதையும் எவால்யுவேட் செய்ய அரசாங்கம் உத்தியோகஸ்தர்களையும், உத்தியோகப் பற்றற்றவர்களையும் கொண்ட ஒரு கமிட்டி அமைத்து கண்டு பிடித்து அவைகள் வளர்ச்சி பற்றித் தெரிவிக்க முடியுமா ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : இப்போது அப்படிப்பட்ட ஒரு கமிட்டியும் ஏற்படுத்தப்படவில்லை. அந்த உத்தேசம் இப்போது இல்லை. ஆனால் அங்கத்தினர் அவர்கள் கருத்தை மனதில் வைத்துக் கொண்டு எதிர்காலத்தில் அது குறித்து ஏதாவது நடவடிக்கைகள் எடுக்கலாமா என்பதுபற்றி இந்த அரசு யோசிக்கும்.

திரு. நா. கிருட்டிணன் : கடந்த அரசு அரசியல் பாரபட்சம் காட்டி இத்தகைய சலுகைகள் வழங்கியதாகப் பரவலாகக் கூறப்படுகிறது. இந்த அரசாவது அதை மாற்றி தகுதியுடையவர்களுக்கு இந்தச் சலுகை தர முன்வருமா?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : சிறிய தொழில்களுக்கு கடன் உதவி செய்வதைப் பொறுத்த வரையில் அரசியல் காரணமோ மற்றவைகளோ குறுக்கிடுவதற்கு வழியில்லை. ஆங்காங்குள்ள அதிகாரிகள் பார்த்து இரண்டாயிரம், ஐயாயிரம் ரூபாய் தருகிறார்கள். பிறகு டெப்டி டைரக்டர், டைரக்டர் பார்த்துத் தருகிறார்கள். ஒரு லட்சம், அதற்கு மேல் என்றால் இண்டஸ்ட்ரீஸ் போர்ட் என்றிருக்கிறது. அதில் பலதரப் பிரதிநிதிகள், சட்டமன்ற அங்கத்தினர்கள் இரண்டு பிரதிநிதிகள் அதில் இடம் பெற்றிருக்கிறார்கள். அதில் அரசியல் காரணங்கள் அதிகமிருக்கிறதாகச் சொல்வதற்கில்லை.

திரு. வி. கே. கோதண்டராமன் : இந்தச் சிறு தொழில்களில் உற்பத்தி செய்யக்கூடிய பொருள்கள் பல சந்தர்ப்பங்களில் விற்பனை செய்ய முடியாத அளவிற்கு தேங்கியிருப்பதால் திடீர் திடீர் என்று வேலை நடைபெறாத நிலை ஏற்படுகிறது. ஆகவே அவைகளை விற்பதற்கான ஏற்பாடு ஏதாவது உண்டா? இல்லை என்றால் அவற்றை விற்பனை செய்வதற்கு ஏற்பாடு செய்யப்படுமா ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: தேங்கிக் கிடப்பதை விற்பனை செய்ய வழிவகை செய்ய வேண்டுமென்ற கோரிக்கை எதுவும் அரசிற்கு வரவில்லை. அப்படி வந்தால் தக்க வகையில் மார்க்கெட்டிங் சொஸைட்டி மூலம் அல்லது வேறு வகையிலோ வேறு ஏதாவது ஏற்பாடு செய்வதன் மூலம் செய்யலாமா என்பதுபற்றி யோசிக்கும். அதுபற்றிய கோரிக்கை எதுவும் வரவில்லை.

திரு. ஏ. ஆர். சுப்பையா முதலியார் : தலைவர் அவர்களே, நமது மாகாணத்தில் ஸ்மால் ஸ்கேல் இண்டஸ்ட்ரீஸ் கார்ப்பரேஷன் என்றும், பிக் இண்டஸ்ட்ரீஸ் கார்ப்பரேஷன் என்றும் இரண்டு கார்ப்பரேஷன்கள் உருவாக்கப்பட்டிருக்கின்றன. அது போக சிறு தொழிலுக்கு அரசாங்கத்திலே

உதவி கொடுக்கிறார்கள். அஸிஸ்டண்ட் டைரக்டர் ஆப் இண்டஸ்ட்ரீஸ் ஒவ்வொரு ஜில்லாவிலும் என்ன வேலை செய்து கொண்டிருக்கிறார்கள்? இந்த மாதிரிக் கண்காணிக்கும் நிலையில் ஏதாவது நடக்கிறதா? இப்போது கேட்டால், ஒரு வேலையும் இல்லை, முக்கால்வாசி வேலை கார்ப்பரேஷன் பொறுப்பில் போய்விட்டதால் வேலையே இல்லாமல் இருக்கிறோம் என்று உணர்ச்சியோடு சொல்லும் அதிகாரிகளும் இருக்கிறார்கள். இதை ஆராய்ந்து தக்க முடிவு எடுத்துச் சிக்கனத்திற்கு ஏற்பாடு செய்வார்களா ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, உறுப்பினர் கூறுகிற கருத்து மனத்திலே கொள்ளப்பட்டு, அது பற்றிய விசாரணை மேற்கொள்ளப்பட்டு, தக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

திரு. எஸ். சிவசுப்பிரமணியன் : ஸார், இந்த மாதிரியான சிறு தொழில்கள் அமைப்பதற்கு ஹரிஜன மக்கள் முன் வந்தால் இந்த அரசு தனிச் சலுகை ஏதாவது கொடுக்க முன்வருமா என்று கேட்க விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : குறிப்பிட்டிருக்கிற நிபந்தனைகளுக்கு உட்பட்டுச் செய்யலாம். கொடுக்கப்படுகிற கடன் உதவியைத் திருப்பிச் செலுத்துகிற வலிவு இருக்குமானால், அது பற்றி ஏற்பாடு செய்யலாம்.

Private Electricity undertakings

* 277 Q.—THIRU K. VINAYAKAM :
THIRU V. K. KOTHANDARAMAN : } Will the Hon. the Minister for Education and Industries be pleased to state—

(a) whether the Government propose to take over or nationalise progressively the private electricity undertakings in the State,

(b) if so, the number of such undertakings, and

(c) the financial implication in such endeavour ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : 1947 முதல் இதுநாள் வரை நம் மாநிலத்தில் மின்சாரம் வழங்கும் பணியை தல நிருவாகத்திலிருந்து 22-ம், தனியார் நிருவாகத்திலிருந்து 17-ம் ஏற்றுக் கொள்ளப்பட்டிருக்கின்றன. நகராட்சியிடமிருந்து 5-ம் தனியாரிடமிருந்து 8-ம் இன்னும் ஏற்றுக் கொள்ளப்பட வேண்டியவை இருக்கின்றன. இது விரைவில் செய்யப்படும். ஏற்கனவே கூறிய வண்ணம் உணவு உற்பத்தியை முன்னிட்டு தஞ்சாவூர் மாவட்டத்தைச் சேர்ந்த கீழ்வரும் மூன்று தனியார் நிறுவனங்களை அரசு ஏற்றுக்கொள்ளும்.

கும்பகோணம் மின்சார உரிமம் பெற்றவர்.

நாகைப்பட்டினம் மின்சார உரிமம் பெற்றவர்.

மாயவரம்-மன்னார்குடி-திருவாரூர் மின்சார உரிமம் பெற்றவர்.

இந்த மூன்று நிறுவனங்களை தமிழக மின்சார போர்ட் ஏற்றுக் கொள்ளுவதால் அதற்கு சுமார் ரூபாய் 375 லட்சம் செலவாகும் என மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது.

THIRU K. VINAYAKAM : May I know what the defects were in these private electricty undertakings ? Did they not come up to our standard of distribution of electricity and what is the necessity for taking them over ? When could they be taken over and would that be over by this year ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, இந்தத் தனியார் நிர்வாகத்தின்கீழும், உள்ளாட்சி மன்றங்களின் நிர்வாகத்தின்கீழும் இருக்கிற மின்சாரம் வழங்கும் நிறுவனங்களை எடுத்துக்கொள்ள

திரு. தி. தீர்த்தகிரி கவுண்டர் : தலைவர் அவர்களே, தர்மபுரி மாவட்டத்தில் அரூர் தாலூகாவிலும், ஊத்தங்கரை தாலூகாவிலும் மின்சாரம் வழங்க வேலூர் ஸிஸ்டம், மேட்டூர் ஸிஸ்டம் என்று இரண்டு பிரிவுகள் இருப்பதால் விவசாயிகளுக்கு மின்சாரம் வழங்குவதிலும், கிராமங்களுக்கு மின்சாரம் வழங்குவதிலும் தாமதம் இருப்பதால் நடைமுறையில் சிக்கல் ஏற்படுகிறது. இதைப் போக்க ஏற்பாடு செய்வார்களா ? அதோடு மின்சாரம் வழங்குவதற்கு அக்ரிமெண்ட் ஆகி நான்கு ஆண்டுகள் ஆகியும், சிற்சில காரணங்களால் இன்னும் தாமதமாகிக் கொண்டிருக்கிறது. அதைத் தவிர்க்க நடவடிக்கை எடுப்பார்களா ?அதோடு விவசாயிகளுக்கு மின்சாரக் கடன் வழங்குவதில், மின்சார சர்வீஸ் கிடைத்தால் தான் மோட்டார் கொடுப்போம் என்றும், மோட்டார் வாங்கினால்தான் சர்வீஸ் கொடுப்போம் என்றும் சொல்லுகிறார்கள். இப்படிப்பட்ட சிக்கல்களைப் போக்க நடவடிக்கை எடுப்பார்களா ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : உறுப்பினருடைய கேள்வி இந்தக் கேள்விக்கு நேரடித் தொடர்புடையது அல்ல என்றாலும், உறுப்பினர் கூறும் சிக்கல்களைத் தீர்க்கவேண்டும் என்று உத்தரவிடப்பட்டுள்ளது. விவசாயிகளுக்குக் காலதாமதம் செய்யாமல் கூடிய விரைவில் மின்சாரம் அளிக்க ஏற்பாடு செய்ய வேண்டுமென்று மின்சாரக் கழகத்திற்கு ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

Dr. H. V. HANDE : Sir, will this Ministry tell us the first-concrete step that they are going to take to implement the programme of nationalising those private electricity undertakings and also whether the Hon. Minister is aware of the fact that just because the Ministry have made a premature announcement that they are going to nationalise private electricity undertakings, those private electricity undertakings are giving a lot of trouble to a number of ryots who are in their zone and if so, will the Government take concrete steps to see that something is done immediately ?

THE HON. THIRU C. N. ANNADURAI : The usual procedure is to give them notice, three or four months' notice. The Government are engaged in that. After that, we pay compensation and take over the projects. As for the fact mentioned by the Hon. Member that they are giving troubles, the question is whether they are in a position to supply power as it is demanded. Their plea is that they are not financially sound enough to do that and they have applied to the Government for periodical loans and the Government have been accommodating loans also. Instead of accommodating loans to them periodically, the Government think it proper to take over the projects.

இந்தி எதிர்ப்புக் கிளர்ச்சி

*** 272 வினா—திரு. எஸ். சிவசுப்பிரமணியன் :** மதிப்பிற்குரிய முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா :—

(அ) இம் மாநிலத்தில் இந்தி எதிர்ப்புப் போராட்டத்தினால் அரசாங்கத்திற்கு ஏற்பட்ட நஷ்டம் எவ்வளவு?

(இ) அதை சரிக்கட்ட அரசாங்கம் எடுத்துக் கொண்ட நடவடிக்கை என்ன?

மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை : (அ) ரூபாய் 6,18,628–02 (ஆறு லட்சத்து பதினெட்டாயிரத்து அறுநூற்றிருபத்தெட்டு ரூபாய் இரண்டு காசு.)

(இ) அரசின் உடைமைகளுக்கு ஏற்பட்ட விரயத்தை எவ்வழியிலிருந்தும் வசூலிக்க இயலாது. ஹிந்தி எதிர்ப்புக் கிளர்ச்சியின்போது இந்த அரசுக்கு ஏற்பட்ட விரயங்களை கணக்கிலிருந்து அகற்றுவதற்கு அந்தந்தத் துறைகள் நடவடிக்கை எடுக்கத் தொடங்கியுள்ளன.

THIRU K. VINAYAKAM : Sir, apart from the material loss sustained by this Government, what about the human loss that has occurred as a result of this Anti-Hindi Agitation ? What compensation was given to those families which incurred this kind of human loss ?

THE HON. THIRU C. N. ANNADURAI : There is no human loss due to the Anti-Hindi Agitation but due to shooting and proper steps are being taken to compensate those people who are affected.

திரு. ஆலடி அருணா : அவைத் தலைவர் அவர்களே, இந்தி எதிர்ப்புப் போராட்ட காலத்தில் முன்னாள் முதலமைச்சர் அவர்கள் மாணவர்களைச் சந்திக்க மறுத்ததாலும் நாடெங்கிலும் 144 தடை உத்தரவு போடப்பட்டதாலும், ராணுவத்தை அழைத்துக் காட்டு தர்பார் நடத்தியதாலும் தான் இத்தகைய இழப்புகள் ஏற்பட்டன. ஆகவே இழப்புக்குக் காரணமான முன்னாள் முதலமைச்சர் அல்லது அமைச்சரவை அங்கத்தினர்கள் மீது நடவடிக்கை எடுக்க அரசு முன் வருமா?

மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை : அப்படிப்பட்ட ஒரு கருத்து பரவலாக மக்கள் மத்தியில் இருக்கிறது. அதற்காக நடவடிக்கை எடுக்கும் உத்தேசம் இந்த அரசுக்கு இல்லை.

DR. H. V. HANDE : Sir, will this Government at least give compensation to the number of persons who had actually been stabbed, beaten, threatened and even physically manhandled just because they had put on a black and red flag and refused to put on a tricolour flag ? Especially in my constitutency I can produce a person who is the brother of the Manram Secretary, who was completely stabbed in the neck and he has become a lunatic and he has not even got a seat in the Mental hospital. Now his whole family is actually weeping. So, will this Ministry come forward to show some consideration to his family so that they can exist ?

THE HON. THIRU C. N. ANNADURAI : Sir, many persons suffered during that period including myself, and therefore compensation to be paid to them is very necessary provided the financial implications are within the control of the Government. Any how I will pay the deepest attention to the suggestion made by the hon. Member.

திரு. க. மு. ராசகோபால் : இப்படி இதற்கு முன்னாலே இருந்த அரசு பல குற்றங்களைச் செய்திருந்தும் இப்போதுள்ள அரசு அந்த அரசின் மீது நடவடிக்கை எடுக்க அஞ்சுகிறது என்று பொதுமக்கள் பரவலாகப் பேசிக் கொள்கிறார்கள் என்பதை அரசு அறியுமா?

மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை : அஞ்சி நடக்கிறது என்ற பதம் பொருந்தாது; அன்போடு நடந்து கொள்கிறது என்ற பதம் பொருந்தும்.

திரு. நா. காசிராமன் : இந்தி கலவரத்தின்போது படுகாயமுற்ற, கொல்லப்பட்ட போலீஸ் இலாகா அதிகாரிகளுக்கும், அவர்களுடைய குடும்பங்களுக்கும் நஷ்ட ஈடு கொடுக்கப்பட்டதா? அதன் மொத்தத் தொகை எவ்வளவு?

மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை : விவரமான புள்ளிகள் இல்லை. கொல்லப்பட்ட போலீசாருடைய குடும்பங்களுக்குக் கணிசமான அளவுக்கு நஷ்ட ஈட்டுத் தொகை தரப்பட்டிருக்கிறது.

திரு. மா. இராசாங்கம் : எரிக்கப்பட்டதாகச் சொல்லப்பட்ட இந்தி எதிர்ப்புக் கிளர்ச்சி சம்பந்தப்பட்ட ஃபைல்கள் இந்தக் கட்டடத்தில் வேண்டுமென்றால் இல்லையே தவிர வெளியில் இருப்பதாகச் சொல்லப்படுகிறதே, அது உண்மையா?

மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை : கனம் உறுப்பினர் அவர்கள் சொல்வதற்கான ஆதாரங்களை என்னிடத்தில் தனியாகக் கூறலாம்.

திரு. எஸ். ராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, தமிழர்கள் நடத்திய வரலாற்றுச் சிறப்பு மிக்க நிகழ்ச்சியில் முதலமைச்சர், பேரவைத் தலைவர் உட்பட பல்லாயிரக்கணக்கான தமிழர்களும், சிறப்பாக மாணவர்களும் சிறைவாசம், தடியடி, துப்பாக்கிப் பிரயோகம் ஆகியவற்றுக்கு உள்ளான விவரங்களை எல்லாம் சேகரித்து அரசாங்கம் புத்தக உருவில் வெளியிட்டு இந்த நஷ்டத்தைச் சரிக்கட்ட முன் வருவார்களா?

மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை : இப்படிப்பட்ட வரலாறுகள் தொகுத்து வெளியிடுவது அந்த நஷ்டத்தைச் சரிக்கட்டுவதற்காக இருக்கக் கூடாது. தமிழ் மக்கள் வரலாற்றுச் சிறப்புமிக்க நிகழ்ச்சிகளை அவர்களே தொகுத்து வெளியிட்டுக் கொள்வார்கள்.

திரு. ப. மகாதேவன் : கனம் அங்கத்தினர் விநாயகம் அவர்களுடைய கேள்விக்குப் பதில் சொல்லும்போது மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் மனித இழப்பைப் பற்றிச் சொல்லும்போது சுடப்பட்டதால்தான் இறந்தார்கள் என்று சொன்னார்கள். போலீஸ்காரர்கள் இறந்தார்களே அவர்களை யாராவது சுட்டார்களா? அல்லது அவர்கள் மனிதர்கள் என்ற வர்க்கத்தில் உட்படவில்லையா?

மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை : கனம் உறுப்பினர் அவர்கள் ரொம்ப அலங்கார நடைகளை எல்லாம் உபயோகப்படுத்தத் தேவையில்லை. தெரிந்த விஷயந்தான்; போலீஸ் அதிகாரிகள் சிலர் எரிக்கப்பட்டார்கள். பொதுவாக இதிலே கேட்கப்பட்டது. "இந்தி எதிர்ப்புக் கிளர்ச்சியினால் எத்தனை பேர் இறந்தார்கள்?" என்று. கிளர்ச்சியினால் ஏற்பட்டது அல்ல. போலீஸ் துப்பாக்கிப் பிரயோகத்தினால் ஏற்பட்டது என்று பதில் அளித்தேன்.

திரு. சொ. கோவிந்தராசன் : மதுரை வடக்கு மாசி வீதியில் மாணவர்களை வெட்டியவர்கள் மேல் திரும்பவும் இந்த அரசாங்கம் நடவடிக்கை எடுக்க உத்தேசம் இருக்கிறதா? அந்த மாணவர்களுக்கு நஷ்ட ஈடு கொடுக்கப்படுமா?

மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை : கனம் உறுப்பினர் அவர்களுடைய கேள்வி இரண்டு பகுதிகளைக் கொண்டது. வெட்டியவர்கள் பேரில் நடவடிக்கை எடுப்பதுபற்றி சட்டப்படியான நடவடிக்கை எடுக்கப்பட்டாகி விட்டது. அது போதுமானதா அல்லவா என்பது வேறு கேள்வி. நடவடிக்கை எடுக்கப்பட்டுவிட்டது. மாணவர்களுக்கு நஷ்ட ஈடு தரப்பட்டதா என்பது இரண்டாவது கேள்வி. மாணவர்கள் தங்களுக்குள்ளாகவே நிதி வசூலித்து செய்ததாகக் கேள்விப்பட்டேன். நஷ்ட ஈடு தரவேண்டுமென்ற நிலை இருக்குமானால் அதை இந்த அரசு கவனிக்கும்.

திரு. வி. கே. கோதண்டராமன் : இந்தி எதிர்ப்புக் கிளர்ச்சியில் ஈடுபட்டவர்களில் எத்தனை பேர் இறந்தார்கள்? இறந்தவர்களுடைய குடும்பங்களுக்கு சர்க்கார் உதவி கொடுக்க உத்தேசம் உண்டா? இன்றைக்கு இருக்கக்கூடிய முதலமைச்சர் உயிரோடிருக்கிறாரா அல்லது இறந்து விட்டாரா என்று கேட்ட போலீஸ் அதிகாரி யார்?

மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை : கேள்வியில் கடைசிப் பகுதிக்குப் பதில் அளிப்பதாக இல்லை. முன்னாலே சொல்லப்பட்டவைகளுக்கெல்லாம் ஏற்கெனவே பதில் அளிக்கப்பட்டது. கனம் உறுப்பினர் அவர்கள் நேரம் கழித்து வந்தார்கள் என்று கருதுகிறேன்.

திரு. மு. ச. சிவசாமி : முந்தைய அரசாங்கத்தின் தாய்மொழிப் பற்றற்ற காரணத்தால்தான் இந்தி எதிர்ப்புப் போராட்டத்தில் தமிழக அரசுக்கு நஷ்டமும் அதை விட விலைமதிக்க முடியாத பல உயிர்களின் நஷ்டமும் ஏற்பட்டது என்பதை இந்தச் சர்க்கார் அறியுமா?

மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை : கனம் உறுப்பினரைப் போல் கருதுகிறவர்கள் தமிழகத்தில் பலர் இருக்கிறார்கள்.

ஹாஜி ம. மு. பீர் முஹம்மது : ஐயா, தாய் மொழியைக் காப்பாற்றுவதற்காக தவச் செல்வங்களான மாணவமணிகள் தங்களுடைய இன்னுயிரை நீத்திருக்கிறார்கள். இந்த வீரத் தியாகிகளுக்கு நிரந்தரமான நினைவுச் சின்னத்தை நமது அரசாங்கம் ஏற்படுத்துமா?

மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை : அவர்களுக்கு நிரந்தரமான நினைவுச் சின்னம் நம்முடைய இதயத்தில் அவர்களுக்கு மதிப்பான இடத்தை அளிப்பதுதான்.

THIRU K. VINAYAKAM : Apart from throwing the blame on the previous Government who exactly is responsible for this Anti-Hindi Agitation and is it a fact that, when a lot of destruction occurred in our State, this was referred to the Hon. Chief Minister who was then the Leader of the party and the Leader said that his party was not responsible and some hooligans, some rowdies, some unsocial elements were responsible for this looting ?

THE HON. THIRU C. N. ANNADURAI : I do not know whether this supplementary question is appropriate to the main question. As a matter of fact, if the Hon. Member wants to know about myself, I was not outside, I was inside the jail at that time.

அமைச்சர்கள் சுற்றுப் பயணம்

273 வினா.—திரு. என். கிட்டப்பா : மதிப்பிற்குரிய முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா :—

(அ) மந்திரிகள் சுற்றுப் பிரயாணம் செய்யும் காலங்களில் போலீஸ் பரிவாரங்கள் துணைக்கு வரவேண்டாமென சுற்றிக்கை அனுப்பப்பட்டுள்ளதா?

(இ) ஆம் எனில், அதற்கான நோக்கம் என்ன?

மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை : (அ) & (இ) அமைச்சர்கள் சுற்றுப்பயணம் செய்யுங்காலையில், அன்னாரின் பாதுகாப்பின் பொருட்டுச் செய்யப்பட்டுள்ள ஏற்பாடுகள் குறித்த விவரங்களைப்பற்றி விவாதிப்பது பொதுநலனுக்கு ஏற்புடையதல்ல.

Movement of foodgrains.

*278 *Q.*—THIRU K. VINAYAKAM :
THIRU A. M. RAJA :
THIRU S. RAMACHANDRAN : } Will the **Hon.** the Minister for Food and Revenue be pleased to state the steps taken to prevent the movement of rice and paddy without permit into the neighbouring States like Andhra Pradesh, Mysore and Kerala ?

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : மாநில எல்லைகளிலுள்ள வெளியேறு வழிகள் (Exit gate) அனைத்தும் மூடப்பட்டுள்ளன. மாவட்டங்களுக்கு இடையேயும், மாநிலங்களுக்கிடையேயும் உள்ள காவல் சாவடிகளில் சோதனை போடுதல் கடுமையாக்கப்பட்டுள்ளது. லஞ்ச ஒழிப்பு

கண்காணிப்பு போலீஸ் குழு (Police vigilance cell) சிறந்த முறையில் செயலாற்றும்படிச் செய்யப்பட்டுள்ளது. லஞ்ச ஒழிப்பு நோக்கத்தை நிறைவேற்றுவதற்கு அக்குழு முழு அளவில் பயன் படுத்தப்படும். எல்லைகளில் உள்ள காவல்சாவடிகள் திறமையுடன் பணியாற்றும்படிப் பார்த்துக் கொள்ளுமாறு கலெக்டர்கள் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளனர். இந்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்போதே, விற்பனைக்காக கள்ளக்கடத்தல் நடைபெறுவதைத் தடுக்கும் நோக்கத்திற்காக பயிர் விளையும் இடங்களில் பதுக்கி வைக்கப்பட்டுள்ள தானிய இருப்புகளை வெளிக் கொணரவும் சிறப்பு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. கள்ளக்கடத்தல் தடுப்பு நடவடிக்கைகளைக் கடுமையாக்குவதற்கு கலெக்டர்கள் கூறியுள்ள சில கருத்துக்களையும் அரசு ஆலோசித்து வருகிறது.

திரு. கே. வினாயகம் : இப்பொழுது கூட கள்ளக் கடத்தல் மூலமாக அரிசியும் நெல்லும் கேரளத்துக்குப் போய், அங்கிருந்து சிலோனுக்குப் போகிறது என்று சொல்கிறார்களே; அது உண்மை தானா? அங்கு போகாமல் தடுத்ததின் காரணமாக எத்தனை அளவுக்குப் பிடிபட்டிருக்கிறது ஸ்மக்கிள்டு ரைஸ்?

மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை : கள்ளக் கடத்தலில் அரிசி சிலோனுக்குப் போவதாக கனம் உறுப்பினர் அவர்கள் சொல்கிறார்கள். ஆதலால் அது குறித்து தகவல் ஏதோ அவர்களுக்குத் தெரிந்திருப்பதுபோல் தெரிகிறது. அப்படி ஏதாவது இருந்தால் அந்தத் தகவலை எங்களுக்குத் தரும்படி கேட்டுக்கொள்கிறேன்.

திரு. ஏ. எம். ராஜா : அனுப்பப்படுகிற அரிசியை எடுத்துச் செல்லும் லாரி, வண்டி போன்ற வாகனங்களைப் பறிமுதல் செய்ய சட்டம் கொண்டு வருவதற்கு அரசாங்கம் முன்வருமா?

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : இம்மாதிரியான கள்ளக் கடத்தலுக்காக ஏற்றிக் கொண்டு போகிற லாரி, மோட்டார் வாகனங்கள் மற்றவைகளைப் பறிமுதல் செய்வதற்கும், அது மட்டுமல்லாமல் குறைந்த அளவு கள்ளக்கடத்தல்காரர்களுக்குச் சிறை தண்டனையைக் கொடுப்பதற்கும் ஏற்ற வகையில் இந்த கண்டிரோல் ஆர்டரில் விதி முறைகளைச் சேர்க்க வேண்டும் என்பதைப்பற்றி இந்த அரசாங்கம் தீவிரமாக ஆலோசனை செய்து வருகிறது.

THIRU S. RAMACHANDRAN : As artificial scarcity is created by such movement and as this amounts to throwing millions of people into misery, will the Government consider this and take drastic and severe action against the defaulters ?

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : அதைத்தான் நான் குறிப்பிட்டேன். இது சம்பந்தமாக மேலும் ஆயுதம் தாங்கிய போலீசார்களை எல்லை ஓரங்களில் காவல் புரிவதற்கும், அங்கங்கே மாவட்ட ரீதியில் விஜிலன்ஸ் செல் தலைமை நிலையங்களை அதிகரிப்பதற்கும் ஏற்பாடு செய்யப்படுகிறது. கள்ளக் கடத்தலைப்பற்றி திரு. வினாயகம் அவர்கள் சொன்னார்கள். அது சம்பந்தமாக இன்னும் கன்னியாகுமரி மாவட்ட எல்லை ஓரங்களில் ரோந்து பலப்படுத்துவதற்காக சில மின்சார விசைப் படகுகளைத் தர வேண்டுமென்று விவசாயத் துறை அமைச்சர் அவர்களைக் கேட்டிருக்கிறேன். அப்படியெல்லாம் ரோந்துகள் செய்யப்பட்டு வருகின்றன.

*279 *Q.*—THIRU K. VINAYAKAM :
THIRU S. J. RAMASWAMY : } Will the Hon. the Minister for Food and Revenue be pleased to state:—

(*a*) whether there is any proposal to send food grains **to** Kerala State ; and

(*b*) if so, the quantity proposed to be sent ?

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : (அ) and (இ) ஆந்திர அரசினிடமிருந்தும், இந்திய அரசினிடமிருந்தும் நாம் கடனாக வாங்கிய வகையிலும், ஆந்திர மாநிலம் நமக்கு நெல்லூர் அரிசி கொடுத்ததற்காக மாற்று பரிவர்த்தனையாகவும், கேரள மாநிலத்திற்கு மார்ச்சு திங்களில் 8,952 டன்களும், எப்ரல் மாதத்தில் 10,860 டன்களும், மே மாதத்தில் 1,000 டன்களும், ஜூன் மாதத்தில் 7,357 டன்களும், ஜூலை திங்களில் 1,400 டன்களும், ஆக மொத்தம் 29,569 டன்கள் அனுப்பப்பட்டிருக்கிறது. இப்பொழுது அடுத்த குறுவை அறுவடை வரையில் கேரள மாநிலத்திற்கு நம்மால் அரிசி அனுப்ப இயலாது என்று திட்டவட்டமாக இந்திய அரசுக்குத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

திரு. கே. வினாயகம் : பற்றுக்குறை மாகாணமாகிய கேரளத்திற்கு நாம் அரிசி கொடுப்பது நியாயம் என்றாலும் கூட, மத்திய சர்க்காருடைய வற்புறுத்தலுக்கு இணங்கி நாம் தரும்போது, நமக்கு அத்தியாவசியமாக வேண்டிய நதி நீர் (ரிவர் வாடர்) அங்கு வீணாகக் கடலில் போகிறதை நமக்குத் தருவதைப்பற்றி முன்னாலேயே அவர்களுடன் கலந்துபேசி அதற்குப் பிறகு அரிசியை அனுப்புவதற்கு அரசாங்கம் ஏற்பாடு செய்யுமா?

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : இதற்காகப் பேரம் முறையில் இந்த ஏற்பாடு இல்லை என்றாலும், கேரள மாநிலத்திலிருந்து வருகிற தண்ணீரை இந்த மாநிலத்திற்குப் பயன்படுத்திக்கொள்வது சம்பந்தமாக பொதுப்பணித்துறை அமைச்சர் அவர்கள் பொதுப்பணித்துறை மான்ய விவாதத்தின்போது குறிப்பிட்டார்கள். ஒவ்வொரு மாநிலமும் மெமோராண்டம் தயாரிக்குமாறு கேட்டுக்கொள்ளப்பட்டிருக்கிறார்கள். அதற்குப் பிறகு மத்திய அரசின் நீர்ப்பாசன மந்திரி அவர்களும், நம்முடைய மாநில முதல் அமைச்சர் அவர்களும், கேரள மாநில முதல் அமைச்சர் அவர்களுடன் இது சம்பந்தமாகச் சந்தித்துப் பேச இருக்கிறார்கள்.

திரு. கே. வினாயகம் : எல்லை ஓரத்தில் நாம் எடுத்திருக்கிற நீர்ப்பாசன திட்டங்கள் (Dams which we are constructing in the Nilgiris District) அங்கு அவர்கள் தகராறு செய்வதால், நாம் வேலை துவங்கியிருந்தும்கூட முடிக்க முடியாமல் தடைப்பட்டிருக்கின்றன. இதைப் பல ஆண்டுகளாக சிக்கலாக வைத்திருக்கிறார்கள். இப்பொழுது அரிசி கொடுப்பதை முன்னிட்டு, உங்களுக்கு அரிசி தருகிறோம் என்ற நிபந்தனையை வைத்து, அவர்களை நம்முடைய வழிக்கு நியாயம் செய்வதற்காகத் திருப்பமுடியுமா?

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : நீலகிரி மாவட்டத்தில் இந்த அணை கட்டப்படவில்லை. நீலகிரி மலை உதகமண்டலத்தைச் சுற்றியுள்ளது. கேரள எல்லையில் ஆனை மலையில் அணைகட்டுவது விட்டுப்போனதை, மறுபடியும் தொடர்ந்து அது சம்பந்தமான விவரங்களை துரிதப்படுத்துவதற்கான முயற்சிகள் எடுத்துக் கொள்ளவேண்டும் என்று தென் மண்டல கவுன்சில் கூட்டத்தில் நம்முடைய மாநில முதல் அமைச்சர் அவர்கள் வற்புறுத்தி வருகிறார்கள். நல்ல சுமுகமான உறவு ஏற்பட்டு அதிலே நல்ல முடிவு ஏற்படுவதற்கு வாய்ப்பு ஏற்பட்டிருக்கிறது.

*280 *Q.*—THIRU K. VINAYAKAM : Will the Hon. the Minister for Food and Revenue be pleased to state whether it is a fact that inter-taluk restrictions on the movement of paddy and rice would be completely removed in the districts ?

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : ஒரு மாவட்டத்திற்குரிய கொள்முதல் அளவு முழுவதையுமோ அல்லது அதில் கணிசமான சதவிகித அளவினையோ எய்திய மாவட்டங்களில் நெல், அரிசி இவற்றை அந்த மாவட்டத்திற்குள் எவ்விடத்திற்கும் அனுப்புவது குறித்து விதிக்கப்பட்டிருந்த கட்டுப்பாடுகள் அனைத்தையும் அரசு நீக்கி வருகிறது.

திரு. கே. வினாயகம் : ஐயா, மாவட்டங்களில் எந்த அளவுக்குக் கொள்முதல் செய்ய வேண்டுமோ, அந்த அளவு செய்த பிறகு இண்டர்-டாலுக் மூவ்மெண்டை எடுத்துவிடுகிறோம் என்று கூறுகிறார்கள். அப்படிப்பட்ட

ஏற்படும் வகையில், இன்டர்-டிஸ்டிரிக்ட் மூவ்மெண்ட், இண்டர்-டாலூக் மூவ்மெண்ட், இன்னும் இண்டர் பிர்க்கா மூவ்மெண்ட் இவற்றை நீக்க வேண்டும் என்றும் வற்புறுத்தப்பட்டு வருகிறது. எப்படி இரண்டு கண்களையும் சமமாக பாதுகாக்க வேண்டுமோ அதே விதத்தில், ஸ்டாசுடரி ரேஷன் ஏரியா, கார்டு ஸிஸ்டமுள்ள இடங்கள் அதோடு மற்றப் பகுதியில் உள்ள மக்களையும் கண்காணிக்க அரசாங்கம் போதிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று உணர்ந்து, அதற்கு வேண்டிய நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா-கோயம்புத்தூர் மாவட்டத்தைப் பற்றியது. கோயம்புத்தூர் மாவட்டம்பற்றி வினாவைப் போடுங்கள்.

திரு தோ. மு. நல்லசாமி : கோயம்புத்தூர் பற்றி இருந்தாலும் இதுவும் பொருந்தும் மற்ற மாவட்டங்களுக்கும். பொதுக் கேள்வியாக எடுத்துக் கொண்டாலும் சரி, கோயம்புத்தூர் கேள்வியாக எடுத்துக் கொண்டாலும் சரி.

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : கனம் உறுப்பினர் என்ன காரியத்திற்காக நடைபெறுகிறது என்று சொல்லுகிறார்களோ அது இல்லை. கனம் உறுப்பினர் சட்டப் பூர்வமான ரேஷன்முறை இருக்கும் இடங்களுக்கும், குடும்பக் கார்டு இருக்கும் இடங்களுக்கும்தான் பயன்படும் என்கிறார்கள். அந்த வகையில் ஏற்படுத்தப்படவில்லை. வேளாண்மை இல்லாத இடங்களில் இன்னும் தொழிலாளர்களாக இருக்கும் இடங்களில், பர்ச்சேசிங் பவர் அதிகமாக இருக்கும் இடங்களில் மக்களுக்கு இன்ஸுலேட் செய்ய வேண்டும் என்கிற காரியத்திற்காக ரேஷன் முறை வந்திருக்கிறது. அந்த முறை இல்லாவிட்டால், கிராமப் புறங்களில் அதிக விலையேறி அவர்களுக்கு பிரதிகூலம் வரக்கூடாது என்கிற காரணத்திற்காகத்தான் இது செய்யப்படுகிறது. மற்ற கண்ணும் பார்த்துக் கொள்ளப்படுகிறது இப்பொழுது இருக்கும் ஏற்பட்டால் என்பதைத் தெரிவிக்கிறேன்.

General Sales Tax Act

*282 *Q.*—Thiru K. VINAYAKAM : Will the Hon. the Minister for Food and Revenue be pleased to state whether there is any proposal to review the Madras General Sales Tax Act in view of the second amendment 1966 which gives scope for arbitrary assessment ousting the jurisdiction of the courts in cases of penal assessment ?

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : இல்லை.

Thiru K. VINAYAKAM : Because of the Second Amendment Act of 1966 which gave scope to the assessing authority to assess arbitrarily, apart from taking away the jurisdiction of the Court, is theMinister aware of the fact that a lot of hardships is experienced by the assessees and that the arbitrary amount fixed by the authorities as the turnover is far in excess of the actual turnover ?

The Hon. Thiru K. A. MATHIALAGAN : The Government does not agree with views of the hon. Member.

மு.ப. 10-00 *283 *Q.*—Thiru K. VINAYAKAM : Will the Hon. the Minister for Food and Revenue be pleased to state whether it is a fact that the Supreme Court has struck down Rule 21-A framed under the Madras General Sales Tax Act,authorising the authorities to collect sales tax from the transferee of a business in respect of certain earlier arrears of tax due by the transferor ?

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : ஒரு தொழில் குறித்துச் செலுத்தவேண்டிய விற்பனைவரியை, அத்தொழிலை இன்னொருவரிடமிருந்து தம் பெயருக்குமாற்றிக் கொண்டவரிடமிருந்து வசூலிப்பது குறித்து

1939-ம் ஆண்டு தமிழக பொது விற்பனைவரி விதிகளில் உள்ள 21—A விதி செல்லாது என சென்னை உயர்நீதி மன்றம் தீர்ப்பளித்ததைத் தலைமை நீதிமன்றமும் ஏற்றுக்கொண்டுள்ளதகாத் தகவல் கிடைத்துள்ளது. இவ்வாறு வரிவசூல் செய்து 1939-ம் ஆண்டு தமிழகப் பொது விற்பனைவரிச் சட்டத்தின்கீழ் விதிகளை இயற்றுவது அரசுக்குள்ள அதிகார வரம்பிற்கு மேற்பட்டதாகும் எனத் தீர்ப்பளிக்கப்பட்டுள்ளது. இத்தீர்ப்பின் விவரங்கள் எதிர்பார்க்கப்படுகின்றன.

Thiru K. VINAYAKAM : Whereas the present position is that a transferor goes away from business and the transferor is made to take up the responsibility for the past assessment or debts if any and in view of the judgment, a copy of which has not yet been received by the Government, will the Government take steps to amend the Act so that the transferee is not made the victim for the mistake committed by the transferor ?

The Hon. Thiru K. A. MATHIALAGAN : The Supreme Court has upheld the judgment of the Madras High Court. Without a detailed report of the position, the Government cannot proceed hastily.

Thiru K. VINAYAKAM : Is the Government aware that the judgment of the High Court is against the interests of the Government itself ?

The Hon. Thiru K.A. MATHIALAGAN : It is the interpretation of the Court.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : ஒரு விளக்கம் சொல்லுகிறேன். மாண்புமிகு உறுப்பினர் கேட்கின்ற வினாக்களுக்கு அமைச்சர்கள் பதில் சொல்லும்போது அதை அவர்கள் தெரிந்துகொண்டுதான் சொல்லுகிறார்கள் என்று எடுத்துக்கொள்ள வேண்டும். நீங்கள் சொல்லுகிறபடி புரியாமலோ, தெரியாமலோ சொல்லுகிறார்கள் என்று நினைத்துக்கொள்ளக் கூடாது. பொதுப்படையாக இதைச் சொல்லுகிறேன். அமைச்சர்கள், பதில் சொல்லலாம், சொல்லாமலும் இருக்கலாம், அல்லது மழுப்பலாகவும் சொல்லலாம். அந்த உரிமை உண்டு. ஆதலால் தெரியாமல் சொல்லுகிறார்கள் என்றோ, புரியாமல் சொல்லுகிறார்கள் என்றோ நினைத்துக் கொள்ளக்கூடாது என்பது என் கருத்து.

Thiru K. VINAYAKAM : I never said that the Minister is wanting in understanding the question or the relevant facts. The Minister must be aware that the judgment is against the Government.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மீண்டும் நான் பொது விதியைச் சொல்லுகிறேன். மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் வினாவை அமைச்சர்கள் நன்றாகத் தெரிந்துகொண்டு, புரிந்துகொண்டு பதில் சொல்லுகிறார்கள் என்று எடுத்துக்கொள்ளவேண்டுமே தவிர தெரியாமல் சொல்லுகிறார்கள் என்று மீண்டும் மீண்டும் வற்புறுத்தக்கூடாது. இந்த நிலைமையை உறுப்பினர்கள் தெரிந்துக்கொள்ளவேண்டும்.

Dr. H. V. HANDE : Just now the Minister told us that information had been received with regard to the judgment of the Supreme Court. May I know when, how many days before, the information was received and what steps the Government are going to take in connection with that ?

(No reply.)

*284. *Q.*—Thiru K. VINAYAKAM : Will the Hon. the Minister for Food and Revenue be pleased to state whether it is a fact that Government proposes to constitute a committee to go into taxation problems of wholesale and retail traders ?

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : இல்லை.

Thiru K. VINAYAKAM : Is it a fact that the Hon. Minister, while presiding over a conference of wholesale and retail traders in Washermanpet, gave an assurance that he would constitute a committee to go into the problems affecting their sales turnover ?

The Hon. Thiru K. A. MATHIALAGAN : I never said that the Government was going to constitute a committee. What I said was that the Government was contemplating a comprehensive legislation about sales tax and that it was under the active consideration of the Government.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : 285, 286, 287 ஆகிய இந்த மூன்று வினாக்களும் சர்க்கரைபற்றி இருக்கிற காரணத்தால் அவைகளை ஒன்றாக எடுத்துக் கொள்ளலாம்.

சர்க்கரை

*285 வினா.—**திரு. வி. கே. கோதண்டராமன் :** மதிப்பிற்குரிய உணவு வருவாய்த்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) நமது மாநிலத்திலிருந்து, எந்தெந்த வெளிநாடுகளுக்கு சர்க்கரை ஏற்றுமதி ஆகிறது?

(இ) என்ன விலைக்கு ஏற்றுமதி செய்யப்படுகிறது?

(உ) அதனால் ஏற்படும் நஷ்டத்தை சர்க்கார் எந்த அடிப்படையில் யாருக்கு கொடுக்கிறார்கள்?

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : (அ) தமிழகத்தில் உள்ள சர்க்கரை ஆலைகள் 1964—ம் ஆண்டிலிருந்து ஏற்றுமதிக்காக சர்க்கரை வழங்கவில்லை.

(இ) (உ) இக்கேள்வி எழவில்லை.

*286 வினா—**திரு. வி. கே. கோதண்டராமன் :** மதிப்பிற்குரிய உணவு வருவாய்த்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா:

(அ) அடிக்கடி சர்க்கரை கிடைக்காமல் நெருக்கடி ஏற்படுவது சர்க்காருக்குத் தெரியுமா?

(இ) இனிமேலாவது தாராளமாக சர்க்கரை கிடைக்க ஏற்பாடு செய்யப்படுமா?

The Hon. Thiru K. A. MATHIALAGAN : (*a*) There have been no reports about frequent scarcity of sugar in any of the districts.

(*b*) The Government of India are pooling the production of sugar in all the factories in the country and allocating the sugar to the various States on a monthly quota basis from the 23rd of one month to the 22nd of the next month, taking into account availabilities and requirements. In view of the shortfall in the over all production of Sugar in the country, they cut down the

monthly quota to this State from 16,100 tonnes to 11,500 tonnes for the months of March—April and April—May. This has been further reduced to 9,609 tonnes for the months of May—June 1967, that is, the current month. However, instructions have been issued to the Collectors to ensure that there is no reduction in the quantities allowed to domestic consumers and that the cut in the State quota may be absorbed by a substantial reduction in the quantities given to bulk consumers such as confectioneries. The Civil Supples Deparment is making every attempt to see that the available sugar is distributed in a fair and equitable manner. The Government of India will however be approached for an increase in the sugar allotment, though the present reduction of allotment to Madras is due only to fall in sugar production in the country as a whole.

*287 வினா—**திரு கொ. இர. ஞானசம்பந்தன் :** மதிப்பிற்குரிய உணவு—வருவாய்த்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா:

(அ) தமிழ் மாநிலம் பூராவிற்கும் ஒரு மாதத்திற்கு எவ்வளவு சீனி விநியோகத்திற்காகக் கிடைக்கிறது?

(இ) மாவட்டவாரியாக எவ்வளவு ஒதுக்கப்பட்டு, யார் மூலம் விநியோகிக்க உத்தரவு போடப்படுகிறது?

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : (அ) 1967 மே 23-ம் தேதி முதல் 9,609 டன்.

(இ) மாவட்டவாரியான சர்க்கரை ஒதுக்கம் உணவு வழங்குத்துறை ஆணையாளரால் செய்யப்படுகின்றது. இந்த ஒதுக்கத்தை, கலெக்டர்கள்/மாவட்ட வருவாய் அதிகாரிகள், தத்தம் மாவட்டத்திற்குள் மறு ஒதுக்கம் செய்கின்றனர். சென்னைமாநகரைப் பொறுத்தவரை, நகரில் சர்க்கரை வழங்குவதற்கு உணவு வழங்குத்துறைத் துணை ஆணையாளர் (வடக்கு) உணவு வழங்குத் துணை ஆணையாளர் (தெற்கு) பொறுப்பு வகிப்பர். மாவட்டவாரியான ஒதுக்கீடுபற்றிய விவரங்கள் வருமாறு :—

சென்னை	..	..	1,898
செங்கற்பட்டு	..	..	476
வட ஆர்க்காடு	..	..	610
தென் ஆர்க்காடு	..	..	503
தஞ்சாவூர்	..	..	654
திருச்சிராப்பள்ளி	..	..	941
மதுரை	..	..	995
இராமநாதபுரம்	..	..	460
திருநெல்வேலி	..	..	642
கன்னியாகுமரி	..	..	182
கோயம்புத்தூர்	..	..	1,212
சேலம்	..	..	624
தர்மபுரி	..	..	115
நீலகிரி	..	..	297
			9,609

உத்தரவு பிறப்பித்தும், இன்றுகூட, இப்பொழுதுகூட, செங்கல்பட்டு மாவட்டத்திலே இண்டர்-டாலுக் மூவ்மெண்டிற்கு நிபந்தனை இருந்து கொண்டே இருக்கிறது. அரசாங்க உத்தரவு தங்களுக்கு வரவில்லை என்று சொல்லிக்கொண்டு தடை செய்கிறார்கள். நேற்றுகூட ஒரு பௌரோ கித்யர், பத்துப்படி அரிசியை, பௌரோகியத்தில் கிடைத்ததை, எடுத்துக் கொண்டு தன்னுடைய ஊருக்குப் போகும்போது, தடுக்கப்பட்டு அதை எடுத்துப் போகமுடியாத அளவுக்கு செக்-போஸ்ட்டில் நிறுத்தி வைத்துவிட்டார்கள். ஆகவே, உடனடியாக அந்த உத்தரவை எல்லோருக் கும் அனுப்ப ஏற்பாடு செய்யுமா என்று கேட்கிறேன். (குறுக்கீடு) "பௌ ரோகித்யம்"தான் சரியான வார்த்தை ; "புரோகிதம்" என்பது தமிழ். "பௌரோகித்யம்" தான சரியான சொல் (சிரிப்பு).

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : செங்கற்பட்டு மாவட்டத்தில் சில காவல் நிலையங்கள் செயல்பட்டுவருகின்றன என்று கனம் உறுப்பினர் அவர்கள் சொல்லுகிறார்கள். ஒத்துக் கொள்கிறேன். அரசாங்கம் தடையை நீக்கியவுடன் சில பதுக்கல்காரர்கள், கள்ள வியாபாரிகள், வெகு துரித மாக, வேகமான முறையில் கள்ள வியாபாரம் செய்வதில் ஈடுபட்ட காரணத் தினால், அவற்றைக் கண்காணிக்க வேண்டியது அவசியமாயிற்று. மதுராந் தகம் பகுதியிலும், சென்னையைச் சுற்றியுள்ள பகுதியிலும் இன்னும் காவல் நிலையங்கள் இருக்கின்றன. ஆனால், சாதாரணமாக உபயோகத்திற்கு எடுத்துப் போவதற்கு தடையில்லை. அதைப் பயன்படுத்திக் கொள்வது கள்ள வியாபாரத்திற்கு எடுத்துப் போகும் வாய்ப்பாக இருக்கிறது என்ற ஆதாரங்கள் அரசாங்கத்திற்குக் கிடைத்த காரணத்தால், சில இடங்களில் இன்னும் காவல் நிலையங்கள் செயல்பட்டு வருகின்றன.

திரு. வி. கே. கோதண்டராமன் : சார், வட ஆர்க்காடு மாவட்டத்திலே 30,000 டன் என்பதற்குப் பதிலாக 45,000 டன் நெல் கொள்முதல் செய்யப்பட்டிருந்தும்கூட, தாலுக்காவிற்குத் தாலுகா எடுத்துப் போகும் நிபந்தனையை ரத்து செய்யவில்லை. பத்துத் தினங்களுக்கு முன்னால் கூட அமைச்சர் அவர்கள் பதில் சொல்லும்போது கூறினார்கள், இந்த மாதிரியான கட்டுப்பாடு ஒரு வாரத்தில் ரத்து செய்யப்படும் என்று சொல்லி, இப்பொழுது 10 தினங்களுக்குமேல் ஆகியும்கூட, உத்தரவு பிறப்பிக்கப்படவில்லையே, இப்பொழுது அதைப்பற்றி என்ன சொல்லு கிறார்கள் என்று கேட்கிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : பத்து தினங்களுக்குமுன் முடிவு எடுக்கப்படும் என்று சொன்னேனே தவிர, ரத்துசெய்யப்படும் என்று இந்த மன்றத்திலே சொல்லவில்லை. எடுக்கலாமா, வேண்டாமா என்பது குறித்து முடிவு எடுக்கப்படும் என்றேன். அப்படி முடிவு எடுக்கப் பட்டிருந்தால் அன்றைக்கே அதைக் கூறியிருப்பேன். கொள்முதல் ஆகி விட்டது என்றாலும், விதி முறைகள்படி பிரத்தியேக காரணம் இருந்தால், இந்த அரசாங்கம் அந்த மாவட்டத்தில் இருக்கும் நடமாடும் தடையை நீடிக்க வேண்டும் என்று கருதியதனால், நீடிக்கச் செய்கிறது. அந்த வகை யில்தடையை நீக்கிவிடுவதற்கான நிலைகள் இப்போது வரவில்லை.

திரு. கொளத்தூர் கோதண்டம் : கட்டுப்பாடுகள் இருந்தும், செக்-போஸ்ட்கள் இருந்தும், மதுராந்தகத்திலிருந்து ரெயில்களில் நிறைய அரிசி வந்து கொண்டிருக்கிறது. ரூபாய் 2,000 பெருமானமுள்ள அரிசி வெளிக் கொண்டுபோகப்பட்டிருக்கிறது. நான்கு நாட்களில் ரூ. 1·80 விலை ஏறியிருக் கிறது. ஆகவே, ரெயிலில் கொண்டு போகப்படும் அரிசியைத் தடுக்க சர்க்கார் உடனடியாக நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : கனம் உறுப்பினர் காவல் நிலையங்களை ஏற்றுக் கொண்டதற்காக நன்றி. இப்படிக் கொண்டு போவதைத் தடுக்கத்தான் சோதனைச் சாவடிகள் செயல்படுகின்றன. ரெயில் களிலே வரும் உணவு தானியங்களையும் அவ்வப்பொழுது சோதனைகள் மேற் கொள் போட்டு, நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றன. அது தீவிரப்படுத்தப்படும்.

திரு. டி. எஸ். ஆதிமூலம் : சார், 1964-ம் வருஷத்திலிருந்து தான் ரேஷன், கட்டுப்பாடு, கொள்முதல், இவையெல்லாம் வந்திருக்கிறது. அதற்கு பிறகுதான் அரிசி, நெல் வியாபாரிகள் கள்ள மார்க்கெட்டு, பதுக்கல் இவற்றை ஜாஸ்தியாகச் செய்கிறார்கள், முன்னால் இந்த விஷயங்கள் கிடையாது இந்தத் தொழிலில் என்பது அரசாங்கத்திற்குத் தெரியுமா ?

(பதில் இல்லை.)

திரு. என். எஸ். வி. சித்தன் : தலைவர் அவர்களே, நெல் கொள்முதல் வட ஆர்க்காடு மாவட்டத்தில் முடிந்து விட்டதால், பத்து தினங்களில் முடிவு எடுக்கப்படும் என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்களே, என்ன முடிவு என்று கூறுவார்களா?

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : ஏற்கனெவே சொன்னேன் இப்பொழுது அதற்கு இன்னும் காலம் வரவில்லை என்று. நடமாடும் கட்டுப்பாட்டை நீக்க காலம் வரவில்லை என்பதை மீண்டும் தெளிவுபடுத்து கிறேன்.

* 281 வினா—**திரு. வி. கே. கோதண்டராமன் :** மதிப்பிற்குரிய உணவு-வருவாய்த்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

சட்ட பூர்வமான ரேஷன் அமலில் உள்ள இடங்களான சென்னை, கோவையில் குடியிருக்கும் சொந்த நிலம் உடையவர்கள், ஒரு ஆண்டுக்கு தேவையான அரிசி கொண்டு வரும் உத்தரவு எந்த தேதி முதல் அமல் ஆகியது ?

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : அந்த உத்தரவு 17–2–1966 முதல் அமலாகியது. ஆனால், அந்த உத்தரவை மாற்றி சமீபத்திலே சட்ட பூர்வமான ரேஷன் முறை இருக்கிற இடங்களிலே, ரேஷன் அதிகாரி கள், தென் சென்னையில் டெபுடி கமிஷனர் ஆப் சிவில் சப்ளைஸ்-ம், வட சென்னையில் அவரே போன்ற அதிகாரி அவர்களிடத்திலும் அந்த அனு மதிச் சீட்டை வாங்கிக் கொண்டு, நேரடியாக எடுத்துக்கொண்டு வரலாம் என்று இலகுவாக்கப்பட்டிருக்கிறது.

திரு. வி. கே. கோதண்டராமன் : இந்த உத்தரவு சென்னை நகரம், கோயம்புத்தூர் நகரம், இவற்றிற்கு மட்டுமா அல்லது ராச்சியத்திலுள்ள எந்த பிரதேசத்தில் இருந்தாலும், அவர்களுடைய நிலம் வேறு எங்கு இருந்தாலும், கொண்டு போகலாம் என்ற அளவுக்கு உத்தரவு அடிப் படையில் சாத்தியம் இருக்கிறதா ?

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன்: இது மற்ற இடங்களுக்கும் பொருந்தும்.

திரு. சி கிருஷ்ணமூர்த்தி : தலைவர் அவர்களே, இந்த உத்தரவின் காரணமாக, தஞ்சை மாவட்டத்திலிருந்து, கள்ள மார்க்கெட்டில் வெளி மாநிலங்களுக்கு அதிகமாக நெல் வெளியேற்றப்படுகிறது என்பது சர்க் காருக்குவத் தெரியுமா ? அதை நிறுத்தித் தடுக்க இந்த உத்தரவை இன்னும் கடுமையாக பரிசிலனைசெய்து தக்க உத்தரவு இட சர்க்கார் யோசிக்குமா ?

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : அப்படிப்பட்ட தகவல் அரசாங் கத்திடம் இல்லை. தகவல் கொடுத்தால் நன்றி தெரிவிக்கும்.

திரு. தோ. மு. நல்லசாமி : சார், இன்றைக்கு இந்தக் கொள்முதல் பண்ணுவது இண்டர்-டிஸ்டிரிக்ட் மூவ்மெண்ட், இணடர்-டாலுக் மூவ் மெண்ட், இவற்றை செக் பண்ணுவது எல்லாம், ஸ்டாசுடரி ரேஷன் ஏரியா விற்கும், கார்டு சிஸ்டமுள்ள இடங்களுக்கும் செய்யப்படு வருகிறது. அதே சமயத்தில் மற்ற பிரதேசங்களிலே இருக்கும் மககளுக்கு நன்மை

திரு நா. கிருட்டிணன் : சில்லரை வியாபாரிகளுக்குத் தரப்படும் சர்க்கரைக் கோட்டாவை அவர்கள் சரியாக விநியோகிக்கிறார்களா இல்லையா என்பதை இந்த அரசு உறுதி செய்ய என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறது? அவ்வாறு சில்லரை வியாபாரிகளுக்கு விநியோகம் செய்கிற சர்க்கரை வீட்டிலுள்ள குடும்பத்தினருக்கு எந்த அடிப்படையில் விநியோகம் செய்யப்படுகிறது ?

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : இம்மாதிரியான அத்தியாவசியப் பொருள்கள் அத்தனையும் முறையாக விநியோகிக்கப்படவேண்டும் என்பதைக் கலெக்டர்கள் கண்காணித்து வருகிறார்கள். தவறுகள் ஏற்படுகிற நேரத்தில், அந்தந்த விதிமுறைகளின்படி, மேற்கொண்டு நடவடிக்கைகள் எடுத்துக்கொள்ளப் படுகின்றன.

திரு. செ. பாலசுப்பிரமணியன் : இந்த சர்க்கரையினுடைய கோட்டா அளவு குறைக்கப்பட்டதால், சென்ற இரண்டு மாத காலங்களில் குடும்பக் கார்டு முறை அமல் இல்லாத கிராமங்களில் சர்க்கரை போடப்படுவதில்லை என்பது அரசாங்கத்திற்குத் தெரிய வருமா ?

மாண்புமிகு திரு கே. ஏ. மதியழகன் : மிக நன்றாகத் தெரியும்.

ஹாஜி ம. மு. பீர் முஹம்மது : ஐயா, நகராட்சி மன்றங்களுக்கு உட்பட்ட எல்லையில் கார்டு மூலம் சீனி விநியோகிக்கிறார்கள். ஆனால் ஊராட்சி மன்றங்கள் இயங்கும் கிராமப்புறங்களில் சீனி விநியோகிக்கப்படுவதில்லை. இது மாற்றாந்தாய் மனப்பான்மை அல்லவா ? ஆகவே, பரவலாக, கிராமங்களுக்கும் பங்கீட்டுக் கார்டு முறையில் சீனி விநியோகிக்க நம்முடைய அரசு ஏற்பாடு செய்யுமா ?

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : சர்க்கரை அதிகமாகக் கிடைத்தால் கண்டிப்பாக முதலில் அவர்களுக்குத் தான் கொடுக்கப்படும்.

திரு. ஆர். நாகசுந்தரம் : ஐயா, ஏழை மக்கள் உபயோகிக்கும் நாட்டுச் சர்க்கரை பெருமளவில் வாகன் வாகனாகத் தமிழ் நாட்டிலிருந்து பம்பாய்க்கு கள்ளச் சாராயம் காய்ச்சுவதற்காக அனுப்பப்படுவது உண்மையா ? அதன் காரணமாகத்தான் மூன்று மடங்குக்கு மேல் விலை உயர்ந்துவிட்டது என்பதும் அரசாங்கத்திற்குத் தெரியுமா ? அதைத்தடுக்க அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : அதுபற்றி அரசுக்குத் தெரியும் என்பதைவிட, பொதுவாக, வெல்லச் சர்க்கரை நம்முடைய மாநில மக்களுக்கே பயன்படவேண்டும், மற்ற மாநிலங்களுக்குப் போகக் கூடாது என்ற காரணத்திற்காகத்தான், வெல்லக் கட்டுப்பாடுத் தடை உத்தரவைப் போடவேண்டும் என்பதற்காக மத்திய அரசாங்கத்தினுடைய ஒப்புதலை இந்த அரசாங்கம் கேட்டிருக்கிறது என்பதை நேற்றைய தினமே இந்த மன்றத்தில் நான் விளக்கினேன்.

THIRU K. VINAYAKAM : Sir, whereas the total quantity of sugar allotted to this State by the Centre is far below our requirements and whereas we are self-sufficient as far as production of sugar in our State is concerned and whereas, however, much the distribution system is being reorganised there is bound to be loopholes and failures, will the Government think of the possibility of stressing the need for bringing it home to the Central Government that they, in all justness, set apart a larger quantity be fitting our rate of consumption in our State?

THE HON. THIRU K. A. MATHIALAGAN : Already we have made representations to the Union Government. Again we will make representations to them about our demands.

Groundnut

* 288 *Q.*—THIRU K. VINAYAKAM: Will the Hon. the Minister for Agriculture be pleased to state the quantity of groundnut grown in our State during 1955-56 and during 1965-66 ?

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி : தமிழ் நாட்டில் 1955-56, 1965-66 ஆண்டுகளில் பயிரிடப்பட்ட வேர்க்கடலையின் அளவு கீழே கொடுக்கப்பட்டுள்ளது :—

ஆண்டு.					பரப்பளவு (ஏக்கரில்).	உற்பத்தி (டன்களில்).
1955-56	..	..	..	..	17,98,604	8,43,109
1965-66	..	..	..	..	22,69,000	9,11,180

திரு. கே. விநாயகம் : தலைவர் அவர்களே, இந்தக் கணக்கில் பார்த்தால், பத்து ஆண்டுகளுக்கு முன்னாலே எந்த அளவு மணிலா பயிரானதோ அதைவிட இப்போது அதிகரித்திருக்கிறது. அதற்குக் காரணம் அதற்கு அதிக விலை கிடைக்கிறது. ஏராளமானவே நெல் சாகுபடி செய்கிற நிலத்தில் எல்லாம் மணிலா பயிர் செய்யப்பட்டு வருகிறது. நெல் சாகுபடியைவிட மணிலா பயிரால் அதிக லாபம் கிடைப்பதால் விவசாயிகள் நெல் விளையும் நிலத்திலும் மணிலா பயிரிடுகிறார்கள். ஆகவே, அவர்கள் அப்படிச் செய்யாமல் தடுப்பதற்கு ஏதாவது நடவடிக்கை எடுக்கப்படுமா ? நெல் விளையும் நிலத்தில் மணிலா சாகுபடி செய்வதற்கு தடை ஏற்படுத்தப்படுமா ?

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி : கனம் அங்கத்தினருடைய கேள்வியிலிருந்து, தவறான முயற்சியில் சிலர் ஈடுபட்டிருக்கிறார்கள் என்று தெரிகிறது. மணிலா பயிரால் அதிக வருவாய் கிடைக்கிறது என்பதில் அரசாங்கத்திற்கு ஆட்சேபணை கிடையாது என்றாலும், மக்களுக்கு உணவு அளிப்பதில் இந்த அரசு சிரத்தை கொண்டிருக்கிறது. மணிலா கடந்த பத்தாண்டுகளில் கணிசமாக உற்பத்தியாகியிருக்கிறது. நெல் விளையும் நிலத்தில் மணிலா பயிரிட விவசாயிகள் ஈடுபடுவார்களானால், தக்க சமயத்தில் நடவடிக்கை எடுப்பதுபற்றி அரசு ஆலோசிக்கும்.

*289 *Q.*—THIRU K. VINAYAKAM :
THIRU MUNU. ADHI : } Will the Hon. the Minister for Agriculture be pleased to state—

(*a*) whether the Government are aware of the fact that large scale sugarcane, banana and groundnut cultivation is carried on where paddy was grown previously ; and

(*b*) if so, the steps proposed to be taken to check this fall in paddy cultivation.

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி : (அ) முன்னர் நெல் விளைவிக்கப்பட்ட நிலப்பரப்புகளில் இப்போது கரும்பு, வாழை, வேர்க்கடலை எதுவும் அதிக அளவில் பயிரிடப்படவில்லை. எனினும், அவ்வாறு பயிரிடப்படுவதன் போக்கு பற்றி அரசு விழிப்புடன் கவனித்து வருகிறது.

(இ) இக்கேள்வி எழவில்லை.

திரு. கே. விநாயகம் : ஐயா, இப்படி நெல் பயிரிடும் நிலங்களையெல்லாம் வாழைத் தோட்டமாகவும், கரும்புத் தோட்டமாகவும் அல்லது 'பணப்பயிர்கள்' நிலமாகவும் மாற்றுவதற்குக் காரணம், நெல்லுக்கு இருக்கிற விலை—நெல்லுக்கு அரசாங்கம் கொடுக்கிற விலையாயினும் சரி—'ஓபன் மார்க்கெட்டிலும்' தருகிற விலையாயினும் சரி, மற்ற பயிர்களை விடக் குறைவாக இருப்பதேயாகும். அதனால் விவசாயிகள் மக்களுடைய உணவுப் பிரச்சினையைப் பற்றிக் கவலை கொள்ளாமல், அதிக லாபத்தைத்

[1967 ஜூலை 12

திரு. வி. கே. கோதண்டராமன் : சார், மாவட்ட அதிகாரிகள் மூலம் கனம் அமைச்சரவர்களுக்குத் தகவல் கிடைக்கவில்லை என்று சொன்னாலும், நான் இரண்டு முறை எழுதிக்கொடுத்து அந்த மாவட்டத்திலே ஒரு கிலோ 4½ ரூபாய் என்று கள்ளமார்க்கெட்டில் விற்பனை செய்யப்படுகிறது. உடனடியாக சர்க்கரையை அதிகப்படுத்தவேண்டுமென்றேன். ஆகவே அது விஷயமாக உடனடியாக சர்க்கரையை அதிகப்படுத்தி, கள்ளமார்க்கெட்டை ஒழிக்க உத்தேசம் உண்டா ?

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : இந்திய அரசாங்கம் ஒதுக்காததால் அதிகப்படுத்த முடியவில்லை என்று விளக்கினேன். ஆனால் விநியோக முறையில் உள்ள தாறுமாறுகளைக் குறைக்க குறிப்பாக மாவட்டங்களில் "ஹோல்சேலர்ஸ்" யிடம் ஒதுக்கியிருப்பதை மாற்றி அரசாங்கமே எடுத்து சீராக அமைக்கலாமா என்று மிகத் தீவிரமாக யோசனை செய்து வருகிறது.

திரு கொ. இர. ஞானசம்பந்தன் : ஐயா, மாவட்டங்களுக்கு ஒதுக்கப்படக் கூடிய சீனி, பழைய பர்மிட்தாரர்களுக்கே கொடுக்கப்படுவதால், சரியானபடி விநியோகிக்கப்படாத கோளாறு ஏற்பட்டு, மக்களுக்குச் சரியாக சீனி கிடைக்கவில்லை. அந்த முறையை மாற்றியமைக்க சர்க்கார் நடவடிக்கை எடுக்குமா ? ஒவ்வொரு தொகுதிக்கும் எவ்வளவு சீனி ஒதுக்கப்பட்டது, என்பதை கலெக்டரும், ரெவினியூ டிவிஷனல் ஆபீசரும் அந்தந்தத் தொகுதி சட்டமன்ற உறுப்பினருக்குத் தெரிவிக்கவேண்டும் என்ற உத்தரவை சர்க்கார் பிறப்பிக்குமா ? சமீபத்தில் நான் ரெவினியூ டிவிஷனல் ஆபிசரைக் கேட்டபோது, அம்மாதிரியான தகவல் கொடுக்க முடியாது என்று பதில் எழுதியிருப்பதனால், உடனடியாக அந்தந்தத் தொகுதியில் இருக்கும் எம்.எல்.ஏ.-க்கு தொகுதிக்கு எவ்வளவு சீனி ஒதுக்கப்படுகிறது என்ற விவரத்தைத் தெரிவிக்கவேண்டும் என்று சர்க்கார் உத்தரவிடுமா ?

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : பொதுவாக இப்பொழுதுள்ள சர்க்கரை விநியோக முறையானது முன்பிருந்த சர்க்காரால் அனுசரிக்கப்பட்டுவந்த முறைதான். அதிலுள்ள கோளாறுகளை நீக்குவதற்காகத்தான், சென்னை நகரத்தைப் பொறுத்தவரையில், மொத்த வியாபாரிகள் (ஹோல்சேலர்ஸ்) கிடையாது என்ற நிலையை ஏற்படுத்தி, நேரடியாக அரசாங்கமே இதை நிர்வகித்து வருகிறது. ஆனால், "ஹோல்சேலர்ஸ்" என்று ஒவ்வொரு மாவட்டத்திலும் பல பேர்கள் இருக்கிறார்கள். அங்கும் அவர்கள் இல்லாமல், நேரடியாக அரசாங்கமே சர்க்கரை விநியோகத்தைமேற்கொள்ளுவதற்கும், கற்கண்டு போன்றவற்றைத் தனியார் மூலம் கொடுப்பதைத் தடுப்பதற்கும் இந்த அரசாங்கம் மிகத் தீவிரமாக ஆலோசித்து வருகிறது.

திரு. வி. கே. கோதண்டராமன் : வெளிநாடுகளுக்கு இங்கிருந்து சர்க்கரை ஏற்றுமதி செய்யப்படவில்லை என்று சொன்னாலும், மற்ற மாநிலங்களுக்கு இங்கிருந்து எவ்வளவு சர்க்கரை அனுப்பப்படுகிறது ? இந்த மாநிலத்தில் எந்த அளவிற்குல் சர்க்கரை உற்பத்தி செய்யப்படுகிறது ?

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : நம்முடைய மாநிலத்தில் சென்ற நான்கு வருஷங்களில் எவ்வளவு சர்க்கரை உற்பத்தியானது என்ற விவரம் நான் சொல்ல முடியும். அதிலிருந்து நம்முடைய மாநிலத்திற்கு எவ்வளவு ஒதுக்கப்பட்டதோ அதைக் கழித்துக்கொண்டால், வெளி மாநிலங்களுக்கு இங்கிருந்து எவ்வளவு சர்க்கரை போகிறது என்பதைக் கணக்கிட்டுக்கொள்ளலாம்.

இந்த மாநிலத்தினுடைய சர்க்கரை உற்பத்தி, 1963–64-ம் ஆண்டில் 1 லட்சம் 43 ஆயிரம் டன்னுகவும், 1964–65-ம் ஆண்டில் 2 லட்சம் 13 ஆயிரம் டன்னுகவும், 1965–66-ம் ஆண்டில் 2 லட்சம் 28 ஆயிரம் டன்னுகவும், 1966–67-ம் ஆண்டில் 22—5—1967 வரையில் 1 லட்சம் 60 ஆயிரம் டன்னுகவும் இருந்திருக்கிறது.

1967 ஜூலை 12]

திரு. எ. கோ. பாலகிருஷ்ணன் : சர்க்கரை ஒதுக்கீடு பற்றிய கணக்கை அமைச்சர் அவர்கள் மாவட்ட வாரியாகப் படித்தார்கள். ஆனால், மாவட்ட வாரியாக உள்ள கணக்கில் வித்தியாசம் இருப்பதாகத் தெரிகிறது. ஜனத்தொகை அடிப்படையில் ஒதுக்கீடு செய்யப்படுகிறதா ? அல்லது, தேவையின் அடிப்படையில் ஒதுக்கீடு செய்யப்படுகிறதா ?

(பதில் இல்லை)

திரு. கரு. சீமைச்சாமி : சென்னை நகரத்தில் உள்ளவர்களுக்கு சீனி குறைக்கப்படவில்லை என்று சொன்னார்கள். ஆனால், சென்னை நகரத்திலேயே கூட, நான்கு கிலோகிராம் சீனி வாங்கிக் கொண்டிருந்தவர்களுக்கு இப்பொழுது மூன்று கிலோகிராம் தான் கொடுக்கிறார்கள். இப்படி 25 சதவீதம் குறைக்கப்பட்டு இருப்பது உண்மையா ?

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : நம்முடைய மாநிலத்திற்கு ஒரு மாதத்திற்குத் தேவைப்படும் சர்க்கரை 16,000 டன் ஆகும். அதைக் கடந்த இரண்டு மாதங்களுக்கு முன்பு 11,000 டன்னுகக் குறைத்தார்கள். அதையும் இப்பொழுது ஒன்பதாயிரம் டன்னுகக் குறைத்துவிட்டார்கள் இதைத்தான் ஒரு விகிதாசார அடிப்படையில் ஒவ்வொரு இடத்திற்கும் நாம் கொடுத்துக்கொண்டு இருக்கிறோம். மொத்தம் 16,000 டன் நமக்குக் கிடைத்தால்தான், ஏதோ ஓரளவிற்கு நம்முடைய மாநிலத்தின் தேவையை நாம் சமாளிக்க முடியும். ஆனால், 16 ஆயிரத்திலிருந்து 11 ஆயிரமாகக் குறைத்து, அதையும் இப்பொழுது 9 ஆயிரம் டன்னுகக் குறைத்துவிட்டார்கள். இதுதான் இவ்வளவு இடைஞ்சல்களுக்கெல்லாம் காரணம்.

திரு பெ. சீனிவாசன் : சர்க்கரையை விநியோகிக்கும் உரிமை அளிக்கும் விஷயத்தில் கடந்த பல ஆண்டுகளாகத் தவறான முறையைக் கையாண்டதன் விளைவாக இத்தகைய நிலைமைகள் ஏற்பட்டதாகச் சொல்லப்படுகிறது. அத்தகைய தவறான செயல்களுக்கு முன்னால் இருந்த ஆளுங்கட்சியினர் ஆதரவாக இருந்ததாகவும் சொல்லப்படுகிறது. ஆகவே, இனி மேலாவது அத்தகைய நிலைமைகளை மாற்றும் வகையில், பழைய முறைகளை முழுக்க முழுக்கத் திருத்தியமைக்கும் உத்தேசம் அரசாங்கத்திற்கு உண்டா ?

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : நான் இதைத்தான் சொன்னேன். சர்க்கரை விநியோகிக்கும் முறையில் இருக்கும் மொத்த வியாபாரிகளை அகற்றிவிட்டு, அரசாங்கமே நேரடியாகப் பொறுப்பேற்றுக்கொண்டு, சாதாரண சிறு வியாபாரிகளுக்கும், மற்றவர்களுக்கும் விநியோகிக்கும் மாற்று முறையைப்பற்றித் தீவிரமாக ஆலோசனை செய்துகொண்டு வருகிறது. அதைப்பற்றி விரைவில் முடிவு எடுக்கப்படும் என்று ஏற்கெனவே சொன்னேன்.

திரு வை. சுவாமிநாதன் : சர்க்கரை கார்டு நகரப் பகுதியில் உள்ளவர்களுக்குத்தான் கொடுக்கப்படுகிறது. சில தொழிற்சாலைகள் நிறைந்த கிராமப் பகுதிகளிலும் சர்க்கரை கார்டு கொடுக்க ஏற்பாடு செய்யப்படுமா ? கலியாணங்களுக்கு விசேஷமாகச் சர்க்கரை வேண்டும் என்று கேட்டாலும், சர்க்கரை இல்லை என்று மறுக்கப்படுகிறது. ஆகவே, முக்கிய கலியாணங்களுக்காவது ஏதாவது ஓரளவு சர்க்கரை கொடுக்க முடியுமா ?

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : இந்த மாதத்திற்கு நமது மாநிலத்திற்கு ஒன்பதாயிரம் டன் சர்க்கரைதான் மத்திய அரசினர் ஒதுக்கி இருக்கிறார்கள். மத்திய சர்க்கார் அமைச்சரைப் பார்த்து, "ஆனி மாதம் திருமணங்கள் நடைபெறக்கூடிய மாதம், அதை உத்தேசித்தாவது சர்க்கரைக் கோட்டாவை சற்று அதிகமாக்கிக் கொடுங்கள்" என்று நான் கேட்ட நேரத்தில், அடுத்த மாதத்திற்குரிய கோட்டாவில் ஒரு பகுதியை வேண்டுமானால், இந்த மாதத்திற்கு எடுத்துக் கொள்ளுங்கள், அடுத்த மாதத்திற்குரிய 9 ஆயிரம் டன்களில் 6 டன்கள் எடுத்து, இந்த மாதத்திற்குப் பதினைந்து டன்களாக எடுத்துக் கொள்ளுங்கள், அடுத்த மாதத்தில் அந்த அளவிற்குக் குறைத்துவிடுகிறோம் என்று சொல்லும் அளவிற்குத்தான் அங்கிருந்து நமக்குப் பதில் வந்திருக்கிறது.

தரும் பயிர்களைச் செய்கிறார்கள் என்பது அரசாங்கத்திற்குத் தெரியுமா? அப்படியானால், அரசாங்கம் தலையிட்டு, அதைத் தடுப்பதற்கு ஏதாவது வழிவகை இருக்கிறதா? அதைத் தடுக்காமல் இருந்தால் உணவுப் பிரச்சினை மோசமாகும் என்பது அரசாங்கத்திற்குத் தெரியுமா?

மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை: அரசாங்கம் தலையிட்டு, தடுக்கப்பட வேண்டிய அளவுக்கு நிலைமை சீர்கேடு அடையவில்லை.

மேற்கத்திய பாணியில் விடுதி

*290 வினா.—**திரு. வி. கே. கோதண்டராமன்:** மதிப்பிற்குரிய சட்ட கூட்டுறவு அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்கு பதிலளிப்பாரா—

(அ) வெளி நாட்டிலிருந்து வரும் உல்லாசப் பயணிகளுக்கு ஏற்றவாறு எல்லா நவீன வசதிகளைக்கொண்ட மேற்கத்திய பாணியில் ஓட்டலைக் கட்டுவதற்காக கல்கத்தா மெசர்ஸ் ஓபிராய் ஓட்டல் லிமிடெட் நிறுவனத்திற்கு நீண்டகால குத்தகைக்கு நிலம் கொடுக்கப்பட்டதா?

(இ) ஆம் எனில், எத்தனை வருடங்களுக்கு, குத்தகை தொகை என்ன?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: (அ) ஆம்.

(இ) குத்தகைக்காரரிடம் நிலம் ஒப்படைக்கப்பட்ட தேதியிலிருந்து இதன் குத்தகைக்காலம் 50 ஆண்டுகள் ஆகும். குத்தகைக்காரர் விரும்பினால் குத்தகைக்காலம் மேலும் 49 ஆண்டுகளுக்குப் புதுப்பிக்கப்படுகிறது. ஆண்டுதோறும் கொடுக்க வேண்டிய குத்தகைத் தொகை 1,00,350 ரூபாய் ஆகும். இதனை தொகை செலுத்த வேண்டிய ஆண்டில் முந்திய திங்கள் 10-ம் தேதியன்றோ அதற்கு முன்போ செலுத்த வேண்டும்.

திரு. வி. கே. கோதண்டராமன்: சார், இப்போதுள்ள நிலைமை என்ன விவரம் சொல்ல முடியுமா?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: குத்தகை விடப்பட்டாகி விட்டது. பணமும் கட்டியாகிவிட்டது.

முதலாண்டு மருத்துவ மாணவர்கள்

291. வினா.—**திரு. எஸ். சிவசுப்பிரமணியன்:** மதிப்பிற்குரிய மருத்துவ அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

முதலாண்டு மருத்துவ மாணவர்கள் இறுதித் தேர்தலில் தோல்வியுற்றால் கல்லூரியிலேயே சேர்ந்து படிக்க வாய்ப்பைக் கொடுக்கும் உத்தேசம் பரிசீலனையிலுள்ளதா?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: ஆம்.

மருத்துவக் கல்வி பட்ட மேற்படிப்பு

*292 வினா.—**திரு. எஸ். ஜே. ராமசாமி:** } **திரு. எம். வில்லியம்:** } மதிப்பிற்குரிய மருத்துவ அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்கு பதிலளிப்பாரா—

(அ) 1967-ம் ஆண்டு ஏப்ரல் மாதத்தில் வைத்திய பிற்கால மேல் பட்ட படிப்பு நிலையம் (Postgraduate Medical Education and Research Centre) சென்னையில் மத்திய அரசாங்க உதவியுடன் அமைக்கும் திட்டம் ஏதேனும் அரசாங்கத்தின் பரிசீலனையிலுள்ளதா?

(இ) ஆம் எனில், அதன் விபரமென்ன?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: சென்னை அடையாற்றில் மருத்துவக் கல்வி பட்ட மேற்படிப்பு—ஆராய்ச்சி நிலையம் ஒன்றை மத்திய அரசு உதவியுடன் நிறுவுவதற்கான செயற்குறிப்பு உள்ளது. இது குறித்து இந்திய அரசுடன் கடிதப் போக்கு வரத்து நடந்து வருகிறது.

THIRU M. WILLIAM: May I know whether any such centre will be opened at Madruai ?

THE HON. THIRU S. J. SADIQ PADSHA: There is no such proposal.

Handloom industry in Tiruttani

*293 *Q.*—THIRU K. VINAYAKAM: Will the Hon. the Minister for Education and Industries be pleased to state —

(*a*) whether it is a fact that there is a big slump in handloom goods trade in Tiruttani taluk, Chingleput district ;

(*b*) if so, the steps proposed to be taken to improve the pitiable plight of the handloom weavers in that area ; and

(*c*) whether there is any propasal to improve the handloom goods trade ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: (அ) இல்லை.

(இ) இக் கேள்வி எழவில்லை.

(உ) கைத்தறித் தொழில் மேம்பாட்டுக்கென செயல்படுத்தப்பட்டு வரும் கைத்தறி மேம்பாட்டுத் திட்டங்களைத் தவிர, தேவையான இடங்களின் தேவைக்கேற்ற துயர்தணிப்பு நடவடிக்கைகளை அரசு மேற்கொண்டுள்ளது. கைத்தறி ஏற்றுமதி மேம்பாட்டுக் கழகமும், இந்தியக் கைப்பணிகள்-கைத்தறிகள் ஏற்றுமதிக் கார்ப்பிரேஷனும் கைத்தறித் துணிகளின் ஏற்றுமதியை அதிகரிக்க எல்லா முயற்சிகளையும் மேற்கொண்டுள்ளன.

THIRU K. VINAYAKAM: Sir, is it not a fact that, when the Hon. Minister for Education visited those areas, he found there a lot of people without the usual work of weaving because of the glut in that trade and what steps are being taken by the Government to give them alternative employment ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: தலைவர் அவர்களே, திருத்தணி தாலுகாவைப் பொறுத்தவரையில், கைத்தறித் துணித்தேக்கத்தினால், நெசவாளர்களுக்கு வேலையில்லாத் திண்டாட்டம் ஏற்பட்டிருக்கக் கூடும். பொதுவாக எப்போதும் இருந்து வருகிற நிலைமை இருக்கலாமே தவிர புதிதாக எதுவும் ஏற்படவில்லை. அங்கு 12 ஆயிரம் கைத்தறிகள் இருக்கின்றன. ஆயிரம் கைத்தறிகள் கூட்டுறவுத் துறையின்கீழ் இருக்கின்றன. சென்ற ஆண்டு 11 லட்ச ரூபாய் மதிப்புள்ள துணி உற்பத்தியானது. சென்ற ஆண்டின் விற்பனை 12 லட்சத்திற்கு ஆகியிருக்கிறது. திருத்தணி தாலுகாவைப் பொறுத்தமட்டில் அங்கு உற்பத்தியாகும் துணிகள் வெளிநாட்டு ஏற்றுமதிக்கு உகந்ததாகவும், உள்நாட்டு மார்க்கெட்டுக்கு உகந்ததாகவும் இருக்கிறது, மெட்ராஸ் லுங்கி, மெட்ராஸ் ஹேண்ட் கர்ச்சிப், பாக்கெட் ஹேண்ட் கர்ச்சிப் போன்றவைகள் எல்லாம் கணிசமான அளவுக்கு விற்பனையாகியுள்ளன. நிலைமை மோசமாக இல்லை. பொதுவாக கைத்தறித் துறையில் ஏற்பட்டிருக்கிற மந்த நிலைமை திருத்தணி தாலுகாவில் இருக்கலாமே தவிர, வேறு நிலைமை இல்லை.

சிதம்பரம் வட்டத்தில் காகிதத் தொழிற்சாலை

*294 வினா.—**திரு. எஸ். சிவசுப்பிரமணியன்:** மதிப்பிற்குரிய கல்வி-தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

சிதம்பரம் தாலுக்காவில், கருப்பூர், ஒட்டரைப்பாளையம், முள்ளங்குடி, பருத்திக்குடி, வெள்ளூர் முதலிய பல கிராமங்களில் உள்ள மூங்கில் மரங்களை உபயோகப்படுத்தும் வகையில் அப்பகுதியில் பேப்பர் தொழிற்சாலை ஒன்று அமைக்க அரசாங்கத்தில் உத்தேசம் உண்டா?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: இல்லை.

[1967, ஜூலை 12

திரு எஸ். சிவசுப்பிரமணியன் : சார், கொள்ளிடப் பகுதியில் ஏராளமான கிராமங்களில் அதிகமான மூங்கில் மரத் தோப்புகள் இருக்கின்றன. அந்தப் பகுதி மக்களுக்கு, அங்கு ஒரு காகிதத் தொழிற்சாலை ஏற்படுத்தித் தர முடியுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : அங்கு இரண்டு பெரிய காகிதத் தொழிற்சாலைகள் ஏற்கனவே இயங்கி வருகின்றன. அந்தப் பகுதியில் ஒரு தொழிற்சாலை உருவாக்குவதற்கு லைசென்ஸ் வழங்கப்பட்டிருக்கிறது. சிதம்பரம் தாலூகாவைப் பொறுத்தவரையில் அங்கு கிடைக்க கூடிய மூங்கில் எல்லாம் வீடு கட்டவும், சாமான்கள் செய்யவுமே பயன்படுகின்றன. அந்த மூங்கிலை மட்டும் நம்பி அங்கே காகிதத் தொழிற்சாலை ஏற்படுத்த வசதியில்லை.

மதுரைச் சிறப்பு அங்காடி

* 295 வினா.—**திரு. கரு. சீமைச்சாமி :** மதிப்பிற்குரிய சட்ட-கூட்டுறவு அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) மதுரை சிறப்பு அங்காடி நஷ்டத்தில் நடந்து கொண்டிருப்பது உண்மையா ?

(இ) ஆம் என்றால் அதற்கான காரணங்கள் யாவை ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : (அ) & (இ) சபைமுன் ஒரு அறிக்கை வைக்கப்பட்டுள்ளது.

Dr. H. V. HANDE : Sir, the statement placed on the table does not include the actual depreciation charges and there is considerable loss. Will this Government come forward and tell us clearly whether it has got any idea of having some more supermarkets or whether it will stop with the present supermarkets ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : இந்த அரசாங்கம், மத்திய அரசாங்கத்தினுடைய ஆலோசனையை ஏற்று, 6 சிறப்பு அங்காடிகளைத் திறப்பதாக முடிவு செய்து, இப்போது 5 திறக்கப்பட்டு, நடைபெற்று வருகின்றன.

திரு. சி. கோவிந்தராசன் : ஐயா, சூபர் மார்க்கெட்டுக்கு 6 ஆயிரம் ரூபாய் வாடகை கொடுக்கப்பட்டு வருகிறதே, அதற்கு ஏதாவது குறைந்த வாடகைக்கு இடம் கிடைக்க ஏற்பாடு செய்து தரப்படுமா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : 5 ஆயிரம் ரூபாய்தான் வாடகை கொடுக்கப்படுகிறது. குறைந்த வாடகையில் இடம் கிடைத்தால் அதுபற்றி பரிசீலிக்கப்படும்.

THIRU K. VINAYAKAM : Is the Minister aware of the fact that; not only the Madurai Super Market, the Madras Super Market also is sustaining a heavy loss, it is a colossal waste of money, it has become a white elephant and will the Government think of winding up the entire organisation and thus avoid the throwing of good money after bad business ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : தலைவர் அவர்களே, சூபர் மார்க்கெட்டு வேண்டுமா ? வேண்டாமா என்பதைப் பற்றிக் கருத்து வேறுபாடுகள் இருக்கின்றன. கனம் அங்கத்தினர் அவர்கள் சொன்ன கருத்து முற்றிலும் தவறான கருத்து. அதற்கு ஆதாரம் இல்லாமல் சொல்கிறார்கள். சென்னை சூபர் மார்க்கெட்டைப் பொறுத்தவரையில், இதுவரையில் ஓரளவு லாபம் கிடைத்திருக்கிறது. அந்த லாபம் போடப்பட்ட முதலுக்கு உரியதுதானா, போதுமானவையா என்பதுபற்றி பரிசீலிக்கப்படும்.

* 91-92ம் பக்கத்தில் இணைப்பு II. ஆக அச்சிடப்பட்டுள்ளது.

1967 ஜூலை 12]

திரு. டி. எஸ். அதிமூலம் : சார், இந்த சூபர் மார்க்கெட்டிலே சகல விதமான பிஸினெஸ்ஸும் நடக்கிறது என்று கேள்விப்பட்டேன். அதனால், லாண்டரி, "பார்பர் ஷாப்" இவைகள் எல்லாம் உண்டா என்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. செ. மாதவன் : இல்லை.

திரு. கரு. சீமைச்சாமி: மதுரையில் சூபர் மார்க்கெட்டில் நிறைய முற் பகல் 10-3
விற்காத சாமான்கள் எல்லாம் லட்சக்கணக்கான ரூபாய்களுக்கு தேங்கிக் கிடக்கின்றன. மச்லீன்ஸ் பேஸ்ட் மூன்று லட்சம் ரூபாய் அளவிற்கு தேங்கி இருக்கிறது. விற்காத துணிமணிகள் பழைய துணிமணிகள் அதிகமாகத் தேங்கிக் கிடப்பதுதான் இதற்குக் காரணம் என்று அரசுக்குத் தெரியுமா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : இது நீடிப்பதற்கு அதுவும் ஒரு காரணம். பர்சேஸ் கமிட்டி தகுந்த முறையிலே அமைக்கப்படாத காரணத்தாலும் அவர்கள் பம்பாய்க்குச் சென்று சரக்குகள் வாங்கிய வகையில் பதினேறு லட்சத்து எண்பத்தி ஐயாயிரம் ரூபாய்க்கு தேவையில்லாத, மார்க்கெட்டில் எடுபடாத சரக்குகள் வாங்கினது உண்மையே. அதற்காக அவர்கள் மீது நடவடிக்கை எடுத்துக்கொள்ளப்பட்டு இருக்கிறது.

திரு. என். எஸ். வி. சித்தன் : மதுரை சிறப்பு அங்காடி நிர்வாகக் குழு கலைக்கப்பட்டதாகப் பத்திரிகையில் படித்தேன். அது உண்மையா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : டிஸ்ட்ரிக்ட் ஸப்ளை மார்கடிங் சொஸைட்டி பிரதிநிதிகள் அவர்கள் மீது நடவடிக்கை எடுக்க உத்திரவு பிறப்பிக்கப்பட்டு இருக்கிறது. அதன் விவரம் என்னிடம் இல்லை.

திரு. கே. ஆர். கோவிந்தன் : தலைவர் அவர்களே, சூபர் மார்க்கெட்டில் தேவைக்கு அதிகமான ஆண்களும் நிறையப் பெண்களும் வேலை செய்வதாகச் சொல்லப்படுவதால், ஆள் குறைப்புத் திட்டம் ஏதாவது உண்டா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. மாதவன் : இது போன்ற சிறப்பு அங்காடிகள் வியாபார நோக்கத்தோடு நடத்தப்படவேண்டுமென்றும், இந்த வேலை வாய்ப்புக்கள் கொடுக்கும்போது இதன் அடிப்படையிலேயே நியமிக்கவேண்டுமென்றும் நம்முடைய சர்க்கார் எல்லாச் சிறப்பு அங்காடிகளுக்கும் ஆணை பிறப்பித்து இருக்கிறது.

மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை : தலைவர் அவர்களே, இந்தச் சிறப்பு அங்காடி திட்டம் என்பது முன்னேயே இருந்து, தரப்பட்டதை ஏற்றுக்கொண்ட ஒரு திட்டமாகும். பொதுவாக இந்தத் திட்டத்தைத் துவக்கிய போதே பொருளாதார நிபுணர்கள் மத்தியில் கூட ஒரு ஐயப்பாடு இருந்தது. சிறப்பு அங்காடிகள் அமைப்பது, பொருள்கள் நிறையக் கிடைத்து அதைச் சரியான முறையில் விற்பதற்கான வாய்ப்பு இல்லாத நிலையில் திறக்கப்பட்டு இருக்க வேண்டும். இப்போது பொருள்கள் கிடைக்காத நிலையில் சிறப்பு அங்காடிகள் அல்லாது, நியாய விலைக் கடைகள் அல்லது மலிவுக் கடைகள் திறப்பதுதான் தேவையானது என்று பரவலான அபிப்பிராயம் இருந்து வருகிறது. அந்த அபிப்பிராயம் எனக்கும் உண்டு. இந்தச் சிறப்பு அங்காடிகள் திறக்கப்பட்டு இருப்பதை, ஒரு வருட காலம் அவைகள் நடைமுறையிலே இருந்து எந்த வகையில் இருக்கிறது என்பதை ஒரு தனிக் குழு மூலமாக ஆய்வு நடத்தி அதற்குப் பிறகு தான் அவைகளை நீடிப்பதா வேண்டாமா என்பதைப் பற்றி இந்த அரசு முடிவு எடுப்பதாகக் கருதுகிறது. இந்த அரசின் நோக்கம், ஒரு மையமான இடத்தில் பெரிய அளவில் ஏராளமான வாடகை கொடுத்து சிறப்பு அங்காடிகள் அமைப்பதைவிட ஒரு பெரிய நகரத்தில் பல இடங்களில் டில்லியில் வைத்து இருப்பதைப் போல டிபார்ட்மென்டல் ஸ்டோர்ஸ் என்று சிறிய அளவில் எல்லா சாமான்களும் கிடைக்கத்தக்க வகையில் அங்காடிகளைத்

திறப்பது மிகவும் பயன் அளிக்குமென்ற கருத்தை இந்த அரசு கொண்டிருக்கிறது. இந்த இரண்டு கருத்துக்களையும் இந்த அரசு இப்போது ஆராய்ந்து கொண்டு இருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினாக்கள்-விடைகள் முடிவடைந்தன.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவையின் 41-வது விதியின் கீழ் அவசர முக்கியமான காரியம் ஒன்றை, மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கவனத்திற்குக் கொண்டு வருவதாகத் தீர்மானம் கொடுத்திருந்த திரு. என். வரதராசன் அவர்கள் இடத்தில் இல்லை. ஆகையால் அத் தீர்மானம் திரும்பப் பெற்றுக்கொள்ளப்பட்டதாகக் கருதப்படுகிறது.

[குறிப்பு.—ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடப்பட்டிருந்தால், உறுப்பினரால் அவ்வுரை சரிபார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.]

2. உரிமைப் பிரச்சினை.

முரசொலி நாளிதழில் பேரவை நடவடிக்கைகள் பற்றி வந்துள்ள செய்தி

THIRU T. MARTIN : Mr. Speaker, Sir, I have given notice of a privilege matter to you in the morning. I request the consent of the Hon. Speaker to move it in this sitting itself.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : என்ன பிரிவிலேஜ் என்று சொன்னால் தான் நான் சொல்ல முடியும்.

THIRU T. MARTIN : Mr. Speaker, Sir, I wish to raise the following matter of privilege under Rule 184 of the Rules of Procedure of the Madras Legislative Assembly :—

In the issue of daily 'Murasoli', dated Madras 6th July 1967 and mofussal 7th July 1967 the following passage has been published:

" காங்கிரஸ் என்றால் நான் காமராஜர், கருத்திருமன், பக்தவத்சலம் போன்றவர்களையே பார்க்கிறேன். மற்ற பேச்சுக்களையெல்லாம் காங்கிரசை வைத்து பிழைப்பு நடத்துகிறவர்களது பேச்சாகவே கருதுகிறேன்."

In the proceedings of the Madras Legislative Assembly, dated 11th July 1967, the Hon'ble the Speaker has held that the above passage published in the daily 'Navasakthi' constitutes a *prima facie* case of breach of privilege. Since the same passage occurs in the daily 'Murasoli', I submit that a breach of privilege has been committed by the said daily 'Murasoli' and that the matter be taken note of by the Hon'ble the Speaker and the House.

MR. SPEAKER : As the hon. Member has moved it in English, I would give my ruling on it in English. When a privilege motion is raised against any newspaper, a copy of the newspaper must also be delivered in the office. Now I would read what is stated on page 135 of May's Parliamentary Practice. It runs as follows :—

'When complaint is made of something published in a newspaper or book, a copy of the newspaper or book, and when complaint is made of a letter sent to a Member, the original of the letter said to have been written, must be delivered in at the table by the Member . . . '

No such copy has been delivered and that will be enough to refuse my consent for moving this motion.

THIRU. T. MARTIN : Sir, on a point of personal explanation.

MR. SPEAKER : No point of personal explanation now. I am giving my ruling and that comes afterwards.

Another very important point raised in this motion is an allegation against the Speaker, that "the Speaker has held that the above passage published in the daily 'Navasakthi' constitutes a *prima facie* case of breach of privilege". This is untrue. I am saying that a prima facie case of breach of privilege has been made against the hon. Member for having made an allegation against the Speaker. Here is the statement that " the Speaker has held that the above passage published in the daily 'Navasakthi' constitutes a prima facie case of breach of privilege". Either the hon. Member has not taken care to read the passage or the hon. Member has not taken care to listen to the proceedings of the Assembly. In either case it is wrong and I hold that a *prima facie* case of breach of privilege of this House has been made by the hon. Member, Thiru Martin in making this allegation. As a prima facie case has been made out on the floor of the House, I will allow him until tomorrow to decide as to what he should doin the matter to enable me to decide whether this matter should be settled in the Committee of Privileges or whether this Honourable House may exercise its discretion to show generosity to the Hon. Member.

இந்தப் பேரவை மாண்புமிகு உறுப்பினரை மன்னிக்க வேண்டுமா வேண்டாமா என்பதைப் பற்றி நாளைக்கு முடிவு செய்யவேண்டும்.

திரு. பி.ஜி. கருத்திருமன் : சபாநாயகர் அவர்களே, மாண்புமிகு மார்டின் அவர்கள் ஒரு உரிமைப் பிரச்சினையைக் கொண்டு வந்தார்கள். கொண்டு வந்து அவர்கள் கருத்தைத் தெரிவித்தார்கள். இந்த சபையில் ஏற்கனவே சபாநாயகர் கொடுத்த தீர்ப்பை தவறாகச் சொல்லிக் கொடுத்ததாக எனக்குப் படவில்லை. சபாநாயகர் அவர்களே தீர்ப்பு கூறும்போது இதற்கு முன்னால் இந்த சபையில் இந்த இந்த சபாநாயகர் இப்படி இப்படிச் சொல்லியிருக்கிறார்கள் என்று சபாநாயகர் தீர்ப்பு கூறுகிறார்கள். அந்த அடிப்படையில் இந்தச் சபையில் எந்த மாண்புமிகு உறுப்பினருக்கும் எந்தப் பிரச்சினையையும் கிளப்புவதற்கு முன்னால் எந்த சபாநாயகரின் தீர்ப்பையும் குறுக்கிட்டுச் சொல்ல உரிமையிருக்கிறது என்பதை வலியுறுத்திச் சொல்ல ஆசைப்படுகிறேன். ஏற்கனவே நடந்த நடவடிக்கைகளை வைத்து அவரவர்கள் சொன்ன தீர்ப்புகளை அடிப்படையாக வைத்துச் சொல்லுவதற்கு சபாநாயகருக்கும் அங்கத்தினர்களுக்கும் சந்தர்ப்பம் இருக்கும்போது திரு. மார்டின் அவர்களுக்கும் அந்த உரிமை இருக்கிறது என்று சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன. சபாநாயகர் அவர்கள், அந்தப் பத்திரிகையின் ஒரு பிரதி கொடுக்கப்படவில்லை, ஆகவே, இதை நான் ஏற்றுக்கொள்ள முடியாது என்று சொல்லுவது மிகவும் வருந்தத்தக்க காரியம். அது ஒரு குற்றமாக இருக்குமானால் அங்கத்தினர் அவர்களிடம் அந்தப் பத்திரிகையின் ஒரு காப்பி வேண்டுமென்று கேட்கலாம், அவர்களும் கொடுக்கலாம். அப்படி வேண்டுமென்றால், அவர்களுக்காக நான் அந்தப் பத்திரிகையின் குறிப்பை உங்களுக்குக் கொடுக்கிறேன். ஆகவே, இதை வைத்து தயவுசெய்து, தீர்ப்பை உடனடியாகக் கொடுக்கும்படியான நிலை இல்லையென்பதை நான் தெரிவித்துக்கொள்கின்றேன். அத்துடன் கனம் சபாநாயகர் அவர்கள் கொடுத்துள்ள தீர்ப்பைக் கண்டிப்

[திரு. பி. ஜி. கருத்திருமன்] [1967 ஜூலை 12

பதற்காகவோ அல்லது அதை மறுத்துச் சொல்வதற்காகவோ அவர் சொல்லவில்லை என்பதையும் நான் தாழ்மையுடன் தெரிவித்துக்கொள்கிறேன். பத்திரிகைக் குறிப்பு கிடைத்தவுடன் நாளைக்கு தீர்ப்புச் சொன்ஞல் நாங்கள் அதற்காகக் காத்துக்கொண்டிருக்கிருேம். ஆனல், அதே சமயத்தில் பத்திரிகைக் குறிப்பு இல்லாததால இது எடுத்துக்கொள்ளப் படவில்லையென்று தீர்ப்புக் கொடுக்காமல் அதையும் நாளைக்குப் பேசிக் கொள்ளலாம் என்பதையும் நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

Mr. SPEAKER : With regard to the privilege notice given by the hon. Member Mr. Martin, I have already said that he has not given me a copy of the newspaper. If it is merely a technical error, I can excuse the technical error. On technical ground alone I have not disallowed it and I have allowed the matter to lie over until tomorrow. But in the meantime I find from the paper handed over to me that an allegation is made against the Speaker. The passage reads as follows:

"காங்கிரஸ் என்ருல் நான் காமராஜர், கருத்திருமன் போன்றவர்கள் . . . ".

It makes all the difference. I hold that this allegation against the Speaker that the same passage has been held to constitute a breach of privilege is a wrong allegation and I hold that making a wrong allegation against the Speaker in this House is itself a breach of privilege.

When I hold that there is a breach of privilege *prima facie* committed by the hon. Member, I can deal with it in two ways. Under Rule 189 of the Rules, I can allow the matter to be referred to the Committee of Privileges for enquiry or I can place it before this Hon'ble House. If he says that it is merely an error through carelessness or negligence this hon'ble House will no doubt be gracious and magnanimous enough to exercise its generosity in his favour and excuse the error. I leave the matter at that till tomorrow. But if he still contends that this is the passage I held to constitute a breach of privilege, that allegation itself will constitute a breach of privilege and I will send the matter to the Committee of Privileges for enquiry. That is the end of the matter. Let us see what happens and wait until tomorrow.

3. 1967–68-ம் ஆண்டிற்கான மானியக் கோரிக்கைகள் மீது வாக்கெடுப்பு—தொடர்ச்சி.

மானியக் கோரிக்கை எண் IX—மாவட்ட நிர்வாகமும், பல்வகையும்.

மாண்புமிகு திரு. சி. என். அண்ணுதுரை : தலைவர் அவர்களே, கவர்னர் அவர்களின் பரிவுரையின்மேல், கீழ்க்கண்ட தீர்மானத்தை நான் முன்மொழிகிறேன்.

"கோரிக்கை எண் IX—மாவட்ட நிர்வாகமும், பல்வகையும் என்ற தலைப்பின்கீழ் ரூ. 7,31,10,500-கக்கு மேறபடாத தொகையை அரசுககு வழங்கவேணடும."

1967 ஜூலை 12]

திரு. வி. கே. கோதண்டராமன் : தலைவர் அவர்களே, ரெவின்யூ இலாகாவில் ஒழுங்கீனங்கள் அதிகமாகி வருவதைத் தடுத்து நிறுத்துவதைப் பற்றி எடுத்துக் கூற—

"கோரிக்கை எண் IX—மாவட்ட நிர்வாகமும், பல்வகையும் என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப்படுகின்ற ரூ. 7,31,10,500-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்" என்ற வெட்டுத் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

திரு. செ. பாலசுப்பிரமணியன் : தலைவர் அவர்களே, தற்போதுள்ள கிராம மணியம்-கர்ணம் ஆகிய பதவிகளை ரத்துசெய்துவிட்டு புதிய கிராம சேவை முறைகளை ஏற்படுத்துவது பற்றி விவாதிக்க—

"கோரிக்கை எண் IX—மாவட்ட நிர்வாகமும், பல்வகையும் என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப்படுகின்ற ரூ. 7,31,10,500-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்" என்ற வெட்டுத் தீர்மானததை முன்மொழிகிறேன்.

Thiru T. M. NALLASWAMY : To discuss about the retrenchment of staff in District Administration and Miscellaneous, I move the cut motion standing in my name, namely—

'That the allotment of Rs. 7,31,10,500 under Demand IX—District Administration and Miscellaneous—be reduced by Rs. 100."

மானியக் கோரிக்கை எண் XXXIII—பல்வகை.

மாண்புமிகு திரு. சி. என். அண்ணுதுரை : தலைவர் அவர்களே, கவர்னர் அவர்களின் பரிவுரையின்மேல் கீழ்க்கண்ட தீர்மானத்தை நான் முன்மொழிகிறேன்—

"கோரிக்கை எண் XXXIII—பல்வகை என்ற தலைப்பின்கீழ் ரூ. 5,13,55,000-க்கு மேற்படாத தொகையை அரசுக்கு வழங்கவேண்டும்."

மானியக் கோரிக்கை எண் XXXVI—ஏனைய பல்வகை இழப்பீடுகளும், ஒதுக்கீடுகளும்.

மாண்புமிகு திரு. சி. என். அண்ணுதுரை : தலைவர் அவர்களே, கவர்னர் அவர்களின் பரிவுரையின் மேல் கீழ்க்கண்ட தீர்மானத்தை நான் முன்மொழிகிறேன்—

"கோரிக்கை எண் XXXVI—ஏனைய பல்வகை இழப்பீடுகளும், ஒதுக்கீடுகளும் என்ற தலைப்பின்கீழ் ரூ. 5,48,84,900-க்கு மேற்படாத தொகையை அரசுக்கு வழங்க வேண்டும்."

மானியக் கோரிக்கை எண் XXXII—ஓய்வூதியங்கள

மாண்புமிகு திரு. சி. என். அண்ணுதுரை : தலைவர் அவர்களே, கவர்னர் அவர்களின் பரிவுரையின் மேல் கீழ்க்கண்ட தீர்மானத்தை நான் முன்மொழிகிறேன்—

"கோரிக்கை எண் XXXII—ஓய்வூதியங்கள் என்ற தலைப்பின கீழ் ரூ. 3,57,34,200-க்கு மேற்படாத தொகையை அரசுக்கு வழங்க வேண்டும்."

திரு. வி. கே. கோதண்டராமன் : தலைவர் அவர்களே, ஏழை வயோதிகர்கள் எல்லோருக்கும் பென்ஷன் கொடுக்காத நிலையைப் பறறி விவாதிக்க—

"கோரிக்கை எண் XXXII—ஓய்வூதியங்கள் என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப்படுகின்ற ரூ. 3,57,34,200-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்" என்ற வெட்டுத் தீர்மானத்தைப் பிரேரேபிக்கிறேன்.

திரு. இல. பலராமன் : தலைவர் அவர்களே, அகவிலைக்குத் தகுந்தபடி ஓய்வுத் தொகையை உயர்த்துவது பற்றி விவாதிக்க—

"கோரிக்கை எண் XXXII—ஓய்வூதியங்கள் என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப்படுகின்ற ரூ. 3,57,34,200-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்" என்ற வெட்டுத் தீர்மானத்தைப் பிரேரேபிக்கிறேன்.

மானியக் கோரிக்கை எண் XLV—ஓய்வூதியங்களை மொத்தமாக்குதல்.

மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை : தலைவர் அவர்களே, கவர்னர் அவர்கள் பரிவுரையின் மேல் கீழ்க்கண்ட தீர்மானத்தை நான் முன்மொழிகிறேன்—

"கோரிக்கை எண் XLV—ஓய்வூதியங்களை மொத்தமாக்குதல் என்ற தலைப்பின்கீழ் ரூ. 7,10,000-க்கு மேற்படாத தொகையை அரசுக்கு வழங்க வேண்டும்."

THIRU V. K. KOTHANDARAMAN : To discuss Policy, I move the cut motion standing in my name, namely—

"That the allotment of Rs. 7,10,000 under Demand No. XLV—Commuted value of pensions—be reduced by Rs. 100."

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஏதாவது முன்னுரை இருந்தால் கூறலாம்.

மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை : முன்னுரை எதும் இல்லை.

*** திரு. தோ. மு. நல்லசாமி :** அவைத் தலைவர் அவர்களே, இந்த ஜில்லா நிர்வாகம் என்ற கோரிக்கையின் மீது நான் கொடுத்துள்ள வெட்டுப் பிரேரணையையொட்டி சில கருத்துக்களைச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். இந்த ஜில்லா நிர்வாகம் என்பதில்தான் கிராமப் புறத்து நிர்வாகங்கள் நடைமுறைகள் இருந்து வருகின்றன என்பதை நான் இங்கே ஞாபகப்படுத்த விரும்புகிறேன். இந்த ஜில்லா நிர்வாகத்தைப்பற்றிச் சொல்ல ஆரம்பிக்கும்பொழுது கிராம நிர்வாகத்திலேயிருந்து படிப்படியாக சொல்வதுதான் முறை என்று கருதுகிறேன். கிராமப் புறங்களிலே வாழ்கின்ற மக்கள் எல்லாக் காரியங்களிலும் கிராம அதிகாரிகள், மணியக்காரர்கள், கணக்குப் பிள்ளைகள், வில்லேஜ் அக்கவுண்டன்ட்ஸ் என்று சொல்கிறார்களே அவர்களோடு நெருங்கிய தொடர்பு கொள்ள வேண்டியவர்களாக இருக்கிறார்கள்.

அப்படி இருக்கும்போது அந்தக் கிராமாதிகாரிகள் நடந்துகொள்ளுகின்ற, செயல்படுகின்ற தன்மையைப் பொருத்துத் தான் கிராமப் பணிகள் நன்றாக நடப்பதும், நடக்காமல் போவதும் இருக்கிறது என்று நான் இங்கே சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். இன்றைக்கு இருக்கக் கூடிய நிலையில் கிராம நிர்வாகம் சரிவர நடப்பதில்லை என்பது தான் என்னுடைய கருத்து. இந்தக் கிராமாதிகாரிகளுடைய வேலைகள் பற்றியும், அவர்களுக்கு ஏற்படக்கூடிய சிரமங்கள் பற்றியும் விரிவான விசாரணைகள் கடந்த காலத்தில் நடந்திருக்கிறது. இந்தச் சட்ட மன்றத்திலும் எடுத்துச் சொல்லப்பட்டிருக்கிறது. சமீப காலத்தில் ஏற்பட்ட அபிவிருத்தி வேலைகள் காரணமாக வேலைப் பளு அதிகமாகப் போய்விட்டது. ஆகையால் கிராமாதிகாரிகள் தங்களுடைய வேலைகளைச் செவ்வனே செய்ய முடியவில்லை என்ற கருத்தைக் கூறுகிறார்கள். அதே சமயத்தில் கிராமத்திலே உள்ளவர்கள் எல்லாக் காரியங்களுக்கும் கிராமாதிகாரிகளை அணுகவேண்டிய அவசியம் ஏற்படுகிற காரணத்தால் துரிதமாக வேலைகள் நடைபெறுவதில்லை. கிராம மணியக்காரர், கணக்குப்பிள்ளை என்ற பழைய முறையை மாற்றி வேறு முறையைக் கொண்டுவரவேண்டுமென்ற கருத்து முன்பு இந்த மன்றத்தில் எடுத்துச் சொல்லப்பட்டிருக்கிறது. ரெவின்யூ கிராமங்களில் இருக்கக கூடிய வேலைகளை ஆலோசித்துப் பார்த்து பெரிய கிராமங்களாக இருந்தால் தக்கவாறு பிரித்து ஒரு மணியக்காரர், கணக்கப்பிள்ளை

வேலை பார்க்கிற அளவுக்குச் சிறிய கிராமங்களாக மாற்றியமைக்கவேண்டும். மணியக்காரர், கணக்கப்பிள்ளை ஆகியவர்களுக்குப் போதிய ஊதியம் கொடுக்க வேண்டும். அப்படி ஊதியம் கொடுக்காத காரணத்தால் அவர்கள் தவறான வகையில் தங்களுடைய வருவாய்க்கு வழிவகை தேடிக்கொள்ளுகின்ற நிலை இருக்கிறது. இந்தச் சபையில் எடுத்துச் சொல்லப்பட்டது போன்று இந்த அமைப்பை மாற்றி லோயர் டிவிஷன் கிளார்க் என்று போட்டு கிராம ஆபீஸ்களாக இயங்கி மக்களுக்குச் செய்ய வேண்டிய காரியங்களைச் செய்ய முன்வரவேண்டும்.

வேலை வளர்ந்திருக்கும் நிலையைப்பற்றிக் குறிப்பிடும்போது முன்பு அவர்களுக்கு நில வரியை வசூல் செய்வது, பிறப்பு-மரண விகிதங்களைப் பதிவு செய்வது மட்டும் செய்து வந்த அவர்கள் இன்று அபிவிருத்தி வேலைகளின் காரணத்தால், வீட்டு வரி, நில வரி, பஞ்சாயத்து வரி போன்றவற்றையும் மற்றவற்றையும் சேர்த்துக் கவனிக்க வேண்டியிருக்கிறது. வீட்டு வரி, நில வரி ஆகியவற்றை வசூலிக்கும்போது அவர்கள் வாய்மொழியாக என்ன தொகையைச் சொல்லுகிறார்களோ அந்தத் தொகையைத்தான் விவசாயிகள் செலுத்தி வருகிறார்கள். நிலவரி இவ்வளவு, தண்ணீர் வரி இவ்வளவு, பஞ்சாயத்து யூனியன் வரி இவ்வளவு என்ற விவரம் இல்லை. அதற்கு மாறாக டிமாண்ட் கொடுக்கப்பட்டு அந்த அடிப்படையில் வரிகளைச் செலுத்த வேண்டுமென்பதுதான் நியாயமான, 'ரேஷனல்' என்று சொல்லும் அடிப்படையில் இருக்கும்; பகுத்தறிவுக்கும் பொருத்தமாக இருக்கும். கிராமங்களில் நான்கு பேருக்குச் சொந்தமான நிலங்களுக்கு ஒரே சர்வே நம்பர் இருக்கிறது. இப்போது இருக்கிற முறைப்படி குறிப்பிட்ட சர்வே நம்பர் உள்ள நிலத்திற்கு கிஸ்தி வசூலை வசூல் பண்ணிவிட்டால் போதும். இரண்டு பேரிடத்தில் அதிகமான தொகை வசூலித்து, இரண்டு பேரிடத்தில் குறைத்து வசூல் பண்ணினால் கூட மேலே இருக்கிறவர்கள் எதும் கேட்கப்போவதில்லை. இந்த நிலைமை மாற்றப்பட்டாக வேண்டும். இதற்கு தீவிரமாக கிராம நிர்வாகங்கள் நடைபெற வேண்டும். டிமாண்ட்ஸ் கொடுத்து என்ன வரி வசூலிக்கிறோம் என்பது அந்த மக்களுக்குத் தெரியும்படி வசூலிக்க வேண்டும். அதற்கு ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இப்போது இருக்கக்கூடிய அமைப்பு நீடிக்கும் வரை கிராம ஊழியர்களுக்குத் தக்க ஊதியம் கொடுத்து தவறுகள் செய்கிறார்கள் என்றால் அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டு வரும்போது தக்க நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று இந்தச் சபையில் வற்புறுத்திக் கூற விரும்புகிறேன். மணியக்காரர், கர்ணம் ஆகியவர்களுக்கு இன்று இருக்கக் கூடிய வாழ்க்கைத்தரத்தை உத்தேசித்துப் பார்க்கும்போது அவர்களுடைய ஊதியம் மிகக் குறைவாக இருக்கிறது. அதனால் அவர்கள் தங்களுடைய வருமானத்தை வேறு வகையில் திரட்ட வேண்டிய நிலைக்குச் செல்கிறார்கள். அவர்களுக்கு தற்போது கொடுக்கக் கூடிய சம்பளம் தாலூகா ஆபீசுக்குச் சென்று வருவதற்கான பிரயாணப் படிக்குக் கூடக் காணாது. ஆகவே, போதிய அளவுக்கு அவர்களுக்கு ஊதியம் கொடுப்பதோடு, திறமையான மாற்று அமைப்பு தேவை என்பதையும் இந்த நேரத்தில் சொல்லிக்கொள்கிறேன்.

தற்போது ஒரு பிர்க்காவுக்கு ஒரு ரெவின்யூ இன்ஸ்பெக்டர் இருக்கிறார். 'ஜோக்கிராபிகல்' ஆக—பூகோள அமைப்பில் பார்க்கும்போது பல பிர்க்காக்கள் நீண்ட பிர்க்காக்களாக இருப்பதோடு நிர்வாகத்திற்கு உகந்ததாக இல்லை. அப்படிப்பட்ட இடங்களில் பிர்க்காக்களை இரண்டாகப் பிரிக்க வேண்டும். பூகோள ரீதியாகப் பார்ப்பதோடு ஒர்க் லோடு—வேலைப் பளுவின் அளவையும் பார்த்து பிர்க்காக்களைப் பிரித்தால் ரெவின்யூ இன்ஸ்பெக்டர்களுடைய சேவை மக்களுக்கு நெருக்கமாகக் கிடைப்பதற்கான வழிவகைகள் ஏற்படும். அதற்கான நடவடிக்கைகளைப் பற்றி இந்த அரசு ஆராய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

தாலூகா ஆபீஸ் நிர்வாகத்தைப் பற்றி அங்கத்தினர்கள் பல காலமாக எடுத்துச் சொல்லி வந்திருக்கிறார்கள். அபிவிருத்தி வேலைகளையொட்டி வேலைகள் அதிகமாக வளர்ந்திருப்பதால் தாலூகா ஆபீஸ்களில் பல வேலை

கள் சுணக்கமாக, தவக்கமாக நடந்து வருவதைப் பார்க்கிறோம். புதிய வேலைகள் என்று சொல்லும்போது நில ஆர்ஜித வேலை, வயோதிகர்களுக்குப் பென்ஷன் கொடுக்கக்கூடிய வேலை, பட்டா வழங்குவது போன்ற பல காரியங்கள் தாலூகா அலுவலகங்களில் நடைபெறும் சூழ்நிலை இருக்கிறது. ஆகவே, ஒரு தாசில்தாரால் இவ்வளவு வேலைகளையும் துரிதமாக பார்க்க இயலாதாகையால் போதிய அளவு டெபுடி தாசில்தார்களை நியமிக்கவேண்டும். அவர்கள் அபிவிருத்தி வேலைகளைக் கவனிப்பதோடு, மாஜிஸ்ட்ரேட் ஆகவும் பணியாற்ற வேண்டியிருக்கிறது. கல்வி சம்பந்தமான சலுகைகளைப் பெற மற்றும் பலவற்றுக்கும் தாசில்தார் அத்தாட்சிகள் கொடுக்க வேண்டிய நிலையில் இருக்கிறார். ஓயாமல் பொதுமக்கள் தாலூகா ஆபீசில் தொடர்பு கொண்டிருக்கவேண்டியிருக்கிறது. தற்போது பெரிய தாலூகாக்களாக இருக்கின்ற இடங்களில் அவர்கள் அத்தனை வேலையையும் சரிவரச் செய்ய முடிவதில்லை. ஆகவே, இது போன்ற காரியங்களைக் கவனிக்க டெபுடி தாசில்தார்களை நியமித்து அவர்களுக்கு இந்த அதிகாரங்களை டெலிகேட் செய்யும் வகையில் டெபுடி தாசில்தார்களை நியமிக்க வேண்டும். கனம் முதலமைச்சர் அவர்கள் உடனடியாக இது பற்றிப் பரிசீலித்து நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

பெரிய வட்டங்களாக இருக்கக்கூடிய இடங்களில் அவர்களுக்கு வாகனங்கள் கொடுக்கவேண்டும். அதைத் தவருகப் பயன்படுத்தக்கூடிய நிலை இருந்தாலும், அரசுக்கு அதிகச் செலவு ஏற்பட்டாலும் அபிவிருத்தி வேலைகளைச் செவ்வனே கவனிக்க, துரிதமாகக் கவனிக்க வாகனங்கள் இருந்தால், வசதியாக இருக்கும் என்று இந்தச் சந்தர்ப்பத்தில் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

ரெவின்யூ டிவிஷன்களில் சப்-கலெக்டர்கள் நிர்வாகம் பண்ணக்கூடிய டிவிஷன்கள் பொருத்தமற்றவையாக, பெரிய டிவிஷன்களாக இருக்கின்றன. அவர்களுக்கும், மாஜிஸ்ட்ரியல் பவர்ஸ், லா அண்டு ஆர்டர்—பராமரிப்பு, நிலச் சட்டம் போட்ட காரணத்தால், ரெண்ட் கோர்ட் அதிகாரங்கள் இவைகள் எல்லாம் இருக்கிற காரணத்தால், இந்த டிவிஷன்கள் மிகப் பெரியவையாக இருக்கின்ற காரணத்தால், செவ்வனே பணியாற்ற முடியவில்லை என்ற கருத்தும் நீண்ட நெடுங்காலமாக நிலவி வருகிறது.

மு.ப. 12-00 ஒரு ஜில்லாவைப் பிரிக்கவேண்டும். பெரிய யூனிட்டாக இருப்பதால், நிர்வாகத்திற்கு அசௌகர்யமாக இருக்கிறது என்று பேசும்போது ஜில்லாக்களை இரண்டு பகுதிகளாகப் பிரிக்கவேண்டுமென்ற கருத்து முன்னர் தெரிவிக்கப்பட்டபடி இதற்கு முன்பிருந்த அரசு அதுபற்றி விரிவான ஆராய்ச்சி நடத்தியிருக்கிறார்கள். அந்தமாதிரி பிரிவினை சம்பந்தமாக என் கருத்து ஏற்கெனவே இருக்கிற மாவட்டங்களை இரண்டாக பிரிப்பது என்பதில்லை. சௌகர்யமான அமைப்புக்களாகப் பிரிக்கவேண்டும். ஏற்கெனவே உள்ள மாவட்டங்களைப் பிரிப்பது என்றில்லாமல் தனித்தனியாக ஜில்லாக்களைப் பிரிக்கும்போது மத்தியில் உள்ள தலைநகரின் தூரம் இவைகளை எல்லாம் கருத்தில் கொண்டு புதிய ஜில்லாக்கள் அமைக்கவேண்டும். இப்போது இருப்பதை இரண்டாகக் பிரிக்கவேண்டும் என்ற கொள்கையுடையவன் அல்ல நான். பிரிக்கப்படும் வரையில் இருக்கக்கூடிய நிர்வாகத்தைத் திறம்பட நடத்துவதற்கு ரெவின்யூ டிவிஷன்களை அதிகமாக ஆக்கவேண்டும். டெவலப்மெண்டல் ஆக்டிவிட்டீஸ் வந்த பிறகு கலெக்டர்களுக்கு அதிக வேலைகள் ஏற்பட்டிருக்கிறது. ஆகவே பல முறைகள் கையாளப்பட்டன. டி.ஆர்.ஓ. என்ற முறையிலும், கோவையில் ஜாயிண்ட் கலெக்டர் என்ற முறையையும், சேலத்தை இரண்டாகப் பிரித்திருப்பது போன்ற முறைகளின் மூலம் நமக்கு அனுபவம் ஏற்பட்டுள்ளது. அதை அனுசரித்து மாவட்ட கலெக்டர்கள் டெவலப்மெண்டல் ஆக்டிவிட்டீஸையும் சேர்த்துப் பார்ப்பதால் எல்லாத் துறைகளிலும் நல்ல கவனம் செலுத்தும் சூழ்நிலையை ஏற்படுத்திக்கொடுக்கவேண்டும். நமக்கு போதிய அனுபவம் ஏற்பட்டுள்ளது. டி.ஆர்.ஓ. முறை, சேலம் இரண்டாகப் பிரிக்கப்பட்டிருப்பது, கோவையில் ஜாயிண்ட் கலெக்டர் ஸிஸ்டம் இவற்

றினல் நாம் நல்ல அனுபவத்தைப் பெற்றிருக்கிறோம். ஆகவே எந்த அமைப்பு திறம்பட இயங்குகிறது என்று பார்த்து அதற்கேற்றவாறு செயல்பட வேண்டும். அதே மாதிரி கலெக்டர்கள் நியமிக்கும்போது, ஐ.ஏ.எஸ். படித்தவர்களை இரண்டு மூன்று வருட அனுபவம் பெற்றவர்களை கலெக்டர்களாகப் போடுவதால், அனுபவம் பற்ருத காரணத்தினல் பல தவறுகள் ஏற்படுகின்றன. ஆகவே குறைந்தபட்சம் பத்து ஆண்டுகள் அனுபவம் பெற்றபின்னர்தான் ஜில்லா கலெக்டர்களாக நியமிக்கவேண்டுமென்ற என் கருத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன். அனுபவப்பட்டவர்களைப் போடுவதால் பல தவறுகளை நீக்க வாய்ப்பு ஏற்படுகிறது. அவர்கள் படித்து வந்து பயிற்சி பெறுகிற காலத்தில்கூட நல்ல அனுபவப்பட்ட கலெக்டர்களின் கீழ் வேலை பார்த்த பின்னர் பத்து வருட அனுபவத்திற்குப் பிறகு அவர்களை கலெக்டர்களாகப் போடவேண்டும். கலெக்டர்கள் அரசாங்கத்தின் பிரதிநிதிகளாக இருந்து பணியாற்றுவதால், அவர்கள் திறம்பட செயல்பட்டால்தான் மாவட்டத்தின் கீழ் மட்டத்தில் உள்ளவர்களும் நல்ல முறையில் செயல்பட முடியும் என்று தெரிவித்துக்கொண்டு நேரமாகிவிட்டதால் என் கருத்துக்களை இத்துடன் முடித்துக்கொண்டு அமர்கிறேன். வணக்கம்.

*Thiru R. N. ARANGANATHAN: Mr. Chairman, Sir, the District Administration, in the present context, requires many reformatory measures because unless there is a reorientation of thinking, the institution of the Collector and the subordinate officers under the Collector do not serve the purpose in regard to the national development works which the Welfare State is now undertaking. Previously during the British regime they thought of Collectors purely within the meaning of a person who was to collect the taxes because during their rule, they did not envisage or implement any development works which we are now implementing. Now, the powers of the Collector has been day-by-day increasing and he is now empowered to deal with any aspect of the matter within the district. At least we have to curtail the judicial powers of the Collector which are vested with him now because in regard to the decisions that the Collector can take, he should be equipped with at least some knowledge of law. Nowadays even though at the time of training of I.A.S. officers, Collectors are given some knowledge of law, they are not capable of disposal of matters purely from the judicial point of view. For instance, the Collector is the Road Transport Authority in the district but in disposing of the matters relating to grant of permits or routes to a particular applicant, some sort of judicial mind has to be exercised in deciding his application and the procedure laid down has to be followed or the rules of evidence have to be observed. Simply he hears the views or the contention of the applicant and then he reserves his judgment and then pass orders in favour of some applicant. When the Appellate Tribunal is a person who is a senior judge, the person who is lower in rank next to him should be a person who is clothed with legal knowledge. So, the powers which are judicial or quasi-judicial should be taken from the Collector and they should be entrusted with a judicial authority like the District Munsif or the Subordinate Judge. Now, in view of the Public Works Minister's announcement regarding nationalisation of the transport that the routes which are above 75 miles would be taken over by the Government, from now onwards there will be a heavy inflow of applicants for the short routes. In such cases,

it is always better to leave the matter to the discretion of a judge, either a Subordinate Judge or a District Munsif. Similarly, R.D.O.s are empowered to deal with the applications under the Tenants Protection Act. Here also, the same sort of things exist because he does not follow any judicial procedure at all. He does enquire the petitioner and examines the evidence of the witness but he does not follow the judicial procedure. Here again that power should be entrusted to a judicial officer. Similarly, some Sub-Magistrates are asked to transfer some criminal calendar cases to the Tahsildars or Deputy Tahsildars who do not at all know, what is the Evidence Act. Sometimes they begin to read a particular section of the Evidence Act when a particular case is argued by the persons concerned. The Evidence Act is not so easy or simple enough to be understood by the concerned Third-Class Magistrate or Tahsildar. It is a wide legislation and it has to be interpreted in various ways by the Judges and not by Tahsildars. There is likely to be miscarriage of justice in entrusting these judicial powers to the Tahsildars.

Then, with regard to the dual system of the D.R.O. and the Collector, almost some powers are overlapping and the District Revenue Officer is asked to deal with certain matters with regard to the appointment of village munsifs and karnams. With regard to these appointments, the Collector can also hear objections but the decision is left to the D.R.O. and it has also to be reconsidered, whether such a dual system of D.R.O. and the Collector is necessary in the present context of things, is to be thought of by this Government.

When the Government have changed, everybody will expect that the attitude of the Officers who are functioning as limbs of the Government should also change. The change of the Government is felt only by the party people, whether they belong to the Congress or the D.M.K. or any other party. But the rural illiterate population are not able to feel the change because the attitude of the officers right from the beginning, from the karnam to the Collector has remained the same. Hon. Ministers are very anxious to implement their proposals in order to advance the economic development of the State but those measures which are proposed by the Hon. Ministers should be carried down to the lower ranks, to the village munsif, etc., but if they hesitate to implement such proposals of the Government, no useful purpose will be served. So, that aspect of the matter also should be taken into account when we are thinking of the reorganisation of the entire machinery of the district administration.

Then, with regard to the offices of the village karnam and the village munsif, these village officers are having the rural population in their clutches and they do so many mischiefs. It is always the prevalent view that every karnam or a village munsif is a corrupt man and there is no necessity for such an office and this should be changed. This can very easily be done. Now the house tax is

collected by the staff of the Panchayat Board. They do more efficient work than these village munsifs. Similarly these village officers can be integrated with that of the Panchayat Board. These persons can be merely clerks to collect land tax or the land revenue. Particularly when this Government has already abolished the land revenue on punja lands and is likely to abolish the land revenue on nanja lands, there may not be much work for the village munsifs. So their powers can be minimised and their offices can easily be incorporated and by this arrangements many of the evils which are prevailing in the society can be removed.

Delimitation of taluks and districts is another need of the day. Previously districts and taluks were formed on the basis of many factors. Now it is found that many districts and taluks are unwieldy. In this context I would request that at the time of the formation of the Kancheepuram district the Walaja taluk, which is unwieldy, can be split into two and a Sholinghur taluk can be formed. The existing Tiruttani taluk is unwieldy. There is an Independant Tahsildar in Palliput which is part of this taluk. Tiruttani taluk can be split into two and a part attached to the new district. This will simplify administration and ensure quick disposal of files.

With regard to assignment of lands, powers are vested in the Tahsildar, the Revenue Divisional Officer and the Collector. There is a provision that with regard to assignment of poromboke land the panchayat board concerned should pass a resolution. Suppose a poor farmer wants the assignment of a poromboke land. If the panchayat and its president are against him, the panchayat will not pass a resolution. Without such a resolution the officers will not consider any applications for assignment. This procedure really causes hardships to many landless people. Lakhs of applications for assignment are pending at the offices of the Tahsildars and Revenue Divisional Officers and there is no remedy at all. I would suggest that this insistance on the resolution of the panchayat can be dispensed with. If necessary the officer empowered to grant the assignment can issue a notice to the panchayat, hear its objections and then dispose of the application. Unless this impediment is removed, the difficulties of the landless poor cannot be solved. With these words I conclude my speech.

Dr. H. V. HANDE : Hon. Speaker, Sir, I wish to offer a few remarks in the discussion on the Demands relating to District Administration and Pension. I had the privilege of living in a number of districts because my father was a Government doctor and knowing how different districts give different degrees of satisfaction to the persons living there. Certain districts have earned a good name for speedy administration ; in the other districts there is the chronic legacy of very very slow administration. This has been the unfortunate state of affairs for the past nearly, I should say, twenty or twenty-five years. I want this Ministry to bestow maximum attention on District Administration for the simple reason that it lies completely in the hands of the Collectors to see that all the

wonderful ideas that emanate from the Fort St. George are properly put into practice. Ultimately it lies with the Colletors to see that the laws passed by the Legislature and the orders passed at the Secretariat level are properly administered even in the smallest village. It is in this aspect that I request the Chief Minister to bestow his maximum attention on the speed with which files move about and on the proper administration of justice to the poor people. Most of the villagers do not know even to read, write or understand properly and these villages have to pathetically depend upon the Tahsildars, Revenue Divisional Officers and Collectors. Unfortunately the general trend in the villages is that the small petty officer looks at these villagers with scant courtesy and even with disrespect. I want the Chief Minister to study this carefully to find out where the loopholes are and how they can be plugged and see how administration can be speeded up. If the Ministry wants to increase its reputation, the only way is to see that the district administration is carried on properly. Whatever may be the excellent reputation that this Ministry enjoyed in the past, its maintenance lies with the Collector and he can make or mar the future of the Ministry. Whenever Ministers go out to districts, I want each individual Minister to bestow as much attention as possible and find out where exactly the files get stuck up—is it at Collector's office, the Revenue Divisional Officer's table, the Tasildar's office or at the level of the Village officers. I am making only a general observation. I am not casting any aspersion against any particular officer. The general malady is that the laws are administered very very slowly and that is the most important crux or genesis of corruption. If at all we want to wipe out corruption, we should increase the speed with which laws are administered. Most of the corruption takes place at the small offices. We do not hear of corruption at the Secretariat. Here we have an efficient set of non-gazetted and gazetted officers. We find that the laws are administered so slowly in the villages that maximum corruption is rampant at the village level, taluk level and the revenue division level. I want these things to be noted.

I come to the next point. There is a school of thought that the districts are unwieldy. Let us compare the work of the District Collector a few years ago and at the present time. As one of my hon. Friends here said, the nature of his work has so completely changed that the Collector—the designation 'Collector' implies that he has to collect land revenue and remit it to Government—is gradually, ceasing to be a Collector of land revenue. This is an anomaly and also an anachronism. The Collector is vested with wide powers and he is called upon to attend to a number of welfare measures. So I request the Chief Minister to see whether anything can be done to strengthen the hands of the Collector. Take food for instance. Whenever any question regarding food arises, the Collector is contacted.

Whenever any question of law and order arises, it is the Collector that is contacted for information. The whole thing has to be re-examined and reoriented for speeding up the administration.

The question of bifurcating unwilldy districts was referred to. I heard a rumour that Chingleput district would be bifurcated. I do not know whether it is true and I think it is only a rumour. Chingleput district need not be bifurcated. There are quite a number of big districts like Coimbatore, Ramanathapuram and Madurai. When the Government think of bifurcating districts, let it be done on a State level, on a mass scale. Once for all we will bifurcate the districts and see that proper administration is ensured. If there is some pressure from some place, some petitions may come, we should not succumb to those pressures at that moment because we may bifurcate districts which need not be bifurcated or we may fail to bifurcate districts which need to be bifurcated.

Then I come to another point, viz., pension. I am extremely grateful to the Hon. Chief Minister for having been good enough to come forward to examine the question of necessity for increasing the pension of retired persons and the commitment to this Government on that account. Of course, he has very clearly stated that that should not be taken as an assurance. This is a serious question which involves thousands of pathetic people who are getting a pension of only Rs. 20 or Rs. 30 after their retirement. There are two aspects in regard to this matter. One aspect to be considered is their economic condition. They are in a very deplorable condition. This has to be taken into consideration and there is no question of difference of opinion on this point and all persons belonging to all parties are of the view that their economic condition should be improved. The second aspect is the financial commitment of the Government if they propose to increase the pension by 10 or 20 per cent. If the Government can appoint a committee, they can go into the matter and from their report the Government would be in a position to know the financial commitment. Then we can sit together and discuss whether the increased pension could be given only by way of taxation. Now, I come to the other side of the picture. If we increase the pension to these persons, it will give a great impetus and incentive to the persons who are already in service to work more as they will feel that thier parents who had worked for Government for more than 30 years are to be given increased pension. My father who had worked for more than 30 years got a pension of only Rs. 108 and he retired as a Civil Assistant Surgeon. Of course, he had nothing to worry because his sons are well-off. But the point is that if we increase the pension, it will give an impetus to the persons who are in the Government service.

(Thiru K. Vezhavendan in the Chair.)

Then, I come to the last point, viz., cut motions. Hon. Members give notice of cut motions. The Hon. Member, Thiru Kothandaraman, has given notice of a number of cut motions. With regard to

the matters contained in those cut motions, the Government can provide answers by getting them from the departments concerned. If answers are given, it would promote enlightened discussion on the various matters contained in the cut motions and we will be in a position to know what is exactly right or wrong. This is my only submission. Thank you, Sir.

***திரு. பெ. செளந்தரபாண்டியன்** : சட்டமன்றத் தலைவர் அவர்களே, பொது நிர்வாகம் பற்றிய மானியக் கோரிக்கையின் மீது எனக்கும் பேசுவதற்கு வாய்ப்பு அளித்தமைக்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். நாம் பல நாட்களாக பல மானியங்களை நிறைவேற்றியும், அதற்குரிய தொகையை வழங்கியும் வந்திருக்கிறோம். அத்தனை மானியத்தையும் ஏற்று செயல்படுத்துகின்ற முறையும், நல்ல முறையிலே பொது மக்களுக்குப் பயன்படுகிறதா என்பதைக் கட்டிக் காக்கவேண்டிய பொறுப்பும் மாவட்டத்தில் அமைந்துள்ள தலைமைச் செயலகத்தைச் சார்ந்ததும் அதன் கீழ் பணியாற்றும் ஏனைய துறையைச் சார்ந்துள்ளவர்களுடைய பொறுப்பும் கடமையுமாகும். இப்படிப்பட்ட நல்ல முறையில் பொது நிர்வாகம் நடந்தால், நம்முடைய ஆட்சி நல்ல முறையில் நடக்கிறது என்பதை நாட்டு மக்கள் நன்முக உணர்வார்கள். இந்த வழியில் எடுத்துக் கொண்டால், மாவட்டத்திலுள்ள தலைமைச் செயலகம் எந்த அளவுக்கு பணியாற்றுகிறது என்பதை இங்கு வீற்றிருக்கும் சட்டமன்ற உறுப்பினர்களும், பொது மக்களும் தெள்ளத் தெளிய அறிவார்கள். கடந்த 20 ஆண்டுகளில் ஏற்பட்ட சங்கடங்களினால் ஒரு சில செயல் முறைகள் தாமதமாக ஏற்படுகின்றன என்று பொது மக்கள் மெத்த வருத்தத்தோடு இருந்து வருகிறார்கள் என்பதை நாம் நன்கு அறிவோம். இது போன்ற நிலைமையை மாற்றத்தான் பொது மக்கள் நம்முடைய அறிஞர் அண்ணா அவர்களின் தலைமையில் புதிய அரசை உருவாக்கியிருக்கிறார்கள். ஆகவே மாவட்டங்களிலுள்ள தலைமைச் செயலகங்கள் சிறப்பாக நடந்தால்தான், பொது மக்கள் உண்மையிலேயே நல்ல முறையில் வாழ முடியும், இவர்களுக்கு அளிக்கப்படுகிற கடன்களும், ஏனைய உதவித் தொகையும் உரிய காலத்தில் கிடைப்பதற்கு வழி வகைகள் பிறக்கும். ஆகவே, மாவட்ட செயலகங்கள் துரிதமாக நடைபெறுவதற்கும், அங்கே பணியாற்றும் அதிகாரிகள் சிறப்பாக பணியாற்றுவதற்கும், பொது மக்களுக்கு கிடைக்க வேண்டிய உதவித் தொகைகள் உரிய காலத்தில் கிடைப்பதற்கும், நம்மால் இயன்ற வரையில் துரிதப்படுத்த ஆவன செய்யவேண்டும் என்று விரும்பி, வேண்டிக்கேட்டுக்கொள்கிறேன்.

என்னுடைய தொகுதியைப் பொறுத்தவரையில் இருக்கிற குறைகளை எடுத்துச் சொல்ல இரண்டு அலுவலகங்கள் இருக்கின்றன. ஒன்று மாவட்ட அளவிலே உள்ள வட்டார வளர்ச்சி மன்றம் ஆகும். வட்டார வளர்ச்சி மன்றத்தில் என்னுடைய தொகுதியில், 'நீர்ப்பாசன வசதியைப் பெருக்கவேண்டும் என்பதற்காக குடகனாறு திட்டத்தை நிறைவேற்ற வேண்டும் என்று ஒரு தீர்மானத்தைக் கொடுத்திருந்தேன். மாவட்ட ஆட்சித் தலைவர் பொறியாளரை அழைத்து இந்தத் திட்டம் நிறைவேற்றப் படாமல் காலம் கடப்பதற்கு என்ன காரணம் என்று கேட்டார். அதற்கு ஏற்கனவே ஆண்டவர்கள் இதை ஏன் நிறைவேற்றவில்லை என்று கேட்ட பொழுது, பொருள் நிறையச் செலவு ஆகிறது என்று கூறியதாகவும், அதனுடைய பொறுப்பு ஆட்சிக்கு இருக்கிறது என்றாலும், பொறியாளர்கள் அவர்கள் சொல்கின்ற காரணத்தை ஏற்றுக்கொண்டு இதுவரை காலம் கடத்திப் போட்டு விட்டார்கள் என்றும்' குறிப்பிட்டார்கள். அதற்கு நமது மாண்புமிகு நல்லசாமி அவர்கள் "பொறியாளர் நினைத்தால் நிறைவேற்றலாமா" என்று கேட்டபொழுது, "பரிசீலனை செய்தால் நிச்சயம் நிறைவேற்றலாம்" என்று குறிப்பிட்டார்கள். ஆகவே, ஆட்சிக்கும், அலுவலர்களுக்கும் பொது மக்களுக்கும் இடையே பணியாற்றுகின்ற பொறியாளர்களும், ஏனைய அலுவலர்களும் சிறந்த முறையில் பொது மக்களின் நலன் கருதி எந்த அளவுக்கு செயல் செய்கின்றார்களோ, அந்த அளவுக்குத்தான

நான் அளிக்கின்ற மானியமும், நடத்துகின்ற பொது நிர்வாகமும், சீர்படவும், செம்மைப்படவும், சிறப்பாக நடைபெறவும் வழி வகுக்கும் என்று நான் கூறிக்கொள்கிறேன்.

பொதுவாக என்னுடைய தொகுதியைப் பொறுத்தவரையில் இரண்டு போக்குவரத்து, ஏற்கெனவே விடப்பட்ட போக்குவரத்து நிறுத்தப்பட்டு விட்டது. இதைப்பற்றி மாவட்ட தலைமைச் செயலகத்தில் நான் எடுத்துரைத்தபோது, அதற்குச் சாலைகள் சரியில்லை என்ற காரணத்தைக் காட்டினார்கள். சாலைகளை செப்பனிடுவதற்கு, சாலைகளைத் திருத்தி அமைப்பதற்கு யார் பொறுப்பேற்றுக்கொள்ளவேண்டும் என்று நான் கேட்டதற்கு அதற்கும் நாங்கள்தான் பொறுப்பு என்றார்கள். ஆகவே பொறுப்பிலுள்ளவர்கள் தட்டிக் கழிக்கின்ற காரணத்தினால், பொது மக்களுடைய கோரிக்கைகள், பொது மக்களுக்கு ஏற்படவேண்டிய சில நன்மைகள் காலம் கடத்தப்பட்டு வருகிறது. ஆகவே, இதுபோன்ற நிலைமை நீடிக்காத வண்ணம் ஏனைய போக்குவரத்துத் துறையிலும், ஏனைய நீர்ப்பாசனத் துறையிலும், ஏனைய பொது மக்கள் நலன் கருதி பணியாற்றுகின்ற ஊராட்சித் துறையிலும், ஊராட்சி ஒன்றியப்புத் துறையிலும் பணியாற்றுகின்ற அலுவலர்கள் பொது மக்களுடைய கோரிக்கைகளை உடனுக்குடன் கவனித்து திறம்பட செயலாற்றவேண்டும் என்று அரசு ஆணை பிறப்பிக்கவேண்டும் என்று நான் விரும்பி வேண்டிக் கேட்டுக்கொள்கிறேன். அவர்களை நல்ல முறையில் கட்டுப்படுத்தி கண்காணிக்கவேண்டும்.

அடுத்து, ஒரு அலுவலகத்தில் பணியாற்றும் அலுவலர்கள் பொது மக்களிடமிருந்து கிடைக்கப் பெறுகிற கோரிக்கைகளைத்தக்க நேரத்தில், தக்க சமயத்தில் சிறந்த முறையில் பரிசிலித்து அவர்களுக்குப் பதில் அளிக்குமாறும் கோரிக்கையை ஏற்று, உண்டா, இல்லையா என்பதை அறிவிக்குமாறும் ஏற்பாடு செய்யவேண்டும். அப்படியில்லாமல் காலம் கடத்துகிற காரணத்தினால், பொது மக்கள் சட்டமன்ற உறுப்பினர்களை அணுகி, இது என்ன ஆயிற்று பாருங்கள் என்று கேட்க, சட்டமன்ற உறுப்பினர்கள் அலுவலகத்திற்குச் சென்று என்ன ஆனது என்று கேட்க, ஒரு சில அலுவலர்கள் சட்டமன்ற உறுப்பினர் என்று மதிப்பு அளித்து பதில் சொல்வதும், ஒரு சிலர் இவர்களுக்கு என் பதில் சொல்லவேண்டும் என்று தட்டிக் கழிப்பதும், ஒரு சில அலுவலர்கள் அமைச்சரையே போய்க் கேளுங்கள் என்று பதில் கூறுவதும், இது போன்ற நிலைமையை பல அலுவலகங்களில் நான் நேரில் கண்டிருக்கிறேன். இதுபற்றி பொது மக்கள் கூறுவதையும் காதால் கேட்டிருக்கிறேன். இதுபோன்ற பொறுப்பற்ற தன்மையில் அலுவலர்கள் நடக்காத வண்ணம் நாம் கண்காணிக்கவேண்டும் என்று தாழ்மையுடன் இந்த மாமன்றத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து ஏற்கெனவே இருந்த அரசு எதிர்க்கட்சியினர் நடத்துகின்ற கூட்டத்திற்கு அனுப்பிய சுருக்கெழுத்தாளர்களை நம்முடைய புதிய அரசு நிறுத்திவிட்டது. அந்தப் பெருந்தன்மையை நான் பாராட்டுகிறேன். இப்படிப்பட்ட அலுவலகங்களில் நிர்வாகம் சீராக நடைபெறுகின்றதா, லஞ்சம் இல்லாமல் இருக்கிறதா, பொதுமக்களுடைய கோரிக்கைகள் உடனுக்குடன் கவனிக்கப்படுகிறதா என்பதை அறியும் முகத்தான் அந்த சுருக்கெழுத்தாளர் நிருபர்களை கண்காணிப்புக் குழுக்களாக அமைத்து, மாவட்டம் தோறும், வட்டம் தோறும், ஊராட்சி ஒன்றிப்பு தோறும் அலுவலகங்களைப் பராமரிப்பதற்கும், கண்காணிப்பதற்கும், குறைபாடுகளையும் ஏற்படுகின்ற சிக்கல்களையும் அரசுக்கு அறிவிப்பதற்கும் நம்முடைய புதிய அரசு ஒரு திட்டத்தைத் தீட்டி, அதை ஏற்று நிறைவேற்ற ஆவன செய்ய வேண்டும் என்று வேண்டி விரும்பிக் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக நாம் அளிக்கின்ற மானியம் மாநில பொதுமக்களுடைய நன்மைக்காகத்தான். நாம் நடத்துகின்ற ஆட்சி பொது மக்களுடைய நன்மைக்காகத்தான். ஆகவே, பொது மக்கள் எந்த அளவுக்கு நன்மை அடைந்து, எந்த அளவுக்கு அமைதியாக வாழ்க்கை நடத்துகிறார்களோ, அந்த அளவுக்குத்தான் நாம் எல்லோரும் மனநிறைவு அடைய முடியும். ஆகவே, இயற்றுகின்ற சட்டமும், அளிக்கின்ற மானியமும் நல்ல முறையில்

செயல்படுகிறதா என்று கண்காணிக்க, கட்டிக்காக்க வேண்டிய பொறுப்பு நம்முடைய மாவட்ட, தலைமைச் செயலகத்தைச் சார்ந்திருந்தாலும், ஏனைய
மு.ப. 11-30 பொது அமைதியைக் கட்டிக் காக்கவேண்டிய பொறுப்பு அங்கே இருக்கிற போலீஸ் துறையையும் சாரும். ஆகவே, போலீஸ் துறை ஒரு சில சமயத்திலே நம்முடைய ஆட்சிப் பொறுப்பேற்ற பிறகு ஒரு சில ஊர்களில் பீதியைக் கிளப்பிவிட்டு, மக்களைத் தொந்தரவுக்குள்ளாக்கி வருகிறார்கள். அப்படிப்பட்ட அச்சப்பாடு ஏற்பட இடம் இருக்கிறது. நம்முடைய நிர்வாகம் நல்ல முறையிலே நடைபெற தலைமை அலுவலகமும் போலீஸ் நிர்வாகமும் சீர்படவேண்டும். அதேநேரத்திலே, நீதி மன்றங்களுக்குப் போகும் போது, ஏனைய பொதுமக்கள் என்னென்ன மனவேதனையோடு வருகிறார்கள் என்பதை வழக்கறிஞர் என்ற முறையில் கண்டும் கேட்டும் இருக்கிறேன். அதுபோன்ற துறையில் அரசு போதுமான அக்கறை செலுத்த வேண்டும் என்று வேண்டி விரும்பிக் கேட்டுக்கொண்டு, அதோடு, அலுவலகங்களில் பணியாற்றும் அலுவலர்கள் மூன்று ஆண்டுக்கு ஒரு முறை மாற்றப்படவேண்டும் என்கிற நிலையை கண்டிப்பாக அமுல்படுத்த வேண்டும் என்றும் கேட்டுக்கொண்டு, இந்த வாய்ப்பு அளித்தமைக்கு நன்றி கூறி முடிக்கிறேன்.

* **திரு. என். சங்கரய்யா :** தலைவர் அவர்களே, இந்த மானியங்களின் மீது பின்வரும் கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன். மாவட்ட அதிகாரிகளைக் கொண்டும், சட்டமன்ற உறுப்பினர்களைக்கொண்டும் மாவட்ட அபிவிருத்தி கவுன்சில் என்ற அமைப்புகள் செயல்பட்டு வருகின்றன. மதுரை மாவட்ட கவுன்சில் கூட்டம்—அங்கே இரண்டு கவுன்சில்கள் இருக்கின்றன. கிழக்கு, மேற்கு என்று—நடந்து, ஒவ்வொரு கூட்டமும் இரண்டு மணி நேரத்தில் 50 ஐடங்களுக்கு மேல் இருக்கின்ற நிகழ்ச்சிநிரலை முடித்தது. அங்கே பஞ்சாயத்துத் தலைவர்கள், எம். எல். ஏ. க்கள், இன்னும் அதிகாரிகள் இவர்களெல்லாம் வந்து கூட்டம் போட்டு, வீணாகிப் போகிறது என்பதுதான் என்னுடைய பலமான அபிப்பிராயம். திராவிட முன்னேற்ற கழகத்தின் அரசாங்கத் திட்டங்கள் மாவட்டங்களிலே நல்ல முறையிலே நடக்க, ஜில்லா கலெக்டர்களுக்கு, அபிவிருத்தி கவுன்சில் கூட்டங்களை நடத்தும்போது, இரண்டு மூன்று தினங்களுக்குப் போட்டு, நிகழ்ச்சிநிரலையும், ஐடங்களின்மீது விளக்க அறிக்கையையும் முன்னதாகவே உறுப்பினர்களுக்கு அனுப்பி, கவுன்சில் கூட்டத்தில் ஜனநாயக முறையில் விவாதம் நடத்தினால், அது மிக்க நலமாக இருக்கும். மாநில ரீதியில் சட்டமன்றத்திலே விவாதங்கள் நடத்துகிறோம். அதே மாதிரி, மாவட்ட ரீதியில் அரசாங்கம் ஆக்கபூர்வமாகச் செயல் படவேண்டிய காரணத்தால், மக்களுடைய பிரதிநிதிகள், சட்ட மன்ற உறுப்பினர்கள், பஞ்சாயத்துத் தலைவர்கள், மற்றவர்கள் கொடுக்கும் ஆலோசனைகள் பயன்படும் வகையில் அது அமையவேண்டும். அதோடு என்னுடைய ஆலோசனை ஒன்றும் இருக்கும். அமைச்சர்களும், யாராவது ஒருவர் பல்வேறு மாவட்ட அபிவிருத்தி கவுன்சில் கூட்டங்களில் கலந்து கொண்டால், முறைவைத்துச் செய்தால், அது அபிவிருத்தி வேலைகள் நல்ல முறையிலே செயல்பட உதவியாக இருக்கும். முதலிலே பிரிடிஷ்காரர்கள் ஏற்படுத்திய அமைப்பு ஜில்லா கலெக்டர்கள் என்பது. பெயரிலிருந்து தெரியும்: அவர்கள் வருமானத்தை வசூலிக்க ஏற்படுத்தப் பட்டவர்கள் என்று. ஆர்.டி.ஓ. களும் ரெவின்யூ இன்ஸ்பெக்டர்களும் வருமானத்தை வசூலிக்க என்று ஏற்படுத்தப்பட்ட அமைப்பு. அதேபோல, லா அண்ட் ஆர்டர், சட்டம் அமைதி இவற்றைப் பராமரிக்க போலீஸ். ஆனால் இன்றைக்கு நிலைமைகள் மாறியிருக்கின்றன. வருமானத்தைப் பெறுகிறவர்களும், அபிவிருத்திக்காகவும் ஆக்கபூர்வமான வேலைகளைச் செய்வதற்காகவும் இருப்பவர்கள் பிரிக்கப்பட்டு, அவர்களுடைய பெயர்கள் மாற்றப்பட வேண்டும். கலெக்டரை நிர்வாகியாகவும், மற்றவர்களையும் அந்த வகையிலும் பெயர்களை மாற்றியமைக்க வேண்டும். அதைப் பற்றி யோசனை செய்தால் நலமாக இருக்கும்.

தாலூகா ஆபீஸ்களைப் பற்றியும், கிராம கர்ணம், முன்சீப் இவர்களைப் பற்றியும் சொன்னார்கள். கர்ணங்களில் லட்சக்கணக்காகச் சம்பாதித்தவர்களும் இருக்கிறார்கள். இன்றைக்கு பள்ளி மாணவர்கள், ஒரு சர்டிபிகேட் வேண்டுமென்றால், கிராம அதிகாரிகள் பணம் வாங்குவது சாதாரணப் பழக்கமாக இருக்கிறது. இன்றைக்கு நான் அரசாங்கத்தைக் கேட்டுக் கொள்ளுகிறேன். ஏதாவது ஒரு புதிய முறையைக் கண்டுபிடித்து, சர்ட்டிபிகேட்டுகள் கிராம அதிகாரிகளிடமிருந்து வாங்கவேண்டிய நிர்பந்தம் இல்லாமல் செய்ய வேண்டும். சர்ட்டிபிகேட்டுக்கு ரெவின்யூ இன்ஸ்பெக்டர் மேலொப்பமும், ஹெட்க்வார்டர்ஸ் டெபுடி தாசில்தார் கையொப்பமும் வேண்டும் என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. ஆக மூன்று கையெழுத்துக்களை வாங்குவதற்குள், மாணவர்கள் அதிகமான நேரத்தையும், பொருளையும் செலவழிக்க வேண்டியிருக்கிறது. அதை மாற்றி ஒரு ஏற்பாடு செய்தால் நலமாக இருக்கும்.

இன்றைக்கு ஒரு செய்தியை பத்திரிகையில் படித்தேன். ஆறு இலாகாகளை மாநில மட்டத்தில், ரெவின்யூ போர்டின் ஒரு உறுப்பினர்மூலம் ஒன்றாக இணைக்க முடிவு செய்திருப்பதாகச் செய்தி பார்த்தேன். இது ஒரு நல்லமுடிவு. இன்னொரு முக்கியமான விஷயத்தையும் இந்த நேரத்தில் குறிப்பிட விரும்புகிறேன். மதுரை மாவட்ட அபிவிருத்தி கவுன்சில் கூட்டத்திலே கலெக்டர் கூட கூறினார்கள், எனக்கே தெரியாது கலெக்டருக்கே தெரியாது என்று. இந்த மாவட்டத்திலே இருக்கும் பல்வேறு எஞ்ஜினியரிங் பிரிவுகள் எத்தனை, அவை எங்கெங்கே இருக்கின்றன, என்னென்ன வேலைகளைச் செய்கின்றன என்று எனக்கே சரியாகத் தெரியாது என்று குறிப்பிட்டார்கள். அப்படியிருக்கும் போது அங்கத்தினர்களுக்கு எப்படிச் சொல்லமுடியும் என்றார்கள். ஆகவே, மாநில அரசாங்கத்தின் யோசனையில் எடுத்து, இந்த எஞ்ஜினியரிங் பிரிவுகளை ஒன்றுபடுத்தி ஒரே பிரிவின் மூலம் பணிகளைச் செய்ய ஏற்பாடு செய்யப்படுவது அவசியம் என்பதை இந்த நேரத்திலே குறிப்பிட விரும்புகிறேன்.

இன்றைக்கு ஜில்லா நிர்வாகம் என்கிற இந்த மானியத்தின் கீழ் பல்வேறு அலுவல்களும் வருகிறது. கிராம உத்யோகஸ்தர்கள், கிராம சேவக்குகள், அவர்களுடைய பயிற்சி எல்லாம் வருகிறது. அதோடு பூமி தானம், கிராம தானம், நிலம் இல்லாதவர்களுக்கு நிலம் கொடுப்பது, இன்னும் பர்மா அகதிகளுக்கு நிலம் கொடுத்தல் இவைகளெல்லாம் இந்த நிர்வாகத்தின் கீழ் வருகிறது. அப்படி இருக்கும் போது, தாலூகா ஆபீஸ்களில் காலதாமதம் அதிகமாக இருக்கிறது. ஆகவே, இன்றைக்கு தாசில்தார்களையும், ஆர். டி. ஓ. களையும் அபிவிருத்தி என்ற தலைப்பில் நிர்வாகிகள் என்று சொல்லி, ரெவின்யூ வேலைகளைச் செய்பவர்களை வேறு பெயரிலும் மாற்றி, ஒரு ஆக்கபூர்வமான ஏற்பாடு தேவை என்கிற யோசனையைத் தெரிவிக்கிறேன். அதோடு, மாவட்ட கலெக்டர் அலுவலகங்களில் பலவெறு இலாகாக்களும், எவை எவை என்னென்ன வேலையைச் செய்கிறது என்று கரும்பலகைகளில் எழுதி, அவற்றை ஆங்காங்கே வைத்து அங்கே போகும் பொது மக்கள் என்ன காரியத்திற்கு யாரைப் பார்க்க வேண்டும் என்று யாராவது அவர்களுக்கு அறிவிப்பார்கள் என்றால் அது மிக்க உதவிகரமாக இருக்கும்.

அதுமட்டுமல்லாமல், தாலூகா ஆபீஸ்களுக்கு மனுக்கள் கொடுத்தால் நீண்டகாலம் பதில் வருவதேயில்லை. மாவட்ட கலெக்டர் அலுவலகத்திற்கும், மற்றவர்களுக்கும் அனுப்பப்படும் மனுக்கள் அவ்வப்பொழுது "அக்னாலெட்ஜ்" செய்யப்பட்டு, "மனு கிடைத்தது". "பரிசீலனையில் இருக்கிறது" என்பது போன்ற முன் பதிலை கொடுக்கச் செய்யவேண்டும். பரிசீலனைக்குப் பிறகு பைசல் செய்யப்பட்டது என்கிற பதிலும் கொடுக்க வேண்டும்—கோரிக்கையை ஏற்றுக்கொள்ளட்டும், நிராகரிக்கட்டும்—ஒரு திட்டவட்டமான பதிலை மனுதாரருக்கு அனுப்பவேண்டும் என்று ஜில்லா கலெக்டர்களுக்கும், மற்றவர்களுக்கும் மாநில அரசாங்கம் உத்தரவு அளிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன். அவ்வாறு செய்வதால், மனு யாருடைய கவனத்தில் இருக்கிறது, அதற்கு "இன்டிவிஜுவல் ரெஸ்பான்ஸிபிலிடி"யும், தனிப்பட்ட பொறுப்பும் நிர்ணயிக்கப்படும்—யாருக்கு அனுப்பப்படுகிறது என்பதை அறிவிப்பதோடு, அவற்றை பைசல் செய்தற்கும் ஒரு காலவரம்பு வைக்க வேண்டும். நாட்டில் இருக்கும் ஏழை மக்களுக்கு நியாயம், அனுகூலம் கிடைக்கவேண்டும் என்று செய்யவேண்டும்.

மானால் அவர்கள் மீது எப்படிப்பட்ட நடவடிக்கைகளை எடுக்க வேண்டும்? என்பதுபோன்ற அதிகாரங்கள் மாவட்ட வளர்ச்சி மன்றங்களுக்கு இல்லை, இந்த ஒரு அதிகாரத்தை மாவட்ட வளர்ச்சி மன்றங்களுக்கு அளிக்க அரசு மிகத் தீவிரமாக ஆலோசிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகின்றேன்.

நம்முடைய தமிழகமெங்கும் "ஜமாபந்தி" என்னும் ஒரு நிகழ்ச்சி நடைபெறுகிறது. எப்பொழுது நிலவரியை நீக்கிவிட்டோமோ அப்பொழுதே ஜமாபந்தியை நீக்க வேண்டும். ஜமாபந்தி நிலவரியோடு இணைக்கப்படவில்லை என்றாலும் அந்த நிகழ்ச்சி இன்றைய தினம் பெரிய அளவிலே இருக்கிறதே தவிர அதற்கான முக்கியத்துவம் இல்லை. இந்த நிகழ்ச்சியில் கொடுக்கப்படும் குறைகளுக்குப் பரிகாரம் எந்த அளவில் தரப்படுகிறது என்று பார்த்தால் இது வெறும் கேலிக்கூத்தாக இருக்கிறது. இப்படிப்பட்ட நிலையில் இந்த நிகழ்ச்சி அவசியமா என்பதை அரசு ஆலோசித்து இதனை நீக்க ஒரு முடிவு எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகின்றேன்.

அதே நேரத்தில் பொதுமக்களின் குறைகள் தாலூகா அலுவலகங்கள் மூலமாகக் கொடுக்கப்படுகின்ற நேரத்தில், பொதுமக்கள் நேரடியாக தங்களுடைய மனுக்கள் என்ன ஆயிற்று? எந்த நிலையிலே இருக்கின்றது என்பதை அறிந்துகொள்ள மாதக்கணக்கு, வருஷக்கணக்கு ஆகியும் முடிவுகளைத் தெரிந்துகொள்ளாமல் இருக்கின்றனர். அந்த நிலையில், ஒவ்வொரு தாலூக்கா அலுவலகத்திலும், பப்ளிக் ரிலேஷன் ஆபீசர் உத்தியோகம் போன்ற அளவில் இல்லையென்றாலும், அந்த அளவில் பொதுமக்களோடு தொடர்பு கொண்டு அந்த அதிகாரி, ஒவ்வொரு நாளும் எத்தனை மனுக்கள் வந்திருக்கின்றன? அதன்மீது என்ன நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கின்றன என்பதை பார்த்து, அதனைப் பொதுமக்களுக்கு, மனுதாரர்களுக்கு தெரியப்படுத்தினால், பொதுமக்கள் தங்களுடைய நிலையைத் தெரிந்துகொள்ள வாய்ப்பாக இருக்கும் என்று தெரிவித்துக் கொள்ளுகின்றேன்.

அடுத்தபடியாக, பஞ்சாயத்துத் தலைவர்கள் பல நேரங்களில் அவர்களுடைய பதவியிலிருந்து, நம்பிக்கையில்லாத் தீர்மானத்தின் மூலமோ அல்லது மற்ற காரணங்களுக்காகவோ நீக்கப்படும் நேரத்தில் அவர்களுக்குக் கீழே இருக்கும் உதவி பஞ்சாயத்துத் தலைவர் பொறுப்பினை எடுத்துக் கொள்வதற்கான "நோட்டிபிகேஷன்" மிக மிகக் காலதாமதமாக வருகிறது. அதற்கான மறுதேர்தல் நடத்தவும் பெரிய காலதாமதம் ஏற்படுகிறது. இப்படிப்பட்ட நிலைமையில் பஞ்சாயத்து சரிவர இயங்க முடியாத ஒரு நிலைமை ஏற்படுகிறது. எனவே இந்த நிலைமைகளை நீக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

பொதுக் கூட்டங்களுக்குச் சுருக்கெழுத்தாளர்கள் இருப்பது நல்லது. அப்படியிருந்தால் அங்கு பேசும் பேச்சாளர்கள் தங்களைக் கட்டுப்படுத்திக் கொண்டு பேசமுடியும் என்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

***திரு. ஏ. ஆர். சுப்பையா முதலியார்:** தலைவரவர்களே, மாவட்ட நிர்வாக மானியக்கோரிக்கையின் மீது சில யோசனைகள் சொல்ல ஆசைப் படுகிறேன். இன்று சிக்கனம் நமக்குத் தேவையாயிருக்கிறது. சாதாரணமாக ஒரு ஜில்லாவை எடுத்துக்கொண்டால் இரண்டு வகையான தாசில்தார்கள் இருக்கிறார்கள். (1) தாசில்தார் ஃபார் ரெவின்யூ வில்லேஜஸ், (2) தாசில்தார் ஃபார் டேக்கன் ஓவர் எஸ்டேட் வில்லேஜஸ் என்று இருவகையாக இருக்கிறார்கள். ஒரே பகுதியில் ஒரு கிராமம் ரெவின்யூ தாசில்தாரிடமும், அடுத்து இருக்கக்கூடிய கிராமம் டேக்கன் ஓவர்-எஸ்டேட் வில்லேஜஸ் தாசில்தாரிடமும் இருக்கிறது. இதை யோசனை செய்ய வேண்டிய அவசியம் என்னவென்றால் இரண்டு விதமான அதிகாரிகள், இரண்டு விதமான பொறுப்புகள் இருக்கும்பொழுது நிர்வாகச் செலவு அதிகம் ஏற்படுகிறது. ஒரு தாசில்தார் ஒரு இடத்திற்கு வந்துவிட்டு அடுத்த கிராமம் பற்றி இன்னொரு தாசில்தாருக்கு எழுதியனுப்ப வேண்டிய நிலைமை இருக்கிறது.

ஆகையால், இதை இணைப்பதன் மூலமாக நமக்கு ஒரு சிக்கனம் ஏற்படலாம். ஜில்லா அடிப்படையிலே கூட இணைப்பு தேவை. தாலுக்கா லெவலிலே கூட இணைப்பு தேவை. அதற்கு உதாரணம் சொல்ல ஆசைப்படுகிறேன். தென்காசி தாலுக்கா 1,030 சதுர கிலோமீட்டர் விஸ்தீரணம் உள்ள இடம். ஜனத்தொகை 3 லட்சம் 35 ஆயிரம். செங்கோட்டை தாலுக்காவை எடுத்துக்கொண்டால், அது 194 சதுர கிலோமீட்டர் விஸ்தீரணம் உள்ளது. ஜனத்தொகை 66,000. தென்காசி தாலுக்காவில் ஐந்தில் ஒரு பகுதி உள்ள செங்கோட்டை தாலுக்காவிற்கு ஒரு தாசில்தார், ஒரு டெபுடி தாசில்தார் வேலை செய்துகொண்டிருக்கிறார்கள். தென்காசி போன்ற பெரிய இடத்திற்கும் ஒரு தாசில்தார், ஒரு டெபுடி தாசில்தார் வேலை செய்துகொண்டிருக்கிறார்கள். இந்த இரண்டு தாலுக்காக்களையும் இணைப்பதன் மூலமாக சிக்கனத்தை நாம் கடைப்பிடிக்கலாம். அதன் மூலமாக சிக்கனம் மட்டுமல்ல, நிர்வாகத் திறமை ஏற்படவும் வழி இருக்கிறது. குறைந்த சதுர மைல் உள்ள தாசில்தாருக்கு வேலை இல்லை. நல்ல வழியில் அதிகாரத்தைச் செலவிடுவதற்கு நேரம் குறைவாக இருக்கிறது என்று கூடுதலாகத் தாங்கள் வேலை பார்க்க வேண்டும் என்பதற்காக வேண்டாத அதிகாரத்தை கூட சில தாசில்தார்கள் உபயோகப்படுத்தக் கூடிய நிலைமை சில சந்தர்ப்பங்களில் இருக்கிறது. விஸ்தீரண அடிப்படையிலும், ஜனத்தொகை அடிப்படையிலும் மாறுதல் செய்யலாம் என்று நினைக்கிறேன்.

எனக்கு முன் பேசிய நண்பர் திரு. ரங்கநாதன் அவர்கள் சொன்னபடி, கலெக்டர், தாசில்தார், ரெவின்யூ டிவிஷனல் ஆபீசர், இவர்களுக்கெல்லாம் சில சட்ட சிக்கலான அதிகாரங்கள் இருப்பதால், அதில் அனுபவம் உள்ளவர்களாகப் பார்த்து நியமிக்க வேண்டும். பதவிகளில் உள்ளவர்களுக்குள்ள அனுபவத்திற்கும், சட்டக் கல்விக்கும், சம்பந்தம் இல்லாமல் இருக்கிறது என்று சொல்வதை நான் வரவேற்கிறேன். ஜுடிஷியல் சம்பந்தமான வேலைகளையும் அவர்கள் பார்க்க வேண்டியிருப்பதால், அதிகமாக ஜுடிஷியல் லைனில் இருக்கக்கூடியவர்களைச் சேர்க்க வேண்டும் என்று சொல்லுவதை நான் வரவேற்கிறேன்.

ஜில்லா கலெக்டருக்கு பல அதிகாரங்கள் கொடுக்கப்படுகின்றன. அதாவது ஒரு மராமத்து செய்ய வேண்டுமென்றால், அதற்கு கன்கரன்ஸ் ஆப் தி கலெக்டர் தேவை என்று இருக்கிறது. ரெவின்யூ சம்பந்தமாகவும், பூமி சம்பந்தமாக ஏதாவது பின்னால் விவகாரம் வரும் என்பதற்காக கலெக்டருடைய கன்கரன்ஸ் தேவைதான். ஆனால், ஒரு வருஷம் ஆனாலும் கன்கரன்ஸ் கொடுக்கப்படா விட்டால், அந்த மராமத்து செய்யப்படாமலேயே நின்று போகிறது. முக்கியமாக, மராமத்து என்னும்போது, அது டெக்னிகல் அதிகாரிகளுடைய பொறுப்பு ஆகிறது. மராமத்து செய்ய வேண்டியது அவசியம். நீர்ப்பாசன வசதி அவசியம். இதெல்லாம் அவசியம் என்னும்போது, எக்ஸிக்யூடிவ் இன்ஜினீருக்குத்தான் அந்தப் பொறுப்பு இருக்கிறது. ஆனால், மராமத்து வேலையைக் கலெக்டருடைய கன்கரன்ஸ் கிடைத்த பிறபாடுதான் செய்ய முடிகிறது. எல்லாவிதமான அதிகாரங்களையும் கலெக்டரிடம் கொடுக்கும்போது, அவர் என்ன செய்கிறார் என்றால், அவர் படிப்படியாக கீழே அனுப்பி அது கிராமத்திலுள்ள கர்ணம் வரை போய், ஒவ்வொருவராகப் பரிசீலனை செய்து கடைசியில் கலெக்டருக்குத் திரும்பவும் வந்து, அவர் கன்கரன்ஸ் கொடுக்கிறார்கள். ஒரு எக்ஸிக்யூடிவ் இன்ஜினீர் டிஸ்டிரிக்ட் லெவலில் பொறுப்பு ஏற்றுக்கொண்டு இருக்கும்போது, மறுபடியும் ஒரு செயின் ஆப் ஆக்ஷன் நடக்கும்போது காலதாமதம் ஏற்படுகிறது. அதனால் மராமத்தும் தடைபடுகிறது. ஆகையால், அந்தந்த இலாக்காவிற்கு அந்த அதிகாரத்தைக் கொடுத்துவிட்டால், இம்மாதிரி கஷ்டங்களெல்லாம் வராது. நிர்வாகச் சிக்கலும் ஏற்படாது. விவகாரம் குறையவும் வழி ஏற்படும்.

டிஸ்ட்ரிக்ட் ரெவினியூ ஆபீசர் என்று ஒரு அதிகாரி போடப்பட்டிருக்கிறார். டிஸ்ட்ரிக்ட் ரெவினியூ அதிகாரி என்று அந்தக் காலத்தில் போடுவதற்குக் காரணம், டெவலப்மெண்ட் ஒர்க் கலெக்டருக்கு அதிகமாக இருக்

இதே சமயத்தில் இன்னொன்றையும் குறிப்பிட வேண்டும். ஆசிரியர்களை மாற்றுவது குறித்து ஒரு கமிட்டி போட்டதை மக்கள் பாராட்டினார்கள். இப்பொழுது நிர்வாக அமைப்பில் பல சிக்கல்கள் இருக்கின்றன. ப்ளாக் டெவலப்மெண்ட் ஆபீசர், தாசில்தார், ரெவின்யூ இன்ஸ்பெக்டர், இப்படிப்பட்ட அமைப்பும், அதோடு, முனிசிபல் சர்வீசும் இருக்கிறது. முனிசிபல் சர்வீசைக் கூட மாநில சர்வீசாக ஆக்க வேண்டும் என்பதை யோசித்து, அதற்காக ஒரு "அட்மினிஸ்ட்ரேடிவ் கமிஷன்" ஒன்றைப் போட்டு, மாநிலத்தில் சிவில் நிர்வாகம் முறைப் படுத்த ஏற்பாடு செய்யவேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன். அல்லது அந்த விஷயத்தை அமைச்சர் குழுவே ஆழ்ந்து சிந்தித்து விரைவிலே ஒரு முறையை ஏற்படுத்தினால், நலமாக இருக்கும்.

அது மட்டுமல்ல, இன்றைக்கு இந்த ஜில்லா நிர்வாகம் நில ஆர்ஜிதம் செய்கிறது. அந்தப் பொறுப்பும் வழங்கப்பட்டிருக்கிறது. நஞ்சை நிலங்களை ஆர்ஜிதம் செய்கிறார்கள். புஞ்சை நிலங்களைச் செய்வதில்லை. கிராமத் தகராறுகள் காரணமாக, குறிப்பிட்ட சில நபர்களுடைய நிலங்களை ஆர்ஜிதம் செய்ய வேண்டும் என்று வேண்டியவர்கள் தூண்டுதல் பேரில், செயல் படுகிறார்கள். கூடுமான வரையில் சாகுபடிக்கு லாயக்கற்ற நிலங்களை ஆர்ஜிதம் செய்ய உத்தரவு போட்டால் உதவிகரமாக இருக்கும்.

பர்மா அகதிகளைப் பற்றி ஏராளமாகச் சொல்லப் பட்டிருக்கிறது. மாவட்ட நிர்வாகம் என்ற தலைப்பின் கீழ், டூரிஸ்ட் பங்களாக்கள், மில்க் பவுடர் சப்ளை செய்வது, ஜாகை ஏற்பாடு செய்வது இன்னும் பல்வேறு பிரிவுகளும், உப பிரிவுகளும் இருக்கின்றன.

இறுதியாக நான் இந்த மன்றத்திலே குறிப்பிட விரும்புவது, இன்றைக்கு ஜில்லா போலீஸ் அதிகாரிகளும் மாவட்ட அபிவிருத்தி கவுன்சில் கூட்டங்களுக்கு வரக்கூடிய முறையில் உத்தரவுகள் போடவேண்டும். சட்டமும் அமைதியும் தனியாக இயங்காமல், அவர்களும் அபிவிருத்தி கவுன்சில் கூட்டங்களில் கலந்துகொண்டால், வெளித் துறைகளில்—விவசாயம், தொழில் போன்ற துறைகளில்—ஆக்கபூர்வமான காரியங்கள் என்னென்ன செய்யப்படுகின்றன என்பதையெல்லாம் அறிந்துகொண்டு இந்த அரசின் கண்ணோட்டம் என்ன என்பதும் புரியும். ஆகவே, மாவட்ட அபிவிருத்தி கவுன்சிலில் ஜனநாயகக் காற்று இன்னும் அதிகமாக அடித்தால்தான்—கேள்விகள் கேட்கப்பட்டு, விவாதங்கள் நடத்தப்பட்டு செயல்பட்டால்தான்—அதன் காரியங்கள் சரியாக நடக்க நல்ல முறையில் வசதிகள் ஏற்படும். மாவட்டச் சீரமைப்புக்கும் அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொண்டு முடிக்கிறேன்.

* **திரு. க. இராமமூர்த்தி**: மாண்புமிகு தலைவரவர்களே, மாவட்ட நிர்வாகம் பற்றிய வெட்டுப் பிரேரணையின் மீது என்னுடைய கருத்துக்களைத் தெரிவித்துக்கொள்ளுகிறேன். மாவட்ட நிர்வாகத்தைப் பொறுத்தவரையில் இன்றையதினம் மிக முக்கிய, ஆனால் மிகச்சிறிய நிலையில் இருப்பவர்கள் கிராம உத்தியோகஸ்தர்கள். அவர்களைப் பொறுத்தவரையில் இன்று அவர்களுக்கு நிலவரி வசூல், மற்றும் அதன் தொடர்பான மற்ற மற்ற வேலைகள் தரப்படுகின்றன. பஞ்சாயத்துக்களின் வரி வசூல்கள் செய்யும் பொறுப்பையும் ஏற்றுக்கொள்ள வேண்டும். நிலங்களிலே வரி வசூல் செய்வதில் பஞ்சாயத்துக்களிலும், அங்கிருக்கும் நகர் மன்றங்களிலும் இரண்டு மூன்று ஆண்டுகள் சேர்ந்துவிட்ட பாக்கிகளைக் கூட அந்த கிராம உத்தியோகஸ்தர்களே வசூல் செய்ய வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்படுகிறது. இம்மாதிரி நகராட்சி மன்றங்களும், பஞ்சாயத்துக்களும் பல ஆண்டுகளாக வசூல் செய்யாமல் நிறுத்தி விட்ட பாக்கிகளைக் கிராம உத்தியோகஸ்தர்கள் குறிப்பிட்ட காலத்தில் வசூல் செய்ய வேண்டிய அவசியம் ஏற்படுகிறது. அதற்குக் கட்டளை பிறப்பிக்கப்படுகிறது. அந்த விதிகள் சம்பளம் வாங்கும் நிலைமையைக் கூட பாதிக்கும் நிலையில் இருக்கிறது. இதைப்பற்றி இந்தச் சர்க்கார் ஆலோசித்து தகுந்த நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

கிராம உத்தியோகஸ்தர்களின் வேலையைப் பொறுத்தவரையில் நிலவரி வசூல் செய்ய வேண்டிய பெரிய வேலை நீங்கிவிட்டது என்றாலும்கூட இனி எப்படி அவர்களை மாற்ற வேண்டுமென்றால், ஒன்று அவர்களை முழு நேர ஊழியர்களாகப் பணியாற்றச் செய்யப்படுமா அல்லது பகுதி நேர ஊழியர்களாக இருக்க வேண்டுமா என்பதைப் பற்றி மிகத் திட்டவட்டமான அறிவிப்பை அவர்களுக்குச் செய்தார்களானால் அது மிகவும் நன்மை பயக்கும். ஒன்று முழு நேர ஊழியர்களாக ஆக்கப்பட வேண்டும் அல்லது இன்று இருப்பது போல் கௌரவ ஊழியர்களாக நடத்தப்பட வேண்டுமென்றால் அதற்குரிய அந்தஸ்து, மரியாதை அளிக்கப்பட வேண்டும்.

ஜில்லா நிர்வாகத்தைப் பொறுத்தவரையில் ரெவின்யூ துறை மிகமிக முக்கியத்துவம் வாய்ந்த நிலையில் இருக்கிறது. மிகப் பெரிய அளவில் அலுவலர்கள், அரசாங்க உத்தியோகஸ்தர்கள் கொண்ட பகுதி. அந்தப் பகுதியைப் பொறுத்த வரையில் வேலைக் குறைப்பு செய்யப்படும்பொழுது இந்தத் துறையில் மிகப்பெரிய உயர்தர அதிகாரி ஒருவர் வேலையிலிருந்து ஒரு படி குறைக்கப்படுகிறார் என்று சொன்னால் அதன் விளைவாக அந்தத் துறையிலுள்ள கடைநிலை ஊழியர், கடைசி ஊழியர் வெளியே செல்ல வேண்டிய நிலைமை ஏற்படுகிறது. எனவே, முக்கியத்துவம் வாய்ந்த அந்தத் துறையிலே அரசாங்கம் சிக்கன நடவடிக்கைகளைக் கையாளும் காலத்தில் மிகக் கவனத்தோடு இருக்க வேண்டும் என்ற இந்த ஒரு கருத்தைச் சொல்லிக்கொள்ளுகிறேன். அந்தத் துறையில் அரசாங்க ஊழியர்கள் பல பகுதிகளில், பல நிலைகளில் வேலை உயர்விற்கான தேர்வுகளை எழுதியிருக்கிறார்கள். அதில் சிலர் வெற்றிபெற்றும் இருக்கிறார்கள். அப்படிப்பட்டவர்கள், உயர்பதவிக்குப் போகவேண்டி தேர்வுகளை எழுதி வெற்றிபெற்று உயர் பதவியை எதிர்பார்க்கும் நேரத்தில், இருக்கும் பதவியே குறைகிறது என்றால் அவர்கள் மேற்கொண்டு உற்சாகத்தோடு வேலை செய்யும் நிலை குறைந்து அவர்களுக்கு வாழ்க்கையிலே ஏமாற்றம் ஏற்படும். இந்த நிலையை அரசாங்கம் கவனிக்க அணுக வேண்டும். அப்படிப்பட்ட நிலை ஏற்படாது என்று உத்தரவாதம் அளிக்க வேண்டும்.

பஞ்சாயத்துக்கள், பஞ்சாயத்து மன்றங்கள் கடன்களை விவசாயிகளுக்கும், மற்றவர்களுக்கும் கொடுப்பது பற்றி ஒரு வார்த்தை. பெரும்பாலும், பஞ்சாயத்துக்கள் அல்லது பஞ்சாயத்து ஒன்றிப்புகள் முடிவு செய்து அவைகளின் மூலமாக இந்தக் கடன்கள் கொடுக்கப்படுகிறது. ஆனால் இந்தக் கடன்களை வசூல் செய்யவேண்டியது ஒரு துறை. கடன்களை வசூல்செய்ய வேண்டிய பொறுப்பு தாலூகா தாசில்தார்கள், மணியக்காரர்களுக்கு ஏற்படுகிறது. ஒருவர் கடன் கொடுக்க இன்னொருவர் வசூல் செய்ய வேண்டிய பொறுப்பு ஏற்பட்டு வருகிறது. அதனாலே கடன் கொடுப்பவர் எப்படி வேண்டுமானாலும் கொடுத்துவிடலாம். அதற்கான கவனம் செலுத்தாமலே கடனைக் கொடுத்துவிடலாம் என்ற நிலையும், கடன் வசூலிப்பவர்கள், கடன் கொடுக்கும் பொறுப்புகள் எல்லாம் ஒருவரிடத்திலே, ஆனால் வசூல் செய்ய வேண்டிய நிலை மட்டும் நமக்கு **என்** என்று எண்ணக்கூடிய நிலையும் ஏற்படுகிறது. மேலும், யாருக்குக் கொடுக்க வேண்டும், யாருக்குக் கொடுத்தால் நல்லபடியாக இருக்கும் என்று ஆராயாத நிலையில் கடன் கொடுப்பதும், அதை ஏன் நாம் பொறுப்பேற்று வசூல் செய்ய வேண்டுமென்ற எண்ணம் வசூல் செய்பவர்களுக்கு ஏற்படக் கூடிய நிலை ஏற்படுகிறது. இதைப் பற்றி இந்த அரசவை சிந்திக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, இந்த மாவட்ட வளர்ச்சி மன்றங்களைப் பொறுத்தவரையில் பெரும்பாலும், "அட்வைசரிபாடி" ஆலோசனை சொல்லும் மன்றங்களாக விளங்குகின்றன. அந்த ஆலோசனைகள் எந்த அளவிற்கு மதிக்கப்படுகிறது என்று பார்க்க வேண்டும். அவர்களால் செய்யப்படும் முடிவுகள் எந்த அளவில் நிறைவேற்றப்பட்டிருக்கிறது. அவைகள் நிறைவேற்றப்படாமல் இருக்குமானால் அதற்கான காரணங்கள் என்ன? உடனடியாக நிறைவேற்றுவதற்கு என்ன வழிவகைகள் இருக்கின்றன? நிறைவேற்றப்படாமல் இருப்பதற்கு வேண்டிய காரணங்கள் குறிப்பிட்ட அதிகாரிகள் மீது இருக்கு.

கிறது, ரெவினியூ ஒர்க்கைப் பார்க்க ஜில்லா லெவலில் ஒரு அதிகாரி தேவை, கலெக்டருக்குள்ள அதிகாரம் அவருக்குக் கொடுக்கவேண்டும் என்றுதான் டிஸ்ட்ரிக்ட் ரெவினியூ அதிகாரி நியமனம் செய்யப்பட்டதாகச் சட்டசபைக் குறிப்பில் சொல்லப்பட்டது. ஆனால், இன்று நடைமுறையைப் பார்த்தால், டிஸ்ட்ரிக்ட் ரெவினியூ ஆபீசர் என்பவர் ஸூபர் ஹெடக்ளார்க் மாதிரிதான் இருந்து கொண்டிருக்கிறார். எந்தப் பேப்பரானாலும், கலெக்டர் கையெழுத்து ஆனால்தான் பேப்பர் வெளியே வரக்கூடிய நிலைமை இருந்து கொண்டிருக்கிறது. இப்பொழுது டெவலப்மெண்ட் ஒர்க் குறைந்து விட்டது. நமக்கு வரக்கூடிய கடன் தொகை, திட்டத் தொகை எல்லாம் குறைவாக இருப்பதால்தான் டெவலப்மெண்ட் ஒர்க்குக்குத் தனிக் கலெக்டர் தேவையில்லை. டிஸ்ட்ரிக்ட் ரெவினியூ ஆபீசர் போஸ்ட்டைத் தற்காலிகமாக நிறுத்தலாம் என்று கூட இப்பொழுதிருக்கும் சர்க்கார் எண்ணிக் கொண்டிருப்பதை உறுதி செய்தால் அதன் மூலமும் நமக்குச் சிக்கனம் ஏற்படும்.

கலெக்டரைப் பற்றிச் சொல்லும்போது, இன்று திரு. நல்லசிவம் அவர்கள் சொல்லுவதை நான் ஆதரிக்கிறேன். குறைந்தது பத்து வருஷ அனுபவமாவது உள்ளவரைக் கலெக்டராகப் போடுவது நலம். அதிக அனுபவம் ஏற்படுவதன் மூலமாகத்தான் ஜில்லா நிர்வாகத்தைச் செவ்வனே செய்வதற்கு வழி ஏற்படும். குறைந்த அனுபவம் உள்ளவர்களையும், குறைந்த வயதுள்ளவர்களையும் ஜில்லாக் கலெக்டாராகப் போடும்போது, அனுபவக் குறைவினால் கலெக்டருடைய தீர்ப்பில் அடிக்கடி மாறுதல் ஏற்படக்கூடிய நிலைமை இருக்கிறது. அதிக வயது உள்ளவர்கள் அல்லது அதிக அனுபவம் உள்ளவர்களை ; குறைந்தது பத்து வருஷ அனுபவத்திற்கு மேற்பட்டவர்களைத்தான் ஜில்லா கலெக்டராகப் போடுவது நலம் என்று நான் நினைக்கிறேன்.

விலேஜ் முன்சிப் போஸ்ட்டை எடுத்து விடலாம். பரம்பரை பாத்தியம் போய்விட்டது. ஆகவே, வருங்காலத்தில், கிராம சேவக்கை வைத்துக் கொண்டு, அவர்களுக்கு எல்லா அலுவல்களையும் கொடுத்தால், ரெவினியூ சம்பந்தப்பட்ட பணம் வசூல் செய்வதற்கான அதிகாரம் கொடுத்து, அத்துடன் டெவலப்மெண்ட் ஒர்க்கையும் இணைத்துச்செய்ய வாய்ப்பு இருக்கும் என்று சொல்லிக்கொண்டு என்னுடைய பேச்சை முடிக்கின்றேன்.

* **திரு. கொளத்தூர் கோதண்டம் :** கனம் தற்காலிக சபாநாயகர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கொண்டுவந்திருக்கிற இந்த மானியக் கோரிக்கையை வரவேற்று என்னுடைய கருத்துக்களை நான் கூற ஆசைப்படுகிறேன்.

குறிப்பாக, எனக்கு முன்னால் பேசிய உறுப்பினர்கள், மாவட்டங்கள் பிரிக்கப்படவேண்டும் என்ற கருத்தை வலியுறுத்தி, மாவட்டங்கள் பிரிக்கப்படுகிற நேரத்தில் செயல்படுவதற்கு மிகவும் வழிவகை செய்யும் என்ற கருத்தை வலியுறுத்தியிருக்கிறார்கள். என்னுடைய மாவட்டத்தைப் பொறுத்த வரையில், செங்கற்பட்டு மாவட்டம், காஞ்சீபுரம் மாவட்டம் என்று பிரிக்கப்படுகிற ஒரு சூழ்நிலை இருப்பதை அறிந்து அதை நான் முழு மனதோடு வரவேற்கக் கடமைப் பட்டிருக்கிறேன். அப்படிப் பிரிக்கப்படுகிறபோது, குறிப்பாக, மதுராந்தகம் மட்டும் பெரிய பகுதியாக இருக்கும் காரணத்தால், அதையும் இரண்டு வட்டங்களாகப் பிரிக்கவேண்டும் என்ற கருத்தை இந்த நேரத்தில் நான் கூறிக்கொள்ளுகின்றேன்.

மாவட்ட அபிவிருத்திக் கவுன்ஸிலைப்பற்றிச் சொல்லுகிற நேரத்தில் எனக்கு முன்னால் பேசிய மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், சம்பந்தப்பட்ட மாவட்ட போலீஸ் அதிகாரி அவர்களும் அதிலே கலந்து கொள்ள வேண்டும் என்ற கருத்தை வலியுறுத்தினார்கள். அதன் அடிப்படையிலே நானும் என்னுடைய கருத்தைச் சொல்லும் நேரத்தில் மாவட்ட போலீஸ் அதிகாரி அவர்களும், அதே போன்று மின்சாரத் துறைக்குச் சம்பந்தப்பட்டிருக்கிற அந்த மாவட்டத்தைச் சார்ந்த பெரிய இன்ஜினீர்

65023

அவர்களும் அதிலே கலந்து கொள்ளுவார்களானால் மின்சாரம் விவசாயிகளுக்குக் கொடுக்கப்படவில்லை, கொடுக்கப்படுவதில் மிகவும் தாமதம் ஏற்படுகிறது என்ற கருத்தை நாங்கள் அங்கே சொல்ல வழிவகை செய்வதாக இருக்கும்.

மாவட்ட அபிவிருத்தி மன்றக் கூட்டங்கள் நடைபெறுகிற நேரத்தில், முன்னால் "கேள்வி நேரம்" என்ற ஒன்று இருக்குமானால், அதிலே எங்களுடைய கருத்துக்களைச் சொல்லவும், அவர்களுடைய கருத்துக்களை நாங்கள் தெரிந்து கொள்ளுவதற்கும் மிக வசதியாக இருக்கும் என்ற கருத்தை நான் இந்த நேரத்தில் கூறிக்கொள்ளுகின்றேன்.

தாலூக்கா ஆபீஸ்களைப்பற்றி சொல்லும்போது, நீண்ட நெடுங்காலமாக அவர்கள் பழக்கப்பட்டிருக்கிற காரணத்தினாலோ என்னவோ, புதிய அரசு வந்தபிறகும், அவர்களுக்கு இருக்கிற அதிகமான வேலைகள், ஏற்கனவே நிறுத்தப்பட்டிருக்கிற வேலைகளை உடனடியாகச் செய்ய முடியவில்லையோ என்னவோ, அது இன்றையதினம் தாலூக்கா ஆபீசைப் பொறுத்த வரையில் இருக்கின்ற ஃபைல்கள் அப்படியே கட்டுக் கட்டாகத்தான் இருந்து கொண்டிருக்கின்றன. அது முன்னாலே இருந்த நிலைமை காரணமாக இருக்கலாம். காலம் குறுகிய காலமாகையால், பின்னாலே அதிலே நல்லதொரு முன்னேற்றம் ஏற்படவேண்டும் என்று நான் இந்த நேரத்தில் விரும்பி வேண்டிக்கேட்டுக் கொள்ளுகின்றேன்.

அதற்கு அடுத்தபடியாக நான் கூறிக்கொள்ள விரும்புவது, குறிப்பாக, பட்டா வழங்குவதில் இருக்கும் பெரிய சிக்கல் ஆகும். முன்பு நான் இந்த மன்றத்தில் பேசும்போது, ஜமாபந்தியைப்பற்றிக் குறிப்பிட்டிருக்கிறேன். ஜமாபந்தி என்று ஒரு நாள் குறிப்பிட்டுவிட்டு, அந்த நேரத்தில் அங்கிருக்கும் பஞ்சாயத்து கிராம மக்களுக்கு ஒரு வாரம் என்று அறிவிப்பைக் கொடுத்திருக்கிறார்கள். அந்த ஒரு வார காலத்திற்குள், எனக்கு முன்னால் பேசிய உறுப்பினர் ஒருவர் கூறியபடி, பஞ்சாயத்து போர்டு தீர்மானம் போட்டு, அதற்குப் பிறகு தாசில்தார் பரிந்துரை அளித்து, இவை எல்லாம் நடைபெறுவதற்கு ஆண்டு ஆண்டுக் காலமாக ஆகிறது. என்னுடைய தொகுதியைப் பொறுத்தவரையில், ஏறக்குறைய ஆயிரக்கணக்கான மனுக்கள் இன்னும் பரிசீலனை செய்யப்படாத நிலையில் இருந்து கொண்டிருக்கின்றன. இன்னும் சொல்லப்போனால், முன்னால் இருந்த நிர்வாகத்தின் காரணமாகவோ என்னவோ, 15 ஆண்டுகள், 16 ஆண்டுகள் புறம்போக்கு நிலத்தை ஒருவர் பயிரிட்டால், அவர்களுக்கு அந்த நிலம் பட்டா ஆய்விட்டதா, இல்லையா என்பதைத் தெரிந்துகொள்ளுவதற்கும் அது ஆகாமல் இருக்கும் நிலைமை இருக்கிறது தான் இப்பொழுது எங்களால் புரிந்துகொள்ள முடிகிறது. ஆகையால், முன்னால் சொன்னக் கருத்தை மீண்டும் வலியுறுத்துகிறேன். மூன்று மாதங்களுக்கு முன்னால், மனுக்கள் வாங்கிவிட்டு, பரிசீலனை செய்யப்பட்டு, ஜமாபந்திக்கு வருகிற அதிகாரி அவர்கள், இது கொடுக்க முடியும், முடியாது என்ற நிலையை மிகவும் தெளிவுபடுத்த வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்ளுகின்றேன். (நண்பகல் 12-00) அப்படி பட்டா வழங்கப்படுகிற நேரத்தில், குறிப்பாக ராணுவத் துறையில் பணியாற்றிக் கொண்டிருப்பவர்களுக்கு முதலிடம் தரப்பட வேண்டுமென்று விதி இருந்தும்கூட, அது நல்ல முறையில் செயல்படவில்லை. உதாரணமாக, என்னுடைய தொகுதியைச் சேர்ந்த ஒருவர்—ராணுவத்திலே பணி புரிந்துகொண்டிருக்கும் ஒருவர்—கடந்த ஐந்தாண்டுக் காலத்தில் 200-க்கும் மேற்பட்ட ரிஜிஸ்தர் மனுக்களை மட்டும் ஒன்றாக இணைத்து, கலெக்டர் முன்னால் காட்டினார். ராணுவத்தில் பணி புரிபவர்களுக்கு உடனடியாகச் செய்ய வேண்டுமென்று விசேஷ சலுகை இருந்தும்கூட, அந்த விதி முறைகள் எல்லாம் சரியான முறையில் செயல்படுத்தப்பட முடியாத நிலையில் இன்று இருந்து வருகிறது.

மாவட்ட நிர்வாகமும், பலவகை ஊதியமும் என்ற மானியத்தின் பேரிலே, குறிப்பாக "ரிலிஜியஸ் என்டௌமெண்ட்" டைப்பற்றிப் பேசலாம் என்று கருதுகிறேன். சம்பந்தப்பட்ட நிர்வாகத்தின்கீழ் இருக்கிற கோயில்களுடைய நிலத்தை, இன்று ஏழை விவசாயிகள் பயிரிட்டு வந்தால்,

கூட, அவர்களுக்குச் சாதாரணமாகக் கிடைக்கின்ற நன்மைகூட கிடைக்கவில்லை. அதை நிர்வகிக்கின்ற தர்மகர்த்தாக்களோ அல்லது அந்தப் பொறுப்பை ஏற்றுக்கொண்டிருக்கிற அதிகாரிகளோ, தாங்கள் ஜமீந்தார்களாக எண்ணிக்கொண்டு, மிக மோசமான நிலையிலே நடந்துகொண்டிருக்கிறார்கள். சொந்த நிலம் வைத்திருப்பவர்கள்கூட அம்மாதிரி நடந்துகொள்வதில்லை. பரம்பரை தர்மகர்த்தாக்கள் எத்தனை ஊழல்கள் இருக்கின்றனவோ அத்தனையையும் செய்துவிட்டு, சாதாரண விவசாய மக்களுக்கு செய்ய வேண்டிய பல நல்ல காரியங்களை மனமுவந்து செய்யாமல் நடந்துகொண்டு வருகின்றார்கள். ஏழை விவசாயிகள் எல்லாம் அடிமையாக்கப்பட்டு, மிக மோசமான நிலையில் இருக்கிறார்கள். இந்தத் துறையில் தக்க கவனம் செலுத்தி, ஏழை விவசாய மக்களுக்கு உதவி செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, இன்றையதினம் என் தொகுதியாகிய மதுராந்தகம் வட்டத்திலிருந்து அரிசி ரயில் மூலமாக வேகமாகக் கடத்தப்படுகிறது. மதுராந்தகம் வட்டத்தில் உணவு நிலைமை நல்லபடியாக இருந்தபோதிலும், அரிசி வெளியிடங்களுக்கு கடத்திக்கொண்டு போவதினால், அங்கும் அரிசியின் விலை ஏறிக்கொண்டே போகிறது. பஸ்ஸிலோ, சாலைவழிகளிலோ அரிசி எடுத்துக்கொண்டு போகின்றவர்களை சோதனைச்சாவடியில் தடுத்து நிறுத்தி விடுகிறார்கள் என்பதால், ரயில் மூலமாக அரிசியைக் கடத்திக்கொண்டு போகிறார்கள். ரயிலில் சோதனை செய்வதில்லை. ஜங்ஷன்களில்தான் ரயில் அதிக நேரம் நிற்கும். அங்கேதான் சோதனை நடத்த முடியும். மற்ற இடங்களில் ரயில் அதிக நேரம் நிற்பது இல்லை. ஆகவே, ரயில் மூலம் அரிசியைக் கடத்திக்கொண்டு போவதைத் தடுக்க, ரயிலிலும் பிரத்தியேகமாகச் சோதனை செய்வதற்கான தக்க நடவடிக்கைகளை எடுத்துக் கொள்ளவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, பஞ்சாயத்து யூனியன்களுக்கும், ரெவின்யூ டிபார்ட்மெண்டுக்கும் ஒரு கூட்டுறவு இருந்துகொண்டிருக்கிறது. ரெவின்யூ டிபார்ட்மெண்டைப் பொறுத்த வரையில்—கனம் உறுப்பினர்கள் முன்னாலே சொல்லியிருப்பவர்களைப் பார்க்கின்றபொழுது, "ரெவின்யூ இலாகாவிலே எந்த விவகாரம் போனாலும் உடனடியாகத் தீர்க்கப்படவில்லை. அங்கே போகின்ற பேப்பர்கள்—விவகாரங்கள் தெரிந்துகொள்ள வேண்டுமானால், ஆண்டுக் கணக்கில் காத்திருக்க வேண்டும்" என்று கூறினார்கள். அதே நேரத்தில் பஞ்சாயத்து யூனியன் நிர்வாகத்தை எடுத்துச் சொன்னார்கள். பஞ்சாயத்து யூனியனுக்கு, எந்த வகையிலே மக்களுக்கு உடனடியாக நல்ல காரியங்களைச் செய்ய வேண்டுமென்ற எண்ணம் இருந்து வருகிறது. பஞ்சாயத்து யூனியனுக்கும், ரெவின்யூ டிபார்ட்மெண்டுக்கும் ஒத்துப் போவதில்லை. குறிப்பாக, பஞ்சாயத்து யூனியன் ரோடு போட வேண்டுமென்றால், முதலிலே லேண்டை அக்யூர் செய்ய ரெவின்யூ டிபார்ட்மெண்டுக்கு தீர்மானம் அனுப்புவார்கள். அந்த இடத்தில் அந்த பேப்பர் காலதாமதமடைந்து விடுவதால் உரிய நேரத்தில் ஒன்றும் செய்ய முடிவதில்லை. எந்த வேலையும் ஒழுங்காக, நல்லபடியாக நடைபெறுவதில்லை. ஆகவே, பஞ்சாயத்து யூனியனுக்கும், ரெவின்யூ டிபார்ட்மெண்டுக்கும் இருக்கும் இந்த ஒட்டுறவைப் பிரித்து, இதன் நிர்வாகம் வேறு—அதன் நிர்வாகம் வேறு என்ற அடிப்படையில் செய்யப்படுமானால், மக்களுக்கு உடனடியாக நல்ல பலன்கள் ஏற்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்ளுகிறேன். இம்மாதிரி உடனடியாகச் செயல்படுவதற்கு அரசு ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, எனக்கு பேச வாய்ப்பு அளித்ததற்கு நன்றியைத் தெரிவித்துக்கொண்டு என் உரையை முடித்துக் கொள்ளுகிறேன்.

• **திரு. செ. பாலசுப்பிரமணியன் :** தலைவர் அவர்களே, இந்த மாவட்ட நிர்வாகக் கோரிக்கை எவ்வளவு முக்கியமான கோரிக்கை என்பதை எடுத்துச் சொல்ல விரும்புகிறேன். ஒன்று, இந்த மாமன்றம் முடிவு செய்த கொள்கை, இரண்டாவது இந்த அமைச்சரவை முடிவு செய்த கொள்கை ஆகியவைகளை நடைமுறைக்குக் கொண்டுவந்து பொது

மக்களுக்கு நன்மை செய்வது மாவட்ட நிர்வாகம்தான். சென்ற காலத்திலிருந்த ஊழல் அமைப்புக்கள் எல்லாம் சீர்படுத்தப்பட்டால்தான் நாம் நல்ல கொள்கைகளை எல்லாம் அமுல்படுத்தி, அதனால் நம் மக்கள் எல்லோரும் நன்மை—நல்ல பயன் அடைய முடியும். மாவட்ட நிர்வாகத்திலே அடிப்படையாக அமைந்திருப்பது கிராம நிர்வாகம் தான். கிராம நிர்வாகத்தின் அதிகாரிகள் கிராமக் கர்ணமும், கிராம மணியக்காரரும்தான். இவர்கள் எல்லாம் கிராமத்திலேயிருக்கிற விவசாயிகளுக்கு, விதி முறைகளை மீறி கெடுதலான பல காரியங்களைச் செய்துகொண்டிருக்கிறார்கள். மாவட்ட நிர்வாகத்திலே ஊழல், நிர்வாகத் திறமையின்மை இருப்பதாகக் கூறினால் அதற்கு மூலகாரணம் கிராம நிர்வாகமே ஆகும். இப்போது கிராம மணியம் பரம்பரை பாத்தியதை முறை ஒழிக்கப்பட்டுவிட்டது என்று கூறுகிறார்கள். ஆனால், புதிதாக யார் மணியக்காரராக வர முடியும் ? புதிதாக யார் வேண்டுமானாலும் அந்தப் பதவிக்கு வர வாய்ப்பு இருந்தபோதிலும் இப்போதுள்ள விதிகளின் பிரகாரம், அந்தக் கிராமத்தில் இருக்கும் எவராவது தமக்கு வேண்டுமென்று விண்ணப்பம் போட்டால் அவருக்கே கொடுக்கப்பட வேண்டுமென்று ரெவின்யூ விதிகள் இருக்கின்றன. ஆகவே, அந்தக் கிராமத்திலுள்ள ஒருவரே மீண்டும் மணியக்காரராக வந்து, தனது சொந்த விரோதங்களை மனதில் வைத்துக் கொண்டு, அதனால் பொதுமக்களுக்குப் பல இடைஞ்சல்கள் செய்கிறார்கள். ஆகவே, இந்த முறையை மாற்றிவிட்டு, வேறு ஒரு புதிய முறையைக் கொண்டுவர வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

கிராமக் கர்ணங்களுக்கும், மணியக்காரருக்கும் கொடுக்கப்படுகின்ற ஊதியம் மிகமிகக் குறைவு. இவர்களுக்குக் குறைந்தது லோயர் டிவிஷன் கிளார்க் என்ற அளவிற்கோ, அல்லது கிராம சேவக் என்ற அளவிற்கோ சம்பளம் கொடுத்து, அரசாங்கமே இவர்களை அங்காங்கு நியமிக்க வேண்டும். அப்படிச் செய்தால்தான் இன்று கிராம நிர்வாகத்திலே இருக்கின்ற அந்தக் குறைகளைப் போக்க முடியும். முக்கியமாக முதலில் கிராம அமைப்புக்களை மாற்றியமைக்க வேண்டும். ஒரு சில கிராமங்கள் பெரிய அளவில் இருக்கின்றன. ஒரு சில கிராமங்களுக்கு அதிக வருமானம் கிடைக்கிறது. குறைந்த வருமானம் கிடைக்கக்கூடிய கிராமங்களும் இருக்கின்றன. ஒரு சில கிராமங்களில் வரக்கூடிய வருமானம், அங்கிருக்கும் கிராமக் கர்ணம், மணியக்காரர், தோட்டி, தலையாரி இவர்களுக்குக் கொடுக்கக் கூடிய சம்பளத்திற்குக்கூட போதாத நிலையில் இருக்கிறது. ஆகவே, துணிச்சலாக, ரீசர்வே செய்து, ஜனத் தொகை—நிலப் பரப்ப—வருமானம் ஆகிய எல்லாம் ஒரே சீரான அடிப்படையில் சீரான கிராமங்களை அமைக்க வேண்டும். அப்படிப்பட்ட சீரான கிராமங்களுக்குப் பொறுப்பாக இருக்க, ரெவின்யூத் துறை அதிகாரி ஒருவரையோ, கிராம சேவக் ஒருவரையோ அமைத்துவிட்டால், அதனால் ரெவின்யூவும் வரும், பஞ்சாயத்தும் இருக்கும்—அதனுடைய வேலைகளும் நடைபெறும். வரிகளை வாங்கக் கூடிய பொறுப்பு கிராமங்களை நிர்வகிக்கும் அதிகாரியிடம் கூட்டாக ஒப்படைத்துவிட்டால் நிச்சயமாக ஊழல் குறைந்து நிர்வாகம் சீர்பட்டுவிடும்.

அடுத்தபடியாக, கிராம நிர்வாக அமைப்புக்கு அடுத்தபடியாக இருப்பது பிர்க்கா என்ற அமைப்பு. அங்கு ரெவின்யூ இன்ஸ்பெக்டர் என்று ஒருவர் இருக்கிறார் அவர் ஏதோ போஸ்ட் ஆபீஸ் வேலைபோல் செய்துகொண்டிருக்கிறார். இந்த அமைப்பு முறையினால் அபிவிருத்தித் திட்டங்கள் காலதாமதம் அடைகின்றன. இந்த ரெவின்யூ இன்ஸ்பெக்டர் என்பது தேவையற்ற அம்சம். அதை அறவே ஒழித்துவிட்டு, நேரடியாக தாலூகாவின் மேற்பார்வையில் வைத்துக்கொண்டால் நல்லது. அங்கு தாலூகா கௌன்சில்களை ஏற்படுத்திக்கொள்ளலாம். தாலுகாவிலுள்ள தாசில்தார்களை கெஜட் ஆபீசர்களாக ஆக்கி, அவர்களையே தாலுகா யூனியன்களுக்கு கமிஷனராக ஆக்கிவிட்டால், எந்த வித காலதாமதமும் ஏற்படாது. இதனால் சீரான நிர்வாகமும் ஏற்படும். அடிப்படையிலே கிராமக் கவுன்சில், தாலுகா கவுன்சில் ஏற்படுத்த வேண்டும். கிராமப்புறத்தில் ரெவின்யூ

வருவாய்க்குத் தாசில்தார், கிராம மணியம் இரண்டு பேருமே பொறுப்பு ஏற்க வேண்டும். இந்த மாதிரியான அமைப்பினால் ஸ்தல நிர்வாகம்—அபிவிருத்தி வேலைகள் துரிதமாகவும், விரிவாகவும் நடைபெற வசதியாக இருக்கும்.

அடுத்தபடியாக ஆர். டி. ஓ. என்ற அமைப்பு இருக்கிறது. இதுவும் ஒரு போஸ்ட் ஆபீஸ் வேலை மாதிரிதான். இவருக்கு மேலே கலெக்டர் ஒருவர் இருக்கிறார். மாவட்ட ரீதியிலே, கலெக்டர் ஒருங்கிணைப்பு அதிகாரியாகச் செயல்படுகிறார். ஆகவே, ஆர்,டி.ஓ. என்ற அமைப்பு டிவிஷன் ரீதியிலே இருக்க வேண்டுமா என்பதைச் சிந்தித்துப் பார்த்தால், நிச்சயமாக அந்த அமைப்பு வேண்டாம் என்றே சொல்லலாம். ஆகவே, ஆர்.டி.ஓ. அமைப்பை எடுத்துவிட்டு, கிராம நிர்வாகம், தாலூகா நிர்வாகம், ஜில்லா நிர்வாகம் என்ற ரீதியிலே அமைத்துக்கொள்ளலாம். ஜில்லா கலெக்டரிடத்தில் எல்லா அதிகாரமும் ஒப்படைக்கப்பட வேண்டும். இந்தச் சபைகள் எல்லாம் கூடி, மாவட்ட அளவில் டிஸ்ட்ரிக்ட் கவுன்சில் என்ற ஒரு அமைப்பை வைத்துக்கொண்டால், அதனால் மூன்று ஜனநாயக ஸ்தாபனங்களும் இயங்கும்; மூன்று வித நிர்வாகங்களும் செயல்படும். இங்கிலாந்து தேசத்தில் இருக்கும் ‘ கவுண்ட்டி கவுன்சில் ’ கூட அப்படித்தான் இருக்கிறதென்று நினைக்கிறேன். ஆகவே, இந்த அரசு இந்த முறையை துணிந்து செயலாற்ற வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இன்னும் ஒரு பிரச்சினை இந்த தேசத்திலே அடிபடுகிறது. டெக்னோக்ராட்ஸ் வெர்ஸஸ் ப்யூரோக்ராட்ஸ் என்று சொல்லுவதைப் போல, இப்பொழுதிருக்கும் ஜில்லா கலெக்டர் அந்த மாவட்டத்தில் இருக்கும் பல தொழில் நுணுக்க இன்ஜினீர்கள், விவசாய அதிகாரிகள், வைத்திய அதிகாரிகள் போன்றவர்களுடைய வேலைகளையும் மேற்பார்வை பார்க்கும் அதிகாரியாக இருக்கிறார். கலெக்டருக்குத் தொழில் நுணுக்க அறிவு இல்லாததால், அது பற்றிய வேலைகளில் சில சிக்கல்கள் ஏற்பட்டு வருகின்றன. இந்த தேசத்திலே கூட, ‘ டெக்னோக்ராட் ’ என்று சொல்லப்படுகிற தொழில் நுணுக்க நிபுணர்களுக்கெல்லாம் தாங்கள் ஏதோ அதிகாரிகளால் ஆளப்பட்டு வருகிறார்கள் என்ற குறை இருக்கிறது. இங்கேயும் கூட, நான் ஒரு யோசனை கூற விரும்புகிறேன். தற்போது ஜில்லா கலெக்டருக்குள்ள வேலையை இரண்டு பகுதியாகப் பிரித்து, ரெவின்யூ வேலையை, அதாவது வரி வசூல் செய்கிற வேலையோடு நிர்வாக வேலைக்கான பொறுப்பையும் ஒருவரிடம் ஒப்படைத்துவிட வேண்டும். அபிவிருத்தி வேலைகளை மட்டும் கவனித்துக்கொள்ளக்கூடிய பொறுப்பு இன்னொரு கலெக்டரிடம் விடப்பட வேண்டும். விவசாய நிபுணர்கள், இன்ஜினீரிங் நிபுணர்கள், வைத்திய நிபுணர்கள் இப்படிப்பட்டவர்களுடைய வேலைகளையெல்லாம் ஒருங்கிணைக்கக் கூடிய வகையில், அபிவிருத்தி வேலைகளை இந்த இரண்டாவது கலெக்டரிடம் ஒப்படைத்தால், நிச்சயமாக நல்ல பலன் ஏற்படும். துரிதமாக அபிவிருத்தி வேலைகளெல்லாம் கவனிக்கப்பட்டு விடும். அதன் மூலம் பொது மக்களுக்கும் நன்மை ஏற்படும் என்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

‘ கலெக்டர் ’ என்கிற பெயர் பிரிட்டிஷ்காரன் காலத்தில் ஏற்பட்ட பெயராகும். முக்கியமாக, இந்த கலெக்டர் என்கிற பதவி பொது மக்களிடம் இருந்து வரி வசூல் செய்வதற்காக மாத்திரம் ஏற்பட்டதாகும். மற்ற அபிவிருத்தி வேலைகளெல்லாம் அப்பொழுது இரண்டாம் பட்சமாகத்தான் இருந்தது. இப்பொழுது கலெக்டர் பதவியில் இருப்பவர்களுக்குப் பல அதிகாரங்கள் கொடுக்கப்பட்ட காரணத்தினால், அவருக்குப் பல கடமைகள் இருக்கின்றன. ஆகவே, கலெக்டர் என்ற பெயரை எடுத்துவிட்டால், பழைய ஏகாதிபத்திய மனோபாவம் கூட ஒழிந்துவிடும். கிராமப்புறங்களில் உள்ள மக்கள், ‘ கலெக்டர் ’ என்ற பெயரைச் சொன்னாலே, பயப்படுகிறார்கள். அவரிடம் போகவும் அவர்கள் அஞ்சுகிறார்கள். ஆகவே கலெக்டர் என்ற பெயரை எடுத்துவிட்டு, ‘கமிஷனர்’ என்று மாற்றிவிட்டால், மிகவும் நன்றாக இருக்கும்.

சென்ற நான்கைந்து வருஷங்களுக்கு முன்பு, அமெரிக்காவிலிருந்து யங் ஃபார்மர்ஸ் க்ளப் என்பதைச் சேர்ந்த ஒரு விவசாயி எங்களுடைய ஊருக்கு வந்து, எங்களுடன் தங்கி, அங்குள்ள விவசாய முறைகளைக்

கற்றுப் போவதற்காக வந்திருந்தார். அவர் கேட்ட பல விஷயங்களுக்கு நான் பதில் சொல்லிக்கொண்டிருந்தேன். மாவட்ட அளவில் கலெக்டர் என்பவர் இருக்கிறார் என்று நான் சொல்லிக்கொண்டு வந்தபோது, அவர், “ வாட் ஈஸ் ஹீ கலெக்டிங் ? ” என்று கேட்டார். அவர் எதை வசூல் செய்கிறார் ? என்று அவர் கேட்க, “ அது அப்படியல்ல, பிரிட்டிஷ்காரன் இருந்த காலத்தில் “ கலெக்டர் ” என்ற பெயரை ஏற்படுத்திவிட்டுப் போனான், இப்பொழுது அது அப்படியே இருக்கிறது என்றாலும், பல அபிவிருத்தி வேலைகளுக்கு அவர்தான் பொறுப்பாக இருக்கிறார் ” என்று நான் சொன்னேன். இதை எதற்காகச் சொல்லுகிறேன் என்றால், கலெக்டர் என்ற பெயர் தற்போதைய நிலைமையில் சரியாக இருக்காது என்பதற்காகத்தான். ஆகவே, கலெக்டர் என்ற பெயரை அகற்றிவிட்டு “ கமிஷனர் ” என்ற பெயர் வைத்தால் பொருத்தமாக இருக்கும் என்று நான் நினைக்கிறேன். மற்ற பல மாநிலங்களில்கூட, “ கமிஷனர் ” என்ற பெயரையே வைத்திருக்கிறார்கள் என்று நினைக்கிறேன். அந்த முறையை நம் மாநிலத்திலும் ஏற்படுத்திவிட்டால் நன்றாக இருக்கும்.

ஆகவே, அடிப்படையில் கிராம நிர்வாகம். அதற்கடுத்தபடியாக தாலுக்கா நிர்வாகம். நடுவிலே இருக்கக்கூடிய பிர்க்கா நிலையில் ரெவினியூ இன்ஸ்பெக்டர் இருக்கக்கூடாது. அதேபோல், ரெவினியூ டிவிஷனல் ஆபீசர் என்ற அமைப்பும் தேவை இல்லை. ரெவினியூ டிவிஷனல் ஆபீசர் என்ற பதவியை எடுத்துவிட்டு, நேரடியாக நிர்வாகப் பொறுப்பை ஜில்லா நிர்வாகம் என்ற அடிப்படையில் கொண்டுவந்தால், நிர்வாக அமைப்பும், ஜனநாயக அமைப்பும் ஒருங்கிணைந்து ? முறையாக இருக்கக் கூடும். அந்த முறையில், நிர்வாகச் சீர்திருத்தம் செய்யுமாறு கேட்டுக் கொள்ளுகிறேன்.

அடுத்து, “ ரிலிஜியஸ் என்டௌமெண்ட்ஸ் ” என்பதும் இதிலே வருகிறது என்ற அடிப்படையில் அதிலும் ஒரு யோசனையை மாத்திரம் நான் தெரிவிக்க விரும்புகிறேன் . . . . . . (மணியடிக்கப்பட்டது) நேரம் இல்லாததால், இத்துடன் என்னுடைய உரையை முடிக்கின்றேன்.

* **திரு. தி. தீர்த்தகிரி கவுண்டர் :** கனம் தலைவர் அவர்களே, ஜில்லா நிர்வாக மானியக் கோரிக்கை மீது கொடுக்கப்பட்டுள்ள வெட்டுப் பிரேரணையை ஆதரித்து சில வார்த்தைகள் சொல்ல விருமபுகிறேன்.

எங்களுடைய தர்மபுரி மாவட்டம் சேலம் மாவட்டத்தில் இருந்து சமீபத்தில் தனியாகப் பிரிக்கப்பட்டிருக்கிறது. ஜில்லா நிர்வாகம் சௌகரியமாக நடைபெற வேண்டும் என்பதை முன்னிட்டு பெரிய மாவட்டமாக இருந்த சேலம் மாவட்டத்தை இரண்டாக பிரிக்கவேண்டுமென்று முன்பிருந்த அரசு அவசர கால நிலைமையையும் கருதாது, எதிர்பாராத அதிகச் செலவு ஏற்படுவதையும் கருதாது, தர்மபுரி மாவட்டத்தை தனியாகப் பிரித்தார்கள். இப்போது ஏறக்குறைய இரண்டு ஆண்டு காலமாக தர்மபுரி மாவட்டம் தனியாகவே இயங்கி வருகிறது. சேலம் மாவட்டத்தோடு இணைத்திருந்த நேரத்தில் தர்மபுரி மாவட்டப் பகுதிகளுக்கு வேண்டிய அளவுக்கு தேவைகள் பூர்த்தி செய்யப்படவில்லை, நிர்வாக ஒழுங்கு அமைப்பு சரியாக இயங்கவில்லை என்ற காரணத்திற்காக தர்மபுரி மாவட்டம் தனியாகப் பிரிக்கப்பட்டு பல திட்டங்கள் நிறைவேற்றப்பட்டு வருகின்றன. தர்மபுரி மாவட்டத்தில் கல்வி, சமுதாயம், பொருளாதாரம், போக்குவரத்து போன்றவைகள் மிகவும் பின் தங்கிய நிலையில் இருப்பதால் நிர்வாகச் சீரமைப்புச் செய்யவேண்டி இருக்கிறது. நான்கு ரெவினியூ தாலுக்காக்களைக்கொண்ட மாவட்டமாக தற்போது அது இயங்கி வருகிறது. இன்னும் மூன்று ரெவினியூ தாலுக்காக்களை ஏற்படுத்த வேண்டுமென்று அரசாங்கம் நடவடிக்கை எடுத்திருப்பது வரவேற்கத்தக்கது. ஊத்தங்கரை, டெங்கனிகோட்டை, பெண்ணாகரம் போன்ற பகுதிகளை தனித் தாலுக்காவாகச் செய்வதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுத்திருக்கிறது. அது ஒரு இன்டிபெண்டன்ட் டெபுடி தாசில்தார் பகுதியாக இயங்கும் வகையில் அரசாங்கம் முடிவு எடுத்திருப்பதாகக் கருதுகிறேன். ஊத்தங்கரைப் பகுதியை ஒரு தாசில்தார் தலைமையில் இயங்கக்கூடிய ஒரு தனி வட்டமாக

செய்யவேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ளுகிறேன். மிகவும் பின்தங்கிய வட்டமாகிய ஊத்தங்கரை போன்ற பகுதிகளை சென்ற அரசு பஞ்சப் பிரதேசங்களாக பிரகடனம் செய்திருந்தார்கள். அங்கு விவசாயிகள் மிகவும் பின்தங்கிய நிலையில் இருக்கிறார்கள். அந்தப் பகுதியில் மின்சார வசதி இல்லை. நீர்ப்பாசன வசதி இல்லை. விவசாயிகளின் முன்னேற்றத்துக்குத் தேவையான கல்வி வசதி பெருகவில்லை என்ற காரணத்திற்காக அந்தப் பகுதியிலுள்ள உத்தியோகஸ்தர்களுக்கு எல்லாம் கூட பஞ்சப்படி முன்பு கொடுத்து வந்தார்கள். தற்போது அது நீக்கப்பட்டிருக்கிறது. தர்மபுரி மாவட்டத்தில் அந்த வட்டாரத்தை அபிவிருத்தி செய்யும் வகையில் மின்சார வுசதிகளை எல்லாம் செய்து கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

ரெவினியூ நிர்வாகமும் பஞ்சாயத்து யூனியன் நிர்வாகமும் கிராம மக்களுடைய வாழ்க்கை முன்னேறுவதற்கு முக்கியமான நிர்வாகங்களாக இருந்து வருகின்றன. ரெவினியூ நிர்வாகம் சரியாக இயங்குவதற்குத் தாலுக்காவினுடைய தலைமை அதிகாரி அந்தந்தத் தலைநகரில் இருப்பது தான் சிறந்தது. அந்த முறையில் ஊத்தங்கரை போன்ற பகுதியைத் தாலுகா தலைமை ஸ்தலமாக ஏற்படுத்தவேண்டும் என்று நான் கேட்டுக்கொள்ளுகின்றேன்.

ஊத்தங்கரைக்கு சப்-மாஜிஸ்ட்ரேட் கோர்ட் ஒன்றும் இருக்கவேண்டும். இப்போது ஹரூரில்தான் இருக்கிறது. ஊத்தங்கரைப் பகுதி மக்கள் ஏறக்குறைய ஐம்பது, அறுபது மைல் தூரத்திலுள்ள ஹரூர் நீதி ஸ்தலத்திற்கு வரவேண்டியதாக இருக்கிறது. ஆகவே, ஊத்தங்கரையைத் தனித் தாலுக்காவாகச் செய்யும்போது, ஊத்தங்கரையிலேயே ஒரு நீதி ஸ்தலத்தை (சப்-மாஜிஸ்ட்ரேட் கோர்ட்) ஏற்படுத்த அரசாங்கம் தக்க நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று நான் கேட்டுக் கொள்ளுகின்றேன்.

ஊத்தங்கரை பெரிய பஞ்சாயத்து யூனியனாக இயங்குகிறது. அது 58 கிராமப் பஞ்சாயத்துகளைக்கொண்ட ஒரு யூனியனாக இருக்கிறது. பாலக்கோடு பஞ்சாயத்து யூனியன் 56 கிராமப் பஞ்சாயத்துகளைக் கொண்டதாக இருக்கிறது. இதையெல்லாம் இரண்டு பஞ்சாயத்து யூனியன்களுக்கும் சமமாகப் பரிவர்த்தனை செய்து, சமமாகக் கிராண்டும் வழங்கத் தக்க நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று நான் கேட்டுக் கொள்ளுகிறேன்.

ஆரம்பக் கல்வி, சுகாதாரம், கிராம வைத்தியசாலை, விவசாய முன்னேற்றம் போன்ற பல கிராமாந்திர வேலைத் திட்டங்கள் பஞ்சாயத்து யூனியன் நிர்வாகத்திலே ஒப்படைக்கப்பட்டு, பஞ்சாயத்து யூனியன் நிர்வாகத்தின்கீழ், பல விஸ்தரிப்பு அதிகாரிகளும், ஆணையாளரும், சேர்மன், அங்கத்தினர்கள் போன்றவர்களும் நிர்வாகத்தை மேற்கொண்டிருக்கிறார்கள். அந்த நிர்வாகத்தில், ஆரம்பக் கல்வியைப் பொறுத்த வரையில், ஆசிரியர்களை நியமிப்பதற்கு ஒரு நியமனக் குழு இருக்கிறது. ஆசிரியர்களை ஓரிடத்திலிருந்து இன்னொரு இடத்திற்கு மாற்றுவதற்கும் ஒரு குழு (Ad-hoc Committee) அமைத்திருக்கிறார்கள். இடைக்காலத்தில் ஆசிரியர்களை மாற்றவேண்டும் என்றால், மாவட்ட ஆட்சித் தலைவருடைய அனுமதி பெற்றுத்தான் மாற்றவேண்டும் என்ற முறையெல்லாம் இருக்கிறது. இதெல்லாம் ஒரு இழுபறி அதிகாரமாக இருந்து கொண்டிருக்கிறது. இப்படிப்பட்ட நிலைமை இருக்கக்கூடாது. முன்பு ஜில்லா போர்டு தலைவருக்கு இருந்த மாதிரி ஒரு பொறுப்புள்ள அதிகாரம் தரப்பட வேண்டும். ஆசிரியர்களை நியமிப்பதற்கும், மாற்றம் செய்வதற்கும், ஒழுங்கு நடவடிக்கை எடுப்பதற்கும் ஸ்டாச்சூடரி அதிகாரம் இருக்கவேண்டும். அப்படியில்லையென்றால், கல்வி இலாக்காவில் எப்படி செகண்டரி எஜுகேஷன் இயங்குகிறதோ அந்த முறையிலேயே இதையும் செய்துவிடுவது நல்லது என்ற அபிப்பிராயத்தை இந்தச் சமயத்தில் நான் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். ஏனென்றால், நான் இரு முறை பஞ்சாயத்து யூனியன் சேர்மனாக இருந்து வருகிறேன். அதில் இருக்கக்கூடிய

சிரமங்கள், சிக்கல்கள் காரணமாக நிர்வாகம் சரியாக இயங்கவில்லை என்ற காரணத்தினால், ஒன்று அதிகாரிகளே பொறுப்பாக இருக்க வேண்டும்; இல்லையென்றால், அதிகாரத்தை ஒரு தனி இலாக்காவிடம் ஒப்படைத்து விடுவது சிறந்ததாக இருக்கும் என்று நான் கருதுகிறேன்.

விவசாயிகளுக்கு மின்சார பம்ப் செட்களுக்கான கடன் வசதிகள் வட்டார வளர்ச்சித் திட்டத்தின் கீழ் நாம் செய்கிறோம். அந்தக் கடன் வசதிகளைப் பெறுவதில் விவசாயிகளுக்குப் பல இடையூறுகள் இருக்கின்றன. விவசாயி மின்சார மோட்டார் வாங்குவதற்குக் கடன் பெற வேண்டும் என்றால், கடன் மனு போட்ட சம்பந்தப்பட்ட அந்த விவசாயி எந்த கிராமத்தில் இருக்கிறாரோ அந்தக் கிராமத்திற்கு மின்சாரம் சாங்ஷன் செய்யப்பட்டிருக்கிறதா என்பதற்கான அத்தாட்சியை—லோடிங் சர்டிபிகேட் வட்டார வளர்ச்சி அதிகாரிக்கு அனுப்பவேண்டும் என்று இருக்கிறது. அந்த அத்தாட்சியை வைத்து சம்பந்தப்பட்டவர் விண்ணப்பித்து இருக்கிறாரா என்று பரிசீலித்து அதற்குப் பிறகு பட்டாதாரருக்கு கடன் அனுமதிக்கிறார்கள். அதற்குப் பிறகு வட்டார வளர்ச்சி அதிகாரி அந்தப் பட்டாதாரருக்கு சர்வீஸ் கொடுக்கப்படுகிறதா என்று கேட்கிறார்கள். இப்படி கேட்பதால் காலதாமதம் ஆகிறது. ஆகவே கடன் சாங்ஷன் செய்கிற அதிகாரிகளுக்கும் மின்சார சர்வீஸ் கொடுக்கின்ற அதிகாரிகளுக்கும் இடையே பெரிய காலதாமதம் ஆகிறது. அதனால் விவசாயிகள் மிகவும் பாதிக்கப் படக்கூடிய நிலைமை இருக்கிறது. விவசாயிகளுடைய இப்படிப்பட்ட இடையூறுகளைப் போக்கவேண்டும்.

அடுத்தபடியாக தாலுகா தலைநகரங்களிலே ஆஸ்பத்திரிகளை வைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன். எங்களுடைய ஜில்லா ஒரு மலேரியல் பகுதி என்பது அரசாங்கத்திற்கு தெரியும். அங்கே தர்மபுரி ஜில்லாவில் அரூர், ஊத்தங்கரை, ஓசூர் போன்ற இடங்களில் காலரா, பிளேக் ஏற்பட்டு, அங்கே சுகாதார அதிகாரிகள் அதற்காக நடவடிக்கை எடுத்துக்கொண்டிருக்கிறார்கள். அங்கேயெல்லாம் தலைமை ஆஸ்பத்திரிகள் இல்லை. சிறிய சிறிய ஆஸ்பத்திரிகள்தான் இருக்கின்றன. ஆகவே சுகாதார வசதிகளோடு கூடிய படுக்கை வசதிகளோடு கூடிய ஒரு ஆஸ்பத்திரியைக் கட்டி, அங்கே பயிற்சி பெற்ற முறையான வைத்தியரை நியமிக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இப்படிப்பட்ட குறைபாடுகளை எல்லாம் அரசாங்கம் கவனித்து நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொண்டு என்னுடைய உரையை முடித்துக்கொள்கிறேன்.

* **திரு. சோ. அழகர்சாமி:** மதிப்பிற்குரிய தலைவர் அவர்களே, மாவட்ட நிர்வாக மானியக் கோரிக்கையின் மீது என்னுடைய கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன். அதாவது மாவட்ட நிர்வாகம் சம்பந்தப்பட்ட மட்டில் அதிகமான விவசாயிகளுடைய சாதாரண மக்களுடைய கோரிக்கைகளுக்குப் பரிகாரம் காணமுடியாத முறையில் காலதாமதம் ஏற்படுகிறது, அதை மாற்றவேண்டும். உதாரணமாக எடுத்துக்கொண்டால் முதியோர் பென்ஷன், தியாகிகள் பென்ஷன் இவற்றைப் பெறுவதற்காகக் கொடுக்கப்பட்ட மனுக்கள் எல்லாம் ஏறக்குறைய கொடுத்து இரண்டு மூன்று வருடங்கள் ஆகியும்கூட பதில் வராத நிலைமைதான் சில இடங்களிலே இருக்கின்றன. அது மட்டுமல்ல, குறிப்பாக ஒன்றைச் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். விவசாயிகள் சாகுபடி செய்யக்கூடிய நிலங்களுக்குப் பட்டா வழங்கும் ஏற்பாடு முறையாக இருப்பதில்லை, சாகுபடி செய்யக்கூடியவர் ஒருவர், இன்னொருவருக்கு பட்டா இருக்கிறது. நிலம் விற்பனைக்கோ அல்லது அது கை மாறுகிற காலத்திலோ அந்த விவசாயிக்கு உண்டான பட்டாவில் எந்த எந்தப் பகுதிகள் இருக்கின்றன. எவ்வளவு நிலம் இருக்கிறது என்று பட்டா வழங்கினால் நலமாக இருக்கும். அப்படி இல்லாததால் சர்க்கார் கொடுக்கக்கூடிய பலவிதமான கடன்களை விவசாயிகள் பெறமுடியாத நிலைமை இருக்கிறது. ஆகவே இது விஷயமாக உடனடியாக நடவடிக்கை எடுப்பதற்கு ஏற்பாடு செய்யவேண்டும்.

ஜமாபந்தி முறையிருக்கிறது. இது சென்ற காலத்திலே ராஜாக்கள் பட்டத்திற்கு வருகின்றபொழுது சில நன்மைகளைச் செய்யக்கூடிய தர்பார் முறையில் இருந்தது. அந்தக் காலத்திற்குத்தான் அந்தமுறை சரி. ஆனால் இப்பொழுது அதற்குப் பதிலாக அதிகாரிகளிடத்தில் அதே மாதிரி மகஜர்களைக் கொடுக்கக்கூடியமுறை இருக்கிறது. ஜமாபந்தி காலத்தில்தான் மனுக்களைக் கொடுக்கவேண்டுமென்று இருக்கிறது. அப்படியில்லாமல் எந்தக் காலத்திலும் எந்த அதிகாரி யிடத்திலும் மனுக்கள் கொடுத்தால் அந்த அதிகாரிகள் உடனே கிராமங்களுக்குச் சென்று விசாரித்து அந்தக் கோரிக்கைகளை நிறை வேற்றக்கூடிய முறையை ஏற்படுத்தவேண்டும். விளைச்சலைப் பொறுத்த வரையில் மகசூல் எவ்வளவு, எந்தக் காலத்திலே விளைந்தது என்பதையெல்லாம் அவ்வப்பொழுது போடாமல் ஒரு நாளில் இப்படித்தான் போடவேண்டுமென்று மேலதிகாரிகள் சொல்லி சாதாரணக் கர்ணங்கள் விளையாததைக்கூட விளைந்ததாக எழுதிவிடக்கூடிய நிலைமையெல்லாம் ஏற்படுகிறது. இதையெல்லாம் மாற்றவேண்டும். இந்த ரெவின்யூ இலாகாவினுடைய அதிகாரிகளுக்கு அதிகாரங்கள் அதிகமாக இருக்கின்றன. பஞ்சாயத்து யூனியன்கள் சம்பந்தப்பட்ட வரையில் பஞ்சாயத்து ஒன்றிப்பு அதிகாரிகளுக்கு இருக்கின்ற அதிகாரங்களிலே ரெவின்யூ இலாகா அதிகாரிகள் தலையிடுகிறார்கள். பஞ்சாயத்து யூனியன் அதிகாரிகளுக்கு அதிக அதிகாரங்கள் இருக்கவேண்டும். விவசாயிகளுக்குக் கொடுக்கக்கூடிய கிணறு வெட்டுக் கடன் போன்ற கொடுக்கக்கூடிய கடன்களை பஞ்சாயத்து யூனியன் கமிஷனர் அவர்களே 5,000 ரூபாய் வரை கொடுக்கக்கூடிய அதிகாரங்கள் வழங்கவேண்டும். ரெவின்யூ அதிகாரிகள் இதிலே தலையிடாத முறையை ஏற்படுத்தவேண்டும். பஞ்சாயத்து யூனியன் அமைப்பு ஓரளவுக்கு ஜனநாயக அமைப்பாக இருப்பதால் அதிலே சாதாரண மக்கள், விவசாயிகள் அவர்களுக்குள்ள கோரிக்கைகளை தேவைகளை அங்கே போய்ச்சொல்லக்கூடிய அமைப்பாக அது இருப்பதால் அந்த ஸ்தாபனத்தில் ரெவின்யூ இலாகா தலையிடும் போக்கை மாற்றவேண்டும். பஞ்சாயத்து யூனியன் அதிகாரத்திற்குட்பட்ட பிரதேசத்திலே புறம்போக்கு நிலத்தை யாராவது ஆக்கிரமித்துக் கொண்டாலும் அல்லது அந்த நிலத்தைச் சாகுபடிக்கு விட வேண்டுமென்றாலும்கூட ரெவின்யூ அதிகாரிகள்தான் கவனிக்க வேண்டியிருக்கிறது. பஞ்சாயத்து யூனியன் ஆணையாளர்களோ அல்லது சேர்மன்களோ கவனிக்கமுடியவில்லை. இதை மாற்றியமைக்கவேண்டும்.

மாவட்ட அபிவிருத்திக் கவுன்சில் கூடுகிற கூட்டங்களுக்கு எல்லாம் கலெக்டர்கள் தலைமை தாங்குகிறார்கள். மாவட்ட அபிவிருத்திக் கவுன்சில் உறுப்பினர்கள் தங்களுக்குள்ளேயே ஒரு தலைவரைத் தேர்ந்தெடுத்துக் கொள்ளவேண்டும். அப்படிச் செய்தால் தான் வரக்கூடியவர்கள் தங்களுடைய கருத்துக்களை நல்ல முறையில் ஜனநாயக முறையில் சொல்வதற்கு வாய்ப்பு இருக்கும் என்று கருதுகிறேன். சாகுபடி அடங்கலிலே நிலச்சுவான்தார்களுடைய பெயர்கள்தான் குறிப்பிடப்படுகிறதே தவிர சாகுபடி செய்யக்கூடியவர் களுடைய பெயர்கள் குறிப்பிடுவது இல்லை. ஆகவே அடங்கலில் சாகுபடி யாளர்களின் பெயர்களைப் பதிவு செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும். தாலூகா ஆபீஸுக்கு யாராவது சாகுபடி சம்பந்தமாக எழுதினால் சரிவர பதில் வருவதில்லை. இப்படிப்பட்ட குறைபாடு களையெல்லாம் போக்கவேண்டும். மாவட்ட அதிகாரிகள் எல்லாம் அரசாங்கத்தின் திட்டங்களை நிறைவேற்றக்கூடியவர்களாக இருக்க வேண்டுமேதவிர ஆட்சி செய்கிற கட்சி முக்கியஸ்தர்களை திருப்திப்படுத்தக் கூடிய போக்கு இருக்கக்கூடாது. அதைப்பற்றி இந்த அரசு ஆரம்பத்திலே கவனித்து நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று கேட்டுக் கொண்டு என்னுடைய உரையை முடித்துக்கொள்கிறேன்.

***திரு. பி. துரைராஜ் :** சட்ட மன்றத் தலைவர் அவர்களே, இந்த மன்றத்தின் அனுமதிக்காக வைக்கப்பட்டுள்ள மாவட்ட நிர்வாக மானியக் கோரிக்கையின் மீது பேசுவதற்கு வாய்ப்புக் கொடுத்ததற் காக நான் என்னுடைய நன்றி கலந்த வணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன். மாவட்ட நிர்வாகம் கடந்த காலத்திலே நல்ல முறையிலே செயல்படாததன் காரணமாக ஏழை மக்கள், ஹரிஜன மக்கள் கஷ்டங்களை அனுபவித்துக்கொண்டு வந்தார்கள். குறிப்பாக மாவட்ட தலைநகரங்களிலே வாரந்தோறும் திங்கட்கிழமை ஏழை மக்களுடைய கஷ்டங்களை நேரிலே கேட்டு அறிவதற்கும், அவர்களுடைய குறைகளை விசாரித்து நிவாரணங்கள் கொடுப்பதற்கும் குறைகளைத் தீர்க்கும் நாளாக அது கருதப்பட்டு வருகிறது. அங்கே வருகின்ற ஏழை மக்கள் குறைகள் தீர்க்கப்படும் என்ற நோக்கத்தோடுதான் தாங்கள் எவ்வளவு கஷ்டங்களை அனுபவித்தாலும் கடன்களை வாங்கிக்கொண்டு தலைநகரத்திற்கு வந்து குறைகளை கலெக்டரைப் பார்த்துத் தெரிவித்தாலும்கூட அவை கவனிக்கப்படுவதற்கு மாதக் கணக்கிலே வருஷக் கணக்கிலே ஆகின்றது. அவர்களுடைய குறைகள் உடனுக்குடன் தீர்க்கப்படுவதில்லை. ஆகவே அவர்கள் மேலும் மேலும் கஷ்டப்படக்கூடிய நிலையில்தான் இருக்கிறார்கள். அதனால் மேற் கொண்டு முயற்சியெடுப்பதில் தளர்ந்து போகக்கூடிய நிலை ஏற்பட்டு அவதிக்காளாகிறார்கள். ஆகவே குறைகளை தலைநகரங்களில் மட்டு மல்லாமல், ஒவ்வொரு டிவிஷனிலும் ஒவ்வொரு வாரமும் கலெக்டர்கள் சென்று அறிந்து வேண்டிய வசதிகளைச் செய்து கொடுப்பதற்கு அரசாங்கம் ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

ஜமாபந்தி என்பது ஜில்லா கலெக்டர் அவர்களால் வருஷந்தோறும் ஒரு முறை நடைபெறுகின்றது. ஏழை விவசாயிகள் பட்டா மாறுதலிலே ஏற்படக்கூடிய குறைகளைத் தெரிவித்தால் உடனுக் குடனே விசாரித்து அவர் பதில் சொல்வார் என்ற நம்பிக்கையில் வருகிறார்கள். ஆனால் கலெக்டர் மனுக்களை வாங்கி ஒரு கையெழுத்து போட்டு அதை தாசில்தாருக்கோ மற்ற அதிகாரிகளுக்கோ அனுப்பிவிடுகிறார். அதைப்பற்றிய விவரம் அதற்குப்பிறகு தெரியாது. காலதாமதம் ஏற்படு கிறது. விவசாய மக்கள் கஷ்டப்படுகிறார்கள். இந்த ஆண்டுகூட இப்படித் தான் ஜமாபந்தி நடந்தது. ஆகவே அங்கங்கே கொடுக்கப்படுகிற மனுக்களை யெல்லாம் கர்ணம், கிராம முன்சீப் இவர்களை வைத்துவிசாரித்து அப்பொழு தே கட்டளையிடுவதற்கு நம்முடைய அரசாங்கம் ஏற்பாடுசெய்ய வேண்டு மென்று கேட்டுக்கொள்ளுகிறேன். மாவட்டங்களிலே கல்வி இலாகா நிர் வாகமானது தாமதமான நிலையில் நடந்துகொண்டு இருக்கிறது. ஆசிரிய ரோ அல்லது மற்றவர்களோ ஏதாவது நிவாரணம் கேட்டால் அங்கே உள்ள மாவட்ட அதிகாரிகளிடத்தில் மனுச் செய்தால் அது கவனிக்கப் படுவதில் காலதாமதம் ஏற்படுகிறது. ஆகவே, எவ்வளவு விரைவாக எந்த விதத்திலே இந்த இலாகாவை முடுக்கி வைக்க சீர்திருத்த அதற்கான முறைகளைக் கையாளவேண்டுமென்று கேட்டுக்கொள்ளு கிறேன்.

அடுத்தபடியாக, அரிசன மக்களுக்கு மாவட்ட அரிசன நல இலாகாவில் இருந்து என்னென்ன சலுகைகள் தருகிறார்கள், அரசாங்கத்தால் அவ்வப்போது கொடுக்கப்படுகிற கடன் வசதிகள் என்னென்ன, அவற்றுக்கு அரசாங்கத்தை எந்த முறையில் அணுக வேண்டும் என்பதைப் பற்றியெல்லாம் விளம்பர இலாகாவினர் மூலம் பொது மக்களுக்குத் தெளிவாகக் கூறவேண்டும். அரிசன மக்களுக்கு வீடு கட்டிக் கொடுக்கப்பட்ட நிலம் 19 ஆண்டு காலம் ஆகியும் ஆர்ஜிதம் செய்து கொடுக்கப்படவில்லை. அதனால் அவர்கள் வீடுகள் கட்டிக் கொள்ளமுடியாத சூழ்நிலை இருக்கிறது என்று அவர்கள் கஷ்டப்படுகிறார்கள். அதற்கு ஒரு நிரந்தர பரிகாரம்

உடனடியாகத் தேவை. அவைபற்றி உடனடியாகக் கவனித்து வீட்டு மனைகளை வழங்கி வீடு கட்டிக்கொள்ள ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

பிற பகல் 12 30 அடுத்தபடியாக, உணவுக் கொள்முதல் விஷயங்களில் அரசாங்கம் ஒரு எக்கருக்கு குறைந்தவர்களிடமிருந்து கொள்முதல் செய்யக் கூடாது என்று உத்தரவிட்டிருந்தும்கூட சிறு நிலச் சுவான்தார்களிடமிருந்து கண்டிப்பான முறையில் உணவுக் கொள்முதல் நடத்தியதைக் கண்டேன். நான் அதைக் கண்டித்த பிறகுதான் நிறுத்தினார்கள். அந்த மாதிரி சிறு நிலச் சுவான்தார்களிடமிருந்து கொள்முதல் செய்யக்கூடாது என்பதற்கு நல்ல முறையில் உத்தரவிட்டு ஏழை உழவர்களுக்கு வசதி செய்து கொடுக்க வேண்டும். நம்முடைய அரசாங்கத்திலே மாவட்ட நிர்வாக ஆட்சியானது ஏழை மக்களுடைய குறைகளைத் தீர்க்கக் கூடிய முறையில் சீர்படும் என்ற நம்பிக்கையைத் தெரிவித்து இந்த மானியத்தின் மீது பேச வாய்ப்பளித்த தலைவர் அவர்களுக்கு மீண்டும் நன்றியைத் தெரிவித்து முடித்துக் கொள்கிறேன். வணக்கம்.

***திரு கே. என். குமாரசாமி** : தலைவர் அவர்களே, மாவட்ட நிர்வாக மானியக் கோரிக்கையின் பேரில் சில வார்த்தைகள் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். பொதுவாக, தமிழகத்தில் நடைபெறுகின்ற பொது நிர்வாகங்களில் பல குறைபாடுகள் இருப்பதை எனக்கு முன்னாலே பேசிய சட்ட மன்ற உறுப்பினர்கள் பலரும் கூறினார்கள். இந்தக் குறைபாடுகளைத் தீர்க்க ரெவின்யூ டிபார்ட்மெண்டில் உள்ள ஊழல்களைக் களைந்தெரிய வேண்டும். சாதாரண மக்கள் போடுகிற விண்ணப்பங்களுக்கு உடனடியான பதிலைக் கொடுக்கவேண்டுமென்ற நோக்கத்தோடு நிர்வாகம் செயல்பட வேண்டுமென்ற பிரச்சினைகளைப் பற்றிப்பல வருஷங்களாகச் சொல்லிக் கொண்டுதான் வருகிறோம். அது சரியான அமைப்பு முறையிலே திருந்தி செயல்படுவதாக இல்லை.

அபிவிருத்தி மன்றங்கள் என்று சொல்லி அந்த மன்றத்தின் மூலமாக பொதுமக்கள் கருத்தைத் தெரிந்து நிர்வாகத்திலுள்ள குறைபாடுகளை நீக்கி வைக்க வேண்டுமென்பதற்காகத்தான் இந்த அபிவிருத்தி மன்றங்கள் போடப்பட்டிருக்கின்றன. அந்த அபிவிருத்தி மன்றங்களில் சொல்லப்படுகிற கருத்துக்கள் எந்த அளவுக்கு நிறைவேற்றப்படுகிறது என்று பார்த்தால், 'பழைய குருடி கதவைத் திறடி' என்று சொல்லும் அளவுக்குத்தான் இருந்து கொண்டிருக்கிறது. இன்று நிர்வாகக் குவியலின் காரணமாகவோ, நிர்வாக அதிகாரங்கள் அதிகமான காரணத்தாலோ செயல்படாமல் இருக்கலாம். அவ்வளவு அபிவிருத்தி வேலைகளையும் ஜில்லா லெவலில் அதிகாரிகள் மத்தியில் வைப்பதன் மூலம் நிர்வாகங்கள் சரியாக நடைபெறுவதில் தடை ஏற்படுகிறது என்று பொதுமக்கள் கருத்தைச் சொல்லியும் அமுலுக்கு வரவில்லை என்று சொன்னால் அந்த மன்றங்களைப்பற்றி அலட்சியமான மனோபாவம் மக்களுக்கு உண்டாகும் அளவுக்கு நிலைமை ஏற்படுகிறது. அதைத் திருத்த வேண்டுமென்று சொன்னால் மன்றங்களில் சொல்லப்பட்ட ஆலோசனைகளில் 75 சதவிகிதத்தையாவது அமல்படுத்தும் முயற்சியை நிர்வாகம் மேற்கொள்ளவேண்டும். அப்படிச் செய்வதன் மூலமாகத்தான் பிரச்சினைகளைச் சுலபமாக தீர்க்க வழிவகை ஏற்படும்.

விவசாயிகளுக்கு மின்சாரம் சுலபமாகக் கிடைக்கவேண்டுமென்று பல கட்டங்களில் பேசியிருக்கிறோம். கடந்த 3, 4 வருஷங்களாக விண்ணப்பங்கள் கொடுக்கப்பட்டும் இன்னும் பைசல் செய்யவில்லை. ஆனால் மின்சார இலாக்காவினர் சமாதானம் சொல்லுகிறார்களே தவிர, அந்தப் பிரச்சினையைத் தீர்க்க நடவடிக்கை எடுப்பதே கிடையாது. உணவு உற்பத்தியை அதிகரிக்க வேண்டுமென்று சொல்லும்போது நிர்வாகத்தில் இருக்கக் கூடியவர்கள் நல்ல முறையில் நடவடிக்கை எடுத்துக் கொண்டால்தான் அது நிறைவேறமுடியும்.

புறம்போக்கு நிலங்களில் ஜனங்கள் வீடு கட்டிக் கொண்டார்கள். சட்ட விரோதமானதுதான் என்றாலும் அனுமதி இல்லாமல் வீடு கட்டிக் கொண்டார்கள். அப்படி வீடு கட்டுகின்றவர்களை 6, 7 வருஷங்கள் வரை கவனிக்காமலே விட்டுவிட்டு, அதற்குப் பிறகு நடவடிக்கை எடுத்து அந்த வீடுகளை இடித்துத் தள்ளவேண்டுமென்று உத்தரவு போடுகிறார்கள். சர்க்கார் உடனடியாகக் கவனித்து வீட்டைக் கட்டக்கூடாது என்று கூறி இருக்கவேண்டும். தடுத்து இருக்க வேண்டும். பல வருஷங்கள் கழித்து வீட்டை இடிக்கவேண்டுமென்று உத்தரவு போடுவது தங்களுடைய மூலதனத்தைப் போட்டு வீடு கட்டியவர்களுக்கும் நஷ்டம் ; சர்க்கார்மேலும் அதிருப்தி ஏற்படக் கூடிய நிலை. ஆகவே, இதை ஆரம்பத்திலேயே தடுப்பதற்கு உடனடியாக நடவடிக்கை எடுத்துக் கொள்ளவேண்டும்.

ரெவின்யூ டிப்பார்ட்மெண்டில் லோன் அப்ளிகேஷன் போட்டால், "உனக்கு 500 ரூபாய் மானியம் வரப் போகிறது, எனக்கு 100 ரூபாய் கொடு" என்று கேட்கக்கூடிய நிலை இருக்கிறது. சர்க்கார் 500 ரூபாய் மானியமாகக் கொடுப்பதிலே 100 ரூபாய் லஞ்சமாகக் கொடுக்கக்கூடிய நிலைமை இருக்குமானால் விவசாயிகளுடைய நிலைமை என்ன? இந்த நிலைமை இருக்கும் வரை விவசாயத்தில் அபிவிருத்தியை எதிர்பார்க்க முடியாது. நிர்வாகத்தில் உள்ள குறைபாடுகளை எவ்வளவு சீக்கிரம் களைந்தெரியவேண்டுமோ அந்த அளவுக்குக் களைந்தெறிவதற்குச் சுறுசுறுப்பான நடவடிக்கைகளை எடுத்துக் கொண்டாகவேண்டும். நிர்வாகத்திலுள்ள இத்தகைய குறைபாடுகள் சீர்படவில்லையென்றால் எந்த ஆட்சி வந்தாலும் மக்கள் குறை சொல்லிக் கொண்டுதான் இருப்பார்கள். கூட்டுப் பட்டாக்களைத் தனிப்பட்டாக்களாகப் பிரித்துக் கொடுப்பதுபற்றிப் பல வருஷங்களாகச் சொல்லி வந்தும் அதற்கான ஏற்பாடுகள் ஒன்றும் செய்யவில்லை. அதைப் பிரித்துக் கொடுப்பதில் என்ன தடை? ஒன்றும் கிடையாது. மனம் வைத்து அதைச் செய்வது கிடையாது. இதைச் செய்யாத காரணத்தால் விவசாயிகள் கடன் முதலியவற்றைப் பெறுவதில் மிகுந்த கஷ்டத்திற்கு உள்ளாகிறார்கள். கிணறு வெட்டப் பணம் கேட்டால் கிடைக்கவில்லை. இந்த நிலைமையைச் சீர்திருத்த உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும்.

விவசாயிகள் தங்களுடைய எந்தத் தேவைக்கும் தாசில்தார் ஆபீசுக்குத்தான் போக வேண்டியிருக்கிறது. அவர்கள் காலையில் போனால் சாயந்திரம் வரை கூடப் பதில் சொல்லுவதில்லை. 'மறு நாள் வா' என்று சொல்லுகிறார்கள். இதனால் விவசாயிகள் தாலுகா ஆபீஸ் என்றால் அது ஒரு எமகண்டம் என்று நினைத்துக் கொண்டிருக்கிறார்கள். கடந்த பல ஆண்டுகளாக அபிவிருத்தி கவுன்சில் இத்தகைய குறைபாடுகளை எல்லாம் எடுத்துச் சொல்லி அவற்றைத் தீர்த்துக் கொடுக்கவேண்டுமென்று சொல்லியும் எதையும் சரியாக ஏற்று அமல்படுத்துவதில்லை. குட்டை குளங்களை அபிவிருத்தி செய்யவேண்டுமென்று நூற்றுக் கணக்கான விண்ணப்பங்கள் வந்திருக்கின்றன. கவுன்சில் தீர்மானங்களை அமல்படுத்துவதிலே காலதாமதம் ஏற்படுவதால் பயன் ஏற்படுவதில்லை. விவசாயிகள் நன்மை அடையத்தக்க நிலை இல்லை.

இன்றைக்குப் புன்செய் நிலங்களுக்கு தீர்வை ரத்து செய்யப்பட்டு விட்டது. ஆகவே, நகர பஞ்சாயத்துக்களுக்குப் பில் கலெக்டர்களை அதிகமாகப் போடுவதற்குப் பதிலாக கிராமக் கணக்கப்பிள்ளை, மணியக்காரர்களிடத்தில் பஞ்சாயத்து வரிகளை வசூலிக்கும் பொறுப்பை ஒப்படைத்தால் பஞ்சாயத்துக்கும் செலவு குறையும். அதே சமயத்தில் இவர்களுக்கும் கொஞ்சம் அதிகப்படியான சம்பளத்தைக் கொடுப்பதிலும் நியாயம் இருக்கும். அவர்கள் சம்பளம் 16 அல்லது 17 ரூபாய் என்றால் வாழ்க்கைக்கு வேறு வழி தேடுகிறார்கள். ஆகவே அவர்கள் சம்பளத்தை உயர்த்திக் கொடுக்க ஒரு மார்க்கம் தேட வேண்டும். இப்போது 55 வயதில் ரிட்டயராகிறார்கள். 55 வயதிலும் அவர்கள் திடகாத்திரர்களாகவே இருக்கிறார்கள். அந்தவயதில் வேலையிலிருந்து விலகி விடவேண்டுமென்றால் அவர்கள் குடும்பங்களின் நிலை என்னவாகும்?

*திரு சி. வே. வேலப்பன் : மதிப்பிற்குரிய மாமன்றத் தலைவர் அவர்களே, நம் முதல் அமைச்சர் அவர்கள் கொண்டுவந்திருக்கும் இந்த மாவட்ட நிர்வாகத்துறை மானியத்தை ஆதரித்து ஒரு சில கருத்துக்களைக் கூற விரும்புகிறேன். மாவட்டத்துறை என்று சொல்லும்போது எங்கள் மாவட்டமாகிய சேலம் மாவட்டம் பின்தங்கிய மாவட்டமாக இது வரையில் இருந்து கொண்டு வந்திருக்கிறது. இந்தத்துறை நிர்வாகத் துறையாக இருந்தாலும் மாவட்டம் என்று வருகிறபோது எங்கள் மாவட்டம் பின்தங்கிய நிலையில் இருக்கிறது. ஆகவே அதற்கு நல்வழி காண இந்த அமைச்சரவை முயலவேண்டுமென்று பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன். விவாதம் தொடங்கப்பட்டு விவாத முடிவில் பல கோடிக்கணக்கான ரூபாய் ஒவ்வொரு நிர்வாகத்துறைக்கும் ஒதுக்கப்படுகிறது. அப்படி ஒதுக்கப்படும் பணம் முழுவதும் செவ்வனே நல்வழியில் பயன்பட வேண்டுமென்றுதான் நாம் கருதுகிறோம். ஆனால் இங்கு ஒதுக்கப்படுகிற தொகை பூராவும் மக்களிடம் நல்வழியில் செலவு செய்யப்படுகிறதா என்றால்,.அதற்கு மூல காரணம் மாவட்ட நிர்வாகம் தான். மாவட்ட நிர்வாகம் சிக்கல்கள் இல்லாமல், ஊழல்கள் இல்லாமல் நல்ல முறையில் செயல்படுமானால்தான் நம் எண்ணம் நிறைவேறும். அந்த வகையில் பார்க்கும்போது விவசாயிகள்தான் நம் நாட்டின் முதுகெலும்பு என்று சொல்லப்படுகிறது. ஆனால் அந்த விவசாயிகளுக்கு மாவட்ட நிர்வாகம் நடைபெறுவதில் பல இன்னல்கள், இடுக்கண்கள் ஏற்படுகின்றன. மாவட்ட நிர்வாகத்தில் உள்ள தலைமை அதிகாரிகள் கடவுள்களாக இருக்கிறார்கள். அதில் கீழே அந்தத் துறையில் பணியாற்றுகிறவர்கள் பூசாரிகளாக இருந்துகொண்டு கடவுளுக்குக் கெட்ட பெயரை உண்டாக்கும் வகையில் மக்களுக்கு கேடு விளைவிக்கும் வகையில் நடந்து கொள்கிறார்கள். விவசாயிகளுக்கு கடன் வழங்குகிறபோது ஏராளமான ஊழல்கள் ஏற்படுகின்றன. அந்த ஊழல்கள் போக்கப்படவேண்டும். பாசனத் திட்டங்களை எடுக்கிறபோது அந்தத் திட்டங்கள் ஒழுங்காக செயல்படுவதில்லை காரணம், ஒரு துறைக்கும் இன்னொரு துறைக்கும் உள்ள அதிகாரிகள் அவற்றை எடுத்துச் செய்யும்போது கலந்து செய்வதில்லை. அப்படிப்பட்டதொரு நிலை இருப்பதன் காரணமாகத்தான் ஐந்து ஆண்டு காலமாக ஒரு திட்டம் நிறைவேற்றப்படாமல் அதற்கு காரண காரியங்களைக் கேட்கிறபோது அந்த காரண காரியங்களை கொடுப்பவர்கள் யார் தவறு செய்கிறார்களோ அவர்களிடத்தில் இருந்துதான் மீண்டும் ரிப்போர்ட பெறுகிற நிலை இருக்கிறது. ஆகவே ஒரு துறையில் ஊழல்கள் இருக்கின்றனவா என்று கேட்கும்போது அங்கு நடந்தது ஊழலா இல்லையா என்பதை பரிசீலிக்க வேறு ஒரு துறையிலிருந்து அதிகாரிகள் வந்து பரிசீலிக்க வேண்டும்- அந்தந்த இலாக்காக்களில் உள்ளவர்கள் அவர்களுக்கு கீழுள்ளவர்களைக் காட்டிக் கொடுக்க விரும்பாது பூசி மறைக்கும் வகை இருக்கிறது. குறிப்பாகச் சொல்லவேண்டுமானால் அப்படிப்பட்ட குறைபாடுகளை நாங்கள் மாவட்ட அபிவிருத்தி மன்றங்களில் எடுத்துவைக்கிறோம். அப்படி எடுத்து வைத்து பேசும்போது ஒருசில குறைபாடுகள் ஒத்துக் கொள்ளப்படுகிறது. சில குறைபாடுகள் ஒத்துக்கொள்ள முடியாத நிலையில் பூசி மறைக்கப்படுகிறது. குறிப்பாக எல்லாத் துறைகள் பற்றியும் மாவட்ட அபிவிருத்தி மன்றங்களில் பேசுவதற்கு வாய்ப்பு இருக்கிறது. ஆனால் போலீஸ் துறையினர் செய்கிற நியாயத்திற்கு புறம்பான காரியங்களை, அப்படி நடந்துவிட்டால், அது பற்றி எடுத்துச் சொல்ல பெரிய போலீஸ் அதிகாரிகளைத்தான் நாடவேண்டியிருக்கிறது. அவர்களும் விட்டுக் கொடுக்கும் மனம் இல்லாத வகையில் மறைத்து விடுகிறார்கள். பிறகு இன்னார் வந்து உங்கள் மீது புகார் சொல்கிறாரே என்று கீழுள்ள அதிகாரிகளிடம் சொல்லி விடுகிறார்கள். அடுத்த நாள் பார்க்கிற போது நியாயத்திற்காகப் போராடியவர்களைப் பார்த்து அவர்கள் முகம் சுளிக்கிற அளவிற்கு நிலைமை இருக்கிறது. ஆகவே மாவட்ட அபிவிருத்தி மன்றங்களில் விவாதிக்கப்படுகிற பல துறைகளோடு போலீஸ் துறையையும் அதோடு இணைத்துக்கொள்ள வேண்டும். அப்போதுதான் கிராமங்களில் தவறுகள் ஏற்படாமல் அதுபற்றி விவாதிக்க வாய்ப்பிருக்கும். அப்படி வாய்ப்பிருக்கிறது என்பதைக் காட்டியே அந்தக் குறைபாடுகளை நீக்கமுடியும். நாட்டு மக்களின் வாழ்வு மலரவேண்டு

மானால் கிராம அதிகாரிகள்தான் அதற்கு அடித்தளமாக இருக்கிறார்கள். கிராம கர்ணங்கள் கணக்கு எழுதும்போது ஒரு வீட்டுத் திண்ணையில் உட்கார்ந்து கொண்டே கணக்குகளை எழுதி முடித்துவிடுகிறார்கள். ஜமாபந்தி என்ற சடங்கோடு அது முடிந்துவிடுகிறது. ஆகவே கர்ணங்களைப் பொறுத்தவரையில், இப்போதுள்ள முறை மாற்றப்பட வேண்டும். கொஞ்சம் உயர்மட்ட அதிகாரிகளை கிராம கர்ணங்களாக ஆக்க வேண்டும். இரண்டு மூன்று கிராமங்களுக்கு என்று நல்ல படித்த அதிகாரிகளை சர்க்கார் நியமித்து அவை திறம்பட இயங்கக் செய்ய வேண்டும். அவர்கள் கொடுக்கிற புள்ளிவிவரங்கள் தான் இங்கு சட்ட மன்றத்தில் கூட வைக்கப்பட்டு பதில் அளித்துக் கொண்டுவருகிற நிலை இருந்துகொண்டிருக்கிறது. அந்தப் புள்ளிவிவரங்கள் உண்மைக்கு புறம்பானவை என்று சொல்ல முடியும். ஆகவே இதை மாற்றியமைக்க வேண்டும். இப்போது உணவுக்கட்டுப்பாட்டின் கீழ், செக் போஸ்ட்ஸ் வைத்திருக்கிறார்கள். இந்த செக்போஸ்ட்ஸ்க்கு யாரை காவலாக வைத்திருக்கிறார்கள் ? 100 ரூபாய் ஊதியம், பெறுகிறவர்களை வைத்திருக்கிறார்கள். செக் போஸ்டுகளில் உணவு தானியங்களைக் கடத்திச் செல்பவர்களை சுலபத்தில் இவர்கள் மடக்கி விடுகிறார்கள். நானும் அந்தப் பகுதி தாசில்தாரும் ஒரு செக் போஸ்டுக்கு சென்றபோது அங்கு யாருமே இல்லை. பிறகு ஆள்விட்டு கூப்பிட வேண்டிய நிலை ஏற்பட்டது. ஆகவே இவ்விடங்களில் உயர் மட்ட அதிகாரிகளைப் போடவேண்டும். அப்போது தான் ஒழுங்கீனங்கள் நிவர்த்திக்கப்பட முடியும். யூனியன்களில் பல இலாகாவிலிருந்தும் அதிகாரிகள் போடப்பட்டிருக்கிறார்கள். விவசாய இலாகாவிற்கு என்று தனி அதிகாரி, கல்வி இலாகாவிற்கு என்று தனி அதிகாரி என இப்படிப் போட்டிருக்கிறார்கள். அவர்கள் கமிஷனர் கண்ட்ரோல் இல்லை. கமிஷனருக்கும் அவர்களுக்கும் சம்பந்தமில்லை. இந்த நிலையில் அவர்கள் என்ன செய்கிறார்கள் என்றே கமிஷனருக்குத் தெரியாது. இந்த நிலையை மாற்றியமைக்கவேண்டுமென்று கேட்டுக் கொண்டு எனக்கு இந்த வாய்ப்பை அளித்த தலைவர் அவர்களுக்கு என் நன்றியைத் தெரிவித்துக் கொண்டு விடைபெறுகிறேன். வணக்கம்.

*திரு. ஆர். பொன்னப்ப நாடார் : சட்டப் பேரவைத் தலைவர் அவர்களே, இந்த மானியக் கோரிக்கையின்மீது ஒரிரு கருத்துக்களைக் கூறுவதற்கு முற்படுகிறேன். குறிப்பாக ஜில்லா அபிவிருத்தி கவுன்சில் என்று இயங்குகிற முறையை மாற்றியமைக்க வேண்டுமென்று இங்கு பல அங்கத்தினர்களும் எடுத்துக் கூறினார்கள். இதற்கு தலைவராக ஜில்லா கலெக்டரை வைக்கக் கூடாது, நான்-அபிஷியல்லை வைக்கவேண்டுமென்ற கருத்தை பலரும் இந்த சபையில் வலியுறுத்திக் கூறியிருக்கிறார்கள். அது மிகவும் பொருத்தமான வாதம் என்பதை நான் இந்த சந்தர்ப்பத்தில் மதிப்பிற்குரிய முதல் அமைச்சர் அவர்களின் கவனத்திற்காக கொண்டு வர விரும்புகிறேன். இன்று ஜில்லா அபிவிருத்தி கௌன்ஸிலில் நடக்கும் போது பல அதிகாரிகளும் அங்கு வருகிறார்கள். ஆனால் சரியான முறையில் அவர்களிடம் இருந்து விவரங்களைத் தெரிய வேண்டுமானால் ஒரு நான்-அபிஷியல் சேர்மனாக இருந்தால்தான் போதிய அளவிற்கு நம் வசதிகள் பெருகும் என்று இந்த சந்தர்ப்பத்தில் கூறிக்கொள்ள விரும்புகிறேன். ஜில்லா கலக்டர் வேண்டுமானால் அந்த கௌன்ஸிலின் கன்வீனர் அல்லது காரியதரிசியாக செயலாற்றுவது சிறந்ததாக இருக்கும். கேள்வி நேரம் ஒன்றிரண்டு மணி நேரம் வைக்கவேண்டுமென்ற கருத்தையும் இங்கே கூறினார்கள். சட்டசபையில் கேள்வி நேரம் இருப்பது மாதிரி ஜில்லா அபிவிருத்தி மன்றங்களிலும் இந்தமாதிரி கேள்வி நேரம் வைப்பது சிறந்ததாக இருக்கும் என்றே நான் கருதுகிறேன். ஜில்லாவிலுள்ள மக்களின் அன்றாடப் பிரச்னைகள் பற்றி ஜில்லாவில் உள்ள பிரதிநிதிகள் பஞ்சாயத்து ஒன்றிப்புத் தலைவர்களானாலும் சரி அல்லது சட்டசபை அங்கத்தினர்களானாலும் சரி ஆராய்ந்து காரியங்களை எளிதில் நடத்த இந்த மன்றங்களுக்கு அது பெரு உதவி புரியும். ஆகவே கேள்வி நேரத்தை இந்த மன்றங்களில் வைப்பதற்காக இந்தச் சட்டத்தை, வேண்டுமானால் அதற்கு திருத்தமும் செய்யவேண்டுமென்று இந்த சந்தர்ப்பத்தில் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

அடுத்தபடியாக, ஜில்லா கலெக்டர்கள் திங்கட்கிழமை அன்று க்ரீவன்ஸ்-டே—கோரிக்கை தினம்—என்று வைத்திருக்கிறார்கள். இந்தக் கோரிக்கை தினத்திலே பல்வேறு விதமான மனுக்கள் அவர்களுடைய பரிசீலனைக்காக சமர்ப்பிக்கப்படுகின்றன. சில வேளைகளில் அவருடைய அதிகார எல்லைக்கு உட்படாத கோரிக்கைகளைக் கொண்ட மனுக்களும் அந்த கோரிக்கை தினத்தில் சமர்ப்பிக்கப்படுகின்றன என்பதைக் கண்கூடாகக் கண்டுகொண்டிருக்கிறோம். இந்தக் கோரிக்கை தினத்திற்குப் பதிலாக, கலெக்டர் ஏனைய பகுதிகளுக்கு விஜயம் செய்யும்போது அந்தப் பகுதியிலுள்ள அதிகாரிகளுக்குத் தெரியப்படுத்தி, கிராம அதிகாரிகளுக்கும் தெரியப்படுத்தி, அங்கு பொது ஜனங்களுடைய க்ரீவன்ஸைக் கேட்டால் மிகவும் சிறப்பாக இருக்கும் என்று நான் கூறிக் கொள்ள விரும்புகிறேன்.

இன்னும் ஓரிரு விஷயங்கள் எனது ஜில்லா பற்றி எடுத்துக் கூற விரும்புகிறேன். இன்று புன்செய் நிலங்களுக்கு வரி ரத்து செய்யப்பட்டது என்று அரசாங்கம் அறிவித்திருக்கிறது. ஆனால், கன்னியாகுமரி ஜில்லாவிலே அங்கு ட்ரை லான்ட்ஸுக்கு இரண்டு ரூபாய் பேஸிக் டாக்ஸாக வசூல் செய்து கொண்டிருக்கிறார்கள். இந்த அடிப்படை வரியை வசூல் செய்வது சட்டபூர்வமானதா இல்லையா என்ற பிரச்சினையை நான் இங்கு எழுப்பவில்லை. சுப்ரீம் கோர்ட்டில் மூப்பில் நாயர் கேஸில் பேஸிக் டாக்ஸ் வசூல் செய்வது சட்டபூர்வமானது அல்ல என்று தீர்ப்பு ஆனது. புன்செய் நிலத்திற்கு இந்த பசலியிலிருந்து வரி கொடுக்க வேண்டியதில்லை என்ற ஆணையை உடனடியாகப் பிறப்பிக்க வேண்டும். ஒரு வேளை இரண்டு ரூபாய் தானே புன்செய் நிலங்களுக்குக் கொடுக்கிறார்கள் என்று இருந்தாலும், இதிலே பல கஷ்டங்கள் இருக்கின்றன. பெரும்பாலும் ஏழை விவசாயிகள் புன்செய் நிலங்களுக்கு உடைமையாளர்களாக இருக்கிறார்கள் ; அதற்கு வேண்டிய நடவடிக்கைகளை அரசாங்கம் உடனடியாக மேற்கொள்ள வேண்டுமென்று சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

இன்னொரு விஷயம். ஜமாபந்தியைப் பற்றியெல்லாம் எடுத்துக் கூறினார்கள். பட்டா பிரித்துக் கொடுப்பதில் காலதாமதம் இருக்கிறது. ஜமாபந்தியை டிமாண்ட்—கலெக்ஷன்—பாலென்ஸ் எப்படி இருக்கிறது என்று தெரிந்து கொள்ளக் கூடிய ஒரு சடங்கு என்று தான் கருதுகிறேன். டிமாண்ட்—கலெக்ஷன்—பாலென்ஸ் மட்டுமல்லாமல் பொது ஜனங்களுக்குச் செய்ய வேண்டிய பல காரியங்களும் இருக்கின்றன. இப்போது ஒரு வாரம், ஐந்து நாட்கள் என்று வைத்துக்கொண்டிருக்கிறார்கள். இதை அதிக நாட்கள் வைத்து ஒவ்வொரு கிராமத்திலும், அல்லது தாலூகா தலைநகரிலும் இதற்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்து, பட்டாவைப் பிரித்துக் கொடுக்க துரித நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமென்பதையும் கூறிக்கொள் விரும்புகிறேன்.

இன்னொரு முக்கியமான விஷயம், ஜில்லாக்களின் எல்லையைத் திருத்தி அமைக்கப்போவதாகப் பலரும் எடுத்துக் கூறினார்கள். ஜில்லாக்களின் எல்லையைத் திருத்தி அமைக்கும்போது, ஒவ்வொரு ஜில்லாவும் ஒரு வையபிள் யூனிட்டாக இருக்கும் முறையில் அமைக்க வேண்டும். எங்கள் ஜில்லாவிலே ரெவின்யூ அட்மினிஸ்ட்ரேஷனில் பல கஷ்டங்கள் இருக்கின்றன. ரெவின்யூ வில்லேஜ் என்று சொன்னால் பல சதுர மைல்கள் கொண்ட பெரிய பெரிய கிராமங்களாக இருக்கின்றன. அங்கு இருந்த ரெவின்யூ அட்மினிஸ்ட்ரேஷன் தனியாக இருந்ததால் பல கஷ்டங்கள் இருக்கின்றன. பெரிய ரெவின்யூ வில்லேஜாக இருப்பதை இரண்டாக அல்லது மூன்றாகப் பிரிக்க் வேண்டுமென்று முன்பு அரசாங்கம் ஆலோசனை செய்து, பிரிப்பதற்கான . நடவடிக்கைகளையும் மேற்கொண்டது. ஆனால் அந்தக் காரியங்கள் இதுகாறும் பூர்த்தி அடையவில்லை. ஆகையால் அதற்கும் துரித நடவடிக்கை எடுக்கவேண்டும் என்பதையும் கேட்டுக்கொள்கிறேன்.

இன்னொரு கஷ்டமான நிலைமை இருப்பது என்னவென்றால், அந்தப் பகுதியிலே திருவாங்கூர்-கொச்சியில் உள்ள சட்டம் இன்னும் பல வகைகளில் இருக்கின்றன. குறிப்பாக லாண்ட் அஸைன்மென்ட் ரூல்ஸ் என்று திருவாங்கூர்-கொச்சி சட்டத்தை அந்தப் பகுதிக்குப் பிரயோஜனப்படுத்திக்கொண்டிருந்தோம். அது ஸஸ்பெண்ட் செய்யப் பட்டு நடை முறையில் இல்லாத காரணத்தினால் நிலங்களைப் பதிவு செய்து கொடுக்கப் பல கஷ்டங்கள் இருக்கின்றன. அதற்குப் பதிலாக மெட்ராஸ் போர்ட்ஸ் ஸ்டாண்டிங் ஆர்டர்ஸை அந்தப் பகுதிக்கு விஸ்தரித்தால் அந்தக் கஷ்டங்களைத் தவிர்க்க ஏதுவாக இருக்கும் என்று இந்த நேரத்தில் வலியுறுத்திக் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

குத்தகைப் பாட்டம் என்ற பெயரால் சர்க்கார். நிலங்களைப் பலரும் வைத்துக்கொண்டிருக்கிறார்கள். திருவாங்கூர் அரசாங்கம் தியாகிகளுக்கும் ஒரு சில நபர்களுக்கும் குத்தகைப் பாட்டம் என்ற பெயரில் நிலங்களை வழங்கியது. நூற்றுக்கணக்கான ஏக்கர் நிலங்களை சொற்பக் குத்தகையில் வைத்துக் கொண்டிருக்கிறார்கள். அரசாங்கத்திற்கு அந்த நிலங்களை எப்போது வேண்டுமானால் எடுத்துக்கொள்ள உரிமையும் இருக்கிறது. குறிப்பாக தக்கலை என்ற பகுதியில் புலவக்குறிச்சி என்ற கோட்டைப் பிரதேசம் இருக்கிறது. அங்கு 150 ஏக்கர் நிலம் இருக்கிறது. அதை திருவாங்கூர் அரசாங்கம் ஒரு தியாகிக்குக் கொடுத்தது. அந்த நிலத்தை கல்லூரிக்காக வேண்டுமென்று பொது ஜனங்களும், அங்கு இருந்த சட்டசபை பிரதிநிதிகளும் அதை எடுத்துக்கொள்ளவேண்டுமென்று அரசாங்கத்திடமும், அங்கு இருக்கிற அதிகாரிகளிடமும் பல முறை எடுத்துக் கூறினார்கள். அவர்கள் சொற்பமாக அரசாங்கத்திற்குத் குத்தகைப் பாட்டம் கொடுத்து நிலத்தை வைத்திருக்கிறார்கள். அவர்கள் அந்த நிலத்தை கீழ்ப்பாட்டம் கொடுத்து ஆயிரக்கணக்கான ரூபாய் வருவாய் பெற்றுக்கொண்டிருக்கிற நிலை இருக்கிறது. சட்டப்பிரகாரம் அவர்களுடைய நிலத்தை எடுத்துக்கொள்ள எந்த விதமான தடஸ்தமும் கிடையாது என்பதை இந்தச் சந்தர்ப்பத்தில் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

நில ஆர்ஜிதம் சம்பந்தமாக ரெவின்யூ இலாகாவில் இருக்கிறவர்கள் பல கஷ்டங்களைச் செய்துகொண்டிருக்கிறார்கள். குறிப்பாக பஞ்சாயத்து யூனியனிலிருந்து, முனிஸிபாலிட்டியிலிருந்து பொது உபயோகத்திற்காக நிலங்களை ஆர்ஜிதம் செய்யவேண்டுமென்று தீர்மானம் நிறைவேற்றி அனுப்பினால், நடவடிக்கை மேற்கொள்ள காலதாமதம் ஏற்பட்டுக்கொண்டிருக்கிறது. ஓரிரு பகுதிகளில் உள்ளதை நான் குறிப்பாகச் சொல்ல முடியும். குறிப்பாக, நாகர்கோவிலில் ஒரு பஸ் ஸ்டாண்ட் அமைக்கவேண்டுமென்று திட்டமிட்டு, அன்று முதலமைச்சராக இருந்த திரு. காமராஜ் அவர்கள்—1958-ல் அல்லது 1959-ல் என்று நினைக்கிறேன்—பஸ் நிலையத்திற்குக் கால்நடு விழா நடத்தினார்கள். ஆனால் நிலத்தை ஆர்ஜிதம் செய்வதற்கு 7—8 வருஷங்கள் காலதாமதம் ஆனது. இதுகாறும் பஸ் ஸ்டாண்டைத் திறப்பதற்குள்ள வழிவகை ஏற்படவில்லை என்பதையும் நான் கூறிக்கொள்ள விரும்புகிறேன். இத்தகைய காலதாமதங்களைத் தவிர்க்க நடவடிக்கைகளை ரெவின்யூ இலாகா மேற்கொள்ளவேண்டும் என்பதையும் நான் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

அதே மாதிரி பட்டணங்கால் திட்டத்திலே நில ஆர்ஜிதம் செய்யாத காரணத்தினால் வாய்க்கால்கள் வெட்டுவதில் பல கஷ்டங்கள், சங்கடங்கள் இருந்துகொண்டிருக்கின்றன. இருபத்தாறு லட்சம் ரூபாய்க்கு மேல் செலவு செய்து இன்னும் முடியாத சூழ்நிலையைப் பல உறுப்பினர்களும் சுட்டிக்காட்டினார்கள். நில ஆர்ஜிதத்தில் காலதாமதம் இருக்கிற காரணத்தினால் வேலைகள் தடைப்பட்டு வருகின்றன. துரிதமாக வேலைகள் நடக்க ரெவின்யூ இலாகாவிலே காலதாமதமில்லாமல் செய்யவேண்டும்.

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

அடுத்தப்படியாக, ஒரு விஷயத்தைப் பற்றிக் கூற வேண்டுமென்று நினைக்கிறேன். இன்று உணவு சம்பந்தமான எல்லா அதிகாரங்களும் ஜில்லா கலெக்டர் கையில் இருக்கின்றன. ஒரு வேளை டிஸ்ட்டிரிக்ட் சப்ளை ஆஃபீஸர் அவருடைய உதவியாளராக இருந்து, முழுப் பொறுப்பும் அவர்கள் கையில் இருக்கிற காரணத்தினால் ரெவின்யூ வேலைகள், மற்ற ஆக்கப் பணிகளில் ஈடுபட அவர்களுக்கு நேரம் இல்லை என்ற அபிப்பிராயம் பரவலாக இருக்கிறது என்பதை நான் அவையின் கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன்.

அடுத்து, கலெக்டர் கையில் நிவாரணங்களுக்காகக் கொஞ்சம் பணம் ஒப்படைக்கப்பட்டிருக்கிறது. தீயினால் பாதிக்கப்பட்டவர்களுக்கோ, கடல் அரிப்பால் பாதிக்கப்பட்டவர்களுக்கோ, அல்லது வேறு காரணங்களால் துன்பத்திற்காளானவர்களுக்கோ, 30 ரூபாய் வழங்கும் அதிகாரம் தான் இருக்கிறது. இந்த 30 ரூபாய் கொடுப்பது என்பது முன்பு போடப் பட்ட ஆணையின் பேரில் இருக்கிறது. அதைத் திருத்தி அமைத்து 100 ரூபாய் அளவுக்கு உயர்த்த வேண்டிய ஏற்பாடு செய்தால்தான் வீடு இழந்தவர்களுக்கு ஏதாவது செய்ய முடியும். குறிப்பாக சமீபத்தில் கடல் கொந்தளிப்பால் கடலோரப் பகுதியில் உள்ள மீனவர்கள் வீடுகளை இழக்க வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டது. ஜில்லாக் கலெக்டரை அணுகிக் கேட்டபோது 30 ரூபாய்க்கு மேல் வழங்குவதற்குத் தனக்கு அதிகாரம் இல்லையென்றும், அதற்கு மேல் வேண்டுமானால் அரசாங்கம்தான் ஆணை பிறப்பிக்கவேண்டுமென்றும் சொன்னார்கள். இந்த மாதிரிக் கஷ்டத்தில் இருக்கிறவர்களுக்கு நிவாரணம் அளிக்க உடனடியாக அவர்கள் டிஸ்க்ரீஷனரி ஃபண்டிலிருந்து கூடுதலாகச் செலவழிக்கும் அதிகாரத்தை வழங்கவேண்டுமென்று இந்தச் சந்தர்ப்பத்தில் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

மாஜிஸ்ட்ரேட்டுகளைப் பற்றி, அவர்களுக்கு ட்ரைனிங். கொடுப்பதிலே வழக்குகளை அவர்கள் கையில் கொடுப்பதைப் பற்றி ஒரு மதிப்பிற்குரிய அங்கத்தினர் எடுத்துக் கூறினார்கள். இதிலே பல கஷ்டங்களும், துன்பங்களும் இருக்கின்றன. புதியதாக டெப்யூடி தாசில்தார், தாசில்தாராக வருபவர்களெல்லாம் இந்த வழக்கு விசாரணை செய்வதிலே பல கஷ்டங்கள் இருக்கின்றன. நிரந்தரமாக ஒரு 'கோடு' கிடையாது. அவர்கள் குறித்த நேரத்தில் வருவது கிடையாது. அதனால் வழக்கறிஞர்களும், பிரதிவாதிகளும் கஷ்டப்படவேண்டிய நிலை பல இடங்களில் இருந்துகொண்டிருக்கிறது. அவர்கள் ஜில்லா கலெக்டர் அதிகார வரம்பில் இருக்கிற காரணத்தினால், சரியான முறையில் அவர்களை கண்காணிப்பதற்கும், பராமரிப்பதற்கும், ஜில்லா மாஜிஸ்டிரேட்களுக்கும் போதிய அதிகாரம் இருந்தாலும், அது முடியவில்லை நடைமுறையிலே என்று நான் இந்த சந்தர்ப்பத்திலே கூறிக்கொள்ள விரும்புகிறேன். அவர்கள் ரெவின்யூ வேலை செய்துவிட்டு, கோர்ட்டு வேலைக்கு வருவது சிரமமாக இருக்கிறது. ஆகையால் அதற்கு ஒரு பரிகாரம் தேடிக் கொடுக்க வேண்டும் என்பதையும் இந்த நேரத்தில் கூறிக்கொண்டு, எனது உரையை முடித்துக் கொள்கிறேன்.

***புலவர் பொ. பொன்னம்பலம்:** மாண்புமிகு சட்டமன்றத் தலைவர் அவர்களே, இங்கே இப்பொழுது படைக்கப்பட்டிருக்கும் மான்யக் கோரிக்கையின்மீது என்னுடைய கருத்துக்களை இரண்டு, மூன்று மணித்துளிகளில் முடித்துக்கொள்ள வேண்டும் என்ற ஆணையோடு நான் சில கருத்துக்களை மட்டும் படைக்க இருக்கிறேன். இந்த மான்யக் கோரிக்கை அடிப்படையிலே பார்க்கிறபொழுது, இந்த மாநிலம் மாவட்டம் மாவட்டமாக பிரிக்கப்பட்டு, மாவட்டத்தின் தலைமைப் பொறுப்பு மாவட்ட ஆட்சி செயலகத்தினிடம் ஒப்படைக்கப்பட்டிருக்கிறது. இந்த மாவட்ட ஆட்சித் தலைவரின் ஒழுங்கின்கீழ் இரண்டு பகுதிகள் இருக்கின்றன. அந்தப் பகுதிகளைப் பார்க்கிறபொழுது, ஒரு பகுதி நேராக நிரல்பட்டு அமைக்கப்பட்டிருக்கிற பகுதியாக அமைந்திருக்கிறது. அதாவது மாவட்ட ஆட்சித் தலைவரின்கீழ் வணக்களரி, அலுவலகங்களின் வழியாக கிராமத்தோடு தொடர்பு

கொள்ளும் வகையில், நிரல் பட்ட அமைப்பிருக்கிறது. மற்றொரு அமைப்பைப் பார்க்கிறபொழுது, கிராமத்தில் இருக்கக்கூடிய ஊராட்சி மன்றம், அந்த ஊராட்சி மன்றங்கள் சிலவற்றை இணைத்து ஊராட்சி ஒன்றிப்பு என்று அமைத்து, அந்த ஊராட்சி ஒன்றிப்பு பெரும் தலைவர் என்றும் ஆணையாளர் என்றும் மற்றவர் என்றும் அலுவலகத்தை அமைத்து, அதன் பிறகு மாவட்ட ஆட்சித் தலைவரின் அலுவலகத்தோடு ஓர் இணைப்பாக அமைந்திருக்கிறது. ஒரு வழி நேரான வழி, நிரல்பட்ட வழியாக இருக்கிறது. மற்றொரு வழி இடையிலே வெட்டுப்பட்டு, வெட்டப் பட்ட இரண்டு துண்டுகளைப்போல இணைக்கப்பட்ட ஒரு பகுதியாக அமைந்திருக்கிறது. இரண்டு பகுதிகளும் நிரல்பட்டு இருக்குமானால், எந்தக் குறைபாடும் இல்லாமல் இருக்கும் என்பதற்காக என்னுடைய ஒரு தாழ்மையான கருத்தை எடுத்துச்சொல்லுவதற்கு விழைகின்றேன். முன்னாலே இந்த சட்டமன்றத்தில் சொல்லியிருக்கிறேன். என்றாலும், இப்பொழுதும் அதைக் குறித்து சிறப்பாக நான் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

பொதுவாக சட்டமன்ற உறுப்பினர்கள் என்று தொகுதிக்குத் தொகுதி இருக்கிறார்கள். ஒரு சட்டமன்ற உறுப்பினருக்கு இருக்கக்கூடிய கடமைகளையும் பொறுப்புகளையும் வரையறுத்துச் சொல்ல முடியாத நிலை இருக்கிறது. இன்னின்ன பொறுப்புகளுக்காக சட்டமன்ற உறுப்பினர்கள் இருக்கிறார்கள் என்று யாரும் சொல்ல முடியாத நிலை இருக்கிறது. சட்டமன்றத்திற்கு வந்தால்தான் அவர்கள் தங்களுடைய கருத்துக்களை எடுத்துச்சொல்லவேண்டும் என்ற அளவிலே இருக்கிறது. அப்படி இல்லையென்றால் அவர்கள் தரகர்கள் போன்ற நிலையில் அலையவேண்டிய தன்மையிலே இருக்கிறது. இப்படி தொகுதிக்கு தொகுதி இருக்கக்கூடிய சட்டமன்ற உறுப்பினர்களுக்கு என்ன பொறுப்பு இருக்கிறது என்று பார்த்தால், எதுவுமில்லை என்ற நிலைதான் இருக்கிறது. ஆனால் ஊராட்சி ஒன்றிப்பு அமைத்து, ஒன்றிப்புப் பெருந்தலைவர்கள் தேர்ந்தெடுக்கப்படுகிற முறையைப் பார்க்கிறபொழுது, 20 ஆண்டுக்கால காங்கிரஸ் ஆட்சியில் எப்படிப்பட்ட முறை இருந்தது என்றால், அங்கு விலை கொடுத்து வாங்கும் நிலை இருந்தது. ஆள் தூக்கும் நிலை இருந்தது. விருந்து வைத்து வாங்கக்கூடிய நிலை அல்லது அச்சுறுத்தக்கூடிய நிலை இருந்தது. அந்த அளவிலே தான் பெருந்தலைவர் என்பார் சில ஊராட்சியின் மன்றத் தலைவர்களை தங்கள் பக்கத்தில் அமைத்துக்கொண்டு, தன்னகப்படுத்திக் கொண்டு பெருந்தலைவராக வரக்கூடிய சூழல் இருக்கிறது. அந்த வகையிலே பார்க்கிறபொழுது அந்தத் தொகுதியில் இருக்கக்கூடிய ஊராட்சிமன்ற உறுப்பினர்களை அந்தத் தொகுதியில் இருக்கக்கூடிய மக்கள் அத்தனை பேர்களும் தங்களில் ஒருவர் என்று கருதக்கூடிய நிலை இருக்கிறது. அந்த மக்கள் தகுதிக்குரிய சட்டமன்ற உறுப்பினர்களைத் தான் எல்லா பொறுப்புகளுக்கும் ஆட்பட்டவா என்று கருதுகிறார்கள். ஆனால் அந்த நேரத்தில் பார்க்கும்பொழுது சட்டமன்ற உறுப்பினர்களுக்கு எந்த வாய்ப்பும் இல்லை, எந்த வசதியும் இல்லை, தொகுதியில் சுற்றுப் பயணம் செய்யவேண்டுமென்றாலும், அப்படி சுற்றிவரத்தக்க வகையில் எந்த வசதியும் ஏற்படுத்திக்கொடுக்கவில்லை. எனவே தொகுதிக்கு தொகுதி சட்டமன்றத் தொடர்பகம் அமைக்கப்படவேண்டும். அப்படி அமைக்கப்பட்ட சட்டமன்ற தொடர்பகத்தின் மூலம் இங்கு இருக்கக்கூடிய அவையோடு தொடர்பு கொள்ளவேண்டும். இப்பொழுது தொகுதிக்கு தொகுதி இருக்கும் ஊராட்சி மன்றத் தலைவர்கள் ஊராட்சி ஒன்றிப்பு அலுவலகத்தில் கூடிப் பின் ஊராட்சி ஒன்றிப்புப் பெரும்தலைவர்கள் வட்டார வளர்ச்சி மன்றத்திற்கு வருகிறார்கள். ஆனால் சட்டமன்றத் தொடர்பகம் என்ற ஒரு அமைப்பை தொகுதிக்கு தொகுதி ஏற்படுத்தினால், அந்த சட்டமன்றத் தொடர்பகத்திற்கு தலைவராக சட்டமன்ற உறுப்பினர் இருக்கலாம். அந்தச் சட்டமன்றத் தொடர்பகத்தில் திங்களுக்கு ஒருமுறை அந்தத் தொகுதிக்குரிய கூட்டம் நடைபெறவேண்டும். மாவட்ட ஆட்சித் தலைவராக இருக்கக்கூடியவர் அல்லது துணை ஆட்சித் தலைவராக இருக்கக் கூடியவர் அந்தத் தொகுதியில் இருக்கக்கூடிய அலுவலகத்திற்கு வந்து அந்தக் கூட்டத்தை நடத்தலாம். அந்த அளவிலே அமைப்பிருந்தால், கிராமத்தில் இருக்கக்கூடிய கிராம ஊர் ஆட்சி மன்றத் தலைவர்களுக்கும்,

மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கும் நெருங்கிய தொடர்பு ஏற்படும். அப்படி ஏற்படக்கூடிய தொடர்பு நல்ல பலனைத் தரும். ஆனால் இப்பொழுது இருக்கக்கூடிய தொடர்பு கிராமத் தலைவர்கள் பெருந்தலைவரோடு தொடர்பு கொள்வது, பெருந்தலைவர் அங்கே தொடர்பு கொள்வது என்ற நிலை எப்படி இருக்கிறது என்றால், கணவனுக்கும் மனைவிக்கும் நல்ல உறவு ஏற்படுத்த இடையிலே ஒரு வழக்கறிஞரை அமைத்துக்கொள்வது போன்ற சூழல் இருக்கிறது. இப்படிப் பார்க்கிறபொழுது கிராமத்திற்குக் கிராமம், எத்தனையோ இக்கட்டான சூழ்நிலை இருக்கிற காரணத்தினால் தான், நான் இங்கே இப்படிக் குறிப்பிடவேண்டிய கடமை உடையவனாக இருக்கிறேன் என்பதையும் சொல்லிக் கொள்ள ஆசைப்படுகிறேன். அந்த வகையிலே பார்க்கிறபொழுது பொதுவாக

> " உறுப்சியும் ஓவாப் பிணியும் செறுபகையும்
> சேரா தியல்வது நாடு "

என்ற கருத்து சொல்லப்பட்டிருக்கிறது. அந்த அடிப்படையிலே கிராம நலனைக் கருதி, கிராம நலன் அடிப்படையிலே மாவட்ட ஆட்சி நிறுவி உறு பசியைப் போக்கவேண்டும், ஓவாப்பிணியைப் போக்கவேண்டும், இந்த நாட்டு நிலையை உயர்த்தவேண்டும் என்பதைச் சொல்லி, எனது உரையை முடித்துக் கொள்கிறேன். வாய்ப்புத் தந்தமைக்கு நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். வணக்கம்.

***திரு. என். எஸ். வி. சித்தன்:** சட்டப் பேரவைத் தலைவர் அவர்களே, உணவு உற்பத்தியைப் பெருக்கவேண்டும் என்ற கருத்தில், புதியதாக வீடு கட்டுவதாக இருந்தால், நஞ்சை நிலத்தில் நிச்சயம் கட்டக்கூடாது புஞ்சை நிலத்தில் அல்லது புறம்போக்கு நிலத்தில் தான் கட்டவேண்டும் என்று இந்த அரசு ஆணையிடவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

ஒரு கிராமத்தைப்பற்றியும், ஒரு கிராம மக்களைப்பற்றியும், கிராம வயல்களைப் பற்றியும், சொத்துக்களைப் பற்றியும் கணக்கு வைத்துக்கொள்ளும் பெரும் பொறுப்பு கிராம அதிகாரிகளுக்கு இருக்கிறது. ஆனால் அவர்களுக்குக் கொடுக்கப்படுகிற ஊதியம் வாழ்க்கைத்தரத்தையும், விலைவாசியையும் பொறுத்துப் பார்த்தால், மிகவும் குறைவாக இருக்கிறது. எனவே அவர்களை முழுநிலை ஊழியர்களாக ஆக்கி, கீழ்நிலை எழுத்தர்களுடைய நிலைக்கு அவர்களுடைய நிலையை உயர்த்தி, சம்பளத்தையும் அந்த அளவுக்கு உயர்த்திக்கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அத்துடன் அவர்கள் பணத்தைக் கட்டுவதற்காக கருவூலத்திற்கு வருகின்ற நாட்களுக்கு அவர்களுக்கு பிரயாணப்படி கொடுக்கவேண்டும். எந்த கிராம அதிகாரியை நியமித்தாலும், அவர் அந்த கிராமத்தில் நிச்சயம் வசிக்கவேண்டும் என்று அரசு ஆணையிடவேண்டும்.

தாசில்தார், ரெவின்யூ இன்ஸ்பெக்டர்கள் கிராம அதிகாரிகளை சந்திக்க விரும்பினால், அவர்களை அந்தந்த கிராமத்தில்தான் சந்திக்கவேண்டும் என்று ஆணையிடவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

ராமநாதபுரம் மாவட்டம் பெரிய மாவட்டம். மேற்குப் பகுதி மேற்கு தொடர்ச்சி மலையையும், கிழக்குப் பகுதி வங்காள விரிக்குடாக்கடலையும் தொட்டுக்கொண்டு, மொத்தத்தில் மதுரை மாவட்டத்தைச் சுற்றி வளைத்துக் கொண்டிருக்கிறது. அந்த மாவட்டத்தை இரண்டாகப் பிரிக்கவேண்டும். ஒன்று கிழக்கு ராமநாதபுர பகுதியை ராமநாதபுரத்தை தலைநகரமாகக் கொண்டு ஒரு மாவட்டமாகவும், மேற்கு ராமநாதபுரம் பகுதியை விருது நகரைத் தலைநகராகக் கொண்டு ஒரு மாவட்டமாகவும் ஆக்கவேண்டும் என்ற எண்ணம் அந்தப் பகுதி மக்களிடையே இருக்கிறது. எனவே ரக அந்த மாவட்டத்தை இரண்டாகப் பிரிக்கவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

மதுரை மாவட்டத்தில் திருமங்கலம், நிலக்கோட்டை ஆகிய இரண்டு தாலுக்காக்களையும் சேர்த்து ஒரு கோட்டாட்சியாக இருக்கிறது. இப்பொழுது உசிலம்பட்டியில் இருக்கிற அந்தக் கோட்டாட்சி அலுவலகத்தை திருமங்

கலத்தில் ஏற்படுத்தவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். இந்தத் தாலூக்காக்களில் உள்ள இரண்டு, மூன்று பெரிய நகரங்களிலே திருமங்கலம் தான் பெரிய நகரம். அங்கே அரசாங்க வங்கி இருக்கிறது. துணைக் கருவூலம் இருக்கிறது. எல்லாவற்றிற்கும் மேலாக டெல்லியிலிருந்து கன்யாகுமரி செல்லும் நெடுஞ்சாலை திருமங்கலத்தைத் தொட்டுக்கொண்டு செல்கிறது. ஆகவே திருமங்கலத்தில் கோட்டாட்சி அலுவலகம் ஏற்படுத்தப் படவேண்டுமென்று கேட்டுக்கொண்டு, எனது உரையை முடித்துக்கொள் கிறேன்.

திரு. எம். சுப்பிரமணிய கவுண்டர் : தலைவர் அவர்களே, இந்த மானியக் கோரிக்கையின் மீது பேச எனக்கு வாய்ப்பு அளித்தமைக்கு நன்றி தெரிவிக்கிறேன்.

தர்மபுரி மாவட்டம், மிகவும் பின் தங்கிய மாவட்டம். அந்த மாவட்டத்திலே கிராமவாசிகள், விவசாயிகள், மின்சாரத்திற்காக பல வருஷக்கணக்கிலே அப்ளிகேஷன் போட்டு, அவர்களுக்கு மின்சாரம் கிடைக்காமல் அல்லல் பட்டுக் கொண்டு இருக்கிறார்கள். ஆகவே, அவர்களுக்கு மின்சாரம் உடனடியாகத் தந்து உதவி செய்ய ஆவன செய்ய வேண்டும் என்று நம்முடைய அரசாங்கத்தை கேட்டுக் கொள்கிறேன். தர்மபுரி பகுதியிலே ஸ்டேட் ஃபாரஸ்ட் இருக்கிறது. அந்த ஸ்டேட் ஃபாரஸ்ட்களை பஞ்சாயத்துகளுக்கு அளித்து, அங்குள்ள கிராம வாசிகளுக்கு அவர்களுடைய ஆடு மாடுகளை நல்லமுறையில் மேய்க்கவும், நல்ல வசதி செய்து கொள்ளவும் ஏற்பாடுகளை செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன். தர்மபுரி பகுதியிலே தேட்டம்பட்டி கிராமம், தெங்கரைக்கோட்டை, பம்பேடு முதலிய கிராமங்கள் இருக்கின்றன. அந்தப் பக்கங்களில் ஆயிரக் கணக்கான எக்கர் நிலம் மேய்ச்சல் காடுகளாக இருக்கின்றன. அவற்றை நமது கனம் விவசாய அமைச்சர் நேரிலே பார்வையிட்டு, அந்தப் பகுதியிலே உள்ள ஏழை விவசாயிகளுக்கும், அரிசன மக்களுக்கும், தலா ஒவ்வொருவருக்கும் ஐந்து எக்கர் மாதிரி பிரித்துக் கொடுக்கும்படி அந்த ஜில்லாக் கலெக்டருக்கு உத்தரவு போடும்படியும், அந்த வகையில் விவசாய மக்களை ஊக்குவிக்கும் படியும் கேட்டுக் கொள்ளுகிறேன். அந்தப் பகுதியிலே அடிக்கடி நெருப்பினால் சேதங்கள் ஏற்பட்டு, அங்கே மக்கள் அல்லல் படுகிறார்கள். தர்மபுரியில் ஒரு ஃபைர் சர்வீஸ் ஸ்டேஷன் இல்லாத காரணத்தால் சேலத்திலிருந்து வரவேண்டிய நிலையிருப்பதால், அந்தப் பகுதியில் ஃபைர் சர்வீஸ் ஸ்டேஷனை அமைக்க, தர்மபுரியிலே அமைக்க வேண்டும்மென்று கேட்டுக்கொள்கிறேன்.

விவசாயிகளுக்கு வேண்டிய ட்ராக்டர்கள், புல்டோசர்கள், இன்னும் விவசாயக் கருவிகள் இல்லாத காரணத்தால், சேலத்திலிருந்து வருவதால், வேண்டிய நேரத்தில் விவசாயத்திற்கு, உழுவதற்கு கிடைப்பதில் கஷ்டம் இருக்கிறது. ஆகவே அந்த ஆபீசை தர்மபுரியிலே வைத்து தர்மபுரி வாசிகளுக்கு உதவிசெய்ய ஆவன செய்ய வேண்டும் என்று நம்முடைய அரசாங்கத்தைக் கேட்டுக் கொள்கிறேன்.

தர்மபுரி புதிதாக ஏற்பட்ட மாவட்டம் என்கிற காரணத்தால், அங்கே ஒரு ஃபர்ஸ்ட் க்ளாஸ் மாஜிஸ்ட்ரேட் கோர்ட்டு இல்லை; தர்மபுரி மக்கள் சிறிய சிறிய கேசுகளுக்கும் கூட அப்பீல் செய்ய, 30 மைல் தொலைவில் இருக்கும் கிருஷ்ணகிரிக்குப் போக வேண்டியதாக இருக்கிறது. ஆகவே, அங்கே ஒரு ஃபர்ஸ்ட் கிளாஸ் மாஜிஸ்ட்ரேட் கோர்ட்டை அமைத்துக் கொடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு உறுப்பினர் திரு. பலராமன் அவர்கள் என்னோடு செய்துகொண்ட ஒப்பந்தத்தின்படி இரண்டு நிமிடங்கள் பேசும்படி கேட்டுக் கொள்கிறேன்.

***திரு. இல. பலராமன் :** தலைவர் அவர்களே, இந்த மானியத்தின் கீழ் இரண்டு நிமிஷம் பேச சந்தர்ப்பம் அளித்ததற்காக நன்றி.

ஜில்லா நிர்வாகத்தின் அடித்தளமாக இருப்பது, கிராம மணியம், கர்ணம் இவர்கள் தான். இவர்களுடைய நிலை பரிதாபமானதாக இருக்கிறது. அதுபற்றி அநேகமாக எல்லோரும் விளக்கியிருக்கிறார்கள். முந்தைய அரசாங்கம் அதை மாற்ற உத்தேசித்தும் கூட அதைச் செய்ய முடியவில்லை. அதை யு.டி.வி. அளவிலோ அல்லது வேறு ஸ்டேட் லெவலிலோ நிர்வாகத்தைச் செப்பனிட வேண்டும். அல்லது அவர்களுக்கு நல்ல ஊதியத்தைக் கொடுக்கவேண்டும். அவர்கள் ஊக்கத்துடன் கணக்குகளை வைத்துக்கொள்ளச் செய்ய வேண்டும். அந்த வகையில் ஆவன செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

இந்த ஜமாபந்தி முறையை மாற்றவேண்டும். "ஜமாபந்தி" என்பதே தமிழுக்கு அப்பாற்பட்டது. அது என்ன பந்தியோ தெரியவில்லை. அதை நகரப்புறத்திலே நடத்துவது விநோதமானது, விசித்திரமானது. கிராம மக்களுக்கு உபயோகப்படும் முறையில் அமைத்தால், கிராமங்களில் நடத்தினால், இந்தப் பந்தி அவர்களுக்கு நல்ல விருந்தாக இருந்தாலும் இருக்கும். அப்படி நடத்தினால், விவசாய மக்களுடைய குறைகளைப் போக்கக்கூடிய வாய்ப்பினை அடைவதாக இருக்கும். விவசாய மக்கள் தங்களுடைய குறைகளைக் கூறக் கூடிய நேரம், அவர்கள் அதிகாரிகளைப் பார்க்கக்கூடிய நேரம், ஒரே ஒரு நேரம் அதுதான். ரெவின்யூ டிபார்ட்மெண்டுதான் ஆங்கிலேயர்கள் விட்டுச் சென்ற செம்மையான டிபார்ட்மெண்ட். ஆங்கிலேயர்களைப்போல, இந்த அதிகாரிகளைப் பார்க்க எவ்விதத் தடங்கலும் இருக்கக் கூடாது. அவர்கள் விவசாயிகளுக்கு வேண்டியதைச் செய்ய, அன்புக் கரங்களாகவும், ஆதரவுக் கரங்களாகவும், இருக்க ஒரு சில மாறுதல்களைச் செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

பஞ்சாயத்து அபிவிருத்தி கவுன்சிலில் பல அங்கத்தினர்கள் இருக்கிறார்கள். அதற்குத் தலைவர், மாவட்ட ஆட்சித் தலைவர்தான் என்பது வேதனைக்குரியதுதான். அவர் செய்யும் காரியங்கள் பற்றிக் குறை கூறுவது அவரிடமே குறை கூறுவது போல இருக்கிறது. ஆகவே, அதற்கு ஒரு நான்-அபிஷியலை, அதிகாரப் பற்றற்ற ஒருவரைத் தலைவராகப் போட்டு செயல் பட்டால் அது நல்ல முறையில் நிர்வாகம் செய்ய முடியும். சட்டமன்ற உறுப்பினர்களும் பஞ்சாயத்து யூனியன் தலைவர்களும், அதிகாரிகள் குறை செய்கிறார்கள் என்று விளக்கமாகச் சொல்ல நேர்மையாக இருக்கும், அதோடு அதிகாரிகளும், சற்று அஞ்சி காரியங்களைச் செய்வார்கள் என்று கருதிச் சொல்லுகிறேன்.

மேலும் ஒன்று. இந்த பஞ்சாயத்து யூனியன் நிர்வாகமோ, அதிகாரிகள் இருப்பதைப் பார்த்தால், நவக்கிரகங்கள் என்று சொல்லுவார்களே, அதுபோல ஒவ்வொரு கோணத்திலிருந்தும் பார்க்கிறார்கள். இவர்களை ஒழுங்குப்படுத்துவது சற்று சிரமம்தான். இதை நல்ல முறையில் அமைத்து, இவர்களை ஒரே அதிகாரியின் கீழ்அமைக்க வழி காண வேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

பென்ஷன் விவகாரங்களில், அதிகப்படியாக அகவிலைகள் உயர்ந்திருக்கும் காரணத்தால், அவர்களுக்கும் அதிகமாக உயர்த்த வேண்டும் என்று இந்தச் சந்தர்ப்பத்திலே கேட்டுக் கொள்கிறேன். தலைவர் அவர்களுடைய கட்டளைப்படி பேசி, நன்றி தெரிவித்து, முடிக்கிறேன். வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. ஞானசம்பந்தன் அவர்களுக்கு நான் ஒரு குறிப்பு அனுப்பினேன். அவர்கள் பேசலாம்.

***திரு. கொ. இர. ஞானசம்பந்தன் :** தலைவர் அவர்களே, முதலிலே மாவட்ட அபிவிருத்தி கவுன்சிலுக்கு அதிகமான அதிகாரம் கொடுக்கப்பட வேண்டும் என்று கூற விரும்புகிறேன். ஒரு *சாங்ஷனிங் அதாரிடி தேவை. பல கமிட்டிகள் போட்டிருக்கிறோம். என்ன நடக்கிறது என்று தெரியாது. முடிவுகள் எடுக்கிறோம். பின்னால் ஒன்றும் நடக்கிறது இல்லை. ஜில்லாவைப் பொறுத்தவரை எல்லா வேலைகளையும் மாவட்ட அபிவிருத்திக்குழு செய்யும் முறையில் சாங்ஷனிங் அதாரிடி கொடுக்க வேண்டும் என்று கருத்தைத் தெரிவிக்கிறேன்.

அடுத்தப்படியாக, நிச்சயமாக இந்த ஆட்சியிலாவது, சாதாரண குடிமகனுக்கு அவனுடைய குறைகள் தீர்க்கப்படும் என்கிற உத்தரவாதம் இருக்கவேண்டும். பத்து நாட்களுக்கு முன்னால் ஒரு விஷயம் நடந்தது. ஒரு கிராமவாசி கலெக்டரைப் பார்க்கப் போயிருந்தார். அது திங்கள்கிழமை. திங்கள்கிழமை "மிஸ் அ மீல்" என்பது போல, அவர் விஷயம் தெரிந்தவர்; அவர் கலெக்டரிடம் பெட்டிஷன் ஒன்றைக் கொடுத்தார். கொடுத்து விட்டு தயவு செய்து என்னுடைய பெட்டிஷனை "உ.மு."க்கு "ஓ.மு."க்கு போட்டுவிடாதீர்கள் என்று சொன்னாராம். இன்றைக்கு என்ன நடக்கிறது ? திங்கள்கிழமை மனு கொடுத்தால், "என்.டிஸ்." என்று போடுகிறார்கள். கீழே போனதும், அதற்கு "எல்.டிஸ்" போட்டுவிடுகிறார்கள். திங்கள் கிழமை போய்விடுகிறது. ஆகவேதான் விஷயம் தெரிந்த கிராமத்தார், "ஓ.மு."க்கு அனுப்பி குழப்பாதீர்கள் என்று, இதை திங்கள்கிழமைக் கணக்காக்காதீர்கள் என்றாராம். "ஓ.மு."க்குப் போகாமல், "உ.மு." என்று போடும் முறையை மாற்றி அதற்கென்று ஒரு தனி செக்ஷன் போட்டு, பெட்டிஷன்களை அவ்வப்போது பைசல் செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும். அதற்கான உத்தரவு போடவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து ஜமாபந்தி. அது ஒரு பெரிய தர்ப்பார். அந்த முறையை உடனடியாக ஒழித்து விடவேண்டும். அதுதான் லஞ்சம், ஊழல் இவற்றிற்கு உறைவிடமாக இருக்கிறது. ஆகவே, ஜமாபந்தியை நிச்சயமாக நீக்க வேண்டும். கணக்குகளை மற்ற டிபார்ட்டுமெண்டுகள் போல, ஆடிட் செய்யச் சொல்லலாம். அடிப்படையில் லஞ்சத்திற்கும், ஊழல்களுக்கும், புகலிடமாக இருக்கும் இந்த முறையை ஒழித்தாக வேண்டும்.

அடுத்து, பூமிதானம், கிராம தானம். லாண்ட் ஸீலிங் நிலம், என்றெல்லாம் எடுத்து, காடுகளை எடுத்து சாகுபடி செய்வது எல்லாம் இந்த நிர்வாகத்தில் வருகிறது. இதில் நிலத்தை மக்கள் அனுபவிக்கும் முறையில் சீக்கிரமாக நடவடிக்கைகள் எடுக்க வேண்டும். அதைப் பற்றியும் யோசிக்க வேண்டும். பொதுமக்களின் பிரதிநிதிகளைக் கலந்து கொண்டு, மேலே குறிப்பிட்டவைகளிலிருந்து நிலமற்ற உழவர்களுக்கு நிலம் கிடைக்கத் துரித நடவடிக்கை எடுக்க வேண்டும்.

அடுத்தாற்போல் பர்மா அகதிகள் பிரச்சினை. இந்தப் பர்மா அகதிகள் பிரச்சினை பற்றி நீண்ட நாளாகப் பேசிக்கொண்டிருக்கிறோம். அவர்கள் மனுக்கொடுத்து "டிஸ்போஸல்" செய்வதில் பல சிரமங்கள் ஏற்படுகின்றன. அதை உடனடியாகக் கவனிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

இப்பொழுது நகரங்களிலே வீட்டு வாடகை எக்கச்சக்கமாக இருக்கிறது. இதனால் என்.ஜீ.ஓ.-க்களும், மற்றவர்களும் மிகவும் கஷ்டப்படுகிறார்கள். எனவே வீட்டு வாடகையைக் கண்ட்ரோல் செய்ய அதிகாரம் இருக்க வேண்டும். அதனால் வாடகை அதிகமாகப் போவதைத தடுக்க முடியும். மற்றவர்களுக்குக் குடியிருப்புக்கு இடமும் கொடுக்க முடியும். எனவே அதற்கு நடவடிக்கை எடுத்துக் கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

அடுத்து, இப்பொழுதிருக்கும் சப்-கலெக்டர், அசிஸ்டெண்ட்-கலெக்டர் ஆகிய இவர்களுக்கு ரெகுலர் ஃபங்ஷன் இருக்கிறதா என்று தெரியவில்லை. கீழே தாசில்தார்கள் செய்வதை மேலே அனுப்புகிறார்கள். இவர்களுக்கு பஞ்சாயத்து இன்ஸ்பெக்ஷன் செய்வதைத் தவிர, வேறு வேலைகள் இருப்பதாக புரிந்துகொள்ள முடியவில்லை. எனவே, இதுபற்றி முதலமைச்சரவர்கள் சிந்தித்து முடிவு செய்ய வேண்டும். மேலே ஜில்லா கலெக்டர், கீழே தாசில்தார், நடுவிலே இவர் என்ன செய்கிறார் என்று தெரியவில்லை. இதற்குச் சரியான முடிவு எடுக்க வேண்டுமென்று அரசைக் கேட்டுக்கொள்ளுகிறேன்.

அடுத்தபடியாக கர்ணம் அடங்கல் எழுதும் விஷயம். திருவாரூக்கு அருகிலுள்ள வேளுகுடி கிராமததில் 30 வருஷமாக அடங்கல் எழுதவில்லை என்று ஒரே காரணத்திற்காக, அந்த நிலத்தில் உழைத்தவர்களை, அதற்காக உயிரை விட்டவர்களை வெளியேற்றியிருக்கிருர்கள். கிராமத்திலிருக்கும் முறை உண்மை சாகுபடியாளரின் பெயரை அடங்கல் எழுத வேண்டுமென்பது. ஆனல் மிராசுதாரர்கள் "இன்ப்லுயன்ஸ்" மூலம் தாங்கள் எழுதிக் கொளளுகிருர்கள் எனவே சாகுபடியாளர்கள் பெயர்தான் அடங்கலில எழுத வேண்டுமென்று கண்டிப்பாக இருக்க வேண்டும். அப்பொழுதுதான் விவசாயிகள் வெளியேற்றப்படுவது தடுக்க முடியும். அதற்குத் திட்டவட்டமான முடிவை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

கர்ணம், பட்டாமணியம் ஆகியர்களுக்கு வருஷத்திற்கு 20 ரூபாய் கொடுக்கப்படுகிறது. இதனுல் பல தவறுகள் செய்ய வேண்டி வருகிறது. அவர்கள் பிரயாணம் செய்ததற்கு "ஆக்ஸுவல் பிரயாணப்படி." போட்டுக்கொள்ளலாம் எனறு ஜி.ஓ. போட்டால் கொஞ்சம் நன்ருக இருக்கும். கிராமம், பட்டாமணியம் ஆகியவர்களுக்கு அந்த விதத்தில் ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

சாதாரணக் குடிமகன் ஒரு ஆபீசுக்குப் போனுல் வேலை முடியும் என்ற ஒரு நிலை இல்லை. அந்த நிலையை நாம் ஏற்படுத்த வேண்டும். சாதாரணக் குடிமகன் ஒரு அலுவலகத்திற்குக் கடிதம் எழுதினுல், அதன்பேரில் உடனடியாகப் பதில் வர வேண்டும். அந்த முறையில் அதிகாரிகளுக்குக் கண்டிப்பான உத்தரவுகளை இடவேண்டும் என்று பேசிக் கேட்டுக்கொள்ளுகிறேன்.

சட்ட மன்ற உறுப்பினராகியே நானே பல இலாக்காக்களின் தலைவர்களுக்கும், அதிகாரிகளுக்கும், எழுதிய பல கடிதங்களுககும் பதில் வரவில்லை. இதுவே இப்படி என்ருல் சாதாரண மக்கள் கொடுக்கும் மனுக்கள் எவ்வளவு அலட்சியப்படுத்தப்படும் என்பதைப் புரிந்து கொள்ளலாம். இந்த நிலை மாறி, சாதாரண மககளுக்கு அவ்வப்பொழுது பரிகாரம் கிடைக்க உத்தரவாதம் ஏற்படுத்தவேண்டும்.

திரு. டி. எஸ். ஆதிமூலம்: சார், ரெவின்யூ மானியத்தை ஆதரிக்கும் முகத்தான் சில வார்த்தைகள் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். வெள்ளைக்காரர்காலத்தில் உள்ள நல்ல நிர்வாக இலாக்காக்களில் இது ஒன்று என்பதில் சந்தேகமில்லை. சில்லறை விஷயங்கள் சில இருக்கலாம்; டிலே இருக்கலாம், லஞ்சம் அதிகமாகி விட்டது என்று சொலலலாம். இது எப்பொழுதும் பாடும் பஞ்சப்பாட்டு. லஞ்சம் லஞ்சம் என்று பேசுகிருர்கள், கொஞ்சம் இருக்கத்தான் செய்யும். ஏனென்ருல விலைவாசிகள் ரொம்பத் தாறுமாருக ஏறி வாழ்க்கை நடத்த முடியவில்லை. தன்னுலே, நாளடைவில், சமுதாயம் வளர்ச்சியடைய அடைய தானகப் போய்விடுமே தவிர, நடவடிக்கை எடுத்து நீக்கலாம் என்பது நடக்க முடியாத காரியம். அதை விட்டுவிட வேண்டும்.

இப்போது ரெவின்யூ இலாக்காவில் நல்ல முறையில் ஜில்லா நிர்வாகங்கள் நடந்தாலும், நான் வந்து ஆயிரத்தைக் குறைகூற முடியாது என்று நினைத்துக்கொண்டிக்கும்போது ஒரு விஷயம் சொல்ல வேண்டிய நிர்பந்தம் வந்துவிட்டது. உலகத்தில் எத்தனையோ அதிசயங்கள், 7 8, அதிசயங்கள் நடந்திருக்கின்றன என்கிருர்கள். இப்பொழுது 11-வது அதிசயம் எங்கள் ஜில்லாவில் நடந்து இருக்கிறது. அதாவது ஒரு பஞ்சாயத்து போர்டு கட்டிடம் கட்ட திருமலையப்பபுரம் பஞ்சாயத்து போர்டு என்று அதற்குப் பெயர். அதற்கு வேண்டிய பத்து செண்ட் இடத்தை ஜில்லா கலெக்டர் அளவிலே போய், பப்ளிக் ஹெல்த் டிபார்ட்மெண்டிடம பர்மிஷன

வாங்கி, அவர்கள் "சூட்டபிள் சைட்" என்று சர்ட்டிபிகேட் செய்து, ஜில்லா கலெக்டரும் 10 செண்ட் இடத்திலே பஞ்சாயத்து போர்டு கட்டிடம் கட்டிக்கொள்ளலாம் என்று உத்தரவு கொடுத்துவிட்டார்கள். பஞ்சாயத்து போர்டிலிருந்து 1,000 ரூபாய் வரை சாமான்களையெல்லாம் சேகரித்து வேலை நடக்கக்கூடிய இரண்டு நாட்களுக்கு முன், பக்கத்திலேயுள்ள மேனேஜ்மெண்ட் பள்ளிக்கூடக்காரர், பிரைவேட் மேனேஜ்மெண்டார் என்ருல் வருஷத்திற்கு 10,000 ரூபாய் வருமானமுள்ளவர்கள் என்று அர்த்தம்—"ரெகுலர் பிஸினெஸ் மேன்"—உடனே சாமர்த்தியமாகப் போய் எஜுகேஷன் டிபார்ட்மெண்ட் முன்னுலே அப்ளிகேஷன் கொடுத்திருக்கிறது. ஆகையால் பஞ்சாயத்து போர்டு கட்டிடம் கட்ட உத்தரவு கொடுத்தது தப்பு. அதனுலே "ஸ்டே ஆர்டர்" போடவேண்டும் என்ருர்கள். அதன்பேரிலே தாங்கள் கொடுத்த ஆர்டர் பேரிலேயே தாங்களே ஸ்டே போட்டுக் கொண்டார்கள். பஞ்சாயத்துப் போர்டுக்காரர்கள் ஆறு மாதங்களாக ரோட்டிலே அலைகிருர்கள். ஆயிரம் ரூபாய் சாமான்கள் மழையிலும், வெய்யிலிலும் சீரழிந்து கொண்டிருக்கிறது. ரெவின்யூ இலாக்கா நல்லதொரு இலாக்காவாக இருந்தாலும், பழைய காலத்திலே உள்ள சில முறைகளை இந்தக் காலத்திற்குத் தகுந்தபடி, நவீனமான மாறுபாடுகளை, அட்மாஸ்பியரை அளிக்கவேண்டும். அது இல்லாமல் பழைய போக்கிலே கிளார்க்குகள் நோட்டுகளைச் சமர்ப்பித்து எழுதி வைப்பதும், கண்ணை மூடிக்கொண்டு ஸ்டே ஆர்டரைப் போடுவதும் இருக்கக் கூடாது. பப்ளிக் இன்ஸ்ட்டிடியூஷன்—பஞ்சாயத்து போர்டு என்று கூட கவனத்தில் இல்லை. நானும் இரண்டு மூன்று மாதமாக "**I was moving Heaven and earth**". இன்று முதலமைச்சரவர்களும், எல்லா அமைச்சர்களும் வாய்ப்பாக இருக்கும் சமயத்தில் சொல்லிவிட்டேன். இப்படித்தான் ஒரு பஞ்சாயத்து போர்டு நிர்வாகத்திற்கே, ஜில்லா நிர்வாகத்தில் இந்த மாதிரி ஸ்டேயும், துன்பமும் இருந்தால், இன்னும் ஏழை எளிய மக்களின் அஸைன்மெண்ட் ஆப் லேண்ட்ஸ் விவகாரம் எப்படியிருக்கும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

சிவில் சூட் போடுவார்கள். டிக்கிரி வரும் காலத்தில் சூட் போட்டவர்கள் செத்து 20 வருஷங்களாயிருக்கும். அதேமாதிரி சூழ் நிலைகள் அஸைன்மெண்ட் ஆப் லேண்டஸ் நிலங்களில் வீட்டுக்கு பட்டா மனைகள், விவசாயத்திற்கு 50 செண்ட் ஏழை விவசாயிக்கு பட்டா கொடுப்பது ஆகியவை காலாகாலத்தில் கிடைக்கவில்லை. நிர்வாக முறையில் சிக்கல் இருக்கிறது. இதைக் கூட காங்கிரசார் 10, 15 வருஷ காலத்தில் கவனிக்காமல், நடவடிக்கை எடுக்காமல் விட்டுவிட்டுப் போய்விட்டார்கள். அதனுல் இதை விட்டு விட்டுப் போய்விட்டார்களோ என்னவோ? இந்த அரசாங்கமாவது நல்ல முறையில் கவனித்து ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். என்னுடைய யோசனை என்னவென்ருல், டெபுடி கலெக்டர் அளவில் ஒரு ஜில்லாவிற்கு ஒரு அஸைன்மெண்ட் ஸ்பெஷல் ஆபீஸர் போட்டு, வேண்டிய வசதிகளைச் செய்து, அவர்களிடம் இந்த மாதம் இத்தனை ஏழைகளுக்கு வீடு கட்ட மனைகளுக்குப் பட்டா வழங்க வேண்டும் என்று ஒரு முறையைக் குறிப்பிட்டு அந்த வேலையை ஒப்படைத்து, புது மாதிரியான முன்னேற்றத்தை இந்த ராஜ்யத்தில் இந்த திராவிட முன்னேற்றக் கழகம் சாதிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

பிற் பகல் 1-30

எனக்கு எப்போதும் ஒரு ப்ரிஃபெரன்ஸ் கொடுத்து, ஐந்து நிமிஷம் அதிகமாகக் கொடுப்பதுண்டு என்று கனம் சபாநாயகர் அவர்களுக்கு வணக்கத்துடன் தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

வீடு தீப்பிடித்தால் அல்லது வேறு ஏதாவது கஷ்டம் ஏற்பட்டால் உதவித்தொகையாக முப்பது ரூபாய் கொடுப்பதென்ற நிலையை மாற்றி, அந்தத் தொகையை உயர்த்திக்கொடுக்க வேண்டும் என்று சொல்ல நான் நினைத்தேன். அதை எதிர்க் கட்சியின் உப தலைவர் மாண்புமிகு திரு. பொன்னப்ப நாடார் அவர்கள்

சொல்லிவிட்டார்கள். இப்பொழுது சாமான்களின் விலை உயர்வைக் கருதி, முப்பது ரூபாய் என்று இருப்பதை நூறு ரூபாய் அளவிற்கு உயர்த்துவது நல்லது. நாம் என்ன சொன்னாலும், முதலமைச்சர் அவர்கள் இப்படிப்பட்ட காரியங்களையெல்லாம் உடனடியாகக் கவனித்துச் செய்துவிடுவது வழக்கம். அநேக காரியங்கள்................ (திரு. கே. விநாயகம் குறுக்கீடு) ஐ ஆம் நாட் கஜோலிங். அதைக் கட்டாயம் கவனித்து, 100 ரூபாய் அளவிற்கு உதவித் தொகையை உயர்த்தவேண்டும் என்று நான் கேட்டுக் கொள்ளுகிறேன்.

அடுத்து, வயோதிகர்களுக்கான பென்ஷன், இதிலும் ஒரு சின்ன விவரம் சொல்ல வேண்டியிருக்கிறது. கொஞ்சம் வசதி படைத்தவர்கள் அதன் பலனைப் பெற்றுக் கொண்டுவிடுகிறார்கள். பிரிட்டிஷ்காரர்கள் காலத்தில், முன்னேறிய ஜாதிக்காரர்கள். ஐ ஆம் நாட் அகெய்ன்ஸ்ட். முன்னேறிய ஜாதிக்காரர்கள். (சிரிப்பு.)—பொதுவாகச் சொல்லுகிறேன். பிரிட்டிஷ்காரர்கள் காலத்தில், பெரிய நிலச்சுவான்தார்கள், பெரிய ஜமீந்தார்கள் இப்படிப்பட்டவர்கள் நிலங்களை ஆர்ஜிதம் செய்துகொண்டார்களே, அதுபோல, வயோதிகர்களுக்கான பென்ஷன் விஷயத்திலும், விவரம் தெரிந்த சமூகத்தவர்கள் வசதி படைத்த சமூகத்தினர்கள் தான்—அந்த சமூகத்திலுள்ள ஏழை வயாதனவர்கள் தான்—அதிகமான அளவிற்கு அந்தப் பென்ஷன் உதவியைப் பெற்றிருக்கிறார்களே தவிர, சாதாரண அரிசனங்கள், மத்திய தர வகுப்பைச் சேர்ந்த ஏழை மக்கள் நிறைந்த சமூகத்தினருக்கு, அந்தப் பென்ஷன் உதவித்தொகை ஜாஸ்தி கிடைக்கவில்லை. அதனால் என்னுடைய யோசனை என்னவென்றால், கூடுமானவரையில் ஒரு தாலூக்கா அளவில், கம்யூனல் கோட்டாவை அனுசரிக்கவேண்டும். கம்யூனல் என்பது நம் இரத்தத்திலே ஊறிப் போன விஷயம். கம்யூனல் கோட்டா முறையை அனுசரித்து, அரிசனங்களுக்கு இத்தனை சதவீதம், பாக்வார்டு கம்யூனிட்டிக்கு இத்தனை சதவீதம், பார்வார்டு கம்யூனிட்டிக்கு இத்தனை சதவீதம் என்ற முறையில் வயோதிகர் பென்ஷன் வழங்கவேண்டும் என்ற அடிப்படையில் புதிய உத்தரவு ஒன்றை சர்க்காரிலிருந்து பிறப்பிக்க வேண்டும். அப்படிச் செய்தால், ஏழை சமூகத்தைச் சேர்ந்த வயோதிகர்களுக்குப் பென்ஷன் தொகை கிடைக்க வாய்ப்பு இருக்கும் என்பதை நான் தெரிவித்துக் கொள்ளுகின்றேன்.

ஜில்லா டெவலப்மெண்ட் கவுன்சில் இருக்கிறது. அதில் ஏதோ கூடுவது, பேசுவது, மணி மூன்று ஆனவுடனே கொஞ்சம் டீ, முந்திரிக்கொட்டை என்று ஏதாவது வரும். அதைச் சாப்பிட்டுவிட்டு, அப்படி அப்படியே, தாட்ஸ், வ்யூஸ் என்று சொல்லுகிற மாதிரி ஏதாவது சொல்லிவிட்டு வருவதாகத்தான் இருக்கிறது. அங்கே உருப்படியான முறையில் காரியங்கள் செய்யவேண்டுமென்றால், சட்டபூர்வமான ஸ்டாச்சூடரி பாடியாக ஆக்கி, ஜில்லா அபிவிருத்தி கவுன்சிலை நல்ல முறையில் இயங்குவதற்கு வழிவகை செய்யவேண்டும் என்று கேட்டுக்கொண்டு சபாநாயகருக்குப் பயந்து, நான் என்னுடைய பேச்சை முடிக்கிறேன். வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : "பேரவைத்தலைவருக்குப் பயந்து" என்று சொல்லுவதற்குப் பதிலாகக் "கடிகாரத்திற்குப் பயந்து" என்று சொல்லுவது இன்னும் பொருத்தமாக இருக்கும்.

திரு. பி. ஜி. கருத்திருமன் : சபாநாயகர் அவர்களே, ஏற்கனவே எல்லோரும் அதிகமாகப் பேசிவிட்ட காரணத்தினால், நான் சில குறிப்புகளை மட்டும் பேசி என் உரையை முடிக்க விரும்புகிறேன். எங்கள் கட்சியின் சார்பாகக் கனம் உறுப்பினர் திரு. நல்லசாமி அவர்கள் கொண்டுவந்த வெட்டுப் பிரேரணையை ஆதரித்து ஒருசில வார்த்தைகள் நான் சொல்ல ஆசைப்படுகிறேன்.

நமது தேசத்தில், ஜனநாயக முறைப்படி நடக்கும்படியான நம்முடைய திட்டங்கள், கொள்கைகள் எல்லாம் சரியான முறையில் மக்களுக்குப் பயன்படும் வகையில் நிறைவேற்றப்படவேண்டுமானால், எல்லாம் ஜில்லா நிர்வாகத்தைத்தான் பொறுத்திருக்கிறது என்று சொன்னால் மிகையாகாது. மாவட்ட மட்டத்தில் இருக்கும் நிர்வாகத்தில் இருப்பவர்கள் செய்யும்படியான வேலைகளைப் பொருத்துதான், அவர்கள் செய்யும்படியான பணிகளைப் பொருத்துத்தான் இங்கிருந்து சர்க்காருடைய கொள்கையையொட்டிப் போடும்படியான உத்தரவுகளை நிறைவேற்றும்படியான வகையிலே அது அமைந்திருக்கிறது.

கனம் உறுப்பினர் திரு. ஆதிமூலம் அவர்கள் பேசும்போது, இருபது வருஷகாலமாகக் காங்கிரஸ்காரர்கள் சரியாகச் செய்யவில்லை என்று ஒப்பாரி வைத்தார்கள். அப்படி ஒப்பாரி வைக்க நான் தயாராக இல்லை. நான் மிகத் தைரியமாகச் சொல்லுகிறேன்—யார் வந்தாலும் சரியே, இந்த நிர்வாகத்தை சீர்திருத்த முடியாது என்பது என்னுடைய அடிப்படையான அபிப்பிராயம்.

திரு. இராம. அரங்கண்ணல் : பாயிண்ட் ஆப் ஆர்டர், ஸார், எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள், "ஒப்பாரி" என்ற சொல்லை உபயோகித்திருக்கிறார்கள். அந்த வார்த்தை சட்டப் பேரவையில் உபயோகப்படுத்தக்கூடிய சொல்லாகுமா என்று அறிந்துகொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வேறு யாரோ சொன்னதாகச் சொல்லுகிறார் போலும்.

திரு. பி. ஜி. கருத்திருமன் : உங்கள் கூட்டணிக்காரர் சொன்னதைத் தான் சொல்லுகிறேன் என்று கனம் அங்கத்தினருக்குத் தெரிவித்துக்கொள்ளுகிறேன். யார் வந்தாலும் சரியே, இதுதான் நிலைமை. மாவட்ட முறையிலே இருக்கும்படியான நிர்வாகம் பலப்பல கட்டங்களில் அவ்வளவு பெருத்துப் போயிருக்கிறது. ஒரு வேலை இரண்டு வேலை அல்ல ; வேலைகள் மிக அதிகமாகப் பெருகிப் போயிருக்கின்றன. இப்பொழுது இருக்கும்படியான நிலையில், விண்ணப்பங்களை வாங்கிச் சேகரித்து விண்ணப்பங்களுக்குப் பதில் கொடுப்பதற்கென்றே ஒரு மாவட்ட அதிகாரி நியமித்தாலுங்கூட போதாது என்ற நிலையில் போய்க் கொண்டு இருக்கிறது. (மாண்புமிகு திரு. சி. என் அண்ணாதுரை : ஒரு மந்திரியே கூட நியமிக்க வேண்டுமோ என்னவோ). பெட்டிஷன்களை வாங்க ஒரு மந்திரி. ஊரெல்லாம் சுற்றிக் கொண்டுவர ஒரு மந்திரி. இப்படி இரண்டு இலாக்காக்களை முதல் அமைச்சர் அவர்களுக்கு நான் சிபார்சு செய்கிறேன். எந்த இடத்திற்குச் சட்டசபை அங்கத்தினர் போனாலும் சரி, வேறு முக்கிய அதிகாரி யார் போனாலும் சரி, விண்ணப்பங்கள் வந்தவண்ணமாக இருக்கின்றன. சட்டசபை அங்கத்தினர் தன்னுடைய தொகுதியில் சுற்றுப் பயணம் செய்யும்போது, சம்பந்தம் இருந்தாலும் இல்லாவிட்டாலும், ஏகப்பட்ட விண்ணப்பங்கள் வருகின்றன. அந்த விண்ணப்பங்களைப் பைசல் செய்ய முடியுமா, முடியாதா என்று முடிவு செய்வதே ஒரு பெரிய பிரச்சினை. அவ்வளவு கஷ்டமான காரியம். நியாமான விண்ணப்பங்களும் வரும், தகுதியில்லாத விண்ணப்பங்களும் வரும். ஆகவே, இம்மாதிரி நிலையிலே அந்த விண்ணப்பங்களை எடுத்துப் பரிசீலிக்க வேண்டும் என்று எடுத்துக் கொள்ளும்போது, அந்த விண்ணப்பங்களில் தகுதியுள்ளது எது, தகுதி இல்லாதது எது என்று பாகுபாடு செய்வதே ஒரு பெரிய காரியமாகப் போய்விடும் என்பதை நான் ஞாபகப்படுத்த விரும்புகிறேன். முதலமைச்சர் அவர்கள் சொல்வது மாதிரி, இதற்கென்று ஒரு தனி ஏற்பாடு செய்து, பொதுமக்களுடைய குறைகளைத் தீர்ப்பதற்கென்றே ஒரு இலாக்காவை ஏற்படுத்திவிட்டால் கூட நல்லது என்று நான் நினைக்கிறேன்.

ஜில்லா நிர்வாகத்தில், பட்டா கொடுப்பது ஒரு முக்கியமான விஷயம். தாசில்தார், ரெவின்யூ இன்ஸ்பெக்டர், மணியக்காரர், கணக்கப்பிள்ளை என்று இப்படிப் பல நிலையில் பட்டா வாங்குவதே ஒரு பெரிய பிரச்சினை. முப்பது வருஷம், நாற்பது வருஷம் ஆனாலுங்கூட பட்டா கொடுக்கப் படுவதில்லை. மக்களை நல்ல முறையில் ஜில்லா நிர்வாகத்தில் இருக்கக்கூடியவர்கள் கவனிப்பது இல்லை என்ற குற்றச்சாட்டை நான் சாட்டுகிறேன். அங்கே சரியாகக் கவனிக்காவிட்டால், அரசாங்கத்தைத்தான் குறை சொல்லுவார்கள். அங்கே மக்களுக்குச் சரியானபடி நியாயம் வழங்கப் படவில்லை யென்றால், அரசாங்கம் செய்தது தவறு என்று தான் மக்கள் சுட்டிக்காட்டுவார்கள். சிவாஜமா இருக்கிறது. மலைப் பிரதேசமாக இருக்தக்கூடிய இடத்தில் பட்டா கொடுக்க வேண்டும் என்று நாங்கள் பல தடவை யோசனை சொல்லியிருக்கிறோம். இதற்கெல்லாம் அடிப்படையான காரணம், பழைய வெள்ளைக்காரன் காலத்தில் இருந்த சிகப்பு நாடா முறை இன்னும் இருந்து கொண்டிருப்பதுதான். வெள்ளைக்காரன் காலத்தில், இந்த விஷயமெல்லாம் தீர்மானமாகாமலேயே இருக்க வேண்டும். இது அப்படி அப்படியே இருக்க வேண்டும் என்ற காரணத்திற்காக வைத்துக் கொண்டிருந்தது முறையையே பாரம்பரியமாக நாமும் வைத்துக் கொண்டிருந்த குற்றந்தான். இப்பொழுது நமக்குப் பெரிய இடைஞ்சலாகவும், தடங்கலாகவும் இருக்கிறது என்பதையும் நான் இங்கே ஞாபகப்படுத்த விரும்புகிறேன்.

என்னுடைய லோயர் பவானி பிரதேசத்தில், அணை கட்டுவதற்காக என்று, ஒரு ஆறேழு கிராமங்களில் இருந்த மக்களை வேறு இடத்திற்குக் கொண்டுவந்தார்கள். ஆருயிரம் காட்டிலாகாவிற்குச் சொந்தமான நிலத்திலிருந்து பிரித்து அவர்களுக்குக் கொடுத்தார்கள். ஒரு அதிகாரி போட்டார்கள், டெபுடி கலெக்டர் லெவலில். அப்போதே அதை முடித்திருக்கலாம். ஆனால், வருஷங்கள் 12 ஆகியும், ஒரு சில பேர் பணம் கொடுத்தும், இன்னும் இதுவரைக்கும் பட்டா வராமல் இருக்கிறது. நானும் அநேக தடவை சம்பந்தப்பட்டவர்களைப் போய்ப் பார்த்தேன். நான் பல வருஷமாகச் சட்டசபை உறுப்பினராக இருந்து வருகிறேன். இன்னும் பட்டா வாங்கிக் கொடுக்க முடியவில்லை. தாசில்தாரைப் பார்க்கபோனால், அவர் அப்பொழுது இருக்கமாட்டார். தாசில்தார் இருந்தாலும், ஆர்.டி.ஓ. இருக்க மாட்டார். ஆர்.டி.ஓ.வை விட்டு ஜில்லாக் கலெக்டரைப் பார்க்கலாம் என்று போனால், அவரைப் பார்ப்பது ரொம்ப ரொம்பச் சிரமமான காரியம். நம்மைப்போல் சட்டசபை உறுப்பினருக்கே இந்த நிலை. நம்மைப் பார்க்க வேண்டாம் என்ற எண்ணம் நிர்வாகத்தில் உள்ளவர்களுக்கு இல்லை என்றாலும், அவர்களுக்கு உள்ள வேலை அப்படியிருக்கிறது. அவர்கள் பல இடங்களுக்குச் சுற்றுப்பயணம் போகும் நிலை இருப்பதால், நம்முடைய வேலைக்கும் அவர்களுடைய வேலைக்கும் எந்தவிதமான தொடர்பும் இல்லாமலிருக்கிறது. ஆகவே, முதலமைச்சர் அவர்களுக்கு என்னுடைய ஆலோசனை இதுதான். நிர்வாகத்தில் உள்ள அதிகாரிகள் குறிப்பாக கலெக்டர், ஒரு வாரத்திலாவது அவரவர்கள் ஹெட்க்வார்ட்டர்ஸில் நிச்சயமாக இருக்கவேண்டும் என்ற நிலையை ஏற்படுத்த வேண்டும். பொதுவான ஒரு உத்தரவாகப் போட்டுவிட வேண்டும். மாதத்தில் 20-ந் தேதியிலிருந்து 30-ந் தேதி வரையிலுமோ, 1-ந் தேதியிலிருந்து 10-ந் தேதிவரையிலுமோ, அவர்கள் ஹெட்க்வார்ட்டர்ஸில் இருந்தாக வேண்டும் என்ற நிலை ஏற்பட்டால், சட்டசபை அங்கத்தினர்களானாலும் சரி, பாக்கியிருப்பவர்களானாலும் சரி, நேராகப் போய் அவர்களிடத்தில் சொல்லும்படியான நிலை இருக்கும் என்பதை நான் ஞாபகப்படுத்துகிறேன். ஏனென்றால், அவர்கள் இஷ்டப்படி சுற்றுப்பயணம் போய்விடுவதால், நாம் அவர்களை அங்கே பார்க்க முடியாத நிலையில், சட்டசபைக்கு வந்து சொல்லக் கூடிய நிலை ஏற்படுகிறது. ஆகவே, ஒவ்வொரு ஜில்லாவிற்கும் ஒரு வாரமோ, பத்து நாளோ நிச்சயமாக கலெக்டர் ஹெட்க்வார்ட்டர்ஸில் இருக்க வேண்டும் என்ற நிலையை ஏற்படுத்த வேண்டும்.

டிஸ்ட்ரிக்ட் டெவலப்மெண்ட் கவுன்சிலைப்பற்றிச் சொன்னார்கள். திருப்பித் திருப்பிச் சொல்ல விரும்பவில்லை. ஏற்கெனவே தீர்மானம் செய்யப்பட்டு, டைப் பண்ணப்பட்டு வைக்கப்பட்டிருக்கும். அதில் எந்த மாறுதலும் கிடையாது. சரி, ஆமாம் என்று சொல்லும் நிலைதான் இருக்கிறது. இப்படி, இப்போதுள்ளபடி, டெவலப்மெண்ட் கவுன்சில் நடைபெறுவதைவிட, அதைக் கலைத்துவிடுவது நல்லது என்பது என்னுடைய அபிப்பிராயம். டெவலப்மெண்ட் கவுன்சில் வேண்டாம் என்று சொல்லவில்லை. ஆக்க பூர்வமாகக் காரியங்களை நிறைவேற்ற, மக்களுக்குச் சேவை செய்யும்படியான நிலையில் அது இருக்க வேண்டும்.

பூமி ஆர்ஜிதச் சட்டத்தைத் தீவிரமாக்க வேண்டும். மத்திய சர்க்காரிலே கூட, அந்தச் சட்டத்தைச் திருத்த வேண்டும் ஏன்று நினைத்துக்கொண்டிருக்கிறார்கள். எந்த நல்ல காரியத்தைக் கொண்டு வந்தாலும் சரி, பூமி ஆர்ஜிதம் சம்பந்தமாகக் கொடுக்கக்கூடிய நோட்டீஸ்கள் எல்லாம் கோர்ட்டுக்குப் போகின்றன. பல தடங்கல்கள் ஏற்பட்டு, நல்ல காரியங்கள் நிறைவேற முடியாமற் போகின்றன. நல்ல காரியங்கள் நிறைவேறுவதற்கான அளவிற்குத்தான் பூமி ஆர்ஜிதச் சட்டம் இருக்க வேண்டும். சில இடங்களில் பாசன வசதி ஏற்படுத்த வேண்டும் என்று முயற்சிக்கும்போது, நில ஆர்ஜிதச் சட்டத்தின் கீழ் கோர்ட்டுக்குப் போகக் கூடிய சூழ்நிலை ஏற்படுகிறது. எந்தப் பலனை அளிக்க வேண்டும் என்று சர்க்கார் நினைக்கிறதோ, எந்தப் பூமியை அபிவிருத்தி செய்ய வேண்டும் என்று நாம் நினைக்கிறோமோ, அதற்கெல்லாம் குந்தகம் விளைவிக்கும் நிலை இருக்கக்கூடாது, பல பகுதிகளாகப் பிரித்துக் கொள்ளலாம். ஏழை அரிசனங்களுக்கு வீட்டு மனைக்கட்டு வசதி வேண்டுமென்று சொல்லுவோம். நிர்வாகத்தில் இருக்கும் அதிகாரிகள் இரண்டு பேருக்கும் சொல்லிக் கொடுத்து விடுவார்கள். ஒரு அமைச்சர் வரும்போது, சரி என்று சொல்லி விடலாம். ஆனால் பொதுவான நிலைமை வேறு விதமாகத்தான் இருக்கிறது. செல்வாக்கு உள்ளவர்கள், பப்ளிக் ஹெல்த் அதிகாரியைக் கூட்டிவந்தது எனக்குத் தெரியும். பப்ளிக் ஹெல்த் ஆபீசரைக் கூட்டி வந்து, சுகாதார வசதிக்குத் தகுதியற்றது என்று சர்ட்டிபிகேட் வாங்கி, ஐம்பது அரிசனங்களுக்கு வீட்டு வசதி செய்து கொடுக்க முடியாத அளவிற்கு, பூமியை ஆர்ஜிதம் செய்ய முடியாத நிலையில் விட்டுப்போன பூமிகள் பலப்பல. ஆகவே, நில ஆர்ஜிதம் மிகவும் கண்டிப்பாக நடைபெற வேண்டும். சமூகத்திற்கு நலம் பயக்கக்கூடிய காரியங்கள், பாசன அபிவிருத்தித் திட்டங்கள், இப்படிப்பட்டவற்றைப் பொறுத்தவரையிலாவது, சீக்கிரமாக உடனடியாக நில ஆர்ஜித வேலை முடியத்தக்க அளவிற்கு, குறைந்த அவகாசமே எடுத்துக் கொள்ள வேண்டும். இதிலே நோட்டீஸ் கொடுத்து 15 நாட்கள் என்று சொல்லி, கோர்ட்டுக்குப் போய்விடுகிறார்கள். கோர்ட்டுக்குப் போக வேண்டாமென்று சொல்லவில்லை. மக்களுடைய ஜீவாதாரமான உரிமை எது என்பதை அறிந்து செயல்பட வேண்டும். மக்களுக்கு நன்மை செய்யக்கூடிய காரியங்களில் நமக்கும் பொறுப்பு உண்டு என்பதைத் தெரிந்துகொள்ள வேண்டும்.

அடுத்தபடியாக பஞ்சாயத்துக்களை அமைக்கும்படியான முறை. சில இடங்களில் 2 சதுர மைலில் ஒரு பஞ்சாயத்து அமைந்திருக்கிறது. சில பஞ்சாயத்துக்கள் வருவாயை அடிப்படையாகக்கொண்டு—டிரை லாண்ட்—25 சதுர மைலுக்கு ஒரு பஞ்சாயத்தாக அமைக்கப்பட்டிருக்கிறது. ஆகவே, முதலமைச்சர் அவர்கள் இதைக் கவனித்து, வருவாயை அடிப்படையாக எடுத்துக்கொள்ளாமல், ஒரு பரப்பை அடிப்படையாக வைத்து, ஜனத்தொகையை ஓரளவு கணக்கில் வைத்துக்கொண்டு 15 சதுர மைலுக்கு ஒரு பஞ்சாயத்து என்று அமைக்க ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். கஸ்பா போன்ற சிறிய சிறிய கிராமங்கள் இருக்கின்றன. அவைகளை சிறு சிறு பஞ்சாயத்துக்களாக அமைக்க வேண்டும். என்னுடைய பகுதியிலே தாளவாடி பிர்க்கா இருக்கிறது. அது ஒரு பெரிய பிர்க்கா. அங்கு சப்-டிரஷரி கிடையாது. அங்கு ஒரு சப்-டிரஷரியை ஏற்படுத்தித் தரவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். மேலும், என் பகுதியில் குத்தியாத்தூர் என்ற கிராமம் உள்ளது. அது மலைப்பகுதியாக

இருக்கிறது. பாரஸ்ட்டாக இருப்பதால் மக்களுக்குப் பலப்பல இடைஞ்சல்கள் இருக்கின்றன. அங்கு இருக்கும் மக்களுக்குப்பட்டா வழங்குவதற்காக ஏழு, எட்டு அதிகாரிகளைப் போட்டும், இதுவரை பட்டா கொடுக்கும்படியான நிலைமை இல்லை. அதை உடனடியாகக் கவனித்துச் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இந்த மானியத்திலே எத்தனை வகையான குறைபாடுகள் இருந்தாலும், இதைச் சிறப்பாக நடத்த வேண்டுமென்றால், நாம் போடும்படியான திட்டங்களை மாற்றியமைத்து, ஜில்லா நிர்வாகத்தை கீழ் மட்டத்திலிருந்து—வில்லேஜ் ஆபீசர்களையெல்லாம் மாற்றியமைக்க வேண்டும். அடுத்தபடியாக நான் ஜமாபந்தி முறையை பூரணமாக எதிர்க்கின்றேன். பழைய காலத்தில்தான், ஜனங்கள் தாசில்தாரை—கலெக்டரைப் பார்க்க முடியாது. தங்களுடைய குறைகளைச் சொல்ல முடியாது என்று அந்த முறையை வைத்துக் கொண்டிருந்தார்கள். ஆனால் இப்போது மக்கள் முதலமைச்சர் என்ன—பிரதம மந்திரிக்கே விண்ணப்பம் எழுதிக்கொண்டிருக்கிறார்களே! மக்கள் இப்போது அறியாமை உள்ளவர்களாக இல்லை. பழைய காலத்தில்தான், மக்களுடைய குறைகளை உடனடியாகத் தீர்ப்பதற்காகத்தான் ஜமாபந்தி வைத்துக்கொண்டிருந்தார்கள். தற்போது அந்த முறை வேண்டாம் என்று கூறிக்கொள்கிறேன். பொதுமக்களுடைய குறைகளை உடனடியாகத் தீர்ப்பதற்கு ஒரு வழி வகுக்க வேண்டும் என்று கூறி, இந்த மானியத்தின் மீது கொடுக்கப்பட்டிருக்கும் வெட்டுப் பிரேரணையை ஆதரிக்கிறேன்.

***மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை :** சட்டமன்றத் தலைவர் அவர்களே, இந்த மாவட்ட நிர்வாகத்திற்கான மானியத்தின்மீது இன்றைய தினம் பேசிய பல உறுப்பினர்கள் எடுத்துச் சொன்ன கருத்துக்களையெல்லாம் கேட்டுக்கொண்டிருந்தபோது, நாம் இவைகளை நல்ல முறையிலே மாற்றியமைத்துச் செய்யலாமா என்றுதான் எனக்குத் தோன்றிற்று. பொதுவாக, உறுப்பினர்கள் தங்கள் தங்கள் அரசியல் கட்சிகளை அடிப்படையாகக் கொண்டு பேசினால், உடனடியாகப் பதிலளித்துவிடலாம். அவர்கள், "நிர்வாகத்தில் சில திருத்தங்கள் செய்ய வேண்டும், சில அமைப்புக்களை மாற்றியமைத்து உருவாக்க வேண்டும், சில குறிப்பிட்ட இடத்தில் உள்ள சீர்கேடுகளைத் திருத்த வேண்டும்" என்று கூறினார்கள். இப்படிப்பட்ட கருத்துக்களைக் கூறுகின்றபோது அமைச்சர்கள் அதற்கு உடனுக்குடன் பதில் அளிப்பதைவிட, உறுப்பினர்கள் தங்களுடைய கருத்துக்களைச் சொல்வதற்கு வழி செய்து கொடுத்துவிட்டு, மறுநாள் அது சம்பந்தப்பட்ட அமைச்சர், அதற்குத் தொடர்புடைய அதிகாரிகளிடத்தில் கலந்து பேசி, உறுப்பினர்கள் இன்னின்ன யோசனைகளை எடுத்துச் சொன்னார்கள் என்று கூறி, மறுநாள் அதற்குப் பதிலளித்தால் இன்னும் நல்ல முறையிலே இந்த விவாதத்தின் பலன் கிடைக்குமென்ற எண்ணம், பல உறுப்பினர்கள் பேசிக்கொண்டிருக்கும்போது எனக்குத் தோன்றியது. நண்பர் திரு. டி. எஸ். ஆதிமூலம் அவர்கள் பேசியபோது, "கலெக்டர் தனக்குத்தானே ஒரு நோட்டீஸ் கொடுத்துக் கொண்டார்" என்று குறிப்பிட்டார். அது பற்றி உடனடியாக நான் பதில் சொல்வதென்றால், "அது வேடிக்கையாகச் சொல்லப்பட்டது; உண்மை அப்படி அல்ல" என்று சர்க்கார் பாணியில்தான் பதில் சொல்ல வேண்டியிருக்கும். அந்தக் கேள்விக்கு இன்னொரு நாள் அமைச்சர் பதில் சொல்லலாம் என்ற முறை இருக்குமானால், நல்ல முறையிலே தகவல்களை அறிந்து பதில் சொல்ல முடியும். அதற்கு அதிகமான நாட்களில் சட்டமன்றங்களை நடத்த வேண்டி வரலாம்.

முதலிலே, பொது வரவு—செலவுத் திட்ட விவாதம் முடிந்தவுடன் இந்த மானியக் கோரிக்கைகளைக் குறிப்பிட்ட நாட்களுக்குள் முடித்துவிட வேண்டும். நிதி பெறுவதற்கான நாட்களை நாம் குறைத்தாக வேண்டும். அதை விரைவுபடுத்திக்கொண்டு, இரண்டு நாட்களில் வாக்கெடுப்பு நடத்தி, பொதுவாக கட்சிக்கு ஒருவர் என்று மட்டும் பேசி, மானியக் கோரிக்கைகளையெல்லாம் முடித்துக்கொள்ள வேண்டும். அதற்குப் பிறகு, இந்தத் தலைப்புக்களின் மேல், பல்வேறு நல்ல கருத்துக்களை உறுப்பினர்கள் எல்லாம் எடுத்துச்சொல்லி, அதை அமைச்சர்கள் ஒவ்வொரு நாளும்

கேட்டு, மறுநாள் அந்தந்தத் துறையிலே தகவல்களைச் சேகரித்துப் பதிலளித்தால், இன்னும் இந்த விவாதம் நல்ல முறையிலே நடைபெறும் என்று கருதுகின்றேன். இல்லையென்றால், இப்போது "டிஸ்ட்ரிக்ட் டெவலெப்மெண்ட் கவுன்சில்"—மாவட்ட வளர்ச்சிக் கவுன்சிலைப்பற்றிச் சொன்னதுபோல, "அவர்கள் சில கருத்துக்களைச் சொல்லி—அதிகாரத்தில் உள்ளவர்கள் சில கருத்துக்களைச் சொல்லி—மணி ஒன்றாகப் போகிறது, எப்பொழுது முடிக்கலாம்" என்று எல்லோரும் ஆவலுடன் இருக்கின்ற நிலைமையைப்போன்று—நாமும் அரசியல் கருத்துக்களைப் பரிமாறிக் கொண்டிருக்கலாம். முக்கியமான பிரச்சினைகளில் ஒரு மாற்றம் ஏதாவது ஏற்பட வேண்டுமானால் அது, இவையாகத்தான் இருக்குமென்று இன்றைய தினம் உணர்ந்தேன். ஆகவே, பல துறைகளிலும் உள்ள விதி முறைகளை ஆராய்ந்து நல்ல முறையில், தேவையான விதி முறைகளையும் புகுத்தி நாம் எல்லாம் ஒழுக வேண்டுமென்பதில் நமது சட்டமன்றத் தலைவர் அவர்களும் கவனித்து, அதைப்பற்றியும் சில நல்ல திருத்தங்களை ஏற்படுத்தித் தருவார்கள் என்று நம்புகின்றேன். கட்சித் தலைவர்கள் எல்லோரும் நம்முடைய வரவு-செலவுத் திட்ட விவாத நேரத்தை மேலும் எப்படி பயனுள்ளதாக்கலாம் என்று கூறவேண்டுமென்று கருதுகிறேன்.

உறுப்பினர்கள் எல்லாம் ஒரு முக்கியமான கருத்தைப்பற்றிக் கூறும்போது, "எந்தக் கட்சி ஆட்சி நடத்தினாலும்—யார் ஆட்சியில் இருந்தாலும், மக்களுக்குப் பலன் கிடைக்க வேண்டுமென்றால், கிராமத்தின் அடித்தளத்திலுள்ள நிர்வாகம் நல்ல முறையில் இருக்க வேண்டும்" என்று குறிப்பிட்டார்கள். பொது மக்களுக்கு நல்ல திருப்தியைக் கொடுத்தால்தான், இந்த சர்க்காருடைய திட்டங்கள் எல்லாம் செயல்படுத்தப்படும், சர்க்காருக்கும் நல்ல பெயர் கிடைக்கும். எப்படி மனித உடலில் நரம்புகள், ரத்தக் குழாய்கள் சரியான முறையில் இருந்தால்தான், அந்த மனித உடல் செய்ய வேண்டிய காரியங்களைச் செவ்வனே செய்ய முடியுமோ அதுபோல கிராமப்புறங்கள்—பிர்க்காக்கள்—தாலுக்காக்கள்—மாவட்டங்கள் என்ற வரிசைக் கிரமமான முறையில் அமைந்திருக்கின்ற மாவட்ட நிர்வாகம், ரத்தக் குழாய்கள், நரம்புகளைப்போல சரியான முறையில் இயங்குவதற்கு வழி கண்டறியவேண்டும். மாவட்ட நிர்வாகம் சரியான முறையில் இயங்கினாலொழிய, சர்க்கார் சில திட்டங்களைப் போடுவதால் மட்டும் பலன் கிடைத்துவிட முடியாது என்பதை உறுப்பினர்கள் உணர்ந்திருப்பதை நான் மிகமிக முக்கியத்துவம் உள்ளதாகக் கருதுகிறேன். திருத்தியமைப்பதற்கு நாம் மேற்கொள்ளக்கூடிய காரியங்கள் ஆழ்ந்து சிந்தித்துச் செய்யப்பட வேண்டியவைகள் ஆகும்.

ஓர் இடத்திலே நமக்கு அதிருப்தி தோன்றியவுடன் இதை உடனடியாக மாற்ற வேண்டுமென்ற அவசரமான முடிவை எடுத்து மாற்றிவிட்ட பிறகு அதற்குப் பிறகு முன்னாலே இருந்ததே பரவாயில்லை போலிருக்கிறதே என்று சொல்லக்கூடிய நிலைக்கு நாம் வந்துவிடக்கூடாது. ஆனால் அவசரப்பட்டுச் செய்யக்கூடிய திருத்தங்கள் இதில் இல்லை. கனம் உறுப்பினர்கள் சொன்னவற்றிலே ஒரு கருத்து வேறுபாடு எனக்கு உண்டு. கிராமங்கள், பிர்க்காக்கள், தாலுக்காக்கள், மாவட்டங்கள் என்று இருக்கிற இந்த அமைப்பு முறையே வெள்ளைக்காரன் ஏற்படுத்திவிட்டுப் போனது, ஆகையினால் இன்றைய தினம் சரியாக நடைபெறாது, அதை நாம் ஒத்துக் கொள்ளக்கூடிய நிலையில் இல்லை, என்று சொல்வது உண்மையில்லை. இந்தியாவைப் பொறுத்த வரையில் தமிழகத்தை எடுத்துக்கொண்டால் சோழ மன்னர்களால் அமைக்கப்பட்டிருந்த அமைப்புத்தான் இப்பொழுதும் ஒரு வகையிலே அமலில் இருப்பதாக நாம் கருதிக் கொள்ள வேண்டும். சோழ மன்னர்கள் நாட்டின் நிர்வாகத்திற்கு அடிப்படையாகப் பல ஊர்களை அமைத்துக்கொண்டு, அந்த ஊர்களையெல்லாம் ஒருவாறு இணைத்து கூற்றங்களை அமைத்தார்கள். பல கூற்றங்களை இணைத்து கோட்டங்கள் அமைத்தார்கள். கோட்டங்களை ஒன்றுபடுத்திப் பல மண்டலங்களை ஏற்படுத்தினார்கள். அப்படிப்பட்ட மண்டலங்களையெல்லாம் இணைத்துத்தான் நாடு என்று அமைத்து நிர்வாகத்தை நடத்தினார்கள். அதனாலேதான் தமிழகத்திலே தமிழ் மன்னர்களுடைய ஆட்சி பொதுவாக சிறப்புடையதாக

இருந்தாலும், சோழ மன்னர்களுடைய ஆட்சிதான் மிகச் சிறப்புடையதாக இருந்தது. என்று கூறப்படுகிறது. அவர்கள் நிர்வாக வசதிகளுக்கேற்ற முறையில் பல்வேறு கட்டங்களாகப் பிரித்து ஒரு கட்டத்திற்கும் இன்னொரு கட்டத்திற்கும் இணைப்பு ஏற்படுத்தி, அந்த இணைப்பு ஒழுங்காக இருக்கும்படி பார்த்து கொண்டதால், அவர்களுடைய ஆட்சி சிறந்து விளங்கியது என்று வரலாற்று ஆசிரியர்கள் எல்லாம் பாராட்டுகிறார்கள். நிர்வாகக் கோட்டங்களைப் பல்வேறு வகையாகப் பிரித்தது மட்டுமல்ல, பல்வேறு காரியங்களைச் செய்வதற்காகப் பல வாரியங்கள் அல்லது குழுக்கள் ஏற்படுத்தியிருந்தார்கள். கழனி வாரியம், தோட்ட வாரியம், நீர் வாரியம், கலிங்கு வாரியம், பொன் வாரியம், கணக்கு வாரியம், பெருவழி வாரியம் என்ற வகையிலே பல வாரியங்கள் அமைக்கப்பட்டிருந்தன.

இரிகேஷன், ஹைவேஸ் என்று இன்றையதினம் சொல்லுகிறபொழுது வெள்ளைக்காரன் காலத்திலே கொண்டுவரப்பட்டது என்று எண்ணிக் கொண்டிருக்கிறோம், சோழ மன்னர்கள் காலத்திலேயே ஒவ்வொன்றுக்கும் ஒவ்வொரு குழு, வாரியம் எல்லாம் இருந்தன. அதேவிதமான நிர்வாக அமைப்புக்கள் இன்றையதினம் இருந்தாலும் அன்றையதினம் இருந்த உயிர் சக்தி இன்றையதினம் இல்லை. அந்த உயிர்ச் சக்தி இன்றையதினம் இல்லாததற்குக் காரணம், அன்றையதினம் ஒரு கிராமத்திலே கிராம மக்கள் நிர்வாகத்திலே காட்டிவந்த அக்கறை இன்றையதினம் கிராமத்திலே காட்டப்படுவதில்லை. நண்பர் திரு. கருத்திருமன் அவர்களுக்குத் தெரியும், இருபது, முப்பது வருடத்திற்கு முன்னாலே எங்கேயாவது ஒரு மதகு பழுதாகிவிட்டதென்றால், கலெக்டர் போக வேண்டுமென்றோ அல்லது சட்டமன்ற உறுப்பினர்கள் செல்ல வேண்டுமென்றோ இல்லாமல், அன்றைய தினம் கிராமத்து மக்களே குடிமராமத்து வேலைகளை எல்லோரும் கூடிச் செய்து வந்தார்கள். எதற்கும் சர்க்காருடைய மானியங்கள், சர்க்காருடைய உதவிகள், கடன்கள் இவற்றை அடிப்படையாக வைத்துத்தான் எல்லாக் காரியங்களும் நடப்பது என்ற நிலை இன்று இருப்பது போல் அன்று இருந்ததில்லை. ஒரு மதகு சீர்படுத்தப்பட வேண்டுமென்றால், அதை யார் வந்து பார்ப்பது என்ற நிலையில்தான் இன்றையதினம் போக்கு இருக்கிறது. இவற்றிற்கெல்லாம் கிராமத்து மக்கள் அக்கறை காட்ட வேண்டுமென்ற உணர்ச்சியை ஊட்டவேண்டுமென்று நான் உறுப்பினர்களிடத்தில் கேட்டுக்கொள்ளுகிறேன்.

நான் நிதி நிலை அறிக்கையின்போது சிரணியைப் பற்றி குறிப்பிட்டுச் சொல்லியிருக்கிறேன். அப்பொழுது அதைப் பற்றிப் பேசியவர்களில் சிலர் அதை செங்காவலர் படையென்றோ அல்லது வேறு எந்த விதமான படையென்றோ ஐயப்பாடுகளைத் தெரிவித்துக்கொண்டாலும், பொதுக்காரியங்களில் மக்களுக்கு அக்கறை உணர்ச்சியை செயல் முறையிலே தூண்டுவதற்குத்தான் சிரணிப்படை பயன்படும் என்ற கருத்தில்தான் நான் தெரிவித்தேன். இந்தப் படை மாவட்டத்திற்கு மாவட்டம் அமைவது மட்டுமல்ல, கிராமத்திற்குக் கிராமம் அமைக்கப்பட்டால் பல நல்ல காரியங்களை நிறைவேற்றும் என்று நான் கருதுகிறேன். சிரணிப் படையாலோ அல்லது கிராமத் தொண்டர்களாலோ நிறைவேற்றப்பட முடியாத கடினமான, நிர்வாக நிபுணத்துவம் தேவைப்படுகிற காரியங்கள் எல்லாம் சர்க்காருக்குத்தான் வந்தாக வேண்டும். சர்க்கார் அவற்றிலே தலையிடுவதிலே எந்த விதமான நியாயக் குறைவும் இல்லை. சில பணிகளில் கட்டாயமாகச் சர்க்கார் தலையிட்டே தீர வேண்டும். கனம் உறுப்பினர்கள் அனைவரும் பொது உணர்ச்சியை, இருபது, முப்பது வருடங்களுக்கு முன்னாலே இருந்த உணர்ச்சியை மறுபடியும் மக்களிடத்திலே உண்டாக்க வேண்டும். அப்படி உண்டாக்க வேண்டுமானால் எடுத்துக்காட்டாக, ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன், டிஸ்ட்ரிக்ட் டெவலப்மென்ட் கவுன்சில், மாவட்ட அபிவிருத்திக் குழு பற்றிப் பலர் பேசும் பொழுது சொன்னார்கள். நான் மிகுந்த கவனத்தோடு கேட்டுக் கொண்டு இருந்தேன். ஏனென்றால் இது நான் மிகுந்த அக்கறை கொண்டுள்ள பிரச்சினை. ஒவ்வொரு கிராமத்திற்கும் ஒவ்வொரு பஞ்சாயத்து இருந்தே தீரவேண்டும். இதுதான் சர்க்கார் தருகிற பெரிய சலுகை; சுயராஜ்யத்தை அவரவர்கள் வீட்டு வாசலில் கொண்டுபோய்ச் சேர்ப்பது; ஆகவே பஞ்சா

யத்துக்களை எல்லாக் கிராமங்களிலும் உண்டாக்க வேண்டும், என்று உண்டாக்கினார்கள். பல பஞ்சாயத்துக்கள் சிறிய கிராமங்களிலே இருப்பதாலே, அங்கே வருகின்ற வருவாயை வைத்துக் கொண்டு பஞ்சாயத்துக்குச் செய்யப்படவேண்டிய காரியங்களை எல்லாம் செய்வதற்கு வாய்ப்புகள் இல்லை, வசதிகள் இல்லை.

எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் பேசும்பொழுது சொன்னார்கள், சிறிய கிராமங்களை யெல்லாம் வருவாய் அடிப்படையிலே திருத்தியமைக்க வேண்டுமென்று சொன்னார்கள். அப்படித் திருத்தியமைக்க வேண்டுமென்று அரசு முன்வருகின்றபொழுது எல்லாக் கட்சிகளும் ஒன்று சேர்ந்து அது செய்யப்பட வேண்டியது என்று ஏற்றுக்கொள்ள வேண்டும். அப்பொழுதுதான் அரசை நடத்துகின்ற எந்தக் கட்சியும் அதைத் துணிந்து செய்யும். எதிர்க் கட்சித் தலைவர் இங்கே சொன்ன மாதிரி 5,000 பஞ்சாயத்துக்களைத் திருத்தியமைத்து 3,000 பஞ்சாயத்துக்களாகக் குறைத்தவுடன், எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் மாலையிலே காங்கிரஸ் தலைவர் என்ற முறையில் மேடையிலே, 'எங்கள் காலத்திலே கிராமங்களுக்குச் சுயராஜ்யம் இருந்தது, இவர்கள் வந்தவுடன் பார்த்தீர்களா 5,000 பஞ்சாயத்துக்களை 3,000 பஞ்சாயத்துக்களாக ஆக்கிவிட்டார்கள், குறைக்கப்பட்ட 2,000 பஞ்சாயத்துக்களும் காங்கிரஸார் பஞ்சாயத்துக்கள்' என்று பேசுவார் என்ற நிலை இருக்கிறது. இல்லையென்றால் எல்லாக் கட்சித் தலைவர்களும் சேர்ந்து, இதைத் திருத்தியமைக்க வேண்டுமென்பதிலே ஒன்றுபட்டு இருக்கிறோம். இதிலே கட்சிப் பிரச்னைக்கோ, கட்சி மாச்சரியத்திற்கோ இடமில்லை, அப்படிப்பட்ட முறையில் பயன்படுத்திக்கொள்ள மாட்டோம் என்று கூறி ஒருவருக்கொருவர் தெளிவாகப் புரிந்துகொண்டு பின்னர் நிர்வாகம் சரியாக இல்லை என்றெல்லாம் சொல்லாமல் ஒருமைப்பாட்டு உள்ளத்தோடு காரியங்களைச் செய்யலாம். அரசியல் கட்சிகளிலே இருக்கின்றவர்கள், சில சமயங்களிலே சில காரியங்களைச் செய்ய விட்டுவிட்டு, பின்னாலே குறை சொல்லுகிற பழக்கமும் உண்டு; சில காரியங்களைச் செய்ய விடாமல் தடுத்துப் பின்னாலே செய்யவில்லை என்று குறைசொல்லுகிற பழக்கமும் உண்டு. சர்க்காரை நடத்துகின்ற எந்தக் கட்சியும் அதிகமான அளவுக்கு இதனாலே எதிர்ப்புணர்ச்சிகள் வராமல் இருக்குமா என்பதையும் பார்த்துக்கொள்ள வேண்டிய பொறுப்பிலே இருக்கிறது.

நிர்வாகத்திலே திருத்தங்கள் செய்ய வேண்டுமென்று எல்லோரும் சொன்னபொழுது பல உறுப்பினர்கள் சொன்னார்கள், 15, 20 வருடங்களாகச் சொல்லி வருகிறோம் என்று சொன்னார்கள். அவர்கள் சொன்னது உடனுக்குடன் நடைபெறாமல் இருப்பதற்குக் காரணம் இதுதான் என்று கருதுகிறேன். காங்கிரஸ் கட்சியும் இதைச் செய்யாததற்குக் காரணம், செய்தால் அதை நாங்கள் பயன்படுத்திக் கொண்டு அவர்கள் செல்வாக்கைக் குறைத்துவிடுவோமோ என்ற அச்சம்தான். எங்களால் செய்ய முடியவில்லையென்றால், அந்த அச்சம்தான் காரணமாக இருக்குமென்று நண்பர்கள் சொல்வார்கள். இந்த அச்சம் நிர்வாக விஷயத்திலே திருத்தங்கள் செய்யும்பொழுது ஏற்படக் கூடாது. அப்படி ஏற்படக் கூடாது என்றால், எல்லா அரசியல் கட்சிகளுக்குள்ளும் பெருந்தன்மையான அடிப்படையில் ஓர் ஒப்பந்தம் ஏற்பட வேண்டும். 'அரசியல் கட்சி விஷயங்களுக்கு இதைப் பயன்படுத்திக்கொள்ள மாட்டோம், இதைச் செய்யுங்கள்' என்ற ஒப்பந்த உணர்ச்சியை ஏற்படுத்த வேண்டும். அது போன்று ஏற்படுத்தினால்தான் இந்தக் காரியங்களைச் செய்ய முடியும். அப்படி ஒப்பந்த உணர்ச்சியை ஏற்படுத்தினால்தான் இதைச் செய்வார்களா, இல்லாவிட்டால் செய்ய மாட்டார்களா என்று உறுப்பினர்கள் கேட்கக்கூடும். நான் திட்டவட்டமாகச் சொல்வேன், ஒப்பந்தம் ஏற்படச் செய்தால் நல்லது, ஒப்பந்தம் ஏற்பட வழி இருக்கிறதா என்று பார்ப்பதற்கு நாங்கள் காத்துக்கொண்டிருப்பதற்குத் தயாராக இருக்கிறோம். ஒப்பந்தம் ஏற்பட்டால் செய்வோம்; இல்லையென்றால் செய்யவே மாட்டோம் என்று சொல்ல மாட்டேன். அதைச் செய்வதற்கு வேண்டிய முறைகளில் அரசு ஈடுபடும் என்று நான் வாக்களிக்க விரும்புகிறேன். வட்டார வளர்ச்சிக் குழுவைப் பற்றிச் சொன்னார்கள். இதிலே முன்னாலே நான் சட்டமன்ற உறுப்பினராக இருந்தபொழுது என்னுடைய செங்கல்பட்டு மாவட்ட வட்டார வளர்ச்சிக்

குழுக் கூட்டத்திற்குப் போனேன். ஐந்து ஆண்டுகளுக்கு அந்த ஒரு தடவைதான் போனேன். மாவட்ட கலெக்டர் தலைவராக இருந்து நடத்திய முறையையும், வந்திருந்தவர்கள் கலெக்டருடைய பார்வை நம் மீது விழுமா விழுமா என்று உட்கார்ந்த பாவனையையும், நான் பார்த்துவிட்டு நாம் இந்த ஒரு தடவை வந்ததுகூடத் தேவையில்லை என்று நினைத்தேன்.

கலெக்டர் கூட என்னைக் கேட்டார்கள். "You can say something" என்றார்கள். அந்த விதத்திலேதான் அது நடந்துகொண்டிருக்கிறது. "You can say something" என்றவுடன், 'எனக்கு ஒன்றும் சொல்வதற்கில்லை' என்று சொல்லி உட்கார்ந்துகொண்டிருந்தேன். அந்த டிஸ்ட்ரிக்ட் டெவலப்மெண்ட் கவுன்சிலை உயிருள்ள அமைப்பாக மாற்றி அமைக்க வேண்டுமென்று உறுப்பினர்கள் சொன்ன கருத்தை வெகுவாக வரவேற்கிறேன். எந்த முறையில் அமைப்பது என்பதற்கான விவரங்களைச் சேகரிக்க விரும்புகிறேன், எந்த விதமாக புதுரத்த ஓட்டம் அதிலே இருக்க வேண்டுமென்பதைப் பற்றியும் யோசித்துப் பார்க்க இருக்கிறேன், அதற்குக் கலெக்டர் தலைமை வகிக்காது உத்தியோகப் பற்றற்றவர் தலைமை வகித்துவிட்டால் மட்டும் நிலைமை மாறிவிடாது. கலெக்டர், அதிகாரிகள் எல்லாம் ஆளும் கட்சி என்ற முறையில் உட்கார்ந்து, வருகின்ற எல்லா உறுப்பினர்களும் எந்தக் கட்சியைச் சேர்ந்தவர்களாயிருப்பினும் எதிர்த் தரப்பில் உட்கார்ந்து, ஆட்சிமன்றத்தைப் போலவே நடத்தலாம். கேள்விகள் கேட்கலாம் ; அதிகாரிகள் குழு தகவல்களைத் தரலாம் ; யோசனைகளைச் சொல்லலாம் ; பரிசீலிக்கலாம். ஆனால் உடனுக்குடன் உத்தரவு பிறப்பிக்க வேண்டுமென்ற கருத்து மட்டும் ஏற்றுக் கொள்ளத்தக்க கருத்து அல்ல. எந்த உத்தரவையும் சர்க்காரைக் கேட்காமல் போட்டுவிட முடியாது. மதகு கட்டிவிடுங்கள் என்று சொன்னால், கட்டுங்கள், என்று உத்தரவு போட்டுவிட முடியாது. பணத்திற்கு வரும்போது நிதி நிலையில் அதற்கு நிதி ஒதுக்கப்பட்டிருக்கிறதா என்பதை
-00 p.m. அறிந்த பிறகுதான் உத்தரவு போட முடியும். சென்ற அரசிலே இருந்த முதலமைச்சர் அவர்கள் 'பாகல்மேடு' நடத்திப் பார்த்தார்கள். அவர்கள் பொதுஜனத் தலைவர் என்ற முறையிலே யார் எதைக் கேட்டாலும் அந்த இடத்திலேயே செய்யச் சொல்லி உத்தரவு கொடுத்தார்கள். ஹைஸ்கூல் வேண்டும்—கொடுத்தார்கள். பாலம் வேண்டும்—கட்டப்படும் என்று சொல்லிவிட்டார்கள். அதிகாரிகள் அதையெல்லாம் குறித்து வைத்துக்கொண்டு இதற்கெல்லாம் நம்முடைய நிதி நிலைமை இடம் கொடுக்காது என்று தெரிவித்தார்கள். அந்த வகையிலே பாகல்மேடு மாநாடுதான் முதல் மாநாடு ; கடைசி மாநாடும் அதுதான். அதற்குப் பிறகு காங்கிரஸ் கட்சியினர் நாங்கள் நேரடியாகவே குறைகளைக் கேட்டுக் கொண்டு வருகிறோம் என்று சொல்லி, கால்நடைப் பயணம்......பாத யாத்திரை—(திரு கே. விநாயகம்—குறுக்கீடு) நம்முடைய கனம் விநாயகம் அவர்கள் சென்னையிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்டதாலே போகவில்லையென்று கூறுகிறார் ; அவருடைய கட்சிக்குத் தெரியும் ; பாத யாத்திரைக்கு அவர் வரமாட்டார் என்று விட்டுவிட்டார்கள்—சென்றார்கள். அதனாலும் பலன் ஒன்றும் இல்லை. பாத யாத்திரை என்று போனவுடன் நிறைய மனுக்கள் தரப்பட்டனவே ; அவற்றைப் பரிசீலித்துப் பார்க்கக் கூட அமைச்சர்களுக்கு முடிந்திருக்காது என்பதை நான் உணருகிறேன். நான் காலையில் வீட்டிலிருந்து அலுவலகத்திற்கு வருவதற்குள் தரப்பட்டிருக்கும் மனுக்கள் குவிகின்ற அளவைப் பார்க்கும்போது, அவைகளைப் படித்துப் பார்த்து எந்தெந்த இலாகாவைச் சேர்ந்த தவைஎன்பதைக் கண்டறிவதற்கே நேரம் இல்லாத நிலை இருக்கிறது. (திரு டி. எஸ். ஆதிமூலம் : மெடிகல் காலேஜ் மனுக்கள்........) மெடிகல் காலேஜ் விஷயத்தில் அதிகமான அளவுக்கு அணுகவில்லை. பொதுவான பிரச்சினைகளுக்குத்தான் வருகிறார்கள். இன்னும் சொல்லப் போனால், நியாயமான பிரச்சினைகளுக்காக வருகிறார்கள். நியாயமான அந்தப் பிரச்சினைகளைப் படித்து, அது செய்யப்படக் கூடியதுதானா என்றுகண்டறிந்து அந்தந்த இலாக்காக்களுக்கு அனுப்பி, அனுப்பிய பிறகு அதைச் செய்து முடித்தார்களா என்று மறுபடியும் கேட்பதற்கு இடைவெளி இல்லை. ஆகையினாலேதான்–நமது நண்பர்கள், திரு. கருத்திருமன் என்று கருதுகிறேன், இதற்கென்று தனியாக ஒருவர் இருந்தால் கூட

நல்லது என்றார். அமைச்சர்களுக்கெல்லாம் துணை அமைச்சர்கள் போட வேண்டுமென்ற யோசனையை முன்னே சொல்லிக்கொண்டு வந்தது. டெபுடி மினிஸ்டர்கள் இருப்பார்களேயானால், இந்த மனுக்களை எல்லாம் அந்தந்த இலாகாக்களுக்கு அனுப்பி, தொடர்புகொண்டு அதையெல்லாம் சரிப்படுத்துவதற்கு நல்லபடியாக இருக்கும். அதை இப்போது சொல்லுவதற்குக் காரணம் டெபுடி மினிஸ்டர்கள் என்று சொல்லி ஏன் அதிகப்படுத்திக் கொண்டீர்கள் என்று கேட்கவேண்டாமென்பதற்காகத்தான். அதற்குத் தேவை இருக்கிறது என்பதை இதனுடைய தொடர்பாகத் தெரிவித்துக் கொள்கிறேன்.

கிராம உத்தியோகஸ்தர்களைப் பற்றிப் பல கருத்துக்கள் எடுத்துச் சொல்லப்பட்டன. இரண்டு மாதத்திற்கு முன்னாலே கிராம அதிகாரி ஒருவர் என்னிடத்திலே வந்து பேசிக்கொண்டிருந்தார். என்னிடத்தில் உள்ளது உள்ளபடியே, உள்ளத்திலே ஒரு துளியும் வஞ்சகம் இல்லாமல் பேசினார். பாவனைக்காகப் பேசவில்லை. அவர் சொன்னார், 'நாங்கள் ஐந்து ரூபாய் வாங்குவதை, 10 ரூபாய் வாங்குவதைப் பற்றியெல்லாம் பெரிய லஞ்சம் என்று சட்ட சபையில் பேசுகிறார்கள் ; பொதுக்கூட்டத்தில் பேசுகிறார்கள். இது எங்களுக்குச் சட்டப்படி, சம்பிராதயப்படி இருக்கிற உரிமை ; இதை ஏன் லஞ்சம் என்று கருதுகிறார்கள் ?' என்று சொன்னார். என்ன ஐயா இது ? என்று அதிர்ச்சி அடைந்து கேட்டேன். 'இவ்வளவு குறைவான சம்பளத்திலே வேலை பார்ப்பதிலே இருந்து, நெடுங் காலமாகவே நாங்கள் மேற்கொண்டுள்ள முறை இது; இது நியாயமானதுதான் என்று சர்க்காரே விட்டு வைத்திருக்கிறார்கள் என்றுதான் பொருளே தவிர, இது லஞ்சம் என்ற பட்டியலில் வராது இதை வழக்கு மன்றத்திற்குக் கூட வந்து சொல்லத் தயார்' என்று சொன்னார். உள்ளபடியே, அவரை நெஞ்சழுத்தக்காரர் என்று கூடச் சொல்ல முடியாது ; சின்சியரிடி என்றுதான் சொல்ல வேண்டும். அசைன்மெண்டுக்கு ஒரு மனு எழுதிக் கொடுக்கிறார் ; அதற்காக இரண்டு ரூபாய் வாங்குகிறார் ; 'அந்த மனுவை எழுதி வாங்கிக் கொண்டு போனவனுக்கு நிலம் கிடைத்தால் ஆயிரம் ரூபாய் பெறுமானம் உள்ள நிலம் வரப்போகிறது. நான் எழுதிக் கொடுத்த மனுவுக்கு இரண்டு ரூபாய் கொடுத்தால் என்ன ?' என்று நியாய வாதம் பேசுகிறார். அது நியாயமா இல்லையா என்று தீர்ப்பளிப்பதற்காகச் சொல்லவில்லை. அந்த மனப்பான்மையில் கிராமாதிகாரிகள் இருக்கிறார்கள். அவர்களுக்குத் தரப்படுகின்ற ஊதியம் மிகக் குறைவானது. அந்த ஊதியத்தை ஒரு கிராமஅதிகாரிக்கு ஐந்து ரூபாய் அதிகப்படுத்துவதாக வைத்துக்கொண்டு இருக்கிற கிராமங்களைக் கணக்குப் பார்த்துப் பெருக்கல் வாய்ப்பாடு போட்டுப் பார்த்தால் இப்போது, இருக்கிற பட்ஜெட்டில் அதை எந்த இடத்திலும் சேர்க்க முடியாது. ஆகையினாலேதான் ஒவ்வொரு கிராமத்திற்கும் ஒவ்வொரு கிராமாதிகாரி இருக்க வேண்டுமென்ற நிலையில் இருந்து மாறி, தாங்கக் கூடிய அளவுக்குச் சிறு சிறு அமைப்புகளாக மாற்றி, அவ்வளவு அமைப்புக்கும் சேர்த்து ஒரு கிராமாதிகாரி என்ற அளவுக்கு நல்ல ஊதியம் கொடுக்கத் தக்க அளவுக்கு அதிகாரிகளைப் போட்டுச் செய்வோமானால், உள்ளபடியே வேலைகள் ஒழுங்காக நடக்கும் ; ஊதியம் குறைவாக இருக்கிறது என்ற குறைபாடு இருக்காது ; நிர்வாகம் திறமையாக இருக்கும். இப்போது இருக்கும் அமைப்பே புது உருக்காக வேண்டும். அதற்காகத்தான் எல்லாக் கட்சிகளும் சம்பந்தப்பட்ட பிரச்சினை இது என்ற மனப்பான்மை ஏற்பட வேண்டும். அதற்காக நான் விரைவிலே எல்லாக் கட்சித் தலைவர்களையும் கூப்பிட்டுக் கேட்டு, அவர்களுடைய கருத்தை அறிந்து, எந்த அளவுக்குச் செய்யலாம் என்று யோசிக்க வேண்டுமென்ற எண்ணம் கொண்டிருக்கிறேன். அவைகள் எல்லாம் செய்யப்பட்டால், நிச்சயமாக கிராமப்புறங்களில் காணப்படுகின்ற மந்த நிலைமை பெருமளவுக்கு நீக்கப்படும்.

கலெக்டர்களைப் பற்றிக் குறிப்பிட்டார்கள். இரண்டு மூன்று நாளைக்கு முன்னால் மாவட்ட கலெக்டர்கள் எல்லாம் வேலை செய்ய முடியாத அளவுக்கு வயது அதிகமானவர்களா அல்லது நல்ல வேலை செய்யக் கூடிய கட்டுடல் படைத்த இளைஞர்களா என்று பார்க்க வேண்டுமென்ற ஆவல் தோன்றியதால் இப்போதுள்ள கலெக்டர்களுடைய வயதைப் பற்றி விசாரித்

தேன். ஒருவர் இருவரைத் தவிர, மற்றவர்கள் எல்லாம் எதையாவது செய்தே தீர வேண்டுமென்ற ஆர்வத் துடிப்புள்ள வாலிப வயதினராகத்தான் நிரம்ப இருக்கிருர்கள். வாலிப வயதினர் என்ற காரணத்தால், அவர்களுக்கு அனுபவம் இருக்காது என்று சொல்வதற்கில்லை. அனுபவத்தைப் பெற்றுக் கொள்ளுகின்ற வயது வாலிப வயது. அனுபவத்தைப் பெற்று அதைப்பற்றிப் பேசிக்கொண்டிருக்கக் கூடிய வயது அல்ல. வயதானவர்களுக்கு பெற்ற அனுபவத்தைச் செயல்படுத்துவதற்கு உடலிலோ, உள்ளத்திலோ, அதிகமான அளவுக்குத் தெம்பு இருக்க முடியாது. அந்த அனுபவத்தைப் பெற்றுக்கொண்டு வருகின்ற பருவத்திலேயுள்ள 40, 45, 50 வயதுக்குள் இருக்கிறவர்கள் மாவட்டக் கலெக்டராக இருக்கிற இடங்களைப் பார்த்தால் சுறுசுறுப்பாக வேலை நடப்பதை உணர முடியும். முன்னுலே கலெக்டர்களைப் பார்ப்பதே கஷ்டம். அதற்காகத்தான் ஜமாபந்தி என்று வைத்திருந்தார்கள். இப்போது மாவட்டக் கலெக்டர்கள் பலரை மாலை நேரத்தில் பார்த்தால் கலெக்டர் என்றே தோன்ருது. பில்லை போட்ட சேவகன், 'வழி விடு கலெக்டர் வருகிருர்' என்று சொன்னுல்தான் கலெக்டர் வருகிருர் என்று தெரியும். இல்லையென்ருல், கல்லூரி மாணவர் அல்லது ஆசிரியரைப் போல் எளிய தோற்றத்தோடும், வாலிப முறுக்கோடும் பல கலெக்டர்கள் அமர்ந்திருக்கிருர்கள். இப்போதுள்ள கலெக்டர்கள் சமுதாயத்தின் புதிய உணர்ச்சியின் வடிவங்களாக இருக்கிருர்கள். வெள்ளைக்கார அதிகாரத்தின் மறு பிறவிகள் அல்ல. 'நாம் இருந்த நேரத்தில் என்ன செய்தோம் ? நம்முடைய நிர்வாகத்தில் இருந்த மாவட்டம் எந்த அளவுக்கு சீர் அடைந்தது ?' என்பதிலே திருப்திப் படுகிறவர்கள் மாவட்ட கலெக்டர்களாகப் பணியாற்றி வருகிருர்கள். அவர்களுக்குச் சட்டமன்ற உறுப்பினர்கள் மேலும் ஊக்கத்தைத் தர வேண்டும் ; உற்சாகத்தைத் தர வேண்டும். இந்த ஊக்கத்தையும், உற்சாகத்தையும் தருவதற்குச் செய்ய வேண்டிய முதல் பணி, அதிகமான அளவுக்கு அவர்களிடத்தில் தனிப்பட்ட மனுக்களைக் கொண்டு போகாமல் இருப்பதுதான்.

அதே நேரத்தில் பொதுப் பிரச்சினையை எந்த அளவிற்குக் கொண்டு செல்ல முடியுமோ, அந்த அளவிற்குக் கொண்டு செல்ல வேண்டும், விவாதிக்க வேண்டும். டிஸ்ட்ரிக்ட் டெவலப்மெண்ட் கவுன்சில் கூட்டம் இரண்டு நாட்கள் தேவை என்று—திரு சங்கரய்யா என்று நினைக்கிறேன்—சொன்னுர்கள். இரண்டு நாள் என்பது போதுமானது என்று கூடச் சொல்ல முடியாது. அவ்வளவு பிரச்சினைகள் வருகின்றன. அவ்வளவையும் நடத்தி, டிஸ்ட்ரிக்ட் டெவலப்மெண்ட் கவுன்சிலை இன்னும் கொஞ்சம் உயிரோட்டமுள்ளதாக்கி பல பிரச்சினைகள் அங்கு பேசித் தீர்க்கப்பட வேண்டிய நிலையை ஏற்படுத்திஞல், மாவட்ட கலெக்டர்கள் இப்போதுள்ளதை விட இன்னும் அதிகப் பலன் உள்ள காரியங்களைச் செய்வார்கள் என்று கருதுகிறேன். திரு. ஹாண்டே அவர்கள்தான் சொன்னுர்கள், எந்த சர்க்காருக்கும் கெட்ட பெயர் வருவது பெட்டி ஆபீசர்ஸ், கீழ் மட்டத்திலுள்ள சில்லறை அதிகாரிகளால்தான் அது வரும் என்று குறிப்பிட்டார்கள். அதற்குக் காரணம் அவர்கள் பெட்டியாக இருப்பதினுல்தான். அவர்கள் நிலைமை உயர, உயர அவர்களுக்குத் தங்கள் அதிகார வரம்பு தெரியும். கீழ் மட்டத்திலுள்ள அதிகாரிகளுக்குத் தங்கள் அதிகாரத்தை பயன்படுத்திஞல்தான் மனதுக்கு ஒரு திருப்தி. அதை எல்லாம் நீக்கிக்கொள்ள வேண்டுமென்று நாம் எல்லாம்—அரசியல் கட்சிகள் சார்பில் அல்ல—நாட்டு மக்கள் சார்பில் கேட்டுக் கொள்கிருேம். ஏனெனில், பெட்டி ஆபீசர்களிலிருந்து ஜில்லா கலெக்டர் வரை அதிகாரிகள் யாராக இருந்தாலும், அவர்கள் அதிகாரத்தை நடத்துவதற்கு ஒரு இயந்திரத்தை அமைத்துக் கொடுத்திருக்கிறவர்கள். அந்த இயந்திரம் நடப்பதற்கான வசதியைத் தேடிக் கொடுக்கிறவர்கள் கிராமங்களிலுள்ள ரத்தத்தையும், வேர்வையையும் கீழே சொட்டுகிற ஏழை எளியவர்களே தவிர, வேறு யாரும் இல்லை. ஆகவே அவர்களுக்கு உரிய மரியாதையைக் கொடுப்பதற்கு எல்லா அதிகாரிகளும் முனைந்து நிற்க வேண்டுமென்று நானும் உறுப்பினர்கள் கேட்டுக்கொண்டது போலவே கேட்டுக்கொள்ள விரும்புகிறேன். நல்லதொரு மாறுதல் இன்றையதினம் பலவிடங்களில் ஏற்பட்டுக்கொண்டிருக்கிறது. அதை அங்கத்தினர்களே கூட அறிந்திருக்கிருர்கள். அப்படி

அறிந்திருப்பதால்தான் எல்லோரும் சொன்னுர்கள், இந்த ஜமாபந்தியே வேண்டாம் என்று. இருபது ஆண்டுகளுக்கு முன்னுல் வரையில் ஜமாபந்தி என்ருல்தான் அதிகாரிகளைப் பார்க்க முடியும் என்ற நிலைமை இருந்தது. இப்போது ஒவ்வொரு நாளும் அதிகாரிகளை நாமாவது போய்ப் பார்க்கிருேம் அல்லது அவர்களாக நம்மை வந்து பார்க்கிருர்கள். ஜமாபந்தி என்ற முறையை வைத்துக் கொண்டுதான் அதிகாரிகளைக் காண முடியும் என்ற நிலை மாற வேண்டுமென்று சொன்னுர்கள். நான் சிறுவனுக இருந்தபோது ஜமாபந்தி பற்றிச் சொல்வார்கள் கிராமத்தில். அடுத்த மாதம் ஜமாபந்தி வரப் போகிறது, இந்த ஆடு அதற்குத்தான், அடுத்த மாதம் ஜமாபந்தி வரப்போகிறது இந்த ஆறு கோழிகளும் அதற்காகத்தான் வாங்கி வைத்திருக்கிறேன் என்றெல்லாம் பேசிக்கொள்வார்கள். அந்த நினைப்பில் அங்கத்தினர்கள் பேசுகிருர்கள் என்று கருதுகிறேன். இப்போது அந்த நிலைமை மாறிவிட்டிருக்கிறது. முன்னுல் அதிகாரிகள் வருகிருர்கள் என்ருல் ஆடு கூட நகர்ந்து போகும், 'என்னை எடுத்துக் கொள்ளுங்கள்' என்று. திரு கருத்திருமன் அவர்கள் சொன்னது போல், மக்கள் அவ்வளவு தெளிவற்றவர்கள் அல்ல. 'ஜமாபந்திக்கு கலெக்டர் வந்திருக்கிருர், நீங்கள் வருகிறீர்களா' என்று திரு. கருத்திருமனைக் கேட்டால் அவர்கள் என்ன சொல்வார்கள்? 'எனக்கொன்றும் அவரைப் போய்ப் பார்க்க வேண்டிய அவசியம் இல்லை' என்பார். ஆனுல் அப்படிக் கேட்டிருந்தால் அவர்கள் தகப்பனுர் என்ன சொல்லியிருப்பார்? 'ஐயா என்னைக் கூப்பிட்டார், கலெக்டர் கூப்பிட்டார்' என்று முதலில் ஊரைச் சுற்றி கலெக்டர் கூப்பிட்டார், கலெக்டர் கூப்பிட்டார் என்று அதைச் சொல்லிப் பெருமையாகப் பேசிக்கொண்டிருந்திருப்பார். ஆனுல் பழைய தலைமுறை மறைந்து இப்போது ஒரு புதிய தலைமுறை வருகிறது. ஆகவே இந்தத் தலைமுறைக்கேற்ற வகையில் அதிகாரிகளும் நடந்து கொள்கிருர்கள். மேலும் அவர்களுக்கு உற்சாகத்தை அளித்தால், அவர்கள் இன்னும் நன்ருக நடந்துகொள்வார்கள். அதை அளிப்பதற்கு உடனடியான ஒரு வழி இந்த மானியத்திற்குக் கொடுத்திருக்கிற வெட்டுகளை எல்லாம் திரும்பப் பெற்றுக்கொண்டு உற்சாகப்படுத்துவீர்களாஞல், அந்த நிர்வாகம் நல்ல முறையில் இயங்கும் என்று சொல்லி இந்த மானியத்தை நிறைவேற்றிக் கொடுக்கும்படி அவையினரைக் கேட்டுக்கொள்கிறேன்.

கோரிக்கை எண் IX-க்கு முன் மொழியப்பட்ட வெட்டுத் தீர்மானங்கள் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பட்டன.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவை முன் உள்ள கேள்வி—

" கோரிக்கை எண் IX—மாவட்ட நிர்வாகமும் பல்வகையும் என்ற தலைப்பின் கீழ் ரூ. 7,31,10,500-க்கு மேற்படாத தொகையை அரசுக்கு வழங்க வேண்டும் ."

கோரிக்கை நிறைவேற்றப்பட்டு, கோரிய தொகை வழங்கப்பட்டது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவை முன் உள்ள கேள்வி—

" கோரிக்கை எண் XXXIII—பல்வகை என்ற தலைப்பின் கீழ் 5,13,55,000 ரூபாய்க்கு மேற்படாத தொகையை அரசுக்கு வழங்க வேண்டும் ".

கோரிக்கை நிறைவேற்றப்பட்டு, கோரிய தொகை வழங்கப்பட்டது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவை முன் உள்ள கேள்வி—

"கோரிக்கை எண் XXXVI—ஏனைய பல்வகை இழப்பீடுகளும் ஒதுக்கீடுகளும் என்ற தலைப்பின்கீழ் 5,48,84,900 ரூபாய்க்கு மேற்படாத தொகையை அரசுக்கு வழங்கவேண்டும்."

கோரிக்கை நிறைவேற்றப்பட்டு, கோரிய தொகை வழங்கப்பட்டது.

கோரிக்கை எண் XXXII-க்கு முன்மொழியப்பட்ட வெட்டுத் தீர்மானங்கள் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பட்டன.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவை முன் உள்ள கேள்வி—

"கோரிக்கை எண் XXXII—ஓய்வூதியங்கள் என்ற தலைப்பின் கீழ் 3,57,34,200 ரூபாய்க்கு மேற்படாத தொகையை அரசுக்கு வழங்க வேண்டும்."

கோரிக்கை நிறைவேற்றப்பட்டு கோரிய தொகை வழங்கப்பட்டது.

கோரிக்கை எண் XLV-க்கு முன்மொழியப்பட்ட வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பட்டது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவை முன் உள்ள கேள்வி—

"கோரிக்கை எண் XLV—ஓய்வூதியங்களை மொத்தமாக்குதல் என்ற தலைப்பின் கீழ் 7,10,000 ரூபாய்க்கு மேற்படாத தொகையை அரசுக்கு வழங்கவேண்டும்."

கோரிக்கை நிறைவேற்றப்பட்டு, கோரிய தொகை வழங்கப்பட்டது.

THIRU K. VINAYAKAM : Sir, on a point of information. Now that the Hon. the Chief Minister has made it clear that he is going to appoint Deputy Ministers, may I know who are those fortunate young men who will find a place in the Cabinet ?

THE HON. THIRU C. N. ANNADURAI : It would be announced at the appropriate time and they will get the blessings of the hon. Member.

பிற் பகல். **மாண்புமிகு பேரவைத் தலைவர்** : இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவடைகின்றன. பேரவை மீண்டும் நாளை காலை 9 மணி அளவில் கூடும். வணக்கம்.

பின்னர் பேரவை ஒத்திவைக்கப்பட்டது.

4. பேரவையின் முன் வைக்கப்பட்ட ஏடுகள்.

A. Statutory Rules and Orders.

*233. Notification issued with G.O. Ms. No. 3907, Agriculture, dated the 16th December 1966, making certain amendments to the rules for the regulation of hunting, shooting and fishing and to prohibit the poisoning of water and setting up of traps or snares within the limits of all reserved forests situated in the State of Madras published at pages 1709–1710 of Part I of the *Fort St. George Gazette*, dated the 5th October 1937, as subsequently amended. [Laid on the Table of the House under section 64-A of the Madras Forest Act, 1882 (Madras Act V of 1882)].

*234. Notification issued with G.O. Ms. No, 1048, Agriculture, dated the 18th March 1967, in regard to the Madras Sandalwood Transit Rules, 1967. [Laid on the Table of the House under section 64-A of the Madras Forest Act, 1882 (Madras Act V of 1882)].

B. Reports, notifications and other papers.

†90. Labour in Madras State, 1966–67 (English).

†91. Madras Dairy and Milk Project (Tamil).

†92. A Policy note on the activities of the Government on the Food Front (Tamil).

†93. Statement on Labour Policy (English).

* **Laid on the Table of the House on 11th July 1967.**

† Despatched to all Members on 10th July 1967.

இணைப்பு I.

[3-ம் பக்கத்திலுள்ள உடுக்குறியிட்ட வினா எண் 275-க்கான விடையைக் காண்க.]

ஐக்கிய நாடுகள் மேம்பாட்டு வேலைத் திட்டத்தின் கீழ் தமிழகத்தில் நடத்த எண்ணியுள்ள கனிவள வளர்ச்சி திட்டத்தைப் பற்றிய குறிப்பு.

இம்மாநிலத்தில் கனிவள ஆராய்ச்சித் திட்டம் ஒன்றை நடத்தும்படி ஐக்கிய நாடுகள் தனி நிதி அதிகார நிறுவனத்திற்கு (U. N. Special Fund) 1965 மே மாதம் தமிழக அரசு, இந்திய அரசின் மூலம் வேண்டுகோள் ஒன்றை விடுத்தது. ஐக்கிய நாடுகள் தனி நிதி அதிகார நிறுவனம் குறிப்பிட்ட பகுதியையும், வேண்டுகோளின் வரம்பினையும் ஆராய்வதற்கு அதன் தொழில் நுட்ப ஆலோசகர் ஒருவரை 1966 மே மாதம் சென்னைக்கு அனுப்பியது. அவருடைய ஆலோசனையின்மேல், மாற்றியமைத்த வேண்டுகோள் ஒன்று 1966 மே மாதம் ஐக்கியநாடுகள் தனி நிதி அதிகார நிறுவனத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டது. இந்த வேண்டுகோளை 1967 ஜனவரியில் ஷ தனி நிதியின் ஆளுகை மன்றம் ஏற்றுக்கொண்டு அனுமதியளித்தது. மேற்படி திட்டப் பணி குறித்த செயல் வரைவுத் திட்டம் ஒன்றை ஐக்கிய நாடுகள் வளர்ச்சித்திட்டக் குழு இந்திய அரசையும் இம் மாநில அரசையும் கலந்து கொண்டு தயாரித்தது. திட்ட ஒப்பந்தம் அண்மையில் கையெழுத்திடப் பட்டது. இத் திட்டப் பணியை நிறைவேற்ற நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

திட்ட வேலையின் நோக்கமும் விவரமும்.—இந்தத் திட்ட வேலையின் கால அளவு மூன்று ஆண்டுக் காலமாகும். அயக் கலப்புள்ள, அயக் கலப்பில்லாத உலோகப் படிவங்கள். ஒரு வகை அபிரகம், பாஸ்பேட் முதலிய கனிப் பொருள்கள் உள்ளதாகத் தெரிகிற 13,000 சதுர கிலோ மீட்டர் பகுதியில் விரிவான, மும்முரமான புலனாய்வு நடத்தி, படிவங்கள் வெட்டி யெடுக்கக்கூடிய இடங்களைக் கண்டு பிடிப்பதே இத்திட்ட வேலையின் நோக்கமாகும். மேலும், கனிவளப் படிவங்களின் மதிப்பீடுகளைக் கண்டறிவதில் நவீன தொழில் நுட்ப முறைகளில் (இந்திய) அதிகாரிகளுக்குப் பயிற்சியளிப்பதும் இதில் அடங்கும்.

இத் திட்டப் பகுதியில், இம்மாநிலத்திலுள்ள சேலம், வட ஆர்க்காடு, தென் ஆர்க்காடு மாவட்டங்களின் பகுதிகள் அடங்கும். இந்தத் திட்டப் பகுதிக்குள் மாமாந்தூர் காரீயம், துத்தநாகம், தாமிரப் படிவங்களும், மட்ட உலோகப் பொருள்களும் படிந்துள்ளன. வட ஆர்க்காடு மாவட்டத்திலுள்ள கொரட்டியில் ஒரு வகை அபிரகமும் (வெர்மிகுலேட்), சேலத்தில் இரும்புக் கனியும், மாக்னசைட்டும், பாக்சைட்டும் கிடைக்கின்றன. இப் பகுதிகளும் திட்டப் பகுதியின் கீழ் வருகின்றன.

இப் பகுதியைப் பற்றி புவியியல் படங்கள் நல்ல வகையில் இல்லை. எனவே, புவியியல், புவிரசாயன ஆராய்ச்சியை முன்னோடி வேலையாக நடத்திய பிறகு, விமான மூலம் இப் பகுதி முழுவதையும் நிலப்படம் எடுப்பது திட்ட வேலையின் முதல் நிலையாகும். விமான மூலம், மாக்னடோ மீட்டர்-சின்டிலோ மீட்டர் ஆராய்ச்சி முழுப் பகுதிக்கும் நடத்தப்படும். இந்த ஆராய்ச்சியின் முடிவையும் விமான மூலம் எடுத்த நிலப்படங்களை ஆராய்ந்து அதன் மூலம் கிடைக்கும் முடிவையும் ஒருங்கிணைத்தால், சேலம் இரும்புக் கனிகள், ஏனைய படிவங்கள், கிடைக்கக்கூடிய கனிப் பொருள்கள் இவற்றைப் பற்றி இன்னும் அதிக அளவில் தெரிந்துகொள்ள இயலும். பூமியின் பரப்பின் மீதும் புவியியல், புவிரசாயன, புவிப் பௌதிக ஆராய்ச்சிகள் தொடர்ந்து நடத்தப்படும். மேலும் குறிக்கப் பட்டுள்ள இடங்களில், அகழ்ந்து பார்த்தல், துளைத்துப் பார்த்தல், சுரங்கத்திற்கு முன்னோடி வழி அமைத்தல், குறுக்கே வெட்டிப் பார்த்தல் அல்லது சுரங்க வழிகளை அமைத்தல் ஆகியவை தனித்தோ இணைந்தோ செய்யப் பட்டு ஆய்வு நடத்தப்படும்.

நிதிப் பொறுப்பு.—ஐக்கியநாடுகள் தனி நிதித் திட்டம் பொதுவாக, நிபுணர்கள், கருவிகள், கீழ் ஒப்பந்தங்கள் உதவித் தொகைகள் முதலிய வடிவத்தில் தனி நிதியிலிருந்து நிதி உதவி அளிக்கும். இங்குள்ள அதிகாரிகள், கருவிகள், எரி பொருள்கள் (ஐக்கிய நாடுகள் நிறுவகம் வழங்கிய) வண்டிகளையும் கருவிகளையும் பேணுதல், ஐக்கிய நாடுகள் நிறுவனத்தின் நிபுணர்கள் இங்கு வந்து பணி புரியும் பொழுது ஏற்படும் செலவு ஆகியவற்றிற்கு அரசாங்கம் நிதி உதவுகிறது.

ஐக்கிய நாடுகள் உதவி.—இத்திட்டத்திற்கு ஐக்கிய நாடுகள் 10,20,600 டாலர் உதவியளிக்கும். அதில் கீழ்க்கண்டவை அடங்கும்—

	(டாலர்களில்.)
திட்டத்திற்காக புவியியலில் களப்பணி நிபுணர் 9 பேருக்குரிய செலவு.	4,17,600
வெளிநாடுகளில் பயிற்சி பெற வேண்டிய 6 பேருக்கு உதவித் தொகை.	30,000
வைர முனை துளைக் கருவிகள், ரசாயனப் பொருள்கள், கனிப் பொருள்களைப் பிரித்தெடுப்பதற்குத் தேவையான பொருள்கள், புவி-பௌதிகக் கருவிகள், சுரங்கமறுக்கும் கருவிகள், வண்டிகள் போன்ற சாதனங்களுக்கு.	3,10,000
விமான மூலம் செய்யப்படும் பூவியல் ஆராய்ச்சிகளுக்குரிய கீழ் ஒப்பந்தங்கள்.	1,35,000
பலவகை ஆராய்ச்சிகள்	25,100
நிர்வாக அமைப்பின் மேற் செலவுகளும்	1,00,900
தனி நிதியும்	2,000
மொத்தம் ..	10,20,600

தமிழக அரசு அளிக்கும் நிதி.—அரசாங்கம் கீழ்க்கண்டவாறு நிதி அளிக்கும்—

	(ரூபாய்.)
தனி நிதி நிறுவனத்தால் வழங்கப்பட்ட வண்டிகள், துணைக் கருவிகள், இவற்றைப் பேணி வருவதற்காக ரொக்க நிதி உதவி.	3,75,000
பொருள் உதவி கீழ்க்கண்டவாறு அளிக்கப்படுகிறது—	
வெளிநாட்டுத் தொழில் நுட்ப வல்லுநர்களுக்கு அளிக்கப்பட்ட தொழிலியல் பணியாளர்கள், ஏனைய பணியாளர்கள், சில்லரைத் தொழிலாளர் ஆகியோரின் சம்பளம், படி முதலியவற்றுக்காக.	13,92,000
நிலத்திற்கும், கட்டிடங்களுக்கும் வாடகை	1,93,500
கருவிகள், பொருள்கள், வண்டிகள், அவற்றின் இயக்கம், பேணுதல், முதலியவற்றிற்கான செலவும், ஏனைய பலவகை சாதனங்களும்.	8,60,000
விமான மூலம் நிலப்படம் பிடித்தலுக்குக் கீழ் ஒப்பந்தங்கள்.	1,50,000
பலவகை ஆய்வுக்குரிய செலவுகளும் சில்லரைச் செலவுகளும்.	2,25,000
உள்ளூர் போக்குவரத்து, கருவிகள் கையாளுதல், இன்ஷூரன்ஸ், முதலியன.	50,000
உள்ளூர் செயல்முறைச் செலவுக்கு நிதி	5,14,500
மொத்தம் ..	37,60,000

இந்த வேலைத் திட்டம் முடிவடையும்பொழுது, கனிவளம், உள்ளமையால், முக்கியமானதாகக் கருதப்படும். பெரும் பரப்பில் ஆய்வு பூர்த்தியடைந்திருக்கும், அப்போது இம் மாநிலத்தின் ஏனைய பகுதிகளில் நவீன கருவிகளுடனும், தொழில் நுட்பத் திறனுடனும் கனிவள ஆய்வுப் பணியை நடத்த தமிழக அரசில் தனிப் பயிற்சி பெற்றவர்கள் போதுமானவர்கள் இருப்பார்கள். தனி நிதி நிறுவனத்திடமிருந்து பெறப்பட்ட சாதனங்களின் பெரும்பகுதி தொடர்ந்து பணியைச் செய்வதற்காக இங்கேயே விட்டு வைக்கப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது. எனவே நாளடைவில் தமிழகத்தில் கனிப் பொருள் கிடைக்கும் இடங்களைத் தேடிக் கண்டுபிடிப்பதற்காக நவீன முறைகளில், திட்டமிட்ட வகையில் பணியாற்றி பல்வேறு கனிப் பொருள் படிவங்கள் இருக்கும் இடங்களைக் கண்டு பிடிக்கமுடியும். இது தமிழகத்தில் தொழில் வளர்ச்சிக்குப் பெரிதும் உதவும்.

(NOTE ON THE PROPOSED MINERAL DEVELOPMENT PROJECT IN MADRAS STATE UNDER THE UNITED NATIONS DEVELOPMENT PROGRAMME.)

In May 1965, this Government, through the Government of India, made a request to the United Nations Special Fund authorities for a Mineral Exploration Project in this State. The United Nations Special Fund authorities sent their Techincal Consultant to Madras in May 1966 to study the area and the scope of the request. On the advice of the Technical Consultant, a revised version of the request was submitted in May 1966 to the United Nations Special Fund authorities. This request was accepted and sanctioned by the Governing Council of the Special Fund in January 1967. A Draft Plan of Operation for the Project has been prepared by the United Nations Development Programme in consultation with the Government of India and this Government and it has been signed recently and steps to implement the Project are being taken.

The purpose and description of the project.—The purpose of the Project, the duration of which is three years, is to carry out both extensive and intensive exploration in an area of approximately 13,000 square kilometres where deposits of ferrous and non-ferrous metals vermiculite and phosphate are known to occur, with a view to locating exploitable deposits and training counterpart (Indian) personnel in modern techniques of mineral deposit evaluation.

The Project area comprised portions of the Salem, North Arcot and South Arcot districts of this State. Within the Project area lie the Mamandur lead, zinc, and copper deposit as well as other base metal prospects. The vermiculite deposit in Koratti of North Arcot district, iron ore, magnesite and bauxite deposits of Salem are also included in the Project area.

Very little geological mapping has been done in the area and therefore after preliminary geological and geo-chemical reconnaissance one of the first phase of the Project Programme will involve flying to get complete aerial photographic coverage, for photo-geological maps. An air-borne magnetometer-scintillometer survey will be carried out over the entire project area which in conjunction with photo-geological studies will supplement existing knowledge

of the Salem iron ores and other known deposits and mineral prospects. Ground follow-up will be executed mainly by geological geo-chemcial and geo-physical surveys and followed, where indicated, by trenching, core drilling and the driving of short exploratory shafts, drifts, cross-cuts and/or adits.

Financial implications.—The United Nations, Special Fund Projects generally involve contributions from the Special Fund in the form of experts, equipment, sub-contracts and Fellowships and the Government contributes towards the expenses on the local personnel, local equipment, fuel and maintenance of the vehicles and equipment (supplied by the United Nations) and the local operating costs for the United Nations Experts.

United Nations contribution.—The Special Fund contribution towards this Project would be United Nations $ 10,20,600. This would include the following :—

	$
(i) Cost of 9 experts in the field geology for the Project	4,17,600
(ii) Fellowships for about 6 persons to be trained abroad	30,000
(iii) Equipment and supplies such as diamond drills, chemical and ore-dressing supplies, geo-physical equipment, mining equipment, vehicles, etc.	3,10,000
(iv) Sub-contracts towards air-borne, geo-physicl surveys	1,35,000
(v) Miscellaneous surveys	25,100
(vi) Executive agency overhead costs and Special Fund	1,00,900 2,000
Total ..	10,20,600

Madras Government contributions.—The Government contribution to be incurred would be as follows :—

	RS.
(i) Contribution in cash towards maintenance of running cost of vehicles, drills, etc., supplied by the Special Fund	3,75,000
(ii) Contribution in kind are as follows :—	
(i) Personal service towards pay and allowances of professional and other staff, contingent labour, etc.	13,92,000
(ii) Rental for land and buildings	1,93,500
(iii) Costs of equipment and supplies, vehicles, their operation and maintenance and other miscellaneous equipment	8,60,000
(iv) Sub-contracts for aerial-photograph ..	1,50,000
(v) Miscellaneous surveys and contingent expenditure	2,25,000
(vi) Local transport and handling of equipment, insurance, etc.	50,000
(vii) Contribution towards local operating cost	5,14,500
Total ..	37,60,000

By the time this project ends, a large area which is important from the point of view of mineral occurrences would have been completely investigated. There would be sufficient number of specially trained personnel in Madras Government to continue the mineral exploration work with modern equipment and techniques in other parts of this State. It is expected that most of the equipments obtained from the Special Fund for this Project would be left behind for continuation of the work and therefore it would be possible in due course to carry out on modern lines a systematic and thorough search for minerals in Madras State and thus bringing to light several mineral deposits which would contribute to the industrial progress of the region.

இணைப்பு II.

[28-ம் பக்கத்திலுள்ள உடுக்குறியிட்ட வினா எண் 295-க்கான விடையைக் காண்க.]

பதில்—

(அ) ஆம்.

(இ) மதுரைக் கூட்டுறவுச் சிறப்பு அங்காடி (Super Market) கீழ்க்கண்ட காரணங்களை முன்னிட்டு இழப்பில் செயல்பட்டுக்கொண்டிருக்கிறது.—

(1) அரசினரின் பங்கு மூலதனமாகிய ரூ. 3 லட்சத்துக்கும் உறுப்பினர்களின் பங்கு மூலதனமாகிய ரூ. 27,270 தொகைக்கும் கூடுதலாக, மதுரை சிறப்பு அங்காடி கூட்டுறவு மத்திய வங்கியிடமிருந்து ரூ. 12 லட்சம் ரொக்கக் கடன் பெற்றுள்ளது. அது இக்கடன் மீது ஆண்டு தோறும் 9 சத வீத வட்டி செலுத்துகின்றது. அக்கடனைக் கொண்டு வாங்கிய சரக்குகள் விரைவாக விற்பனையாகாமல் உள்ளன.

(2) 1966-ம் வருடம் நவம்பர் மாதம் முதல் 1967-ம் வருடம் ஏப்ரல் மாதம் வரையில் சிறப்பு அங்காடிக்கு ரூ. 1,46,000 தொழில் ஆதாயம் கிடைத்தது. ஆனால், வட்டிச் செலவுகள், வாடகை, பணியாளர்களுக்கான செலவுகள், சில்லறைச் செலவுகள் ஆகியவற்றின் காரணமாக ரூ. 1,86,000 செலவாகியது. இதனால் மேசை, நாற்காலி போன்றவற்றின் தேய்மானமும் ஏனைய நிர்வாகச் செலவுகளும் நீங்கலாக, சிறப்பு அங்காடிக்கு ரூ. 40,000 நிகர இழப்பு ஏற்பட்டுள்ளது.

(3) 1967-ம் வருடம் ஏப்ரல் மாதம் வரையில் ஆறு மாதகால அளவில் ரூ. 16,60,000 மொத்த வியாபாரத் தொகையையே சிறப்பு அங்காடியில் காட்ட முடிந்தது. துணிகள், ஒப்பனைப் பொருள்கள், வீட்டுப் பொருள்கள் போன்றவற்றின் இருப்பில் பெரும்பகுதி விரைவில் விற்கப்படாமல் உள்ளதே இதற்குக் காரணம். இது சம்பந்தமாக கூட்டுறவு பதிவாளர் கவனித்துக்கொண்டிருக்கிறார்.

A.—

(*a*) Yes.

(*b*) The Madurai Co-operative Super Market is working at a loss for the following reasons :—

(1) In addition to the Government share capital of Rs. 3 lakhs and the members' share capital of Rs. 27,270 (Rupees twenty-seven thousand, two hundred and seventy only), the Super Market has taken a cash credit loan of Rs. 12 lakhs from the Co-operative Central Bank and is paying interest at 9 per cent per annum on this loan which has been locked up in slow-moving stocks ;

(2) From November 1966 to April 1967, it earned a business profit of Rs. 1,46,000 (Rupees one lakh and forty-six thousand) but incurred an expenditure of Rs. 1,86,000 (Rupees one lakh and eighty-six thousand) on the payment of interest charges, rent, establishment and contingent charges, resulting in a net loss of Rs. 40,000 (Rupees forty thousand) exclusive of depreciation on furniture and fittings and other overhead charges ; and

(3) The Super Market was able to show a turn-over of only Rs. 16,60,000 (Rupees sixteen lakhs and sixty thousand) over the period of six months up to April 1967. This is due to the fact that a major portion of the heavy stocks such as textiles, toilets and household articles is not moving quickly. The Registrar is looking into this.

65023

LIST OF AGENTS FOR THE SALE OF MADRAS GOVERNMENT PUBLICATIONS.

IN MADRAS CITY.

Messrs. ACCOUNT TEST INSTITUTE, Egmore, Madras-8.
THE CITY BOOK CO., Mylapore, Madras-4.
Messrs HIGGINBOTHAMS, PRIVATE LIMITED Madras-2.
Messrs NEW CENTURY BOOK HOUSE (PRIVATE) LIMITED, Madras-2.
Messrs. P. VARADACHARI & Co., Madras-1.
Messrs. C. SUBBIAH CHETTY & SONS, Madras-5.
Sri S. S. SRINIVASARAGHAVAN, Royapettah, Madras-14.
THE EDUCATIONAL AGENCIES, BOOK-SELLERS, Madras-1.
THE UNIVERSAL BOOK HOUSE, MOORE MARKET, Madras-3.
Messrs. RUKMANI CORPORATION, Vepery, Madras-7.
Messrs. MOHAN PATHIPAGAM AND BOOK DEPOT, Madras-5.
Messrs. BOOK CORNER, BOOK-SELLERS, No. 2/4, Mount Road, Madras-2.

IN MUFASSAL OF MADRAS STATE.

Sri E. M. GOPALAKRISHNA KONE, Madurai, Madurai district.
THE ORIENTAL BOOK HOUSE, Madurai.
Messrs. VIVEKANANDA PRESS, PRINTERS, PUBLISHERS AND BOOK-SELLERS, Madurai.
Sri A. VENKATASUBBAN, Vellore, North Arcot district.
Messrs. BHARATHA MATHA BOOK DEPOT, Thanjavur, Thanjavur district.
Messrs. P. V. NATHAN & Co., Kumbakonam, Thanjavur district.
Messrs. APPAR BOOK STALL, Thanjavur.
Messrs. P. N. SWAMINATHASIVAM & Co., Pudukkottai, Tiruchirappalli district.
Messrs. S. KRISHNASWAMY & Co., Tiruchirappalli.
Messrs. PALANIAPPA BROTHERS, Tiruchirappalli.
Sri S. R. SUBRAMANIA PILLAI, Tirunelveli, Tirunelveli district.
Messrs. NELLAI PUTHAGA NILAYAM, BOOK-SELLERS, 10, Thana Muna Buildings, Tirunelveli Junction.
Sri B. ARULDOSS, Villupuram Town, South Arcot district.
Sri V. B. GANESAN, Villupuram, South Arcot district.
Messrs. VASANTHAM STORES, BOOK-SELLERS, Cross Cut Road, Coimbatore.
Messrs. MERCURY BOOK COMPANY, 223, Raja Street, Coimbatore.
Sri S. M. JAGANNATHAN, BOOK-SELLER AND PUBLISHER, Nagercoil, Kanyakumari district.
Messrs. A. K. CHANDRIAH CHETTIAR & SONS, Salem.
Messrs. MEENAKSHI PATHIPAGAM, Pudukkottai.
Messrs. K. V NARAYANA IYER & SONS, Dindigul, Madurai district.
Messrs. BALAJI BOOK HOUSE, Vellore, North Arcot district.
Messrs. JAYAKUMARI STORES, Nagercoil, Kanyakumari district.
Messrs. BABY STORES, BOOK-SELLERS, Villupuram, South Arcot district.
Messrs. DINAMANI STORES, Coimbatore-18.
Messrs. BHARATHI PUTHAGA NILAYAM, PUBLISHERS AND BOOK-SELLERS, 1-B, Town Hall Road, Madurai-1.

IN OTHER STATES.

Messrs. JANATHA AGENCIES, BOOK-SELLERS, Gudur.
Messrs. JAIN BOOK AGENCY, New Delhi-1.
Messrs. INTERNATIONAL BOOK HOUSE, Trivandrum.
Messrs. FIRMA K. L. MUKHOPADHYAY, Calcutta-12.
Messrs. BOOK LINKS CORPORATION, Narayanaguda, Hyderabad-29
Messrs. THE BOOKS SYNDICATE, Hyderabad-1.
Messrs. LABOUR LAW PUBLICATIONS, Hyderabad.

PRINTED AND PUBLISHED BY THE DIRECTOR OF STATIONERY AND PRINTING, MADRAS ON THE AUTHORITY OF THE SPEAKER OF THE LEGISLATIVE ASSEMBLY.

(1)	(2)	(1)	(2)